# ஈழத் தமிழரின் சுயநிர்ணய உரிமை




அ. அமிர்தலிங்கம்



# ஈழத் தமிழரின் சுயநிர்ணய உரிமை

இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக நடைபெற்ற கிளர்ச்சிகளில் தமது உயிரை அர்ப்பணித்த தமிழ்நாட்டுத் தியாகிகளை நாம் எப்போதும் மறக்க முடியாது. அதே போலச் சிறை சென்றும், பதவிகளைத் துறந்தும் இன்னல்பல ஏற்ற தலைவர்கள், தொண்டர்கள் எல்லோருக்கும் இக்கட்டத்தில் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஒப்பந்தம் நிறைவேற்றப்படுமோ இல்லையோ என்று ஆருடம் சொல்லத் தேவையில்லை. அரசியலில் எதுவும் சாத்தியமே. என்ன நடந்தாலும் தமிழக மக்களின் அன்பும், ஆதரவும், இந்தியாவின் மேலான ஆதரவும் பாதுகாப்பும் எப்போதும் எமக்கிருக்க வேண்டும். அதுவே, எமது பாதுகாப்புக்கு உத்தரவாதம். அதற்குப் பாத்திரமானவர்களாக நாம் நடந்து கொள்வோம்.

- அ. அமிர்தலிங்கம்

ISBN 0-9543502-3-5
26-08-2007

அமரர் **அ. அமிர்தலிங்கம்** அவர்களின்

# ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை

கட்டுரைகள்

# ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை

அ. அமிர்தலிங்கம்

அ. அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை
லண்டன்
ஆகஸ்ட் 2007

அமரர் அ. அமிர்தலிங்கம் அவர்களின் கட்டுரைகள்
ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை

Eezha Thamizhar Suyanirnaya Vurimai (Tamil)

Author
A. Amirthalingam

Cover Design by
K. Krishnarajah

ISBN 0-9543502-3-5
First Edition: 26 August 2007
Pages : 200

Published by
Amirthalingam Memorial Foundation
to commemorate the 80th birth anniversary of A. Amirthalingam

Copies can be had from
Amirthalingam Memorial Foundation
# 58, Seymour Avenue, East Ewell, Surrey KT17 2RR, UK
e-mail: b_amirthalingam@hotmail.com
# 57/48, Stanley Road, Jaffna, Sri Lanka
# 17, 14th Street, Krishna Nagar, Puducherry - 605 008.

Printed at: Sun Mathi Printers, Chennai - 600 002.

Most of the photographs used in this book are taken from the book *Amirthalingam: Oliyil Ezhuthuthal* (Writing in light) (2002) -an authentic photographic album documenting the early Tamil political struggle in Sri Lanka with special reference to the late leader A. Amirthalingam

All rights reserved. No part of the publication may be reproduced, stored in a retrieval system or a transmitted in any way or by any means, electronic, mechanical, photocopy, recording or otherwise, without the prior permission of the copyright holder.



அ. அமிர்தலிங்கம்
1927 - 1989

# மறக்க முடியாத நண்பர் அமிர்தலிங்கம்

1981ஆம் ஆண்டு ஆகஸ்ட் கடைசி நாளன்று மும்பாய் நகரில் தமிழ்ப் பேரவையின் சார்பில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் நாவலர் அமிர்தலிங்கம் அவர்களைப் பற்றி நான் எடுத்துக் கூறிய வார்த்தைகள் இன்னமும் என் நினைவில் இருக்கக் கூடியவை. அது இதோ--

"அமிர்தலிங்கம் - இலங்கையில் இருக்கின்ற ஈழத் தமிழகம் வேண்டுமென்று கோருகின்ற தமிழர்களுடைய தலைவர். அமிர்தலிங்கம் - மிக மென்மையான இதயம் படைத்தவர் - முரட்டுக் குணம் வாய்ந்தவர் அல்லர் - அவர் மீது கண்டனத் தீர்மானம் இலங்கை ஆளுங்கட்சியின் சார்பிலே அளிக்கப்பட்டு ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசுகிறார்கள். என்ன பேசுகிறார்கள்? இந்த அமிர்தலிங்கத்தைக் கொலை செய்ய வேண்டும்; எங்கே, நாடாளுமன்றத்திலே பேசுகிறார்கள். இந்த அமிர்தலிங்கத்தை இரண்டு பாக்கு மரங்களுக்கிடையே கட்டி, இரண்டாகக் கிழித்தெறிய வேண்டும் என்று பேசுகிறார்கள். இந்தப் பேச்சை பத்திரிகைகளிலே படித்துப் பார்த்து விட்டும் நாம் ஆமைகளாய், ஊமைகளாய்த்தான் வாழவேண்டுமென்று சொன்னால் தமிழன் சோற்றாலடித்த பிண்டம் அல்ல என்பதை இலங்கைக்கு உணர்த்திட வேண்டாமா?"

1981ஆம் ஆண்டு அமிர்தலிங்கம் அவர்களைப் பற்றி நான் இவ்வாறு பேசினேன். ஆனால் 1989ல் அவரை இல்லாமல் செய்துவிட்டார்கள்.

அவர் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு செய்தியாளர்களிடம் கூறும்போது, புதிதாக இணைக்கப்பட்டு தோன்றியுள்ள வடகிழக்கு மாகாணத்தில் தற்போது தேர்தல் நடத்துவதற்கு ஏற்ற சூழ்நிலை காணப்படவில்லை. அங்கு கவர்னர் ஆட்சியை நிறுவும்படி அதிபர்

ஜெயவர்த்தனேயை கேட்டுக்கொள்வேன். மாகாணக் கவுன்சிலுக்கு தேர்தல் நடத்துவது என்ற ஜனநாயக முறையை எங்கள் கட்சி எதிர்க்கவில்லை. அதே சமயத்தில் இத்தகைய சூழ்நிலையில் தேர்தல் நடத்துவது என்பது, குறித்த காலத்துக்கு மிகவும் முந்தைய செயலாகும். அப்படி தேர்தல் நடத்தினால் தமிழர் வாழும் பகுதிகளில் ரத்த ஆறு ஓடும் என்று எச்சரிக்கக் கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னார். ஆனால் அவருடைய ரத்தமே ஆறாக ஓடிய செய்தியைத் தான் கேள்விப்பட்டோம். ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு பேச்சு வார்த்தைக்கு வருவதற்கு விடுதலைப் புலிகளுக்கும் இதர போராளிகளுக்கும் மேலும் கால அவகாசம் அளிக்க வேண்டும் என்று இந்திய அரசிடம் மீண்டும் வலியுறுத்துகிறோம் என்றார் அமிர்தலிங்கம். அவரின் வார்த்தைகளின்படிதான், தற்போது நீண்ட அவகாசத்திற்குப் பிறகு அவரின் எண்ணப்படி பேச்சுவார்த்தைக் கட்டத்திலே இப்போது ஈழத்தமிழர் பிரச்சினை உள்ளதை நேரடியாகக் காண்கிறோம். அந்தப் பெருமகன் போன்றவர்கள் செய்த தியாகத்திற்கு தற்போது வெற்றி கிடைக்கும்.

**– கலைஞர் மு. கருணாநிதி**
சென்னை

---

'வரலாற்றின் மனிதன்' அ. அமிர்தலிங்கம் பவழ விழா மலரில் இருந்து . . .

---





## அறிஞர் அண்ணாவை நிகர்த்தவர்

திரு. அமிர்தலிங்கம் அவர்கள் கல்வி, கேள்விகளில் அறிஞர் அண்ணா அவர்களைப் போன்ற விவேகம் உள்ளவர். 1926 ஆகஸ்டு மாதம் 26ந் தேதி பிறந்த அவர் இன்று உயிரோடு இருந்திருந்தால் தனது 75ஆம் ஆண்டை, தனது துணைவியார் மங்கையர்க்கரசி அவர்களுடன் தன் வாழ்நாளில் இன்புற்று இருந்திருப்பார்கள்.

மறைந்த தலைவர் திரு. செல்வநாயகம் அவர்களின் ஒப்பற்ற தளபதியாகவும் பேச்சாற்றல் மிக்கவராகவும் விளங்கினாலும், அடக்கமே உருவானவராகத் திகழ்ந்தார்கள். நிறைய படித்ததினால் எந்தத் தலைப்பைக் கொடுத்தாலும், அத்தலைப்பில் பேசும் ஆற்றல் பெற்றவராக விளங்கினார். அவர் நிறைய நூல்களைப் படித்த வண்ணம் இருப்பார்.

அவரது சொற்பொழிவை முழுவதும் சுருக்கெழுத்தாளர்களைக் கொண்டு எழுதி நூலாக்கினேன். எனது செயலாளர் மறைந்த தீர. அழகிரிசாமி அவர்களைக் கொண்டு அதை ஆங்கிலத்தில்

மொழிபெயர்த்து, காமன்வெல்த் நாடுகளின் சபாநாயகர், பிரதமர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் என அனைவருக்கும் அனுப்பினேன். திரு. அமிர்தலிங்கம் அவர்களின் அந்தப் பேச்சு உலகில் உள்ள எல்லா நாடுகளுக்கும், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை எடுத்துச்சென்று, உலகெங்கும், எதிரொலித்தது என்றால் மிகையாகாது. காரணம், அவரது பேச்சில் அத்துணையும் இலங்கையில் நடைபெற்ற அக்கிரமங்களின் ஆதாரபூர்வமான தொகுப்பு.

அவர் உயிரோடிருந்து, ஐக்கிய நாடுகள் சபையில் சென்று வாதாடியிருக்க வேண்டும். இந்நேரம், இலங்கையில் இருந்து, ஈழம் தனிநாடாக மலர்ந்திருக்கும் என்பது என்போன்றவர்களின் எண்ணம். நான் பல நாடுகளின் விடுதலை வரலாற்றைப் படித்திருக்கிறேன். அன்றேகூட சைப்ரஸ் தீவு சுதந்திரம் அடைந்ததைப்போல், விடுதலைப் புலிகள் திரு. அமிர்தலிங்கத்தைப் பயன்படுத்திக் கொண்டிருப்பார்களே யானால், இந்நேரம் அவர்கள் தாங்கள் கோரிய நாட்டைப் பெற்றிருக்க முடியும். ஆம்! சைப்ரஸ் தீவின் விடுதலைக்காக மகரியாஸ் பாதிரியார் அவர்கள் மக்களை ஜனநாயக ரீதியில் சுதந்திரப் போராட்டத்திற்கு தயார் படுத்தினார்கள். அதே சமயத்தில், கர்னல் கிரிவாஸ் என்ற ராணுவ வீரர் அரசுடன் கொரில்லாப் போரில் ஈடுபட்டார். மகரியாஸ் பாதிரியார், ஐக்கிய நாடுகள் சபைக்கே போய் வாதாடி, நாட்டின் விடுதலையைப் பெற்றார்.

அதுபோன்ற முயற்சியில் விடுதலைப் புலிகள் சற்று ராஜதந்திரத்தோடு நடந்து, திரு. அமிர்தலிங்கம் அவர்களின் அறிவு, ஆற்றல், திறமைகளைப் பயன்படுத்தி இருந்தால் இந்த நாளில் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் ஈழத்தின் ஜனாதிபதியாக மாறி உலகின் நல்லெண்ணத்தையெல்லாம், இழத்துக்குப் பெற்றுத் தந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

**- க. இராஜாராம்**
முன்னாள் பேரவைத் தலைவர்
தமிழ்நாடு சட்டப் பேரவை
சென்னை.



## பதிப்புரை

ஈழத்தமிழரின் சுயநிர்யை உரிமை என்ற பதம் உலகில் வாழும் அத்தனை ஈழத்தமிழரின் வாழ்க்கையுடனும் இன்று பின்னிப் பிணைந்துள்ளது. இந்தக்கால கட்டத்தில் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களால் வெவ்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட அவர் வாழ்ந்த கொள்கையினைப் பிரதிபலிக்கின்ற இம்மூன்று கட்டுரைகளையும் பிரசுரிப்பதில் நாம் பெருமையடைகிறோம்.

உண்மையான தமிழீழப் போராட்டமென்பது மக்கள் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆயுதப் போராட்டம் என்பது தமிழின விடுதலை இயக்கத்தின் ஒரு பகுதியேயாகும். இன்றைய காலகட்டத்திலும், அண்மைய காலங்களிலும் இதற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலும் ஈழத்தமிழர் இன விடுதலைப் போராட்டம் என்பதை இலங்கை சுதந்திரம் அடைந்த கால கட்டத்திலிருந்து நோக்குவதே சாலச் சிறந்தது. எமது போராட்டத்தின் பரிநாம வளர்ச்சியினை, வெவ்வேறு காலங்களின் செயற்பாடுகளை தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் கட்டுரைகளினூடாக நோக்க முடிகிறது. படிப்படியாக திட்டமிட்டு வளர்க்கப்பட்ட விடுதலை விருட்சமானது, ஒரு கால கட்டத்தில், பயன்தரும் வேளையில் சின்னா பின்னப்படுத்தப்பட்டுள்ளது. இன்று இலங்கையில் தினமும் விழும் தமிழ் உடல்களை எண்ணும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இன விடுதலைப் போராட்டமானது, சகோதரப் படுகொலை செய்யபயன்பட்டு அதற்கான பலனை நாம் இன்று அனுபவிக்கிறோம். இதனால் இன்னும் எமது இனம் மேலும் அழிவுகளை எதிர்நோக்கும் ஆபத்தையும் அல்லவா காட்டுகிறது.

இந்த நூலின் முதலாவது கட்டுரையான ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமை என்ற கட்டுரை தலைவர் அமிர்தலிங்கம் அவர்களால் ஒரு இளம் சட்டக் கல்லூரி மாணவனாக இருந்த கால கட்டத்தில் 1948இல் எழுதப்பட்டதாகும். அவருடைய 41 வருட அரசியல் வரலாற்றிற்கு இடப்பட்ட முதல் அடிக்கல்லாகும். இந்தக் கட்டுரையானது சுதந்திரன் பத்திரிகையில் தொடர்ந்து இரண்டு இதழ்களில் பிரசுரிக்கப்பட்டது. அன்றைய அகில இங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தந்தை திரு. சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்கள் திரு. அமிர்தலிங்கம் அவர்களைத் தன்னை வந்து சந்திக்கும்படி சொல்லியனுப்பினார். திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தந்தை செல்வாவை முதல் முறையாகச் சந்தித்தார். இந்தத் தொடர்பானது ஒரு தலைவனுக்கும், தொண்டனுக்குமான, ஒரு தந்தைக்கும் மைந்தனுக்குமான, ஒரு ஆசானுக்கும் அவர் அடியொற்றிய சீடனுக்குமான முதல் சந்திப்பாகத் தொடங்கி இருபத்தியெட்டு வருட காலம் - தந்தை செல்வாவின் மறைவு வரை தொடர்ந்தது. தலைவர் அமிரை நன்கு புரிந்த தந்தை செல்வா தன் அரசியல் வாரிசாக, தமிழினத் தலைமையை ஏற்று நடத்தும் தலைவனாக தமிழினத்திற்கு அடையாளம் காட்டினார்.

இந்தியா சுதந்திரமடைந்து ஸ்திரமடைந்த வேளையில் 1948ல் முழுநாட்டிலும் மொழி வாரியாக மாநிலங்கள் பிரிக்கப்படுவதற்கான முன்னேற்பாடுகள் எடுக்கப்பட்டு இதனடிப்படையில் ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம். இந்த ஆய்வுகளின் அடிப்படையில் 1956ல் இந்தியாவில் மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டு அந்தந்த மாநிலங்களுக்கு ஓரளவுக்கு சுயாட்சியுடன் கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டன. தலைவர் அமிர் அவர்கள் இந்த ஆரம்ப ஆய்வுகளைக் கருத்திலெடுத்து அதே போல சுதந்திர இலங்கையிலும் மொழியடிப்படையில் மாநில அரசுகள் உருவாக வேண்டும் என அழுத்தம் கொடுக்கிறார். அன்றைய நிலையில் இந்தியாவைப் பின்பற்றி இலங்கையிலும் இப்படியாக ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் ஒரு உள்நாட்டு யுத்தம் தடுக்கப்பட்டு சிங்களர், தமிழர் என இரு இனங்களும் சுமுகமாக வாழ்ந்திருக்கும் நிலைகூட உருவாகியிருக்கலாம்.



இரண்டவதாக இடம்பெற்றுள்ள இலட்சியப் பாதை எனும் கட்டுரை தலைவர் அமிர் தமிழரசுக் கட்சி வெள்ளி விழா மலருக்காக 1974ம் ஆண்டில் உருவாக்கியதாகும். இலட்சியப் பாதையானது, 1949ம் ஆண்டு தமிழசுக்கட்சி உருவாகுவதற்கு முற்பட்ட இலங்கை ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து சுதந்திரம் அடையும் கால கட்டத்திலிருந்து ஆரம்பிக்கிறது. நறுக்குத் தெறித்தாற்போல சுதந்திர இலங்கையில் ஈழந்தமிழரின் நிலையையும், விடுதலை இயக்கம் வளர்ந்த வரலாற்றையும் தமிழரசக் கட்சியின் வெற்றிப்பாதையையும் விளக்குகிறது. தமிழரசுக் கட்சி வெவ்வேறு காலகட்டங்களில் மக்களின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்திய சமுதாயப் போராட்டங்களையும் பட்டியலிடுகிறது. தலைவர் அமிர்தலிங்கத்தின் ஞாபக சக்தியும், தேதி வாரியாக சம்பவங்களை நினைவு காட்டும் அபரிதமான ஆற்றலும் அவருடன் பழகியவர்கள், கண்டு வியக்கும் ஓர் திறமை. நல்ல காலமாக, வெளிவந்த தமிழரசுக் கட்சி வெள்ளிவிழா மலரில் அந்நர் இக்கட்டுரையை எழுதியதன் மூலம் பல அரசியல் சம்பவங்களும், சான்றுகளும் உள்ளடக்கிய ஒரு சரித்திரமூலம் நம் கைகளில் உள்ளது.

இந்த நேரத்தில் ஒரு சம்பவத்தை நினைவு கூர வேண்டிய கடப்பாடு உள்ளது. திரு. அமிர்தலிங்கம் அவர்களின் படுகொலைக்கு இரண்டு வாரங்களின் முன் திரு. சிவபாலன் (மறைந்த யாழ்ப்பாண மேயர்) அவர்கள் தலைவர் அமிரிடம் ஒரு வேண்டுகோளை வைத்தார். அதாவது ஈழத்தமிழரின் அரசியல் சரிதம் ஆரம்பத்திலிருந்து 1989ம் ஆண்டு வரை எழுதப்பட வேண்டும் என்பதே அதுவாகும். ஈழத்தமிழரின் போராட்ட, அரசியல் வரலாறு என்பது தலைவர் அமிர்தலிங்கத்தின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்ததேயாகும். இதற்கு திரு. அமிர்தலிங்கம் சம்மதம் தெரிவித்ததும், திரு. சிவபாலன் அவர்கள் இரண்டு டசின் ஒலி நாடாக்களை வாங்கி வந்து இதற்கான ஆயத்தங்களைச் செய்தார். இந்த முயற்சி கைகூடி இருந்தால் எமது கைகளில் ஒரு வலுவான ஆவணம் இன்று இருந்திருக்கும். இந்த சம்பவம் நடந்த ஒருவார காலத்தில் திரு. அமிர்தலிங்கம் அவர்கள், பேச்சுவார்த்தைக்கென வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டாவது கட்ட தலைவர்களால் படுகொலை செய்யப்பட்டார்.

சரித்திரங்கள் நம்மவர்களாலேயே திரித்துக்கூறப்படுகின்ற இன்றைய கால கட்டத்தில் கடைசி "இலட்சியப் பாதை" தமிழரின் ஆரம்ப கால ஆரிய வரலாற்றின் ஆவணமாகத் திகழ்கிறது.

இந்நூலின் மூன்றாவது பகுதி - "இலங்கை இந்திய ஒப்பந்தம்" பற்றிய வரலாறு. இலங்கை இந்திய ஒப்பந்தம் திரு. ராஜீவ்காந்தி அவர்களுக்கும் திரு. ஜெயவர்தனாவுக்கும் இடையில் ஏற்பட்ட ஒரு உடன்படிக்கை இருநாடுகளுக்கிடையிலான உடன்படிக்கை, இதன் அடிப்படை ஈழத் தமிழரின் போராட்டத்திற்குரிய ஒரு அரசியல் தீர்வாக முன்வைக்கப்பட்டது. பல்வேறு வதந்திகளும், பொய்ப் பிரசாரங்களும் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையில் "செல்வா ஈட்டிய செல்வம்" என்ற தலைப்பில் 1983ம் ஆண்டுக்கு பின்னைய அரசியல் சம்பவங்களை தொகுத்து, வெளியிடப்பட்டது. அத்துடன் அன்றைய காலகட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் பற்றி விமர்சனங்கள் முன் வைக்கப்பட்ட நிலையில் இது ஒரு சுய விளக்கமளிக்கும் நூலாகவும் மக்களிடம் சென்றடைந்தது.

இம்மூன்றாவது கட்டுரையின் ஆரம்பத்தில் மிகச் சுருக்கமாக ஈழத்தமிழரின் உரிமைப் போராட்டம் நீதியானது என உறுதிப்படுத்தப்படுவதுடன், இந்தியாவின் உதவியுடன்தான் எமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமென்ற தந்தை செல்வாவின் கொள்கையும் வெளிப்படுகிறது. இந்திய அரசை ஈழத் தமிழினத்தின் பால் ஈடுபாடு ஏற்பட வைத்து, அந்த தார்மீகப் போராட்டத்திற்கு ஆதரவு திரட்ட 1972ல் அவர் எடுத்த ஆரம்ப முயற்சிகள் இதில் தெரிகின்றது. இக்கட்டுரையின் பிற்பகுதியில் அன்னை இந்திரா காந்தியின் அணுகுமுறை, அவரின் திடீர் மறைவு எவ்வளவு தூரம் எம்மைப் பாதித்தது, அமரர் ராஜீவ் காந்தியின் நிலைப்பாடு, பின்னர் அதில் ஏற்பட்ட மாற்றங்கள் என விரிவாக விளக்கப்பட்டுள்ளது. பிரசித்தமான அட்டவணை 'சி' (Annexure)யிலிருந்து 1985 சிம்பு பேச்சுவார்த்தை, 1986 டிசம்பர் இந்திய வான்படையின் உணவுப் பொதி வழங்கல் ...., என பல்வேறு சம்பவங்களையும் தொகுத்து தருகிறது. எப்படி திரு. பார்த்தசாரதியின் அணுகுமுறை தமிழர் நலன் பேணி மிக இராஜ தந்திரமாக இருந்தது என



விளக்கும் அதே வேளை, திரு. ரொமேஷ் பாண்டாரி வெளியுறவுச் செயலராகப்பொறுப்பேற்றவுடன் அவர்களது அணுகுமுறையில் ஏற்பட்ட மாற்றம், பின்னர் இலங்கை அரசின் தந்திரங்களைப் புரிந்தபின் ஏற்பட்ட கொள்கை மாற்றம் என இந்திய வெளிநாட்டு இராஜ தந்திரிகளின் தடுமாற்றத்தையும் காட்டுகிறது. இந்திய அரசின் அணுகுமுறை ஈழத்தமிழரின் நலன் கருதியே இருக்க வேண்டும் என்பதுடன், ஏதாவது ஒரு அரசியல் தீர்வு அமைய வேண்டும் என்பதிலும் தீவிரமாக இருந்து பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளையும், திட்டங்களையும் முன் வைத்த தலைவர் அமிர்தலிங்கத்தின் அரசியல் சாணக்கியம் புலனாகிறது.

திரு. J.N.டிச்சித் இந்தியத் தூதுவர் அவர்கள் எழுதிய Indian Foreign Policy 1947-2003, இலங்கை இந்திய ஒப்பந்தம் பற்றி சில பக்கங்களை ஒதுக்கியுள்ளார். அதில் அவர் இந்திராகாந்தியின் பின் திரு. ராஜீவ் காந்தி பிரதமராக வந்தபோது எவ்வாறு திரு. ரொமேஷ் பண்டாரியின் அணுகுமுறை இருந்ததெனத் தெளிவாகக் கூறியுள்ளார். இந்தியா, இலங்கைப் பிரச்சினையில் இந்திய கொள்கையுடன் அணுக எண்ணுகிறதே தவிர தமிழக அணுகு முறையால் அல்ல, எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்த நிலைப்பாடு அன்றைய தமிழ்த் தலைவர்களின் சாதுர்யத்தாலும், இலங்கை அரசின் பிடிவாதத்தாலும் நீண்ட நாட்களுக்கு நீடிக்கவில்லை. ஜனவரி 1987ல் இலங்கை இராணுவ நடவடிக்கையை அவதானித்த பிரதமர் திரு. ராஜீவ்காந்தி 4 மாற்றங்களை ஏற்படுத்தினார். அவையாவன

ஈழத் தமிழருக்கெதிரான இலங்கை இராணுவ நடவடிக்கைகளை இந்தியா முழுமையாக உறுதியாக எதிர்க்க வேண்டும்.

நேரடியான அரசியல் அழுத்தத்தை ஜெயவர்தனாவுக்கு எதிராக பிரயோகித்து தீர்வுத்திட்டத்தை அளிக்க வைத்தல்.

மேற்குறிப்பிட்ட இரண்டிலும் இந்தியா வெற்றி கண்டதும் தமிழ் தலைமையை மீண்டும் பேச்சு வார்த்தை மேசைக்கு அழைத்தல்

அப்படிப்பட்ட பேச்சுவார்த்தையால் உருவாகும் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இந்தியா முழுமையாக ஈடுபட வேண்டும். ஒரு நடுவராக (Mediator) ஆக இல்லாமல் நடைமுறைப்படுத்தும் ஒரு நிலையை (Guarantor of Compromises) இந்தியா எடுக்க வேண்டும். இதனாலேயே ஈழத்தமிழரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும், அவர்களும் தீர்வுத் திட்டத்தை நம்புவார்கள்.

இதையடிப்படையாக வைத்தே இந்திய இலங்கை ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. இதனடிப்படையிலேயே இந்திய அமைதிப்படை இலங்கைக்குச் செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இப்படிப்பட்ட மத்திய அரசின் கொள்கை மாற்றங்களைக் கருத்திலெடுத்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வியூகம் அமைத்து, இந்தியாவை ஈழத் தமிழர் பக்கமும், அதே நேரம் சரியான கௌரவமான அரசியல் தீர்வும் கிடைக்கவும் உழைத்தனர். இந்தக் கட்டுரையானது இந்த ஒப்பந்தம் சம்பந்தமான பல நடைமுறை செயல்பாடுகளை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. பலருடைய சந்தேகங்களை இக்கட்டுரைகள் தெளிவாக்கும் என்பதே இதைப் பிரசுரிப்பதன் நோக்கமாகும்.

தலைவர் அமிர் அவர்களின் 80ஆம் ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு வெளிவரும் இந்நூலில் அன்னை இந்திரா காந்தி, அமரர் இராஜீவ் காந்தி ஆகியோர் பிரதமர்களாக இருந்தத் தருணத்தில் இந்திய இலங்கை அணுகுமுறைகள், அவர்களின் அக்கரை, சாதுர்யமான நிலைப்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்தும் உரைகளில் சிலவற்றை இணைத்துள்ளோம். (பின்இணைப்பு I&II ) தலைவர் அமிர் அவர்கள் தமிழகத்தில் பல தலைவர்களுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டவர். குறிப்பாக கலைஞர் மு. கருணாநிதி, எம்.ஜி.ஆர். க. இராஜாராம். திரு. ப. சிதம்பரம், டாக்டர் குமரி அனந்தன் என பட்டியல் நீளும், இந்நூலில் கலைஞர் அவர்களின் கருத்துக்களையும் திரு. க. ராஜாராம் அவர்களின் கருத்துக்களையும் இந்நூலில் இணைத்துள்ளோம்.



இந்நூலாக்க முயற்சிக்கு அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை முனைந்தபோது உள்ளன்போடு ஈடுபாடு காட்டிய டாக்டர் நித்தியாநந்தன், திரு. மகாலிங்கம் சிவம் (மாலி), அழகுற அட்டைப்படம் தீட்டிய திரு. K. கிருஷ்ணராஜ், அச்சாக்கத்தில் உதவிய டாக்டர் பாஞ். இராமலிங்கம், பதிப்பிக்க உதவிய டாக்டர் அ. பகீரதன் அச்சிட்ட சென்னை, சன்மதி அச்சகத்தார் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றிகள் பல.

இந்நூல் ஈழத் தமிழர்களின் போராட்ட வரலாற்றின் அடித்தளமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தலைவர்

26 ஆகஸ்டு 2007 — அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை

# உள்ளடக்கம்

மறக்க முடியாத நண்பர் அமிர்தலிங்கம் - கலைஞர் மு. கருணாநிதி - v

அறிஞர் அண்ணாவை நிகர்த்தவர் -க. இராஜாராம் - vii

பதிப்புரை - ix

பட விளக்கம் - xvii

1. தமிழனுக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும் - 21

2. லட்சியப் பாதை - 28

3. இலங்கை இந்திய ஒப்பந்தம் வந்த வரலாறு - 129

பின்இணைப்பு

பாரத பிரதமர் அன்னை இந்திரா உரையிலிருந்து - 175

பாரத பிரதமர் ராஜீவ் காந்தி உரையிலிருந்து - 178

ஈழத்தமிழர் தலைவர் அ. அமிர்தலிங்கம் வாழ்க்கைத் தரவுகள் - 182

சொல்லடைவு - 190



# பட விளக்கம்

பக்கம்

57 கொழும்பில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் இல்லத்தில் தமிழரசுக் கட்சியின் கூட்டம். ஈ.எம்.வி. நாகநாதன், வி. என்.நவரத்தினம், வி.ஏ.முத்தையா, எஸ்.ஜே.வி. செல்வநாயகம், கு. வன்னியசிங்கம், அ. அமிர்தலிங்கம், ஆர். இராஜவரோதயம் (1954)

57 தமிழரசுக் கட்சி திருமலை மாநாடு கு. வன்னியசிங்கம் தலைமைப்பதவியை ஏற்கிறார் (1956)

58 தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து கொழும்பு காலிமுகக் கடற்கரையில் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகம் போராட்டம் (5-6-1956)

58 காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் 1956 சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்ட தமிழரசுத் தொண்டர்கள் (5-6-1956)

59 'சிங்களம் மட்டும்' சட்டத்தை எதிர்த்து காலிமுகத் திடலில் சத்தியாகிரகம் (1956)

59 காலிமுகத் திடலில் சத்தியாகிரகத்தில் வண. தனிநாயகம் அடிகள் (1956)

60 சிறீ எதிர்ப்பு நடவடிக்கையில் கைதாகி சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் மங்களா கிறிஸ்தோப்பர், திருமதி, வன்னியசிங்கம், திருமதி. அமிர்தலிங்கம், வி. தர்மலிங்கம், (1958)

60 சிறீ எதிர்ப்பு நடவடிக்கையில் கைதாகி சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் செனற்றர் எஸ். நடராசா, கு .வன்னியசிங்கம் (1958)

61 யாழ்ப்பாணம் 2ம் குறுக்குத் தெருவில் அமைந்திருந்த தமிழரசுக் கட்சி அலுவலகத்தின் முன் திரு. கு. வன்னியசிங்கம், திரு. ஜே.வே. செல்வநாயகம், திரு. அ. அமிர்தலிங்கம்

61 திருமலை யாத்திரையின்போது, திரு. அ. அமிர்தலிங்கம், திரு. கு. வன்னியசிங்கம், திரு. என். இராஜவரோதயம், திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம்

62 சத்தியாக்கிரகத்துக்குப் பின்னர் தடுப்புகாவலில் இருந்து விடுதலை (1961) வி. தர்மலிங்கம், வீ.ஏ. கந்தையா, செனெட்டர் நடராசா, மு. சிவசிதம்பரம், எஸ். அருணாசலம் (1961)

97 வவுனியா தமிழரசுணி கட்சி மாநாடு (1958)

97 சிறீ எதிர்ப்பு போராட்டத்தில் இரண்டுமாத தடுப்புக்காவலின் பின் விடுதலை (1958)

98 பண்டார நாயக்கர் - செல்வநாயகம் ஒப்பந்தம் திரு. எஸ். டபிள்யூ. பண்டாரநாயக்கர், திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம், திரு. கு. வன்னியசிங்கம், திரு. வ. நவரத்தினம், திரு. அ. அமிர்தலிங்கம் (1957)

99 தீண்டாமை ஒழிப்பு வாரத்தில் சமபந்தி போசனம் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், கு. வன்னியசிங்கம் (1958)

99 வவுனியா தமிழரசுகீ கட்சி மாநாடு (1958)

100 யாழ் கச்சேரியின் பின்புற வாயிலால் வெளிவர முயன்ற அரசாங்க அதிபரின் வாகனத்தை தடுத்து நிறுத்தும் இ.மு.வி. நாகநாதன் (1961)

100 தமிழரசு தபால் சேவையில் தபால்கள் தரம்பிரிக்கப்படல் (1961) தலைவர்கள். திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம், திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வ. நவரத்தினம்

101 சத்தியாக்கிரகத்தில் பங்குபற்ற ஊர்வலமாக வந்த மக்கள் (1961)

102 சத்தியாக்கிரகம் - இராணுவ வாகனத்தை வழிமறிக்கும் எஸ். ரி. அரசு (1961)

102 சத்தியாக்கிரகம் இராணுவ வாகனத்தை வழிமறிக்கும் திரு. அ. அமிர்தலிங்கம் (1961)

103 தமிழரசு தபால் தலை

103 தமிழரசு தபால்தலை, தபாலட்டை வெளியிடப்படல் (1961)

104 தமிழரசு தபால் அதிபர் நாயகம் எஸ். நடராசா, எஸ். ஜே.வி. செல்வநாயகம், அமிர்தலிங்கம்

104 தமிழரசு தபால் தலை விநியோகம் - மு.. சிவசிதம்பரம்

105 சத்தியாக்கிரகம் (1961)

106 சத்தியாக்கிரத்தின் இறுதியில் திரு. திருமதி. அமிர்தலிங்கத்திற்கு கைது வாரண்ட் வழங்கப்படுதல் (1961)

106 சத்தியாக்கிரகம் (1961)

122 தலைவர்கள் அ. அமிர்தலிங்கம், மு. திருச்செல்வம், சா.ஜே.வே. செல்வநாயகம்





123 சிறிமாவோ பண்டாரநாயக்காவின் புதிய அரசியலமைப்புக்கு சமர்ப்பிப்பதற்கான ஆறு அம்ச திட்டத்தை வல்வெட்டித்துறையில் வரைந்தபோது என். சிவநேசன், சி. சுந்தரலிங்கம், க. துரைரத்தினம் (1971)

123 தமிழர் கூட்டணி அங்குரார்ப்பணம் தலைவர்கள் அ. அமிர்தலிங்கம், சா.ஜே.வே. செல்வநாயகம், சி. சுந்தரலிங்கம், மு. சிவசிதம்பரம், க. ஞானமூர்த்தி (1972)

124 தமிழரசுக் கட்சியின் இரண்டாம் குறுக்குத் தெரு தலைமைகத்திலிருந்து அரசியலமைப்பு எதிர்ப்பு நடவடிக்கைக்குப் புறப்படுதல் மகாதேவன், வி. என். நவரத்தினம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், மங்கையர்க்கரசி, சங்கரப்பிள்ளை, அ. குமரகுரு, செனட்டர் சு. நடராசா, மனோகரன், அம்பிக்கைபாகன், சண்முகநாதன், பொன்னையா (1972)

124 புதிய குடியரசுதினத்தை பகிஷ்கரிக்கக் கோரும் சட்டவிரோத சுவரொட்டிகள் வி. தர்மலிங்கம், மங்கையர்க்கரசி (1972)

125 பெரியார் ஈ. வே. ரா. வுடன் (1972)

125 தமிழக முன்னாள் முதலமைச்சர் எம். பக்தவத்சலத்துடன் (1972)

126 சென்னையில். எஸ். ஜே. வி. செல்வநாயகம், ம. பொ. சிவஞானம். (1972)

126 தமிழக முதல்வர் கருணாநிதியுடன் (1972)

127 காஞ்சிபுரத்தில் அண்ணா பிறந்த இல்லத்தில் இரா. ஜனார்த்தனம், எஸ். மணவைத்தம்பி, கோவை. மகேசன் (1972)

127 தமிழக முதல்அமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனுடன் (1983)

128 இந்திய சுதந்திரதின வரவேற்பு வைபவத்தில்

128 வாஜ்பாய், வைகோவுடன் அ. அமிர்தலிங்கம்,

146 இந்திய சுதந்திரதின வரவேற்பு வைபவத்தில் பிரதமர் இந்திரா காந்தியுடன் தலைவர் அ. அமிர்தலிங்கம் புதுடில்லி ராஷ்டிரபதி பவன் (1983)

147 பிரதமர் இந்திரா காந்தியுடன் தலைவர் அ. அமிர்தலிங்கம் (1983)

147 சென்னையில் இந்திரா காந்தியின் அந்தரங்க செயலாளர் ஜி. பார்த்தசாரதியுடன் தலைவர் அ. அமிர்தலிங்கம் (1984)

148 தமிழக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனுடன் (1983)

148 பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் தலைவர் அ. அமிர்தலிங்கம்

149 இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு. பி.வி. நரசிம்மராவுடன் தலைவர் அ. அமிர்தலிங்கம்

149 கொழும்பு அனைத்துக் கட்சிகள் மாநாடு ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் தலைவர் அ. அமிர்தலிங்கம் (1984)

150 திம்புப் பேச்சுவார்த்தை வரதராஜபெருமாள், மு. சிவசிதம்பரம், பூட்டான் மன்னர், அ. அமிர்தலிங்கம், லோ. கேதீஸ்வரன், இ. இரத்தினசபாபதி (1985)

150 ஜனாதிபதி ஆர். பிரேமதாசவுடன் தலைவர் அ. அமிர்தலிங்கம் (1989)

151 தமிழ் ஈழ ஆதரவாளர்கள் அமைப்பின் (டெசோ) மாநாடும் பொதுக் கூட்டமும் ஆந்திர முதலமைச்சர் என். ரி. ராமராவ் உரையாற்றுகிறார் (1985)

151 மரீனா கடற்கரை உண்ணாவிரதம் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் கல்யாணசுந்தரம் (1987)

153 இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனுடன் தலைவர் அ. அமிர்தலிங்கம் (1938)

153 மரீனா கடற்கரை உண்ணாவிரதம் (1987)

154 இலங்கை - இந்திய ஒப்பந்தம் (1987)

154 தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவ ஆக்கிரமிப்பைத் தடுக்க இந்திய மத்திய அரசைத் தலையிடக்கோரி சென்னை, மரீனா கடற்கரையில் உண்ணாவிரதம் (1987)

155 இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் சென்னை மரீனா கடற்கரையில் கூட்டமொன்றில் ராஜீவ் காந்தியுடன்

155 தலைவர் அ. அமிர்தலிங்கம் (1987)



# 1

# தமிழனுக்குச் சுயநிர்ணய உரிமை வேண்டும்

இந்தியாவில் மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படவேண்டும் என்று கிளர்ச்சி நடந்து, அப்படியே மாகாணங்கள் பிரிக்கப்படுவதையிட்டு விசாரணைக்கு ஒரு குழு நியமிக்கப்பட்டு, விசாரணை நடந்துவரும் இச்சமயத்தில், இலங்கையின் மொழிப்பிரச்சினையைத் தீர்க்க வழி என்ன என்பதை ஆராய்வது ஏற்புடையதாகும். இலங்கையில் மூன்று பெரிய சமூகங்கள் உண்டாயினும், மொழிவாரியில் சிங்களம் பேசும் மக்களும் தமிழ் பேசும் மக்களும் என இரு பிரிவுகளே உண்டு. இக்கட்டுரையில் தமிழர் என்று குறிப்பிடும்போது தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் எல்லோரையும் அவர்கள் இந்துக்களாக இருந்தாலென்ன, கிறிஸ்தவர்களாக இருந்தாலென்ன, முஸ்லிம்களாக இருந்தாலென்ன அது குறிக்கும்.

இலங்கை அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்த காலத்தில், அந்நிய மொழியிலேயே அரசாங்க அலுவல்கள் நடத்தப்பெற்ற காலத்தில், சிங்களமோ தமிழோ அரசமொழி என்ற பிரச்சினை எழவேயில்லை. இந்நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்திருப்பதாகச் சொல்லப்படும் இக்காலத்தில் அதிகாரம் பெரும்பான்மை யராகிய சிங்களம்பேசும் மக்களின் கைக்கு வந்திருக்கும்பொழுது, இவ்வாட்சியின்கீழ் தமிழருடைய நிலை என்ன என்ற வினா எழுவது இயற்கையே. இவ்வினாவிற்குத் தங்களது வயிற்றுப்பிழைப்பையே பெரியதாகக் கருதும் தலைவரென்பார் சிலர், சிங்களவர், தமிழர் என்ற வேற்றுமை பாராட்டக்கூடாது, இலங்கையர் என்ற

முறையில் எல்லோருடைய கைக்குமே அதிகாரம் மாறி இருக்கிறது, எல்லோரும் ஒத்துழைப்போம் என உபதேசம் செய்கிறார்கள். இது மேலே எழுப்பப்பட்ட வினாவிற்கு விடையாகாது. தன் தலையை மண்ணில் மறைத்துவிட்டதாக கருதும் தீக்கோழியின் செயலையே அது ஒக்கும். ஐரோப்பாவில் வசிப்பவர் ஐரோப்பியர் என்று சொல்வதைப்போல, இலங்கையில் வசிப்பவர் இலங்கையர் என்று சொல்லலாம். ஆயினும் ஐரோப்பியர் என்ற தோரணையில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும், என்று சொல்லி தொகையில் கூடிய ஜெர்மனியர் பலத்தில் குறைந்த இனத்தவரை ஆட்சி செய்தல் எவ்வளவு அநியாயம்? இலங்கையர் என்று சொல்லி சிங்களவர் தமிழரை ஆட்சி செய்தல் எவ்வளவு அநியாயமாகும்? இலங்கையர் என்ற தேசிய இனம் உலகத்தில் ஒருபொழுதும் இருந்ததில்லை; இருக்கப்போவதுமில்லை. ஒரு இனம் என்று சொல்வதற்கு ஒரு மக்கள் கூட்டத்தவரிடையே மொழி, பண்பாடு, சமயம், சரித்திரத்தின் மூலம் வரும் ஒற்றுமை – இவை அவசியம் வேண்டும். இவ்வடிப்படையில் ஆராய்ந்தால் இலங்கையில் இரு இனங்கள் இருப்பது தெளிவு. இரு இனத்தவர்களும் இரு மொழிகளைப்பேசுகின்றனர். சிங்களவர் தாங்கள் ஆரியர் என்றும் அந்நாகரிகத்திலிருந்தே தங்கள் நாகரிகம் வளர்ச்சியடைந்தது என்று கூறும்போது, தமிழரோ தாங்கள் உலகத்தில் மிக முற்பட்ட திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிப்பெருமையடை கின்றனர்.

ஆரியராவது திராவிடராவது என்று கூறுவோரும் கலாச்சாரத்தைப் பொறுத்தவரை, இரு இனங்களுக்கும் வேற்றுமை உண்டு என்றே கூறுகிறார்கள். சமயத்தைப் பொறுத்தவரை, சிங்களவரிற் பெரும்பாலோர் பௌத்தர்களாகவும், தமிழரில் அதிகமானோர் சைவர்களாகவும் இருக்கின்றனர். இந்நாட்டின் சரித்திரத்தை ஆராய்ந்தால் சிங்களவரும் தமிழரும் தனித்தனியாகத் தங்கள் அரசினை வைத்து நடாத்திச் சென்றது புலப்படும். அவர்கள் ஒருவரின் மேலொருவர் போரிட்டு சிலகாலம் ஒருவரை ஒருவர் ஆண்ட காலங்களிலன்றி ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தின் முன், ஒருபொழுதும் ஒரே அரசின் கீழ் இருக்கவில்லை.

சமீபத்தில் மகியங்கனை கோபுர திருத்தவிழாவில் பேசிய நிதிமந்திரியார் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா இவ்விரு இனங்களுக்குமிடையே இருந்த வேற்றுமையை மிகவும் தெளிவாகக் கூறியிருக்கின்றார். சிங்கள இனத்தின் வெற்றி வீரன் துட்டகைமுனு இங்கிருந்துதான் தமிழ் மன்னன் எல்லாளன் மேல் படையெடுத்துச் சென்றான் என்று கூறினார். அச்சரித்திரம் போதிக்கும் பாடமிதுதான். சிங்களரும் தமிழரும் ஒரே அரசின் கீழ் ஒற்றுமையாக ஒருபோதும் இருக்கவில்லை. வியாபாரம், உத்தியோகம் முதலிய பல நோக்கங்களையிட்டுச் சிலசில இடங்களில் தமிழரும் சிங்களவரும் கலந்து வாழ்ந்த போதிலும், பொதுவாக தமிழர் இலங்கையின் வடகீழ்ப்பாகங்களிலும், சிங்களவர் தென்மேற்குப்பாகங்களிலும் பிரிந்தே வாழ்கின்றனர். இவ்விரு இனங்களுக்கும் பொருளாதாரம் என்ற ஒரு துறையிலேயே ஒற்றுமை இருக்கிறது. வடபகுதிப்புகையிரதப்பாதை திறக்கப்பட்ட பின்னரே இந்த ஒற்றுமை ஏற்பட்டது. இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன் தமிழர்களுடைய வியாபாரம், பொருளாதாரத் தொடர்புகள் எல்லாம் வடபகுதித் துறைமுகங்கள் மூலம் தமிழ்நாட்டுடன் இருந்தனவேயன்றிச் சிங்கள நாட்டுடன் அல்ல. ஐரோப்பியர் இலங்கையைக் கைப்பற்றிய பின்னர், தங்களுடைய வருவாயை நாடி சிங்கள நாட்டில் தேயிலை, கோப்பி, இறப்பர் முதலியவற்றைப் பயிரிட்டனர். அவற்றை ஏற்றுமதி செய்வதற்கு, அண்மையிலுள்ள துறைமுகமாகிய கொழும்பை அபிவிருத்தி செய்து அதனையே தலைநகராகவும் ஏற்படுத்தினர். வியாபாரம் முழுவதும் ஒரே துறைமுகத்தின் மூலம் நடந்தாலே அத்துறைமுகம் விருத்தியடையும் என்ற எண்ணத்தால் வடபகுதித் துறைமுகங்களை மூடினர். அவற்றின் மூலம் வியாபாரம் செய்து பிழைத்துவந்த ஆயிரக்கணக்கான தமிழர் தம் வேலையை இழந்தனர். மேலும் தமிழ் மாகாணங்களில் உற்பத்தியாகும் பொருள்கள் ஐரோப்பியருக்கு வருவாயைக் கொடுக்காததால் அம்மாகாணங்கள் கவனிப்பாரற்று காடடர்ந்து, குளங்கள் தூர்ந்து அவற்றின்மூலம் சீவியம் நடத்தி வந்த தமிழர் வறுமைப்பட ஏதுவாயிற்று. இவற்றால் தம் சீவனத்தின் பொருட்டு, தமிழர் ஆங்கிலம் கற்று மலாய் நாட்டிற்கும் சிங்களநாட்டிற்கும் செல்ல வேண்டியதாயிற்று. கப்பலோட்டிய தமிழன் பேனா ஒட்டியானான். திரைகடலோடித் திரவியம் தேடிய தமிழன், அடிமை வேலை தேடி அந்நிய நாடுகளில் அலையலானான். இலங்கை வாழ் தமிழர் பொருளாதாரத்துறையில் சிங்கள நாட்டை ஓரளவிற்கு நம்பியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்நியர் ஆட்சியின் கீழ் தமிழ் மாகாணங்கள் கவனிக்கப்படாது போனதன் விளைவே இதுவாகும். சரித்திரக்கண்கொண்டு பார்த்தால், இலங்கை இரு தேசிய இனங்களின் தாயகமேயன்றி ஒரே மொழி, ஒரே இனம், ஒரே கலாச்சாரம் என எப்பொழுதும் இருந்ததில்லை. அப்படி இருக்க வேண்டுமாயின் பலத்தின் கைக்கொண்டு அழித்தாலே ஆகும்.

எடுத்ததற்கெல்லாம் இங்கிலாந்தையே நோக்கும், இதை ஒரு குட்டி இங்கிலாந்து ஆக்க திட்டமிட்டிருக்கும் சிங்களத் தலைவர்கள், இலங்கைத் தமிழரை ஸ்கொட்லாந்து மக்களுக்கு ஒப்பிடுவது வழக்கம். இனப்பற்று, மொழிப் பற்றற்ற தமிழர் சிலரும் அப்படியே இங்கிலாந்தும் ஸ்கொட்லாந்தும் ஒரே அரசின் கீழ் இருப்பதை போல இலங்கைத் தமிழ் நாடும் சிங்கள நாடும் ஒரே அரசின் கீழ் இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். ஆனால் ஸ்கொட்லாந்து மக்கள் இப்போலி ஒற்றுமைக்காகக் கொடுத்த விலை என்ன என்பதை இவர்கள் உணரவில்லை. பிரித்தானியா முழுவதும் ஆங்கிலமே அரசு மொழி மாத்திரமல்ல மக்கள் பேசும் மொழியாகவும் இருக்கிறது. ஒரு காலத்தில் ஆங்கிலத்தோடு சரியொத்த மொழியாக இருந்த ஸ்கொட்ஸும் வெல்ஸும் அழியும் தறுவாயிலிருக்கின்றன. இம்மொழிகளைப் பேசிய மக்கள், தங்கள் மொழி, தனிப்பண்பாடு ஆகியவற்றை இழந்ததோடு, இலங்கைத் தமிழருக்கும் இதே நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்குள்ள நிலையையும் அதிகாரத்திலுள்ளவர்களின் செயலையும் நுணுகி ஆராய்வோர் அறிவர். இங்கு சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் அரசாங்க மொழிகளாக பேச்சளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதிலும், நடைமுறையில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம்; பாராளுமன்றத்தில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம். பாராளுமன்றத்தில் இரு மொழிகளிலும் பேசலாமெனினும், தமிழில் பேச இன்னும் அனுமதி கிடைக்கவில்லை.

சபைத் தலைவருக்கே தமிழ் விளங்காது என்று காரணம் கூறப்படுகின்றது. தமிழில் பேச உத்தரவு கிடைத்தாலும் தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழிற் பேசுவதிற் பயனுண்டா? அவர்களுடைய பேச்சு ஐந்தில் ஒரு பகுதி பிரதிநிதிகளுக்குத்தான் விளங்கும். அவர்கள் தங்கள் கருத்தை நிலைநாட்ட வேண்டுமாயின் பெரும்பான்மையான அங்கத்தவர்களுக்கு விளங்கக்கூடிய பாஷையில் அன்றோ பேசவேண்டும்? இலங்கையில் உள்ள பாடசாலைகளில் எல்லாம், எல்லோரும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் படிக்க வேண்டும் என்று சட்டம் செய்தால், ஒவ்வொருவரும் தன் தன் மொழியில் பேசினாலும் எல்லோருக்கும் விளங்கும். ஆனால் அப்படிச்செய்யும் நோக்கம் இப்பொழுது அரசாங்கத்திலோ, எதிர்க்கட்சியின் இருக்கும் சிங்களத்தலைவர்களுக்கோ இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக அரசாங்கத்திலிருக்கும் திரு ஜயவர்த்தனா, திரு. டட்லி சேனநாயக்கா, டாக்டர் ராஜபக்ஷ முதலியோரும் எதிர்க்கட்சியில் இருக்கும் திரு. ஸ்ரீநிசங்கா,



திரு. சோமவீரசந்திரஸ்ரீ ஆகியோர் பகிரங்கமாக சிங்களம் மாத்திரமே அரசாங்க மொழியாக வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இதற்கிடையில் தமிழ் விபிஷீணர்களைக்கொண்டு வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதைப்போலத் தமிழர் சிங்களம் படிக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்விக்கிறார்கள். சிங்களவர்கள் தமிழ் படிக்க வேண்டுமென்று ஒரு சிங்களத் தலைவராவது சொல்லவில்லை. தமிழ், சிங்களம் கற்றால், இன்னும் சிறிது காலத்தில் எல்லோருக்கும் சிங்களம் தெரியுமாதலால் இரண்டு மொழிகளையும் அரசாங்க பாஷைகளாக வைத்து இடர்ப்படத்தேவையில்லை என்ற கூறி சிங்களத்தையே அரசு மொழியாக்குவதற்கு எல்லா முயற்சிகளும் செய்கிறார்கள் என்பது வெளிப்படை.

ஆங்கிலம் அரசமொழியாக இருந்த காலத்திலேயே எவ்வளவோ தமிழ் மக்கள் சிலாபம், புத்தளம் முதலிய பகுதிகளில் சிங்களத்தைக் கற்றுக் கொண்டு படிப்படியாகச் சிங்களவராய் வந்திருக்கின்றார்கள், வருகிறார்கள். இந்நிலையில் சிங்களம் அரசமொழியாக வந்தால், தமிழ் கற்பதால் சீவியத்திற்கு வழி ஏற்படாது என்ற நிலை ஏற்பட்டால் இன்னும் சில காலங்களில் தமிழர் தங்கள் மொழி, கலை, பண்பாடு, தன்மானம் எல்லாவற்றையும் இழந்து, பிரித்தானியாவில் ஸ்கொட்லாந்து மக்கள் அடைந்த நிலையையே அடைய நேரிடும்.

இப்பொழுதே தமிழரின் சனத்தொகை படிப்படியாகக் குறைந்து வருவதை காங்கேசன் துறைப் பிரதிநிதி திரு. செல்வநாயகம் அவர்கள் ஓர் தமிழ்த் தினசரிச் சுதந்திர மலரில் எழுதிய கட்டுரையில் குடிவிபரக் கணக்கிலிருந்து எடுத்துக்காட்டியிருக்கிறார். 1834ம் ஆண்டில் தமிழ் மாகாணங்களின் சனத்தொகை 1 லட்சத்து 95 ஆயிரமாகவும், நாட்டின் முழுச்சனத்தொகை 8 லட்சத்து 51 ஆயிரமாகவும் இருந்து வந்தது. அதாவது தமிழர் மொத்த சனத்தொகையில் 28 வீதமாகும். 1945–ல் எடுக்கப்பட்ட குடித்தொகைக் கணக்கெடுப்பில் மொத்தத் தொகையான 66 லட்சத்தில் ஏழரைலட்சம் மட்டுமே வடகீழ் மாகாணங்களில் உள்ள தமிழராவர். அதாவது பதினொன்றரை வீதமாகச் சுருங்கிவிட்ட சனத்தொகையே தமிழ் மாகாணங்களில் இருப்பதைக் காண்கிறோம் என்று அவர் அக்கட்டுரையில் கூறுகிறார். இந்நிலை தொடர்ந்து நடக்குமாயின் இலங்கைத் தமிழர் என்ற சாதியே இல்லாதொழியும். இதைத் தடுக்க முயற்சிக்க வேண்டியது தமிழர் தலைவர் என்று இருப்போரின் கடமையாகும். இதற்கு வழி சிங்கக்கொடி, சிங்கள மொழி, சிங்கள இனம் என்று ஹிட்லர் சென்ற பாதையைக் கைக்கொள்ளும் சிங்களத் தலைவர்களிடம்

சரணாகதி அடைவதல்ல. இப்படிச் செய்வது விளக்கைத்தழுவிய விட்டிற் பூச்சியின் நிலையாகவே முடியும். இதற்கு வழி இலங்கையின் சரித்திரத்திலிருந்தே பிறக்கிறது. இந்திய பொதுவுடமைக்கட்சித் தலைவர் பி.ஸி. ஜோஷி, "அதிகாரத்தைக்கைப்பற்ற கடைசி முயற்சி" என்ற நூலில் இந்திய இனப்பிரச்சனைகளைப்பற்றி எழுதும்போது, ஆங்கிலேயர் இந்தியாவைக் கைப்பற்றுமுன் இந்தியா எத்திசையில் வளர்ச்சியடைந்து கொண்டிருந்ததோ அத்திசைக்குச் செல்வோம் என்று கூறுகிறார். இலங்கையின் மொழிப் பிரச்சனைக்கும் அதுவே வழியாகும். ஐரோப்பியர் வருமுன், தனியரசு நடத்திய தமிழருக்கு இன்றும் சுயநிர்ணய உரிமை வேண்டும். தமிழ் மாகாணம் பிரிக்கப்பட்டு தனியரசாக வேண்டும். அம்மாகாணங்கள் விரும்பினால் தமிழ் நாட்டோடு சேரும் உரிமை வேண்டும். தமிழருக்கு இப்போது வேண்டுவது, உச்சிமீது வானிடிந்து வீழ்ந்தாலும் அஞ்சாது அசைந்து கொடுக்காது, முஸ்லிம் மக்களுக்கு பாகிஸ்தான் பெற்றுக்கொடுத்த வீரர் ஜின்னாவைப் போன்ற தலைமையேயாகும்.

ஐரிஷ் சிங்கம் டிவேலரா போன்றோர் தமிழரிடையே தோன்ற வேண்டும். இப்பிரிவினை பொருளாதாரத்துறையில் தமிழரைப் பாதிக்குமே என்று சிலர் சொல்லக்கூடும். தமிழர் அரசாங்க சேவையை நம்பி வாழ்வது இனி முடியாது. தமிழும் சிங்களமும் அரசாங்க மொழிகளாக இருந்தாலும் தமிழர் தமது விகிதாசாரத்திற்கு தக்கபடிதான் உத்தியோகங்கள் பெற முடியும். தமிழ் மாகாணங்களிலேயே தமிழர் உத்தியோகம் வகிக்க முடியும். சிங்களம் அரசமொழியாக மாற்றப்பட்டால் அதுவும் கிடையாது. தமிழ் மாகாணங்கள் விவசாயத்துறையில் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.

சரியான முறையில் சாகுபடி செய்யப்பட்டால் இலங்கை முழுவதற்குமே சாப்பாடு கொடுக்கக்கூடிய நிலமுண்டு. அரசாங்கத்தின் உதவி ஒரு சிறிது இருந்தாலும் அவற்றைப் பொன் கொழிக்கும் நிலமாகச் செய்யும் முயற்சியே உருவாக அமைந்த தமிழ் தொழிலாளருண்டு. சீமெந்து தொழிற்சாலை போன்ற இன்னும் பல தொழிற்சாலைகள் தோன்ற வேண்டும். வடபகுதித் துறைமுகங் களைத் திறந்து கடல் வியாபாரத்தை மேற்கொள்ள வேண்டும். மீன்பிடித் தொழிலை விருத்திசெய்ய மாகாணங்கள் தங்கள் ஆட்சியை தாமே நடத்த வேண்டும். பிரிவினை இல்லாத தமிழர், சிங்களவர்களாக இருந்தாலும் இப்போதுள்ளதைப்போல் விகிதாசாரத்திற்கு மேல் உத்தியோகங்கள் வகிக்க முடியாது. தமிழ் மாகாணங்கள் விவசாயத்துறையிலும் கைத்தொழில் துறையிலும் வியாபாரத்துறையிலும் விருத்திசெய்யப்பட்டாலன்றி தமிழர் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் மிகவும் கஸ்டப்படப் போகிறார்கள். அதையும் நீக்க வழி தமிழ் மாகாணங்கள் தன்னாட்சி பெறுவதாகும். தூங்கிய தமிழன் விழித்து விட்டான். தமிழ்நாடு இந்தியா சமதர்மக் குடியரசுகளின் யூனியனில் விருப்பத்தின்பேரில் சேர்ந்திருக்கும் ஓர் சுதந்திரக் குடியரசாக வேண்டும் என்ற கிளர்ச்சி வலுத்து வருகின்றது. தமிழ் ஈழமும் இத்தமிழ் குடியரசின் ஓர் அங்கமாக அமைவதற்கு உரிமை இருக்க வேண்டும். தமிழனுக்கு இன்று வேண்டுவது சுயநிர்ணய உரிமையே.

# 2
# இலட்சியப் பாதை

மன்னராட்சி நிலவிய காலங்களில், ஒரு நாட்டின் சரித்திரம் அந்நாட்டை ஆண்ட மன்னர்களின் வரலாறாகவே எழுதப்படும். மக்களாட்சி மலர்ந்தபின், மக்கள் சக்தியைத் திரட்டிச் செயற்பட்ட அரசியல் இயக்கங்களின் வரலாறே நாட்டின் சரித்திரமாக அமைகிறது. அக்கண்ணோட்டத்தில் அரசியற் கட்சிகளின் தோற்றம், வளர்ச்சி, சமுதாயத்தில் அவற்றின் தாக்கம், அவற்றின் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், சாதனைகள் ஆகியன அதி முக்கியத்துவம் வாய்ந்தவை.

இலங்கையில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் விடுதலை பெறுவதற்காக உழைக்கும் ஒரு ஸ்தாபனத்தை அமைக்க வேண்டுமென்னும் தனி நோக்கத்துடன் நாங்கள் எல்லோரும் இன்று கூடியிருக்கின்றோம். இப்போதிருக்கும் நிலைமையில் நாம் விடுதலை பெறுவதற்கு ஒரு சுதந்திரத் தமிழரசை நிறுவுவது இன்றியமையாததென்பது எமது திடமான நம்பிக்கையாகும் .

1949ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சி தோன்றிய நேரத்தில், அதன் தாபகரும் வழிகாட்டியும் ஆரம்பத் தலைவருமான உயர்திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், கியூ. ஸி அவர்கள் தமது தலைமைப் பேருரையில் குறிப்பிட்ட வாக்கியங்களே இவை. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கையை இரத்தினச் சுருக்கமாகத் தந்தையவர்கள் இங்கு கூறியிருக்கின்றார். இந்த இலக்கை நோக்கி, மக்களைத் திரட்டி, இயக்கம் வளர்த்த வரலாறே கீழே தரப்படுகின்றது.



### இலங்கையில் தமிழனின் தொன்மை :

சரித்திரத்திற்கு முற்பட்ட காலந்தொடக்கம், இலங்கையில் தமிழன் வாழ்ந்தான் என்பது – நடுவு நிலையில் நின்று – இந்நாட்டின் வரலாற்றை ஆராய்ந்தோர் எல்லோரும் ஏற்றுக்கொண்ட உண்மையாகும். காலத்துக்குக் காலம், சிங்கள மன்னரும் தமிழ் மன்னரும் இந்நாட்டை ஆண்டனர். எனினும் பதின்மூன்றாம் நூற்றாண்டு முதல் ஐரோப்பியர் இந்நாட்டைக் கைப்பற்றும்வரை, வட இலங்கையில் ஒரு நிலையான தமிழ் அரசும், கிழக்கிலங்கை உட்பட – வடகீழ் பிரதேசத்தில் தமிழ் வன்னிய குறுநில மன்னரின் ஆட்சியும் நிலவின. 1619 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் வட இலங்கைத் தமிழ் அரசைக் கைப்பற்றிய போதும், அவர்களுக்கோ அடுத்து வந்த ஒல்லாந்தருக்கோ அடங்க மறுத்து, கைலை வன்னியன், பண்டார வன்னியன் போன்ற குறுநில மன்னர் தமிழ் ஆட்சியைக் காத்து நின்றனர். 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், ஆங்கில ஆட்சியே வன்னியர் ஆட்சியையும் அழித்து இலங்கை முழுவதையும் கைப்பற்றியதோடு, 1833ஆம் ஆண்டு முழு நாட்டையும் ஒரே நிருவாகத்தின் கீழ்க் கொண்டு வந்தது. தமிழ் இனத்தின் சுயாட்சியும் தனிப் பிரதேசமும் ஐக்கிய இலங்கை என்ற ஒரே அமைப்பின் கீழ்ப் பறிக்கப்பட்டன.

ஆங்கில ஆட்சியிலிருந்து படிப்படியாக மக்கள் கைக்கு அதிகாரம் மாற்றப்பட்டபோது, தமிழ் இனத்தின் உரிமைகள் சிங்களப் பெரும்பான்மை என்ற வெள்ளத்தில் அமிழ்ந்தி அழிந்துவிடாது காக்கப்பட வேண்டுமென்பதைத் தமிழ்த் தலைவர்கள் உணர்ந்தனர். 1918 ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய காங்கிரசை ஆரம்பித்த சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களே, 1924 ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழ் லீக்கை ஆரம்பித்துத் தமிழ் இனத்தின் தனித்துவம் காப்பதற்குத் தனிநாடு வேண்டுமென்று கூறினார். டொனமூர் அரசியல் திட்டத்தைச் சிறுபான்மையோரின் மரணஓலை என்று கூறி எதிர்த்தார் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள். ஆயினும், இத் தலைவர்களின் முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

### சோல்பரி ஆணைக்குழு:

இலங்கை மக்களின் கைக்கு அரசியல் அதிகாரத்தைப் பெருமளவிற்கு மாற்றுவதற்கு ஓர் அரசியல் அமைப்பை ஆக்கும் பொருட்டு, சோல்பரிப் பிரபுவின் தலைமையில் ஓர் ஆணைக்குழு பிரித்தானிய குடியேற்ற நாட்டு மந்திரியால் நியமிக்கப்பெற்றது. அக்குழுவின்முன் இலங்கை தமிழ் மக்களின்

உரிமைக் கோரிக்கையை ஒரே குரலில் எடுத்துக்கூறும் பொருட்டு, 1944ஆம் ஆண்டு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நிறுவப்பட்டது. அதன் தலைவர் திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் பாராளுமன்றத்தில் எந்த ஒரு சமூகத்திற்கும் ஏனைய சமூகங்களை நசுக்குவதற்கு வாய்ப்பற்ற வகையில், பெரும்பான்மைச் சமூகத்திற்கும் சிறுபான்மைச் சமூகங்களுக்குமிடையே சமபலப் பிரதி நிதித்துவம் இருக்கவேண்டும் என்ற கொள்கையை வெகு சிறப்புடன் எடுத்து விளக்கினார். டொனமூர் அரசியல் அமைப்பின்கீழ், தமிழ் இனத்திற்குச் சிங்களப் பெரும்பான்மையினர் இழைத்த இன்னல்களை எடுத்து விபரித்தார். சோல்பரி ஆணைக்குழுவினர் இவற்றின் உண்மையை ஏற்றுக்கொண்டபோதிலும், சிங்கள மந்திரி சபையின் கோரிக்கைக்கே இணங்கினர். பிரித்தானியப் பாராளுமன்ற ஆட்சி முறையை அப்படியே இங்கும் புகுத்தும் அரசியல் அமைப்பை ஏற்படுத்தினர். அவ்வமைப்பின் 29ஆம் பிரிவில் – எந்த ஒரு சமூகத்திற்கும், மதத்திற்கும் விரோதமான சட்டமியற்றுவதைத் தடுக்கும் ஒரு பாதுகாப்பைத் தவிர, சிங்களப் பெரும்பான்மைக்குக் கட்டுப்பாடற்ற அதிகாரம் வழங்கப்பட்டது. இதற்குக் கைம்மாறாகக் கட்டு நாயக்கா விமானத் தளத்தையும் திருகோணமலைக் கடல்தளத்தையும் உபயோகிக்கும் உரிமையை பெற்றனர் ஆங்கிலேயர்.

இந்த ஒருதலைப்பட்சமான அரசியல் அமைப்பை எதிர்த்து வாதாட இங்கிலாந்து சென்றார் திரு. பொன்னம்பலம் அவர்கள். அவர் அங்கு நிற்க, தமிழ்க் காங்கிரஸ் அரசாங்க சபை அங்கத்தவர்களும் ஏனைய தமிழ்ப் பிரதிநிதிகளும் கிட்டாதாயின் வெட்டென மற என்று கூறி, சோல்பரி வெள்ளை அறிக்கையை ஏற்கும் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தனர். மலை நாட்டுத் தமிழ் மக்களின் பிரதிநிதியாக அன்று இருந்த திரு. நடேச ஐயர் அவர்களும் நியமனப் பிரதிநிதியாக இருந்த திரு. ஐ. எக்ஸ். பெரேரா அவர்களுமே வெள்ளை அறிக்கையை எதிர்த்து வாக்களித்த தமிழ்ப் பிரதிநிதிகளாவர். எதிர்த்து வாக்களித்த ஒரேயொரு சிங்கள உறுப்பினர் காலிப் பிரதிநிதி திரு. டயிள்யு. தஹநாயக்கா ஆவார்.

**தமிழ்க் காங்கிரஸின் வெற்றியும் பிளவும்:**

சோல்பரி அரசியல் திட்டத்தின்கீழ் முதல் தேர்தல் 1947 ஆம் ஆண்டு நடைபெற்றது. அரசியல் அமைப்பில் பாதுகாப்புத் தேடத் தலைவர்கள் எடுத்த முயற்சி தோல்வி அடைந்தபோதிலும், தமிழன் அடிமையாக வாழ ஆயத்தமில்லை என்ற கொள்கையைத் தமிழ் மக்கள்முன் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வைத்தது. தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்ற கோஷம் தமிழீழம் எங்கும் ஒலித்தது. அடிமை அரசியல் அமைப்பை ஆதரித்த தமிழ் உறுப்பினர்களில், ஒருவர் தவிர அத்தனைபேரும் தோற்கடிக்கப்பட்டனர். வடக்கிலும் திருகோணமலையிலும் தமிழ்க் காங்கிரஸ் அமோக வெற்றி பெற்றது.



தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாபெரும் வரவேற்பில், திரு. சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்கள் முதன்முதலாக ஒற்றையாட்சியில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காவிட்டால், பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய இணைப்பாட்சி முறையைத் தமிழ் மக்கள் கோரவேண்டி வரும் என்று பல்லாயிரம் மக்கள் முன் பிரகடனம் செய்தார். இரண்டு ஆண்டுகளின்பின் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அடிப்படைக் கொள்கை அன்றே கருக்கொள்ளத் தொடங்கியது. தமிழ் மக்களுக்குச் சுய நிர்ணய உரிமை கோரி, தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா அவர்களுக்கும் குடியேற்ற நாட்டு மந்திரிக்கும் 1947ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதி ஒரு தந்தி அனுப்பினார்.

இதற்கிடையில், தமிழ்ச் காங்கிரசைச் சாராத சில தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரை அமைச்சராக்கி, திரு. டி.எஸ். சேனநாயக்கா மந்திரி சபையை அமைத்திருந்தார். அவர்களின் ஆதரவோடு, பூரண சுதந்திரங் கோரி அவர் விடுத்த வேண்டுகோள், சகல சமூகங்களின் சம்மதத்தையும் பெற்றதாக ஆங்கில ஆட்சியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கை சுதந்திரம் பெற்றது. பிரித்தானிய ஆட்சியினாலோ அல்லது வேறு வெளியாரின் தலையீட்டினாலோ தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறலாம் என்ற நிலை முடிவடைந்தது.

எதிர்ப்பு வழியைக் கைவிட்டு, சிங்கள ஆட்சியோடு ஒத்துழைப்பு வழியை மேற்கொள்ளத் தீர்மானத்தார் தமிழ்க் காங்கிரஸ் தலைவர். தமிழ்க் காங்கிரஸ் தலைமைப் பீடத்தில் பாரதூரமான கருத்து வேற்றுமை தலைதூக்கியது. திரு. செல்வநாயகம் அவர்களும் டாக்டர் இ.மு.வி. நாகநாதன் அவர்களும் அரசுடன் சேரும் யோசனையை எதிர்த்தனர். எனினும், கட்சியின் ஒற்றுமையைக் கருதித் திரு. செல்வநாயகம் அவர்கள் பகிரங்கமாக எதிர்ப்பைக் காட்டவில்லை.

டாக்டர் நாகநாதன் அவர்கள் வெளிப்படையாக எதிர்த்துத் தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்றக் குழுவிலிருந்து வெளியேறினார்.

தமிழ்க் காங்கிரஸ் அரசாங்கத்துடன் சேருவதற்குமுன்பே, டி. எஸ். சேனநாயக்கா அரசாங்கம் இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டது. தமிழ்க் காங்கிரஸ் சார்பில் திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களும் திரு. சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்களும் அச்சட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர். 1948ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் இந்திய – பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. திரு. செல்வநாயகம் அவர்கள் இச்சட்டத்தை மிகவும் தீவிரமாக எதிர்த்துப் பேசும்போது கீழ்க்கண்டவாறு கூறினார்:

இன்று இந்தியத் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. நாளை மொழிப்பிரச்சினை வரும்போது இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இதே கதி நேரிடும். எனவே, இன்றே நாமெல்லோரும் ஒன்று சேர்ந்து இவ்வநீதியை எதிர்க்க வேண்டும் . (பாராளுமன்ற நடடிவக்கை 10–12–1948). எட்டு ஆண்டுகளின் பின் – 1956 ஆம் ஆண்டு சிங்களம் மாத்திரம் சட்டம் வந்தபோது, திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களின் இவ்வாக்கியங்களின் தீர்க்கதரிசனத்தைத் தமிழ் மக்கள் உணர்ந்தனர். இந்திய – பாகிஸ்தானியர் பிரஜாவுரிமையைச் சட்ட வாக்கெடுப்பின்போது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இரண்டாகப் பிளந்தது. திருவாளர்கள் பொன்னம்பலம், கனகரத்தினம், இராமலிங்கம் ஆகியோர் சட்டத்தை ஆதரித்தும், திருவாளர்கள் செல்வநாயகம், வன்னியசிங்கம், சிவபாலன் ஆகியோர் சட்டத்தை எதிர்த்தும் வாக்களித்தனர். அன்று ஏற்பட்ட பிளவு 24 ஆண்டுகளின் பின் (1972), தமிழர் கூட்டணியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் ஒன்று சேர்ந்தபோதே மறைந்தது. இக்கட்சிகள் இரண்டும் ஒன்று சேர்ந்திருக்கும் இந்த நேரத்தில், துரதிஷ்டம் மிகுந்த இப் பிளவைப்பற்றிக் குறிப்பிடுவது வேதனை தருவதாக இருந்தாலும், வரலாற்றின் கோவை விடுபடாதிருப்பதற்காகக் கூற வேண்டியவனாயிருக்கிறேன்.

### இணைப்பாட்சி :

காங்கிரஸில் ஏற்பட்ட பிளவைத் தொடர்ந்து, இருசாராரும் தத்தம் கருத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் எடுத்து விளக்க முற்பட்டனர். தொடர்ந்து அரசை எதிர்த்து போராடி, இணைப்பாட்சியின் கீழ் தமிழ் இனத்தின் உரிமையைப் பெறுவதே எமக்குள்ள ஒரே வழி என்று திரு. செல்வநாயகம் அவர்கள் பிரசாரம் செய்யத் தொடங்கினார். இந்த இயக்கத்தின் கால்கோள் விழா 13–2–1949 அன்று மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன்றிலில், ஸ்ரீலஸ்ரீ துரைச்சாமிக் குருக்கள் அவர்கள் ஆசி கூறித் திரு. செல்வநாயகம் அவர்களைத் தலைமை வகிக்கும்படி அழைக்க ஆரம்பமாயிற்று. கோப்பாய்ப் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கம் அவர்களும் மூதவை உறுப்பினர் டாக்டர் இ.மு.வி. நாகநாதன் அவர்களும் பேசிய இக்கூட்டத்தில் இளைஞர்களின் சார்பில் பேசும் வாய்ப்பு, அப்போது ஒரு சட்டமாணவனாக இருந்த எனக்குக் கிடைத்தது. அன்றிலிருந்து தமிழ் மக்களின் அரசியலில் ஒரு புதிய சிந்தனை கிளர்ந்தது. ஈழத்தமிழன் ஒரு தனித் தேசிய இனம்; அவனுக்கு ஒரு தனிப் பிரதேசம் உண்டு; அதை அவன் ஆள வேண்டும்; அதன் பொருளாதாரத்தை விருத்திசெய்து தமிழன் வாழ முடியும்; தென்னிலங்கையை நம்பி வாழமுடியாது; வாழத் தேவையுமில்லை – இப்புதுமையான கருத்துக்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பட்டி தொட்டிகளிலும் பட்டினங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கின. கருத்துக்குக் கருத்து மாத்திரமல்ல, கல் மாரியும் கிடைத்தது பல இடங்களில். தமிழ் இனம் செல்ல வேண்டிய பாதை கல்லும் முள்ளும் நிறைந்தது; விஷ ஜந்துக்கள் நெளிவது; இரத்தமும் கண்ணீரும் சிந்தவேண்டியது என்பதை அந்த ஆரம்பக் கட்டத்தில் அனுபவத்திற் கண்டோம். ஆயினும், சளைக்காது பிரசாரம் வேகமாக நடைபெற்றது. வருங்காலத் திட்டங்களைத் தெளிவுபடுத்துவதற்கு, கொழும்பில் ஒவ்வொரு வியாழக்கிழமை இரவும் ஒவ்வோர் அன்பர் வீட்டில் கருத்துப் பரிமாறல் நடைபெற்றது.



"Thursday nights are Federas Nights" என்பது டாக்டர் நாகநாதன் அவர்களின் சுலோகம், டாக்டர். வி.கே. பரமநாயகம், டாக்டர் எம். திருவிளங்கம், திருவாளர்கள் பி. என். திருநாவுக்கரசு, பி. நல்லசிவம்பிள்ளை, வி.பொ.சி. முத்துக்குமாரசாமி, எஸ்.பி. வேலாயுதபிள்ளை, வி. நவரத்தினம், எஸ்.டி. சிவநாயகம், அருள். தியாகராசா முதலிய பலர் இவற்றில் கலந்து வந்தனர். பிரசாரத் திட்டங்களும் அங்கு கூறவேண்டிய அரசியற் கருத்துக்களும் எம் உள்ளங்களிற் தெளிவு பெற்றன; ஒரே சிந்தனையுள்ள ஒரு குழு மெல்ல மெல்ல விரிவடைந்து வளர்ந்து வந்தது.

### நந்திக்கொடி

யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் கூட்டங்களும் கருத்தரங்குகளும் நடைபெற்றன. திருகோணமலையில் 8–10–49இல் சக்தி நிலைய ஆதரவில்

முதற் கூட்டம் நடைபெற்றது. திரு. இராஜவரோதயம், திரு. இராமநாதன், திரு. பா. விஜயநாதன் முதலிய பலர் அங்கு இயக்கத்தில் உழைக்க முன்வந்தனர். மட்டக்களப்பில் திரு. ஆர்.பி.கதிர்காமர் தலைமையில் அடுத்த மாதம் – முதற் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. திருவாளர்கள் ஈ.எல்.தம்பிமுத்து, சாகுல் ஹமீது, செ. இராசதுரை, இரா. பத்மநாதன், பாலசுப்பிரமணியம், சித்தாண்டி நாகலிங்கம், சிவஞானம், ஆசிரியர் கனகசபை போன்ற பலரின் ஒத்துழைப்புடன் இயக்கம் அங்கு வளர்ச்சிபெறத் தொடங்கியது.

சங்கிலி மன்னனின் ஆட்சி 1619 ஆம் ஆண்டு அழிக்கப்பட்டபோது இறக்கப்பட்ட நந்திக்கொடி, 3–9–49ல் – 330 ஆண்டுகளின் பின் மீண்டும் நல்லூர் சங்கிலித்தோப்பில் உயர்த்தப்பட்டது. அங்கிருந்து நூற்றுக்கணக்கான தொண்டர்கள் அணிவகுத்து நல்லூர் கைலாச பிள்ளையார் கோவில் வீதிக்குச் சென்றனர். வாலிபர்களின் கைகளில் நந்திக்கொடிகள் பறந்து கொண்டிருந்தன. திரு. வி. முத்துக்குமாரு எம்.ஏ. அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற இருந்தது. ஆனால், கூட்ட மேடை, மாற்றுக் கட்சியினரால் ஆக்கிரமிக்கப் பட்டது. கூட்டம் போலீசாரின் தலையீட்டினால் தடைசெய்யப்பட்டதாயினும், பழந்தமிழ் இராசதானியில் மறைந்த தமிழ் அரசின் கொடி ஏற்றப்பட்ட அச்சம்பவம் இளைஞர்களின் உள்ளங்களில் ஒரு புதுக் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. தமிழரசு இயக்கத்தில் அது ஒரு முக்கிய படிக்கல்லாக அமைந்தது. அடுத்தநாள், நவாலியில் பண்டிதர் இளமுருகனார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆக்ரோஷத்தோடு ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றினர்.

### கட்சியின் ஆரம்பம்

பிளவுபட்ட தமிழ்க் காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்ட உறுப்பினர்களும், புதிய கருத்தினால் கவரப்பட்டு அரசியல் எழுச்சி பெற்ற இளைஞர் பலரும் 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி காலை 9–30 மணிக்கு மருதானை அரசாங்க லிகிதர் சேவைச் சங்கக் கட்டிடத்தில் கூடினர். கூட்டத்தின் அழைப்பாளர்களாக டாக்டர் இ.மு.வி. நாகதநாதன் அவர்களும் திரு. கு. வன்னிய சிங்கம் அவர்களும் பத்திரிகை மூலம் அழைப்பு விட்டிருந்தனர். டாக்டர் எம். திருவிளங்கம் அவர்கள் வரவேற்புக்குழுத் தலைவராகப் பணியாற்றினார். திரு. செல்வநாயகம் அவர்கள் கூட்டத்தின் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமது



தலைமைப் பேருரையை நிகழ்த்தினார். தலைவர் அவர்களே கீழ்க்காணும் தீர்மானத்தை முன் மொழிந்தார்.

இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் விடுதலைக்காக உழைக்கும் தொண்டர்கள் 1949ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆந்த திகதி மருதானை அரசாங்க லிகிதர் சேவைச் சங்கக் கட்டிடத்தில் கூடிய இக் கூட்டம், நியாயமற்றதும் – பலமொழி பேசும் மக்களைக் கொண்ட நாட்டிற்கு ஏற்காததுமான – இன்றைய ஒன்றையாட்சி அமைப்பின்கீழ், இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் மென்மேலும் கீழான நிலைக்குத் தாழ்த்தப் படுவதை உணர்ந்து, தமிழ் பேசும் மக்கள் இந்நாட்டில் சுதந்திரமும் சுயமரியாதையுமுள்ள பிரஜைகளாக வருங்காலத்தில் வாழ்வதற்குப் பாதகமான சட்டங்கள் ஆக்குவதையும் நிர்வாக நடவடிக்கைகள் ஆற்றுவதையும் மேற்கொண்டிருக்கும் இன்றைய அரசாங்கத்தின் கொள்கையின் நோக்கத்தையும் ஆபத்தையுமறிந்து, நாட்டின் ஒற்றுமைக்குப் பாதகமற்ற முறையில் – இந்த அடிப்படைப் பிரச்சினைகளை நீதியாகவும் ஜனநாயக ரீதியாகவும் தீர்ப்பதற்கு ஒரே வழி – ஐக்கிய இலங்கைச் சமஷ்டியின் ஓர் அங்கமாக இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு சுயாட்சி அரசை நிறுவுவதே என்பதைத் தெளிவாகக் கண்டு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியாக அமைந்து, இந்நாட்டுத் தமிழ் பேசும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், சுயாட்சி என்ற இலக்கை அடைவதற்கு இடையறாது உழைக்க உறுதிபூண்ட, தமிழ்பேசும் மக்களின் தேசிய நிறுவனமாக இயங்குவதென்று தீர்மானிக்கிறது .

கூடியிருந்த பிரதிநிதிகள் அத்தனை பேரும் ஏகமனதாக ஆர்ப்பரித்து ஆதரித்த இத் தீர்மானமே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தோற்றமாகும்.

### சோஷலிசமும் தீண்டாமை ஒழிப்பும்

கட்சி நிறுவப் பட்டதைத் தொடர்ந்து அதன் நோக்கத்தையும் அடிப்படைக் கொள்கைகளையும் அமைப்பு விதிகளையும் மகாநாடு ஏற்றுக் கொண்டது. கட்சியின் வருங்காலப் போக்கை நிர்ணயிக்கும் வகையில் கட்சியின் பொருளாதாரக் கொள்கை பற்றி ஆரம்ப மகாநாட்டிலேயே காரசாரமான விவாதம் நடைபெற்றது. சோஷலிச பொருளாதார முறையைக் கட்சி கைக்கொள்ள வேண்டுமென்று இளைஞர்கள் வற்புறுத்தினர். பெரியவர்கள் பலர் அதை எதிர்த்தனர். கடுமையான வாக்குவாதத்தின் பின் சோஷலிச – பொருளாதார முறை என்பதை ஏற்பதா ? விடுவதா ? என்று வாக்கெடுப்புக்கு

விடப்பட்டபோது, இரு பக்கத்திற்கும் சமமான வாக்குகள் கிடைத்தன. எப்போதும் இளைஞர்களின் போக்கிற்கு மதிப்பளிக்கும் தந்தை செல்வநாயகம் அவர்கள் தமது வாக்கைச் சோஷலிசத்தின் பக்கம் கொடுத்த காரணத்தினால் கட்சியின் அடிப்படைக் கொள்கையாக சாதி, சமயம், இனம், ஆண், பெண் என்ற அடிப்படையில் வேற்றுமை பாராட்டாது, கல்வி, தொழில் முதலிய துறைகளில் சமசந்தர்ப்பமளிக்கும் சோஷலிச பொருளாதார முறையினை ஏற்படுத்தல் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. சமூக உயர்வு, தாழ்வுகளையும் தீண்டாமையையும் ஒழிப்பதும், சோசலிஸ்ட் பொருளாதார முறையினை அமைப்பதும் என்ற அடிப்படைக் கொள்கைகள் பழமை விரும்பிகள் பலரைக் கட்சியிலிருந்து விலகிப் போகச்செய்தன. ஆரம்பத்தில் எம்மோடு ஒத்துழைத்த சிலர் இவற்றைக் கண்டதும் ஒதுங்கிக் கொண்டனர். சமுதாயத்தில் புரையோடிய புண்ணான சாதியை ஒழித்து, ஒரு புத்துயிர் பெற்ற – ஒன்றுபட்ட தமிழ் இனத்தை உருவாக்கி, அவர்களுக்கு ஒரு தாயகத்தையும் அத் தாயகத்தில் தம்மைத் தாம் ஆளும் உரிமையையும் நிலைநாட்டி, அங்கு சுரண்டல் ஒழிந்த சோஷலிச பொருளாதார அமைப்பை ஏற்படுத்தி, எல்லாத் தமிழ் பேசும் மக்களும் இன்ப வாழ்வு வாழ வழி வகுப்பதே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் குறிக்கோளென்று அன்றே உறுதியாகத் தீர்மானிக்கப்பெற்றது.

### சோல்பரி யாழ்ப்பாண வருகை

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பித்து ஒரு மாதத்தில் களத்தில் குதிக்கும் வாய்ப்புக் கட்சி ஆதரவாளர்களுக்குக் கிடைத்தது. அநீதியான அரசியல் அமைப்பைச் சிபார்சு செய்து தமிழ் இனத்தை அடிமைகளாக்கிய சோல்பரி ஆணைக்குழுவின் தலைவர் சோல்பரிப் பிரபு இலங்கையின் மகா தேசாதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். அவர் 1950ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்திற்கும் வருகை தந்தார். தமிழினத்தின் வைரியை வரவேற்காதீர் என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு, அவருடைய வருகையைப் பகிஷ்கரிக்குமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி கோரியது. பகிஷ்கார நோக்கத்தை விளக்கும் பொருட்டு, யாழ் நகர மண்டபத்தில் 22–1–50 ஆந் திகதி ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆட்சியாளரினதும் வேறு அரசியற் சக்திகளினதும் தலையீட்டினால் நகர மண்டபத்திற் கூட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டது. கட்டணம் செலுத்தி வாடகைக்கு அமர்த்தப்பட்ட மண்டபம் கூட்டத்தன்று இரட்டைப் பூட்டுகள் போட்டுப் பூட்டப் பட்டிருந்தது. ஆயிரக்கணக்கில் திரண்ட மக்கள், பூட்டப்பட்ட கதவுகளையும், அணிவகுத்து ஆயுத பாணிகளாக நின்ற போலீசாரையும் கண்டு திகைத்தனர். திடீரென்று, கட்சித் தொண்டர்கள் அங்கு தோன்றிக் கூட்டம் தனியாருக்குச் சொந்தமான ஒரு கராஜ் காணியில் நடைபெறும் என்ற துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர். அக்காணியில் திரண்ட மக்கள் மத்தியில் ஒரு மேசை மீது நின்று தலைவர்கள் பேசினர். யாழ்ப்பாணம் முன் எப்போதும் காணாத புரட்சிகரமான சூழ்நிலையில் கூட்டம் நடைபெற்றது. புதிதாகப் பிறந்த கட்சி என்ற குழந்தை தவழுவதற்கு முன்பே, ஆட்சியாளருக்குப் பெருந் தலையிடி கொடுக்கும் இயக்கமாக வளர்வதற்கான அறிகுறிகள் தோன்றின.



### சிங்கக் கொடி

1950 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் – இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தீர்வு பெறாதிருந்த தேசியக் கொடிப் பிரச்சினையில், பிரதமரால் நியமிக்கப்பட்ட குழு ஒரு முடிவுக்கு வந்தது. சிங்கக் கொடியின் கம்பப் பக்கத்தில் சிறுபான்மைச் சமூகங்களைக் குறிப்பதற்குப் பச்சை – காவி நிறங்களில் இரு கோடுகள் சேர்க்கப்பட்டன. தமிழ் பேசும் சமூகம் புறக்கணிக்கப்பட்ட இரண்டாந்தரப் பிரஜைகளாக இந்நாட்டில் வாழுகின்றனர் என்பதைப் பிரகடனப்படுத்தும் ஒட்டுக்கொடி என்று இலங்கைத் தமிழரசுக்கட்சி அக்கொடிக்கு எதிராகத் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டது. இலங்கை வாழ் தமிழ் பேசும் இனம் இக்கொடியை முற்று முழுதாக நிராகரிக்கின்றது என்று கட்சி தீர்மானித்தது. உணர்ச்சியுள்ள தமிழ் மக்கள் – இன்றும் அக்கொடியை ஏற்க மறுக்கும் நிலை இருப்பதற்குக் காரணம் – எமது இயக்கமேயாகும்.

### கட்சியின் வளர்ச்சி :

இவ்வாரம்பக் கட்டத்தில் மலைநாட்டுத் தொழிற் சங்கங்களில் பல காலம் பெரும் பங்கு கொண்டு உழைத்து வந்த திரு. தெ.செ. வைத்தீஸ்வரன் அவர்களைக் கட்சி தன் நிருவாகச் செயலாளராகப் பெற்றது. கட்சியின் அமைப்பு வேலையும் பிரசார இயக்கமும் வேகம் பெற்றன. மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் மூலை முடுக்குகளெல்லாம் கட்சிப் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெற்றன. கட்சிக் கிளைகள் கிராமந்தோறும் நிறுவப்பட்டு மாவட்டக் கிளைகளும் அமைக்கப் பெற்றன. கட்சிக் கிளைகள் கிராமந்தோறும் அமைக்கப்பெற்றன. கட்சியின் உப தலைவர்களில் ஒருவரான டாக்டர். வி.கே. பரமநாயகம் அவர்கள் இப்பணியில்

பெரும் பங்கு கொண்டார்.

### கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றம்

இந்தக் காலத்தில் பட்டிப்பளை ஆறு என்ற பாரம்பரியத் தமிழ்ப் பெயர் கல்லோயா என்று மாற்றப்பெற்று, அங்கு சேனநாயக்கா சமுத்திரத்தைக் கட்டி – அப் பள்ளத்தாக்கை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் கிழக்கு மாகாணத்துக்குப் பெரும் வரப்பிரசாதம் என்று பிரசாரம் செய்தனர் ஆட்சியாளர். ஆனால் , அரசின் உண்மையான நோக்கத்தை அன்றே உணர்ந்து அப்பகுதி மக்களைத் தட்டியெழுப்பும் பொருட்டுத் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டது தமிழரசுக்கட்சி. கல்முனை, சம்மாந்துறை போன்ற அப்பகுதிகளில் மக்கள் நெருங்கி வாழும் கிராமங்கள் எல்லாம் சென்று, சிங்களக் குடியேற்றத்தின் ஆபத்தை விளக்கி 1950 ஆம் ஆண்டு தொடக்கமே கட்சித் தலைவர்கள் பிரசாரம் செய்தனர்.

### கட்சியின் முதலாவது தேசிய மாநாடு

1951ஆம் ஆண்டு ஏப்ரல் 13, 14, 15ஆந் திகதிகளில் திருகோணமலையில் கட்சியின் முதலாவது மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் தலைவர் திரு. செல்வநாயகம் அவர்கள் ஆற்றிய தலைமைப்பேருரையும் அங்கு நிறைவேற்றப்பட்ட ஏழு தீர்மானங்களும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்.

### பிரதமர் டீ.எஸ்.சேனநாயகா யாழ் வருகை

இந்த ஆண்டின் இறுதியில் பிரதமர் டீ. எஸ். சேனநாயகா யாழ்ப்பாணத்தில் வெற்றிப் பவனி வருதற்கு ஆயத்தங்கள் தொடங்கின. தமிழ் இனத்திற்கு அவருடைய அரசு செய்துவந்த பாரதூரமான தீமைகளை மக்களுக்கு விளக்கும் பொருட்டு அவரது வருகையைப் பகிஷ்கரிக்குமாறு கட்சி பிரசாரத்தை மேற்கொண்டது. பொதுவாக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்களும் குறிப்பாகத் திரு. டீ. எஸ். சேனநாயகா அரசாங்கமும் மேற்கொண்ட திட்டங்கள், மேலெழுந்த வாரியாகப் பார்ப்பவர்கட்குத் தமிழ் இனத்திற்கு விரோதமானவையாகத் தோன்றவில்லை. தமிழ் பேசும் தலைவர்களிற் பலருடைய ஒத்துழைப்போடு இக் கருமங்கள் நிறைவேற்றப்பட்டன. சிங்கக்கொடி நம்மீது திணிக்கப்பட்டபோது நமது தலைவர்களிற் பெரும்பாலோர் அதை ஏற்றுக்கொண்டனர். இந்நாட்டில் வாழும் அரைப்பங்கு தமிழரின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டுத் தமிழினத்தின் அரசியற் பலம் அழிக்கப்பட்டது. அது இந்தியருக்கு எதிரானதே யன்றி இலங்கைத் தமிழருக்குப் பாதகமானதல்ல என்று நம் மக்களை நம்பச் செய்தனர் ஆட்சியாளர். தமிழ்ப் பிரதேசத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டது. கிழக்கு மாகாணத் தமிழ்பேசும் மக்களுக்குப் பெரும் நன்மை தரும் திட்டமென்று காட்டிக்கொண்டது அரசாங்கம். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோலச் சிங்களத்திற்கு முதலிடம் கொடுத்துத் தமிழ் மொழியை ஒதுக்கத் தொடங்கியது. நோகாமல் தொடங்கிய இந்நடவடிக்கையைத் தமிழ்மக்கள் கண்டு கொள்ளவில்லை. பிரதமரின் யாழ்ப்பாண வருகையைப் பயன்படுத்தி இவற்றையெல்லாம் மக்களுக்கு விளக்கினோம். கஷ்டமற்ற பாதையையே விரும்பும் மக்கள் தனிச்சிங்களச் சூறாவளி எழுந்து வெளிப்படையாகவே மோதும்வரை, ஆபத்தை அறியாது பெரும்பாலும் உறங்கிக் கிடந்தனர். தன் தலையை மணலில் புதைத்துவிட்டு, வந்த ஆபத்து நீங்கிவிட்டதாக நம்பும் தீக்கோழி போன்றே வாழ்ந்தனர். அன்றும் இன்றும், கேள்போற் பகைவராக, விளங்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசுகளிலும் பார்க்க, வாள்போற் பகைவரான பண்டாரநாயக்காக்களின் அரசாங்கமே தமிழ் இனத்தின் உறக்கத்தைக் கலைத்து – உரிமை கோரி – உத்வேகத்தோடு இயங்கச் செய்தன.



### 1952ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல்

பிரதமர் டீ.எஸ். சேனநாயக்காவின் திடீர் மறைவுக்குப்பின் பதவியேற்ற டட்லி சேனநாயக்கா பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலை நடத்தினார். நிறுவி இரண்டரை ஆண்டுகளுக்கிடையில் கட்சி ஒரு பொதுத் தேர்தலிற் குதிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஏழு தொகுதிகளிற் கட்சி உத்தியோகபூர்வமாக வேட்பாளர்களை நிறுத்தியது. கோப்பாய் தொகுதியில் திரு. வன்னியசிங்கம் அவர்களும் திருகோணமலையில் திரு. இராசவரோதயம் அவர்களும் வெற்றி பெற்றனர். தந்தை செல்வநாயகம், டாக்டர் நாகநாதன் உட்பட ஏனைய வேட்பாளர்கள் தோல்வி கண்டனர். ஏழு தொகுதிகளிலுமாக – மொத்தம் 45, 331 வாக்குகள் கட்சிக்குக் கிடைத்தன. கட்சி அனுதாபிகளாக – மட்டக்களப்புத் தொகுதியில் திரு. ஆர்.பி. கதிராமர் அவர்களும் கல்குடாவில் திரு. சிவஞானம் அவர்களும் போட்டியிட்டனர். திரு. கதிராமர் வெற்றி பெற்றாராயினும், அடுத்த நாளே தந்தி மூலம் ஆளுங் கட்சியில் சேர்ந்தார். அப்போது – தமிழ் மக்களின் மனோநிலைக்கு இது நல்ல எடுத்துக்காட்டாகும்.

அமைப்பு வேலைகளும் பிரசாரமும் மேலும் தீவிரப்படுத்தப்பட வேண்டுமென்பதை இத்தேர்தல் முடிவுகள் உணர்த்தின.

## இரண்டாவது தேசிய மாநாடு

யாழ்ப்பாணத்தில் திரு. செல்வநாயகம் அவர்களைத் தலைவராகக் கொண்டு நடைபெற்ற இரண்டாவது மாநாடு தேர்தல் தோல்வியால் ஏற்பட்ட சோர்வைப் போக்கி மீண்டும் இயக்க வேலைகளில் சுறுசுறுப்புடன் இயங்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியது. இதற்குமுன், 1953 ஆம் ஆண்டு தை மாதம் முதலாந் திகதி பொங்கல் தினத்தன்று தமிழரசு வாலிப முன்னணி அமைக்கப்பெற்றது. கொக்குவில் திரு. ந. அருணாசலம் அவர்கள் வாலிப முன்னணியை அமைப்பதற்குப் பெருமுயற்சி மேற்கொண்டார். வாலிப முன்னணியின் முதல் தலைவராக என்னைத் தெரிவு செய்தனர். அதே ஆண்டில் நடைபெற்ற மாநில மாநாட்டில் இளைஞர்கள் உற்சாகமாகக் கலந்துகொண்டது மாத்திரமன்றி, நல்லூர் வாலிபர்கள் கடைசித் தமிழ் மன்னன் சங்கிலியன் வரலாற்றை நாடகமாக அதே மாநாட்டில் மேடையேற்றினர்.

## ஆகஸ்ட் 12 ஹர்த்தாலில் கட்சியின் பங்கு

பிரதமர் டட்லி சேனநாயக்காவின் அரசாங்கம் அரிசியின் விலையை அதிகரித்ததை எதிர்த்து, நாடெல்லாம் எதிர்க்கட்சிகள் ஹர்த்தாலையும் தீவிர எதிர்ப்பியக்கத்தையும் நடத்தின. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தாலை வெற்றிகரமாக நடத்துவதிற் கட்சி பெரும் பங்கு கொண்டது. இடதுசாரிகளோடு எந்த இயக்கத்திலும் நாம் பங்குகொண்டது கிடையாது என தம்மை முற்போக்குவாதிகள் என்று அழைத்துக்கொள்வோர் அடிக்கடி கூறுவதுண்டு. இந்த நாட்டில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியை ஆட்டங்கொள்ளச் செய்து 1956இல் இடதுசாரி வெற்றிக்கு வழிவகுத்த – ஆகஸ்ட் 12 ஆந் திகதி ஹர்த்தாலில் – நாம் கொண்ட பங்கை மறைக்க இவர்கள் முயற்சி செய்கின்றனர். தமிழ் இனத்தின் உரிமை கோரி நாம் நடத்திய இயக்கங்களில் இடது சாரிகள் ஒத்துழைக்க மறுத்தனரேயன்றி, நாட்டுப் பொதுமக்களின் உரிமைகளுக்காக அவர்கள் மேற்கொண்ட நியாயமான இயக்கங்களில் நாம் கலந்து கொள்ளத் தவறவில்லை.

## கொத்தலாவலைக்குக் கறுப்புக்கொடி

ஹர்த்தாலைத் தொடர்ந்து நாட்டின் பிரதமர் டட்லி சேனநாயக்கா இராஜினாமா செய்ய, சேர் ஜோன் கொத்தலாவலை பிரதமரானார். 1954 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் எலிசபெத் மகாராணி இலங்கைக்கு வருகைதந்தார். அவருக்கு நன்றி தெரிவித்துக் கொத்தலாவலை அரசாங்கத்தின் நிதி அமைச்சரும் சபை முதல்வருமான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் பேசினார். அப் பேச்சின் தமிழ் மொழி பெயர்ப்புத்தானும் இடம்பெறவில்லை. மகாராணி முன் பேசுவதற்கு தமிழ் – தகுதியற்ற மொழி – என்று திரு. ஜயவர்த்தானாவும் அன்றைய ஆட்சியும் கருதினர் போலும். இவ்வரவேற்பில் தமிழைப் புறக்கணித்துத் தமிழரை அவமதித்தபின், பிரதமர் கொத்தலாவலை யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வமாக வருகை தந்தார். தமிழ் மொழியைப் புறக்கணித்ததற்காகவும், அநீதியான குடியுரிமைச் சட்டங்களை மேலும் அநியாயமாக அமுல் நடத்தித் தமிழ்த் தொழிலாளிகளை நாடு கடத்தி நம் பலத்தைக் குறைக்க அரசு முனைந்திருப்பதாலும், தமிழ்ப் பிரதேசத்தில் திட்டமிட்டுச் சிங்களக் குடியேற்றம் நடத்துவதாலும், திரிசிங்கள ஜாதிக பெரமுனை யைக் கொத்தலாவலை ஆட்சி மறைமுகமாக ஆதரித்து வருவதாலும் பிரதமர் கொத்தலாவலையின் யாழ்ப்பாண வருகையைப் பகிஷ்கரிக்குமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது. தமிழரசு வாலிப முன்னணி கட்சியின் அனுமதியுடன் ஒருபடி மேலே சென்று, பிரதமருக்குக் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்பைத் தெரிவிக்கத் தீர்மானித்தது. யாழ் நகர மண்டப முன்றிலில் கோலாகலமாக வரவேற்பு நடைபெற்றது. அலங்கார இரதத்திற் பவனி வந்த பிரதமர் மேடையில் ஏறியதும், ஏற்பாடுகளுக்குப் பொறுப்பாயிருந்த அரசாங்க அதிபரை ஆனந்தத்தோடு கட்டித் தழுவினார். ஏற்கெனவே, இருநூறுக்கு மேற்பட்ட தமிழரசுத் தொண்டர்கள் மேடைக்குச் சமீபத்திற் சென்று, சட்டைப்பைகளில் கறுப்புக் கொடிகளுடன் அமர்ந்திருந்தனர். மேடையில் பிரதமர் ஏறியதும், வாலிப முன்னணித் தலைவர் எழுந்து கறுப்புக் கொடியை வீசிப் பிரதமரே திரும்பிப் போ என்று கோடிமிட்டவுடன், அத்தனை தொண்டர்களும் எழுந்து ஆர்ப்பரித்துக் கோஷமிட்டனர். பிரதமர் திகைப்படைந்தார். பார்வையாளராக வந்த பலரும் இளைஞர்களோடு சேர்ந்து கொண்டனர். உதவிப்பொலிஸ் அதிபரின் கட்டளைப்படி, குண்டாந்தடி தாங்கிய பொலீஸ்படை ஆர்ப்பரித்த இளைஞர் மீது பாய்ந்து தாக்கியது. பொதுமக்களிற் பலரும் தாக்கப்பட்டனர். பலர் இரத்தம் சிந்தினர். தமிழைப் புறக்கணித்த ஆட்சியின் தலைவருக்குத் தம் எதிர்ப்பைத் தெளிவாகக் காட்டிவிட்டனர் தமிழ் வாலிபர்கள். இலங்கையின் சரித்திரத்தில் நடைபெற்ற முதற் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் இதுவாகும்.

## சிங்கள வெறியாட்டம் ஆரம்பம்

பிரதமர் கொத்தலாவலையின் யாழ்ப்பாண வருகையின்போது, தமிழ் மொழி உரிமை பற்றித் தமிழ் மக்கள் கொண்டிருந்த பயம் பல இடங்களில் எடுத்துக் கூறப்பட்டது. கொக்குவிலில் அளிக்கப்பட்ட வரவேற்பில் திரு. ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்குப் பதிலளித்த பிரதமர், உடடினயாகச் சிங்களமும் தமிழும் சம அந்தஸ்துள்ள உத்தியோக மொழிகள் என்பதை அரசியல் அமைப்பிலேயே தான் இடம் பெறச் செய்வதாக உறுதியளித்தார். அவர் கொழும்பு திரும்புமுன், இவ் வாக்குறுதிக்குத் தென்னிலங்கையில் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. கொழும்பு திரும்பிய அடுத்த நாளே தான் கொடுத்த வாக்குறுதியை மறுத்துக் கொத்தலாவலை அறிக்கை வெளியிட்டார். இவருக்குப் பின்பு வந்த ஒவ்வொரு சிங்களப் பிரதமரும் தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை சிங்கள மக்களுடைய எதிர்ப்புக்கு அஞ்சி மறுதலித்திருக்கிறார்கள் என்பதை மேலும் காண்போம்.

கொத்தலாவலையின் மறுப்பை சிங்கள மக்கள் நம்பவில்லை. திரிசிங்களப் பெரமுனைகளும், பாஷா பெரமுனைகளும், பௌத்த பிக்கு மண்டலங்களும் நாடெல்லாம் மொழி வெறியைக் கிளப்பின. சுதந்திரம் பெறுவதற்கு முன்பு தொடக்கம் பத்து வருடங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த மொழிக் கொள்கை மாற்றப்பட்டு, சிங்களம் மாத்திரமே நாட்டின் ஆட்சி மொழியாக்கப் பட வேண்டுமென்ற குரல் பெரியதாகக் கிளம்பியது. இந்தச் சூழ்நிலையில் கட்சியின் மூன்றாவது தேசிய மாநாடு திருகோணமலையில் 1955ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம், 17ஆம் திகதிகளில் கூடியது.

## மூன்றாவது தேசிய மாநாடு

தனி மனிதர்களைச் சுற்றிக் கட்டி எழுப்பப்பட்ட அரசியல் கட்சிகளே இலங்கையில் இன்றும் பெரும்பான்மையாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. மார்க்சீயக் கட்சிகளைத் தவிர, ஏனைய அரசியற் கட்சிகள் அவற்றை நிறுவிய தலைவர்களின் தனிப்பட்ட செல்வாக்கையே மூலதனமாகக் கொண்டு அமைக்கப்பட்டவை. அவர்களின் மறைவுக்குப்பின், அவை அத்தலைவர்களின் மனைவியோ – மகனோ தலைமை தாங்க வேண்டிய நிலையிலுள்ளன. தமிழ் இனத்தின் விடுதலை இயக்கமாக அமைக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக்கட்சி – தனி ஒருவரின் நிரந்தரத் தலைமையின்கீழ் இயங்குவதைத் தந்தை செல்வநாயகம் விரும்பவில்லை. கொள்கையை முன்வைத்து அதற்காக



உழைக்கும் தொண்டர்களால் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட தலைமையின்கீழ் கட்சி வளர வேண்டுமென்பதே அவர் கருத்து. இக்கருத்துக்கமைய 1955 ஆம் ஆண்டு எப்ரல் 16ஆம், 17ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெற்ற கட்சியின் மூன்றாவது மாநில மாநாட்டிற்கு, கொள்கையில் ஆழ்ந்த பற்றும் மதிநுட்பமும் தியாக சிந்தையுங் கொண்ட கோப்பாய்க் கோமான் திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆறு ஆண்டுகள் கட்சியின் தலைவராகப் பணிபுரிந்த திரு. செல்வநாயகம் அவர்களே பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்றார். இத்தலைமையில், கட்சி தமிழ் பேசும் மக்களின் பூரண நம்பிக்கையைப் பெற்ற ஒரே இயக்கமாக எற்றுக் கொள்ளப்பட்டது. தமிழ் இனத்தின் வரலாற்றில் நெருக்கடி நிறைந்த காலத்தில் அதி முக்கியத்துவம் வாய்ந்த மூன்று மகாநாடுகளுக்குத் தொடர்ந்து தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு இனத்தை வழி நடத்தியவர் திரு. கு. வன்னியசிங்கம் அவர்களே.

## ஐ.தே. கட்சியின் களனி மகாநாடு :

ஏற்கனவே குறிப்பிட்டது போலவே 1954ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து சிங்களம் மாத்திரமே இந்நாட்டின் ஆட்சி மொழியாக வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெறத் தொடங்கியது. அந்நாளில் உண்மை மார்க்சீய வழியில் இயங்கி வந்த லங்கா சமசமாஜக் கட்சி – கொழும்பு நகர மண்டபத்தில் சிங்கள – தமிழ் மொழிகளின் சம அந்தஸ்தை வலியுறுத்தி ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தது. அதே கட்சியிலிருந்து பிரிந்து சென்று புரட்சிவாத சமசமாஜக் கட்சியை வகுப்புவாத அடிப்படையில் இயக்கிக்கொண்டிருந்தார் திரு. பிலிப் குணவர்த்தனா. அவரது கட்சியினர் சமசமாஜக் கட்சியின் மொழிச்சமத்துவம் பற்றிய கூட்டத்திற் பெரும் அமளியை ஏற்படுத்தினர். பலர் காயமுறும் அளவுக்குப் பலாத்காரம் இடம்பெற்றது. கூட்டம் கைவிடப்பட்டது. மொழிப்பிரச்சனை பலாத்கார வெறியாட்டத்திற்கு வழிவகுக்கப் போகிறது என்பதற்கு ஆரம்ப அறிகுறிகள் அப்போதே தோன்றின.

1955ஆம் ஆண்டு மொழிச் சமத்துவத்தை வலியுறுத்திப் பாராளுமன்றத்தில் டாக்டர். என். எம். பெரேரா ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார். பத்து ஆண்டுகளுக்கு முன் அரசாங்க சபையில் தமிழும் ஆட்சிமொழியாக வேண்டும் என்று வாதிட்ட திரு. பண்டாரநாயக்கா, தமது கொள்கையில் ஏற்பட்டு வந்த மாற்றத்தை இந்த விவாதத்தின்போது வெளியிட்டார். பட்டினங்களிலும் கிராமங்களிலும் வியாபார நிலையங்களிலும்

சிறு கடைகளிலும் பெரும்பகுதி வேலை தமிழ் பேசும் மக்களின் கையில் இருப்பதால், தவிர்க்க முடியாத வகையில் சிங்கள மொழி சுருங்கி – அருகி விடுமென்ற நியாயமான பயம் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது என்று பாராளுமன்றத்திற் பேசினார் திரு. பண்டாரநாயக்கா. இதைத் தொடர்ந்து, மார்க்சீயக் கட்சிகள் தவிர்த்த – சிங்கள அரசியற் கட்சிகளின் மொழிக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது. 1956ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி களனியிற் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் ஆறாம் மகாநாட்டில் சிங்களம் மாத்திரமே இந்நாட்டின் ஆட்சி மொழியாக வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அக்கட்சியில் ஐக்கியமும் இல்லை – தேசியமும் இல்லை என்பதைக் கண்ட தமிழ் உறுப்பினர்கள் அக்கட்சியை விட்டு வெளியேறினர். அக்கட்சி அரசில் அங்கம் வகித்த தமிழ் அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் அனைவரும் பதவிகளை இராஜினாமாச் செய்தனர். 1948ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்ட விவாதத்தின்போது, தந்தை செல்வநாயகம் கூறிய வார்த்தைகளின் தீர்க்க தரிசனத்தைத் தமிழ் மக்கள் உணர்ந்தனர்.

### தமிழ் ஈழத்தில் ஹர்த்தால்

ஐக்கிய தேசியக் கட்சியின் துரோகத்தாற் கொதிப்படைந்தனர் தமிழ் மக்கள். 1956ஆம் ஆண்டு பெப்ரவரி 20ஆந் திகதி தமிழ்ப் பிரதேசம் எங்கும் தமிழரசுக் கட்சியின் கேள்விப்படி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஹர்த்தாலின் பூரண வெற்றியானது தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியின் தலைமையை ஏற்றுக் கொண்டனர் என்பதைத் தெளிவாகக் காட்டியது.

### தமிழர் ஐக்கிய முன்னணிப் பேச்சு

நெருக்கடியான இச்சூழ்நிலையில் தமிழ் மக்கள் தம் மத்தியில் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்த வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. தமிழ் அரசியற் கட்சிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய பிரமுகர்களும் சேர்ந்த ஐக்கிய முன்னணியை அமைப்பதற்குப் பலர் முயற்சிகள் மேற்கொண்டனர். இதையொட்டி ஒரு முடிவுக்கு வரவேண்டிய பொறுப்பு – கட்சியின்மேற் சாய்ந்தது. ஒற்றுமையை வரவேற்கும் அதே நேரத்தில், அவ்வொற்றுமை ஒரு குறிக்கோளின் அடிப்படையில் – சனநாயக ரீதியில் அமையவேண்டுமென்று கட்சி தீர்மானித்தது. 14–5–55இல் கூடிய கட்சியின் செயற்குழு கீழ்க்கண்டவாறு தீர்மானித்தது:



- கட்சியின் இறுதி இலட்சியமான ஐக்கிய இலங்கைச் சமஷ்டியின் ஓர் அங்கமாகப் பூரண சுயாட்சி பெற்ற தமிழ் அரசைக் காண உழைக்கக் கட்சி பூண்டிருக்கும் உறுதியை மீண்டும் வலியுறுத்தும் அதே நேரத்தில், தமிழ் பேசும் மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளையொட்டி வேறு கட்சிகளோடும் தனி மனிதர்களோடும் கூட்டு நடவடிக்கைகளில் இரு பகுதியினரும் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளுக்கமைவாக ஈடுபடத் தீர்மானிக்கிறது.
- செயற்குழுவின் கட்டளைகளுக்கு இணங்க ஏனையோருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவும் கூட்டு நடவடிக்கைகளுக்கான பொதுத் திட்டங்களை வகுக்கவும் திருவாளர்கள் கு. வன்னியசிங்கம், டாக்டர். இ.மு.வி. நாகநாதன், ந.இ. இராசவரோதயம், அ. அமிர்தலிங்கம், சா.ஜே.வே. செல்வநாயகம் ஆகியோரை நியமிக்கிறது .

அடுத்த பல மாதங்களாகத் தமிழாசிரியர் சங்கம் போன்ற அமைப்புகளும் நீதியரசர் நாகலிங்கம் போன்ற பல பிரமுகர்களும், ஐக்கிய முன்னணி ஒன்றைத் தோற்றுவிக்க முயற்சிகளை மேற்கொண்டும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. கடந்த கால அரசியலில் ஆடித் தோற்றுவிட்ட பலரும் மீண்டும் பாராளுமன்றம் செல்லச் சுலபமான ஒரு வழியாக – ஐக்கிய முன்னணி அமைவதைத் தமிழ் மக்கள் விரும்பவில்லை. இச்சூழ்நிலையில் கட்சி தனித்துத் தன் கொள்கையைத் தமிழ் மக்கள் முன்வைத்து, அவர்களின் கட்டளைப்படி களத்திற் குதிக்க வேண்டிய கட்டம் வந்தது. 1956ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் இக்கட்டளையைப் பெறும் பொருட்டுத் தமிழரசுக் கட்சி வடக்குக் கிழக்கு மாகாணமெங்கும் வேட்பாளர்களை நிறுத்தியது.

### 1956ஆம் ஆண்டு பொதுத்தேர்தல்

1956ஆம் ஆண்டு ஏப்ரல் 5,7,10 ஆம் திகதிகளில் நடந்த பொதுத்தேர்தல் இந்நாட்டின் சரித்திரத்தில் மாத்திரமன்றி, இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் சரித்திரத்திலும் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வரலாற்றிலும் ஒரு புது அத்தியாயம் ஆரம்பமாகியது. 1952ஆம் ஆண்டுத் தேர்தலில் 45,331 வாக்குகளைப் பெற்று 2 தொகுதிகளில் வெற்றியீட்டிய கட்சி, 1956ஆம் ஆண்டில் 1,42,036 வாக்குகளைப் பெற்று

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 10 தொகுதிகளைக் கைப்பற்றியது. பாராளுமன்றத்தினுள் மாத்திரம் இயங்கும் ஏனைய அரசியற் கட்சிகளைப்போலன்றி, பாராளுமன்றத்தினுள்ளும் வெளியிலும் தமிழ் இனத்தின் உரிமைக்காகப் போராடுவதற்கு மக்களின் அங்கீகாரம் பெற்ற ஒரே கட்சியாக தமிழரசுக் கட்சி விளங்கியது. வடக்கையும் கிழக்கையும் இணைத்து – தமிழ் பேசும் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மக்களின் மிகப் பெரும்பாலான ஆதரவைப் பெற்ற இயக்கம் என்று நிலை நாட்டப்பெற்றது.

## யூன் ஐந்தும்; தனிச்சிங்களச் சட்டமும்

தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து, போராட்டத்தில் உடனடியாக இறங்க வேண்டிய நிலையைப் பண்டாரநாயக்கா அரசாங்கம் ஏற்படுத்தியது. தாம் சிங்கள மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி சிங்களத்தைத் தனி அரசகரும மொழியாக்குவதற்கு யூன் 5ஆம் திகதி பண்டாரநாயக்கா பாராளுமன்றத்திற் சட்டம் கொண்டுவந்தார். அச்சட்டத்திற்குத் தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பைச் சாத்வீக முறையிற் காட்டும் பொருட்டுப் பாராளுமன்றப் படிக்கட்டுகளில் சத்தியாகிரகம் செய்யப்போவதாகக் கட்சி அறிவித்தது. இரவோடிரவாகப் பாராளுமன்றத்தைச் சுற்றி முள்ளுவேலிகள் அரசாங்கத்தால் அமைக்கப்பட்டன. முள்ளுவேலியோடு, மனித வேலியாக ஆயுதந் தாங்கிய பொலிசார் நிறுத்தப்பட்டனர். சிங்கள வகுப்புவெறியர்கள் எல்லாள – துட்டகைமுனு யுத்தம் என்ற கோஷத்தோடு காலிமுகத்திடலுக்கு கொண்டு வரப்பட்டனர். சத்தியாகிரகத்தின் நோக்கத்தை விளக்கும் துண்டு பிரசுரத்தைச் சிங்கள மொழியிற் கட்சி வெளியிட்டிருந்தது. அப்பிரசுரங்களை விநியோகிக்கச் சென்ற தொண்டர்கள் – சிங்களக் காடையர்களால் நையப் புடைக்கப்பட்டனர். தாக்குதலைப் பொருட்படுத்தாது, சத்தியாகிரகத் தொண்டர்களும், தலைவர்களும் காலிமுகத்திடலின் தென்பகுதியிலிருந்து பாராளுமன்றத்தை நோக்கி நடக்கத் தொடங்கினர். அவர்கள் சிறிது தூரம் செல்வதற்கிடையில், சிங்கக்கொடி தாங்கிய சிங்கள வெறியர் கூட்டம் அவர்கள் மீது பாய்ந்து, தடிகளாலும் கைகளாலும் கால்களாலும் தாக்கத் தொடங்கியது. தலைவர் வன்னியசிங்கத்தின் சட்டை கிழிக்கப்பட்டு, மூக்கிலிருந்து இரத்தம் வடிய அவர் தாக்கப்பட்டார். டாக்டர் நாகநாதனின் உடைகள் கிழித்தெறியப்பட்டு, அவர் மிருகத்தனமாக அடிக்கப்பட்டார். தந்தை செல்வநாயகம் அவர்களின் இரு புதல்வர்கள் வசீகரனும், இரவீந்திரனும் அவர் கண்முன்னால் உருட்டி உதைக்கப்பட்டனர். தொண்டர் நா. செல்லையாவின் காதைக் காடையர்கள்



கடித்துப் பிய்த்தெடுத்தனர். தாக்குதலின் பயனாகப் பல தொண்டர்களும் தலைவர்களும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இத்தனையையும், பண்டாரநாயக்கா அரசின் பொலீசார் பார்த்துக்கொண்டு நின்றனர். சத்தியாக்கிரகிகள் உண்மைக் காந்தீயநெறி நின்று, இவற்றையெல்லாம் தாங்கித் தொடர்ந்தும் பாராளுமன்றம் நோக்கி நடந்தனர். திடீரென்று பெருமழை பொழிந்தது. காடையர் கூட்டம் கலைந்தோடியது. திருமலை, மட்டக்களப்பிலிருந்து இக்கட்டத்தில் வந்து சேர்ந்த தொண்டர்களும் சேர்ந்து, தொடர்ந்து நடந்து சென்றனர். பொலிசாரால் ஒரு கட்டத்தில் தடுத்து நிறுத்தப்பட்ட சத்தியாக்கிரகிகள், அந்த இடத்திலேயே ஈரப் புற்றரையில் அமர்ந்தனர். வெறியர் கூட்டம் பல்லாயிரமாக அதிகரித்துச் சத்தியாக்கிரகிகளைச் சுற்றிவளைத்துக் கல் வீசத் தொடங்கியது. திரு. வ.ந. நவரத்தினம் காயமுற்று வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். காடையர் வீசிய கல்லினால் எனது நெற்றி பிளந்தது. எத்தனையோ தொண்டர்கள் காயமுற்றனர். பகல் ஒரு மணிக்குத் தலைவர்கள் எல்லோரும் ஆலோசித்துச் சத்தியாக்கிரகத்தை நிறுத்தித் தொண்டர்களைத் திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்தனர். காலிமுத்திடலில் மாத்திரமன்றிக் கொழும்பு நகரின் பல இடங்களிலும் தமிழ் மக்கள் சிங்கள வகுப்பு வெறியரின் தாக்குதலுக்கு ஆளாகினர். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டிய பொலீசார், தமிழ் மக்கள் தாக்கப்படுவதை, அரசாங்கத்தின் கட்டளைப்படி, செயலற்றுப் பார்த்து நின்றனர்.

## அம்பாறைக் கலவரம்

பிரதமர் பண்டாராநாயக்காவின் இச்செயலினால் உற்சாகமுற்ற சிங்களக் காடையரின் தமிழ் மக்களுக்கு விரோதமான அட்டூழியங்கள் கொழும்புக்கு வெளியிலும் பரவின. மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில், தமிழ்ப் பிரதேசத்தின் ஒரு பகுதியாக இருந்தும், அரசாங்கத்தின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினால், சிங்கள ஆதிக்கப் பிரதேசமாக மாற்றப்பட்ட அம்பாறையும் ஒன்றாகும். கல்லோயா அபிவிருத்திச் சபையின்கீழ் பணியாற்றிய தமிழ் ஊழியர்களும் அவர்கள் குடும்பங்களும், திட்டமிட்டு முற்றுகையிடப்பட்டுத் தாக்கப்பட்டனர். அவர்கள் தங்கள் உடமைகளையெல்லாம் விட்டுத் தலைவிரி கோலமாக ஓடினர். அடுத்து, அந்தச் சுற்றாடலில் உள்ள துறைநீலாவணை போன்ற பழந்தமிழ்க் கிராமங்களைத் தாக்கத் திட்டமிட்டுச் சென்றனர் சிங்கள வகுப்பு வெறியர். தம் தாயகத்தைக் காக்கத் துப்பாக்கி ஏந்திப் புறப்பட்ட

துறைநீலாவணை வீரர்கள்முன் நிற்கமுடியாது, அலறித் துடித்துத் அவர்கள் ஓடினார்கள். தமிழ் ஊழியரும் கிராமவாசிகளும் தாக்கப்பட்டபோது செயலற்றிருந்த சிங்கள ஆட்சியின் காவல் துறையினரும் இராணுவத்தினரும், சிங்கள வெறியர் திருப்பித் தாக்கப்பட்டவுடன் தலையிட்டனர். ஆனால், துறைநீலாவணை வீரர்களின் உறுதியான தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது, ஜீப் வண்டியையும் கைவிட்டு – இராணுவத்தினர் ஓடித் தப்பினர். ஜீப் வண்டி தீக்கிரையாக்கப்பட்டது. பண்டாரநாயக்கா அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்து, காலந் தாழ்த்தியாவது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் புகுத்தப்பட்ட அன்றே, தமிழரசுக்கட்சி மேற்கொண்ட சத்தியாகிரகமும், அதற்கெதிராக ஆட்சியாளரின் ஆதரவுடன் நடந்த வெறியாட்டமும், தமிழ் மக்களின் தற்பாதுகாப்பு நடவடிக்கையும் அவசரகாலச் சட்டத்திற்கு வழிவகுத்தன. இதன் பின்பு பல தடவை எமது போராட்டங்களைச் சமாளிக்க அவசரகாலச் சட்டத்தையும் இராணுவ ஆட்சியையும் ஆட்சியாளர் நாடவேண்டிய அவசியம் ஏற்பட்டதைப் பின்பு காணலாம்.

### திருமலை யாத்திரை

தமிழ் மக்களின் எதிர்ப்பையும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரினதும், இடதுசாரிக் கட்சிகளினதும் நியாய பூர்வமான வாதங்களையும் பொருட்படுத்தாமல், ஜூன் மாதம் 15ஆந் திகதி அதிகாலை தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தைத் தமிழினம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டாது என்று தமிழரசுக்கட்சி விடுத்த சூளுரைக்கேற்ப, மக்கள் சக்தியைத் திரட்டும் பொருட்டுத் தமிழ்ப் பிரதேசத்தின் வடக்கெல்லையில் ஊர்காவற்றுறை, பருத்தித்துறையிலிருந்தும், மேற்கே மன்னாரிலிருந்தும் தெற்கே திருக்கோவிலில் இருந்தும் தலைவர்களும், தொண்டர்களும் கால்நடையாகத் திருமலை செல்வதென்று தீர்மானிக்கப் பெற்றது. பிரதமர் பண்டாரநாயக்காவிற்கு இம்முடிவு அறிவிக்கப்பட்டபோது, நடைபவனியையும் அதைத் தொடர்ந்து நடக்கும் மகாநாட்டையும் தடை செய்யப்போவதாக அவர் அறிவித்தார். தடையை மீறி நடக்கத் தயாரென்றது கட்சி. பணிந்தார் பிரதமர்; பாதுகாப்புக்கென்று கூறிக் காவற்படையினரையும் உடன் நடக்கச் செய்தார். நூற்றுக்கணக்கான தொண்டர்கள் கட்சியின் மூவர்ணக் கொடிகளைத் தாங்கியவண்ணம்,



திருமலைக்குச் செல்வோம்
சிறுமை அடிமை வெல்வோம்

என்று தொடங்கும் பண்டிதர் இளமுருகனாரின் திருமலை யாத்திரைப் பாடலை இசைத்தபடி, வடக்கிலும் மேற்கிலும் தெற்கிலுமிருந்து திருகோணமலையை நோக்கி நடந்தனர். பத்து நாட்கள் நடந்து, ஆகஸ்ட் மாதம் 16ஆந் திகதி திருமலை போய்ச் சேர்ந்தனர். சென்ற வழியெல்லாம், மக்கள் வெள்ளமெனத் திரண்டு, தொண்டர்களை வரவேற்றனர். உணவும் தங்கும் வசதிகளும் வழி நெடுகிலுமுள்ள தமிழ்க் கிராமங்கள் ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு வழங்கி தங்கிய ஒவ்வோர் இடத்திலும், புதிதாக மேலும் பல தொண்டர்கள் சேர்ந்தனர். திருகோணமலையில் மடத்தடிச் சந்தியில் 16–8–1956 பிற்பகல், வடக்கிலும் தெற்கிலுமிருந்து, இரு கடல்கள் பொங்கி வந்து ஒன்று சேர்வது போல – வந்து சேர்ந்த இரு ஊர்வலங்களையும் திரு. இராஜவரோதயம் அவர்கள் வரவேற்று அழைத்துச் சென்றார். திருமலை முற்றவெளியில் தமிழரசுக் கட்சியின் நாலாவது மாநில மாநாட்டரங்கை நடைபவனி சென்று சேர்ந்தது.

### நான்காவது மாநாடு

கட்சியின் அதி முக்கியத்துவம் வாய்ந்த இம்மாநாட்டிற்கு மீண்டும் திரு. வன்னிய சிங்கம் அவர்களே ஏகமனதாகத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவருடைய தலைமையின் கீழ் 30,000க்கும் மேற்பட்ட மக்கள் கூடிய இம் மாநாட்டில் அரசுக்கு ஒருவருட காலக்கெடு கொடுத்து;

1. தமிழ் பேசும் மக்கள் பெரும்பாலாக வசிக்கும் தொடர்பான பிரதேசங்களை – சமஷ்டி அரசுக்கு உட்பட்ட ஒன்றோ, அதற்கு மேற்பட்டதோ, தமிழ் மொழிவாரி அரசு அல்லது அரசுகளாக அமைக்கவும்,

2. சிங்களத்தோடு பரிபூரண சம அந்தஸ்துள்ள ஆட்சிமொழியாகத் தமிழுக்கு உரிய இடத்தை மீண்டும் அளிக்கவும்,

3. இன்றைய குடியுரிமைச் சட்டங்கள் நீக்கப்பட்டு, இந்நாட்டைத் தமது தாயகமாகக்கொண்ட எல்லோருக்கும் ஒரு சிறிய வாசகால யோக்கியதையின் அடிப்படையில், பூரண பிரஜாவுரிமையை அங்கீகரிக்கும் குடியுரிமைச் சட்டங்களை ஆக்கவும்,

4. பாரம்பரியத் தமிழ்ப் பிரதேசத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை

உடன் நிறுத்தவும், அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோரியும்;

1957ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20ஆந் திகதிக்கிடையில், பிரதம மந்திரியும், இலங்கைப் பாராளுமன்றமும், இலங்கைச் சமஷ்டி அரசை நிறுவத் தேவையான நடடிவக்கைகளை எடுக்கத் தவறின், அவ்விலட்சியத்தை அடைவதற்குச் சாத்வீக வழியிற் கட்சி நேரடி நடவடிக்கையில் இறங்கும் என்றும் தீர்மானிக்கப்பெற்றது.

கட்சியின் நாலு அம்சக் கோரிக்கை இம்மாநாட்டில் திட்டவட்டமான உருப்பெற்றது. மாநாட்டில் கலந்துகொண்ட கட்சியின் முஸ்லிம் உறுப்பினர்களுடைய கேள்விக்குக் கட்சி இணங்கி, இதுகாறும் ஒரு சுயாட்சித் தமிழரசு என்றிருந்த கட்சியின் நோக்கத்தை, சுயாட்சித் தமிழரசும் முஸ்லிம் அரசும் என்று மாற்றியது. தமிழ் பேசும் மக்கள் கோரும் சுயநிர்ணய உரிமை – அவர்களின் ஓர் அங்கமான முஸ்லிம் மக்களுக்கும் உண்டு என்ற உன்னத சனநாயகத் தத்துவத்தின் அடிப்படையில் இம்முடிவு எடுக்கப்பட்டது. தலைவர் வன்னியசிங்கத்தினால் தலைமைப் பீடத்திலிருந்து முன்மொழியப்பட்ட இத்தீர்மானம், 19–8–56 அன்று திருமலை முற்றவெளியில் நடந்த மாநாட்டின் இறுதி நாட் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு, பிரசித்திபெற்ற திருமலைத் தீர்மானம் ஆக அமைந்தது.

## சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம்

திருமலைத் தீர்மானத்தைத் தொடர்ந்து, தொண்டர்களைத் திரட்டி ஆகஸ்ட் போராட்டத்திற்கு ஆயத்தஞ் செய்துகொண்டிருந்த நேரத்தில், அரசாங்கம் தமிழ் மக்களின் நொந்த உள்ளங்களில் வேலை பாய்ச்சுவது போன்ற ஒரு காரியத்தைச் செய்தது. மோட்டார் வண்டிகளின் இலக்கத் தகடுகளில் இதுகாறும் இருந்த ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக, சிங்கள ஸ்ரீ எழுத்தைப் புகுத்தியது. தமிழ் மக்களின் கட்சிகள் கூட்டமாக எதிர்ப்புத் தெரிவித்தும், அசாங்கம் செவிசாய்க்கவில்லை. எனவே, மோட்டார் இலக்கத் தகடுகள் பற்றிய சட்டத்தை மீறி, ஒரு சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிப்பதென்றும் அரசாங்கத்தின் தனிச் சிங்களக் கொள்கைக்கு எதிரான போராட்டத்தின் ஓர் அங்கமாக, இவ்வியக்கத்தை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பெற்றது. யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் 1957 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19ஆந் திகதி சிங்கள ஸ்ரீ எதிர்ப்புச் சட்ட மறுப்பியக்கம் ஆரம்பிக்கப்பட்டது. முதல் நாள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இயக்கத்தில், அகில இலங்கைத் தமிழ்க்



காங்கிரஸ் தலைவரும், உறுப்பினர்கள் பலரும் சேர்ந்தனர். ஆயினும், அதன்பின் தொடர்ந்து நடந்த இயக்கத்தில் ஏனையோர் ஈடுபடாது கைவிட, கட்சி மாத்திரமே தொடர்ந்து இயக்கத்தை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. முதற் கட்டமாக, ஒரு நாள் சட்ட மறுப்பாக – ஆங்கில எழுத்துகளுக்குப் பதிலாக தமிழ் எழுத்துக்களை இலக்கத் தகடுகளிற் பொறித்து, மோட்டார் வண்டிகளைச் செலுத்திய தொண்டர்கள், இரண்டாவது கட்டமாக – நிரந்தரமாகவே தமிழ் எழுத்துக்களோடு வண்டிகளைச் செலுத்தினர். மூன்றாவது கட்டமாக – கட்சித் தொண்டர்கள் வீதிகளில் திரண்டு, எல்லா மோட்டார் வண்டிச் சொந்தக்காரர்களையும் தமிழ் எழுத்துப் பொறித்து ஓடும்படி கோரியது மாத்திரமன்றி, தாமே தமிழ் எழுத்துப் பொறித்த தகடுகளை மாட்டியும் விட்டனர். மூலை முடுக்குகளிலெல்லாம் வேகமாகப் பரவிய இவ்வியக்கத்திற்கு எதிராக, அரசாங்கம் எவ்வித நடிவடிக்கையும் எடுக்காது நிலைமையைக் கவனித்துக் கொண்டிருந்தது.

## பெப்ரவரி 4உம் 1957இல் தியாகி நடராசன் கொலையும்.

சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதியை – கடைகளை அடைத்துக் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டுத் துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு கட்சி வேண்டுகோள் விடுத்தது. பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்ட தமிழ் பேசும் வாலிபர் முன்னணியும், தீவிரமாக இதில் ஈடுபட்டது. ஆனால், மாற்றுக் கட்சியினர் கடைகளைத் திறக்குமாறு யாழ்ப்பாணத்திற் கோரினர். அவர்களது ஆதரவளர்கள் சிலர், தம் கடைகளைத் திறந்தனர். கட்சியின் பெண் தொண்டர்கள் களத்தில் குதித்தனர். திறக்கப்பட்ட கடைகளின்முன் திருமதி. கோமதி வன்னியசிங்கம் அவர்கள் தலைமையில் சத்தியாக்கிரகம் செய்தனர். காரைநகரில், பஸ் வண்டிகளின் முன் படுத்தும் திருமதி. நாகம்மா வேலுப்பிள்ளை தலைமையில் பெண் தொண்டர்கள் சத்தியாகிரம் செய்தனர். இவற்றினால், கடையடைப்பும் ஹர்த்தாலும் பூரண வெற்றி பெற்றது மாத்திரமன்றி, மக்களின் போராட்ட உணர்ச்சியும் வேகம் பெற்றது.

திருகோணமலையில் மரக்கறிக்கடை சிங்களவரின் ஆதிக்கத்திலிருந்தது. அதன் அருகாமையில் இருந்த மணிக்கூட்டுக் கோபுரத்தில், கறுப்புக்கொடியைக் கட்டுவதற்குத் தீரன் நடராசன் என்ற வாலிபர் ஏறினார். மறைந்து நின்ற சிங்கள வெறியன் ஒருவன் துப்பாக்கியால் சுடவே, அவ்விளைஞர் துடிதுடித்து வீழ்ந்திறந்தான். தமிழினத்தின் உரிமைப்போரிற்

களப்பலியான இத்தியாகியின் பெயர் – எம் வரலாற்றில் பொன்னெழுத்தில் பொறிக்கப்படுவது மாத்திமன்றி, அவ்விடத்தில் – சுதந்திரத் தமிழ் ஈழத்தில், அவனுக்குச் சிலை அமைக்க வேண்டியதும் எம் கடமையாகும்.

### அமைச்சர்கள் வருகையும் பரிஷ்காரமும்

தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள் முதல், சிங்கள அரசாங்கத்தின் அமைச்சர்கள் தமிழ்ப் பிரதேசங்களுக்குச் செல்லத் தயங்கினர். துணை அமைச்சர் எம்.பி.டி. சொய்சா, சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் வருடாந்த மகாநாட்டிற்காக யாழ்ப்பாணம் வருகைதர ஆயத்தமானார். தனிச் சிங்களக் கொள்கையை – தமிழ் மக்களுக்கு விளக்கப்போவதாக அறிக்கைவிட்டார். அவர் யாழ். புகையிரத நிலையத்தில் வந்திறங்கியபோது, அவருடைய மோட்டார்வண்டியை நகர விடாது, தொண்டர்கள் அவருடைய வண்டிமுன் படுத்தனர். பொலீசார் தொண்டர்களைத் தாக்கியும் தூக்கியும் அப்புறப்படுத்தினர். மகாநாடு நடைபெற இருந்த நகர மண்டபம் உதவி அமைச்சரின் வரவை எதிர்க்கும் மக்களால் நிரம்பியது. அவர் மகாநாட்டிற் பேசமாட்டார் என்ற உறுதியின் பின்பே, மண்டபத்தை விட்டு மக்கள் வெளியேறினர். காலையில் வந்த துணை அமைச்சர் – நண்பகல் புகை வண்டியில் கொழும்புக்குத் திரும்பினார். மக்களின் எதிர்ப்பு பூரண வெற்றி பெற்றது.

கிழக்கு மாகாணம் சென்ற கல்வி அமைச்சர் தகநாயகாவுக்கும் பலத்த எதிர்ப்புக் கிடைத்தது. அமைச்சரின் கார் மீது, மருதமுனையில் மிதியடி வீசப்பட்டது. மந்திரி மரைக்காரும் கறுப்புக் கொடிகளுக்கு மத்தியிலேயே கிழக்கு மாகாணம் செல்ல முடிந்தது. நிதி மந்திரி ஸ்டான்லி டி. சொய்சா உட்பட ஆறு அமைச்சர்கள் மன்னார் சென்றனர். சென்றவிடமெல்லாம் தொண்டர்களும் தலைவர்களும் திரண்டு நின்று கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். தமிழ் பேசும் மக்களின் போராட்ட உணர்ச்சி பொங்கி எழுந்து குமுறத் தொடங்கியது.

### பண்டாரநாயகா – செல்வநாயகம் ஒப்பந்தம்

தொண்டர்கள் ஆயிரக்கணக்கில் திரட்டப்படுவதையும், மக்களின் எதிர்ப்புணர்ச்சி புயலாக உருக்கொண்டு வருவதையும் அவதானித்த பிரதமர் பண்டாரநாயகா, திரு. செல்வநாயகத்திடம் சமாதானத் தூதர்களை அனுப்பினார். தமிழ் மக்களின் எதிர்ப்பை மன்னாரில் நேரிற் கண்ட நிதி



அமைச்சர் ஸ்டான்லி டி. சொய்சா இதில் முக்கிய பங்கெடுத்தார். காந்தீய நெறியில் – எப்போதும் பேச்சுவாத்தை மூலம் சமரசத் தீர்வுகாணத் தயாராக இருந்த கட்சி – பேச்சு வார்த்தைக்கு இணங்கியது. பல இரவுகள் பிரதமர் பண்டாரநாயகா தலைமையில் அமைச்சர்களுக்கும் – தந்தை செல்வநாயகம் தலைமையில் கட்சித் தலைவர்களுக்குமிடையில் பேச்சு நடைபெற்றது. இறுதியில், 1957ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26ஆந் திகதி பண்டாரநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தம் நள்ளிரவில் கையொப்பமானது. கட்சி தனது அடிப்படைக் கொள்கைகளைக் கைவிடாது, ஓர் இடைக்காலத் தீர்வாக இவ்வொப்பந்தத்தை ஏற்றுக்கொண்டது.

### மட்டக்களப்பில் சிறப்பு மாநாடு

திருமலைத் தீர்மானத்தின்படி போராட்டத்திற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்த நேரத்தில், இறுதிப் பிரகடனத்தை விடுப்பதற்காக – கட்சியின் சிறப்பு மாநாடு மட்டக்களப்பில் 1957 ஆம் ஆண்டு யூலை மாதம் 27, 28 ஆந் திகதிகளில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாநாடு ஆரம்பிப்பதற்கு முதல் நாளிரவு 26–7–57இல், பண்டாரநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து, போர்ப்பிரகடனம் செய்வதற்கென்று அழைக்கப்பட்ட மாநாடும் – சமாதான உடன்படிக்கையைப் பரிசீலனை செய்து அங்கீகரிக்கும் மாநாடாக மாறியது. தலைவர் வன்னியசிங்கம் அவர்களின் தலைமைப் பேருரையும் முற்றாக மாற்றியமைக்கப்பட்டு, அச்சிடப்பெறாது மாநாட்டில் நிகழ்த்தப்பட்டது. ஒப்பந்தத்தையொட்டி மாநாட்டிற் காரசாரமான விவாதம் நடைபெற்ற போதிலும், இறுதியில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானத்தில் ஒப்பந்தத்தை ஓர் இடைக்கால ஏற்பாடாக ஏற்றுக்கொண்டு, 1957ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ஆம் திகதி ஆரம்பிக்கவிருந்த சத்தியாகிரகத்தைக் கைவிடும் முடிவைக் கீழ்காணும் காரணங்களுக்காக அங்கீகரிப்பதாக முடிவாகியது :

(அ) வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அரசாங்க உதவியுடன் நடைபெற்ற சிங்களக் குடியேற்றம், ஒப்பந்தத்தினால் உடடினடியாக நிறுத்தப்படும்.

(ஆ) தேசிய சிறுபான்மையோரின் மொழியாக தமிழ் உத்தியோக அங்கீகாரம் பெறும்.

(இ) தமிழே வடக்குக் கிழக்கு மாகாண நிருவாக மொழியாக இருக்கும்.

(ஈ) நாட்டின் எப்பாகத்திலும் தமிழ் மக்கள் தம் கருமங்களை அரசாங்கத்தோடு தமிழில் ஆற்றவும், தம் பிள்ளைகளுக்குத் தமிழில் கல்வி யூட்டித் தமிழ்ப் பண்பாட்டில் வளர்க்கவும் உரிமை பாதுகாக்கப்படும்.

(உ) பிரதேச சபைகள் சட்டத்தின்மூலம் பெருமளவு பிரதேச சுயாட்சி மக்களுக்கு வழங்கப்படும்.

மேற்கூறிய காரணங்களுக்காக ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட அதே நேரத்தில், இணைப்பாட்சிக்கு உட்பட்ட மொழிவாரிச் சுயாட்சித் தமிழ் அரசையோ, அரசுகளையோ நிறுவுவதும்; நாடு முழுவதும் சிங்களத்தோடு தமிழுக்கும் சம அந்தஸ்தை நிலைநாட்டுவதும்; குடியுரிமைச் சட்டங்களைத் திருத்தி, இந்நாட்டைத் தமது தாயமாகக் கொண்ட தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் பூரண குடியுரிமையை நிலைநாட்டுவதுமாகிய கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை மாநாடு மீண்டும் வலியுறுத்தியது. அன்றைய சூழ்நிலையில் சத்தியாக்கிரகத்தைக் கைவிடுவதற்கு, கட்சி ஏற்றுக்கொண்ட ஓர் இடைக்கால ஏற்பாடே பண்டாரநாயக்க–செல்வநாயகம் ஒப்பந்தம் என்பது இதிலிருந்து தெளிவாகும். அவ்வொப்பந்தம் சிங்கள – தமிழ்ப் பிரச்சினைக்கு ஓர் இறுதித் தீர்வாக, ஒருபோதும் கட்சியினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

### ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு

1956 ஆம் ஆண்டுத் தேர்தலில் தென்னிலங்கையில் படுதோல்வி யடைந்த ஐக்கிய தேசியக் கட்சி, சிங்கள வகுப்பு வெறியைக் கிளப்புவதற்கு ஒப்பந்தத்தைப் பயன்படுத்த முற்பட்டது. முதல் அடி (First Step) என்று பல பிரசுரங்களை வெளியிட்டு, வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பல்லாயிரம் சதுரமைல் பூமியை, பண்டாரநாயக்கா – சிங்கள மக்களுக்கு இல்லாமல் தமிழருக்கு விற்று விட்டாரென்று கூறினர். ஐ.தே. கட்சித் தலைவர் ஜே.ஆர். ஜயவர்த்தனா தலைமையில், கண்டி தலதா மாளிகைக்குக் கால்நடையாக யாத்திரையை மேற்கொண்டனர். இம்புல்கொடையில், எஸ்.டி. பண்டாரநாயகா தலைமையில் எழுந்த எதிர்ப்பினால் யாத்திரையை ஜயவர்த்தனா கைவிடவேண்டிய நிலையே ஏற்பட்ட போதிலும், அவர்களின் வகுப்பு வெறிப் பிரசாரம் தொடர்ந்தது. ஆளும் கட்சியிலும் பௌத்த பிக்குகளும் சிங்களத் தீவிரவாதிகளும் ஒப்பந்தத்தை எதிர்க்கத் தொடங்கினர். தமிழ்ப் பிரதேசத்திலும் முன்னாள் ஐ.தே.க. ஆதரவாளர்கள் ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பைக் கிளப்பினர். திரு. செல்வநாயகம் தமிழ் மக்களின் உரிமைகளை, ஒப்பந்தத்தின் மூலம் சிங்களவர்களுக்கு விற்றுவிட்டார் என்று கூக்குரலிட்டனர். இவர்களின் கண்டனங்களுக்கு நாம்



கொடுத்த விளக்கங்கள், பெறும் வாயை மென்ற சிங்கள வகுப்பு வெறியருக்கு அவலாகின. சிங்கள மக்கள் மத்தியில் வளர்ந்து வந்த எதிர்ப்பைக் கண்ட பிரதமர், ஒப்பந்தத்தை அமுல் நடத்த எட்டு மாதங்களாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கட்சியின் செயற்குழு, ஒப்பந்தத்தை அமுலாக்குவதற்கு வேண்டிய சட்டங்களை ஆக்குமாறு விடுத்த வேண்டுகோள்கள் உதாசீனம் செய்யப்பட்டன.

### திருகோணமலை கடற்படைத் தளம்

நாடு சுதந்திரம் பெற்ற நேரத்தில் ஆங்கில அரசுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி, திருகோணமலைத் துறைமுகம் ஆங்கிலேயரின் கடற்படைத் தளமாக இருந்து வந்தது. அங்கு பல்லாயிரம் தமிழ்த் தொழிலாளர் வேலைக்கமர்த்தப் பட்டிருந்தனர். திருகோணமலை நகரத் தமிழ் மக்களிற் பெரும்பாலோர் கடற் படைத்தளத்தையே தம் வேலைவாய்ப்புக்கு நம்பியிருந்தனர். ஆங்கிலேயரை அங்கிருந்து அகற்றி, திருகோணமலையைத் தம் ஆதிக்கத்தில் எடுத்துக்கொள்ள பண்டாரநாயகா அரசாங்கம் தீர்மானித்தது. தமிழ் மக்களின் பாரம்பரிய பூமியிலுள்ள துறைமுகத்தின் தலைவிதியை, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தாத அரசாங்கம் தீர்மானிப்பதைக் கட்சி எதிர்த்தது. தமிழ் மக்களைக் கலந்தாலோசிக்காது இம்முடிவு செய்யப்படுவதற்குக் கட்சி ஆட்சேபனை தெரிவித்தது. வேலையிழக்கும் பல்லாயிரம் தமிழருக்கும், மாற்று வேலை அல்லது போதிய நஷ்ட ஈடு கோரியது. எமது கோரிக்கைகளை வேண்டுமென்றே திரித்து, இன்றும் சில இடதுசாரிகள் பிரசாரம் செய்து வருகின்றனர். ஆங்கிலக் கடற்படை அகற்றப்பட்டதை நாம் எதிர்க்கவில்லை. தமிழ் மக்களின் கேந்திரத் துறைமுகத்தின் தலைவிதி – தமிழ் மக்களைக் கலந்து கொள்ளாமல் தீர்மானிக்கப்பட்டதையே நாம் எதிர்த்தோம்.

### மூதவைத் தேர்தல்

1957 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மூதவை உறுப்பினர் ஒருவரைத் தெரிவு செய்யும் வாய்ப்புக் கட்சிக்குக் கிடைத்தது. தமிழினத்திற் புரையோடிய புண்ணாகிய தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்ற கட்சியின் அடிப்படைக் கொள்கைக்கேற்ப, உரிமை குறைந்த தமிழ் மக்களின் குரல் – ஆட்சி மன்றத்தில் ஒலிக்கவேண்டுமென்று கட்சி தீர்மானித்தது. அதன்படி, திரு. ஜி. நல்லையா அவர்கள் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளினால் மூதவை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## மீண்டும் சிங்கள ஸ்ரீ

ஒப்பந்தத்தை நிறைவேற்றாது காலங்கடத்திவந்த அரசாங்கம், தமிழ் மக்களுக்கு வேதனை தரும் செயல்களில் மீண்டும் இறங்கியது. சிங்கள ஸ்ரீ இலக்கத் தகடு பொறித்த பஸ் வண்டிகளை வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப் போவதாக அரசாங்கம் அறிவித்தது. **16–3–58**இல் கட்சியின் செயற்குழு கொழும்பு சரஸ்வதி மண்டபத்திற் கூடி, சிங்கள சிறி பொறித்த பஸ் வண்டிகளைத் தமிழ்ப் பிரதேசங்களுக்கு அனுப்புவதென்றும், அந்த இலக்கத் தகடுகளிற் கைவைத்தாற் பாரதூரமான விளைவுகள் ஏற்படுமென்றும் அரசாங்கம் விடுத்திருக்கும் அறிவித்தல் – தமிழ்பேசும் மக்களை அவமதிப்பதாகவும், அவர்களுக்கு விடுக்கப்பட்ட சவாலாகவும் இருக்கின்றது என்று கருதி, **29–3–58** அன்று மீண்டும் சிறி எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பிப்பதென்றும் தீர்மானித்தது. அதன்படி, குறிப்பிட்ட தேதியில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பஸ் வண்டிகளின் இலக்கத்தகடுகள், தொண்டர்களால் தமிழ் ஸ்ரீ யாக மாற்றப்பட்டன. முதல் இலக்கத் தகட்டை தந்தை செல்வநாயகம் அவர்களே தன்கையால் மாற்றினார். அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், பண்டா–செல்வா ஒப்பந்த நாள் தொடக்கம் வெறியூட்டி வந்த சிங்களத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள், மீண்டும் தொடங்கின. தமிழ் வர்த்தகர்களின் வியாபார நிலையங்கள் போன்ற இடங்களில், தமிழ் எழுத்துக்கள் தார்பூசி அழிக்கப்பட்டன.

## மலைநாட்டில் பிரான்சிஸ், ஐயாவு வீரமரணம்

தமிழ்ப் பிரதேசத்தில் சாத்வீகச் சட்ட மறுப்பு ஒரு புறம் நடைபெற்றுக் கொண்டிருக்க, மறுபுறம் தென்னிலங்கையில் இனவெறி வெடித்துக் கிளம்பியது. இவ்வெறியாட்டத்தைத் தன்மானமுள்ள தமிழ் மக்கள் எதிர்த்த இடங்களிற் சில அசம்பாவிதங்களும் ஏற்பட்டன. மலை நாட்டில் சிங்கள இனவெறியர்கள் தமிழை அழித்ததை தமிழ் தொழிலாளர்கள் ஆட்சேபித்தனர். பொலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில், வீரத்தமிழ் வாலிபர்கள் பிரான்சிசும், ஐயாவுவும் பொகவந்தலாவையில் தமிழன்னைக்காகத் தம் உயிரையே அர்ப்பணித்தனர். கட்சியின் கோரிக்கைப்படி வடக்குக் கிழக்கு மாகாணமெங்கும் இந்தத் தியாகிகள் இருவருக்கும் அநுதாபந் தெரிவிக்கும் பொருட்டுப் பூரண ஹர்த்தால் **5–4–58** சனிக்கிழமையன்று அனுஷ்டிக்கப்பட்டது.






கொழும்பில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் இல்லத்தில் தமிழரசுக் கட்சியின் கூட்டம்.
ஈ.எம்.வி. நாகநாதன், வி. என்.நவரத்தினம், வி.ஏ.முத்தையா, எஸ்.ஜே.வி. செல்வநாயகம், கு. வன்னியசிங்கம், அ. அமிர்தலிங்கம், ஆர். இராஜவரோதயம் (1954)



தமிழரசுக் கட்சி திருமலை மாநாடு
கு. வன்னியசிங்கம் தலைமைப்பதவியை ஏற்கிறார் (1956)




தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து கொழும்பு
காலிமுகக் கடற்கரையில் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகம் போராட்டம் (5-6-1956)



காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் 1956 சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்ட
தமிழரசுத் தொண்டர்கள் (5-6-1956)





சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து காலிமுகத் திடலில் சத்தியாகிரகம் (1956)



காலிமுகத் திடலில் சத்தியாகிரகத்தில் வண. தனிநாயகம் அடிகள் (1956)




சிறீ எதிர்ப்பு நடவடிக்கையில் கைதாகி சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் மங்களா கிறிஸ்தோப்பர், திருமதி, வன்னியசிங்கம், திருமதி. அமிர்தலிங்கம், வி. தர்மலிங்கம், (1958)




சிறீ எதிர்ப்பு நடவடிக்கையில் கைதாகி சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் செனற்றர் எஸ். நடராசா, கு .வன்னியசிங்கம் (1958)





யாழ்ப்பாணம் 2ம் குறுக்குத் தெருவில் அமைந்திருந்த தமிழரசுக் கட்சி அலுவலகத்தின் முன் திரு. கு. வன்னியசிங்கம், திரு. ஜே.வே. செல்வநாயகம், திரு. அ. அமிர்தலிங்கம்



திருமலை யாத்திரையின்போது, திரு. அ. அமிர்தலிங்கம், திரு. கு. வன்னியசிங்கம், திரு. என். இராஜவரோதயம், திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம்



சத்தியாக்கிரகத்துக்குப் பின்னர் தடுப்புகாவலில் இருந்து விடுதலை (1961)
வி. தர்மலிங்கம், வீ.ஏ. கந்தையா, செனெட்டர் நடராசா, மு. சிவசிதம்பரம்,
எஸ். அருணாசலம் (1961)





## பண்டாரநாயகா ஒப்பந்தத்தைக் கிழித்தார்

ஆரம்பகாலந் தொடக்கம், பண்டா–செல்வா ஒப்பந்தத்தைப் பௌத்தமத குருமாரும் – சிங்களத் தீவிரவாதிகளும் எதிர்த்து வந்தனர். ஐக்கிய தேசிய கட்சியினரும் தீவிரப் பிரசாரம் செய்து, எதிர்ப்புக்குத் தூபம் போட்டு வளர்த்து வந்தனர். இவற்றுக்கு அஞ்சிய பிரதமர், முன் குறிப்பிட்டதைப்போல ஒப்பந்தத்தை அமுல் நடத்தாது கடத்தி வந்ததோடு, தமிழ் மக்களுக்குப் பாதகமான பல காரியங்களையும் அரசாங்கம் தொடர்ந்து செய்து வந்தது. 1958 ஏப்ரல் 8ஆந் திகதி பிரதமர் பண்டாரநாயகாவின் றோஸ்மிட் பிளேசில் உள்ள இல்லத்தின்முன் அவரது கட்சியைச் சேர்ந்த புத்த பிக்குகள் வழி நடத்த – பௌத்த பெரமுனையினர் சத்தியாக்கிரகம் செய்தனர். சுகாதார மந்திரி விமலா விஜயவர்த்தனா சென்று அவர்களுக்கு உபசரணை செய்தார். இறுதியில் அவர்களது கோரிக்கைக்குப் பணிந்த பிரதமர் பண்டாரநாயக்கா – தாம் கையொப்பமிட்ட ஒப்பந்தத்தைத் தானே தனிப்பட ரத்துச் செய்துவிட்டதாக அறிவித்தார். தன்னோடு ஒப்பந்தம் செய்த திரு. செல்வநாயகம் அவர்களோடு ஒரு வார்த்தைதானும் பேசாது, ஒரு தலைப்பட்சமாக ஒப்பந்தத்தைக் கிழித்தார். அன்றே பாராளுமன்றத்திலும் அதை அறிவித்து, சிங்கள சிறி பொறித்த பஸ் வண்டிகள் மீண்டும் தமிழ் பிரதேசத்தில் ஓடுமென்றும், அவற்றை மாற்ற முற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அறிவித்தார்.

## தொண்டர்கள் கைது

இவ்வறிவித்தலை தொடர்ந்து, ஏப்ரல் 10ஆந் திகதி மீண்டும் சிங்கள சிறி பொறித்த பஸ் வண்டிகள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஓடத் தொடங்கின. அன்றே எமது தொண்டர்கள் களத்திற்குதித்தனர். பொலீசாருக்கு அறிவித்தபின், யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நானும், மூதவை உறுப்பினர் நல்லையா அவர்களும், ஸ்ரீதரன் என்ற இளைஞரும் சிங்கள சிறி யை அழித்துத் தமிழ் ஸ்ரீ யை எழுதியபோது, பொலீசாரால் கைது செய்யப்பட்டோம். எமது விடுதலை இயக்கத்தில் ஒரு புதிய கட்டம் அன்று ஆரம்பமாகியது. பெண்கள் உட்படப் பலநூறு பேர் இச்சட்டமறுப்பில் இறங்கினர்; கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர்.

## வவுனியா மாநாடும் இனக்கலவரமும்

ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டதும், சட்ட மறுப்பில் ஈடுபட்ட தொண்டர்கள் கைது செய்யப்பட்டமை; சிங்கள மொழி வெறியரின் தமிழ்அழிப்பு இயக்கமும்,

அதன் பலனாக ஏற்பட்ட பலாத்காரச் சம்பவங்களும் நாட்டில் ஒரு கொந்தளிப்பான சூழ்நிலையை உருவாக்கின. இச்சூழ்நிலையில், நம்பிக்கைமோசம் செய்யப்பட்ட தமிழ் இனம் – ஒப்பந்தத்தினால் கைவிட்ட போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டிய நிலையில் இருந்தது. இந்நிலையை ஆராய்வதற்குக் கட்சியின் ஆறாவது மாநில மாநாடு வவுனியாவிற் கூட்டப்பெற்றது. ஆழ்ந்த கொள்கைப்பற்றும் அமைதியான போக்குங்கொண்டு, ஆரம்பகாலம் தொடக்கம் கிழக்கிலங்கையில் கட்சியைக் கட்டி வளர்த்தவரும், திருகோணமலைப் பிரதிநிதியுமான திரு. என்.ஆர். இராசவரோதயம் மாநாட்டின் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அவருடைய தலைமையில் 1958 ஆம் ஆண்டு மே மாதம் 23, 24, 25 ஆந் திகதிகளில் வவுனியாவில் மாநாடு நடைபெற்றது. மட்டக்களப்பிலிருந்து மாநாட்டிற்குப் புறப்பட்ட பிரதிநிதிகளில், முன்னரே வந்து சேர்ந்த ஒரு சிலரைத் தவிர, ஏனையோர் வந்துசேர முடியாத அளவிற்குப் பொலநறுவையில் சிங்களக் குண்டர்களின் வெறியாட்டம் நடைபெற்றது. அதுமாத்திரமன்றி, மட்டக்களப்பிலிருந்து புறப்பட்ட புகைவண்டியும் சதியினால் தடம் புரண்டு, ஒரு தமிழ் பொலீஸ் உத்தியோகத்தரும் இன்னொருவரும் உயிரிழக்க, இன்னும் பலர் காயமுற்றனர்.

மாநாட்டின் மத்தியில் பலத்த பொலீஸ் பாதுகாப்போடு, வவுனியாவுக்கூடாக யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்ட தமிழ்ப் பொலீஸ் சார்ஜன்டின் பிரேதம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இத்தனை கொந்தளிப்புகளுக்கு மத்தியிலும், மாநாடு முன் எப்பொழுதும் இல்லாத சிறப்புடன் நடைபெற்றது. மூதவை உறுப்பினர் நல்லையாவும் நானும் அணிவகுப்பைப் பார்வையிட திரு. வ.அ. பரமநாயகம் தலைமையில் சீருடை அணிந்த ஆயிரக்கணக்கான தொண்டர்கள் அணிவகுத்துச் சென்ற காட்சியானது இயக்கம் மீண்டும் போராட்டத்தில் இறங்குவதற்கு தயாராகிவிட்டது என்பதை எடுத்துக்காட்டியது. ஒப்பந்தம் ஒருதலைப் பட்சமாக ரத்துச் செய்யப்பட்டதைக் கண்டித்தும்; நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுவதையும், அதையொட்டி அரசாங்கம் பாராமுகமாக இருப்பதை வன்மையாக எதிர்த்தும்; திருமலைத் தீர்மானத்தின் அடிப்படையில் 1958ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ஆந் திகதிக்குப் பிந்தாது, மறுபடியும் சாத்வீக விடுதலைப் போரை ஆரம்பிப்பதென்றும், மாநாடு தீர்மானித்தது. போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்திருக்கும் கட்சி, அரசியல் அமைப்புப்பற்றி பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதில்லை என்றும் முடிவு செய்து, போராட்டத்தை வழிநடத்தும் பூரண அதிகாரமுள்ள போராட்டக் குழுவாக தலைவர் இராசவரோதயத்தோடு, திருவாளர்கள் சா. ஜே.வே. செல்வநாயகம், கு. வன்னியசிங்கம், செ. இராசதுரை ஆகியோரையும் என்னையும் நியமித்தது. தமிழ் இனத்தின் விடுதலைக்காகப் போர்ப்பிரகடனம் செய்த மாநாடு முடிந்து, பிரதிநிதிகள் தம் பகுதிகளுக்குத் திரும்பிச் செல்லுமுன்பே, சிங்கள நாடெங்கும் தமிழ் மக்களுக்கு எதிரான பலாத்காரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. கொலை, கொள்ளை, தீவைத்தல், கற்பழிப்பு, உயிரோடு தீயிடல் போன்ற பல படுபாதகச் செயல்களுக்குத் தமிழ் மக்கள் ஆளாக்கப்பட்டனர். தமது வீடுகளையும் உடைமைகளையும் விட்டுத் தமிழ்ப் பிரதேசத்தை நோக்கி ஓடினர். அகதிகள் முகாம்களில் ஆயிரக்கணக்கானோர் தஞ்சம் புகுந்தனர். கப்பல்களிலும், இராணுவப் பாதுகாப்போடு சென்ற பஸ் வண்டிகளிலும் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களின் வருகை, வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு மனக்கொதிப்பை ஏற்படுத்தியது. இங்கு வாழ்ந்த சிங்கள மக்கள் சிலர், கொதிப்படைந்த தமிழ் மக்களின் தாக்குதலுக்கு ஆளாகினர். காலங்கடந்து அவசரகாலச்சட்டத்தைப் பிரகடனம் செய்து, இராணுவத்தைச் சேவைக் கழைத்தார் பிரதமர் பண்டாரநாயக்கா. தமிழ் மக்கள் மறக்கமுடியாத ஒரு பாடத்தை, இக்கலவரம் அவர்களுக்குப் படிப்பித்தது; தென்னிலங்கையில் எவ்வளவு செல்வச்சிறப்போடு வாழ்ந்தாலும், கடைசியில் தமது உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பளிப்பது தமிழ்ப் பிரதேசமே என்பதை அவர்கள் உணரச் செய்தது.



### கட்சிக்குத் தடை.

அரசாங்க ஆதரவாளர்களாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் வகுப்புவெறிப் பிரசாரத்தாலும் உருவான இனக்கலவரத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ்மக்களே! அதோடு ஒப்பிடும்போது, தமிழ்ப் பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட சிங்கள மக்களின் எண்ணிக்கை மிகச் சொற்பம். ஆயினும், பிரதமர் பண்டாரநாயக்கா, ஆனைக்குப் பானை சரி என்ற அடிப்படையில், சிங்கள வகுப்புவெறி இயக்கமான திரு. கே.எம்.பி. இராஜரத்தினாவின் இயக்கத்தை ஒரு கண்துடைப்பாகத் தடைசெய்து விட்டு, தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளுக்காகச் சாத்வீக வழியிற் போராடிகொண்டிருந்த தமிழரசுக் கட்சியையும் தடைசெய்தார். 1958 ஆம்

ஆண்டு ஜூன் மாதம் 5ஆந் திகதி தமிழரசுக்கட்சித் தலைவர்களும் மத்திய செயற்குழு உறுப்பினர்களும் கைதுசெய்யப்பட்டனர். பெரும்பாலோர் வீட்டுக் காவலில் வைக்கப்பட, திருவாளர்கள் கு. வன்னியசிங்கம், என்.ஆர். இராஜவரோதம், செ. இராசதுரை, வ.ந. நவரத்தினம், வ. நவரத்தினம், செனெட்டர் நல்லையா ஆகியோரும் நானும் கொழும்பில் ஸ்டான்மோர் கிறெசென்றில் ஒரு வீட்டில் காவலில் வைக்கப்பட்டோம்.

### தமிழ்மொழி உபயோகச் சட்டம் :

தமிழ் மக்களின் கட்சியைத் தடை செய்து, தலைவர்களையும் காவலில் வைத்த பிரதமர், தம் மனச்சாட்சியைத் திருப்தி செய்வதற்கோ–உலக அபிப்பிராயத்தைத் திருப்திப்படுத்தவோ – பாராளுமன்றத்தில் தமிழ் மொழி (விசேட உபயோக) சட்டத்தை சமர்ப்பித்தார். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இல்லாத சபையில் இச்சட்டத்தைக் கொண்டுவருவது கேலிக் கூத்தாகுமென்று கருதிக் காவலிலிருந்த தமிழ்ப் பிரதிநிதிகளையும் போலீஸ் காவலோடு பாராளுமன்றம் வருமாறு அழைத்தார். அதன் பொருட்டுத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் எல்லோரும் தந்தை செல்வநாயகம் வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். காவலிற்சென்று பாராளுமன்ற விவாதத்திற் கலந்து கொள்வது, இனத்திற்கு இழுக்கு என்று நாம் தீர்மானித்தோம்; செல்ல மறுத்தோம். சட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் இல்லாது நடைபெறும் விவாதத்தில், தாமும் கலந்துகொள்ள மாட்டோமென்று ஏனைய எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளும் வெளியேறினர். ஆளுங்கட்சிப் பிரதிநிதிகள் மாத்திரமிருந்து, தமிழ்மொழி நியாயமான உபயோகம் என்ற சட்டத்தை நிறைவேற்றினர்.

### சுதந்திரத்திற்கும் தடை:

கட்சி தடைசெய்யப்பட்ட அதே நேரத்தில், கட்சிக் கருத்துக்களைத் தாங்கிவரும் ஏடான சுதந்திரனும் தடைசெய்யப்பட்டது. சுதந்திரன் அச்சகம் பூட்டிச் சீல் வைக்கப்பட்டது. மூன்று மாதங்களின் பின், தலைவர்கள் தடுப்புக் காவலிலிருந்து விடுதலை செய்யப்பட்டனராயினும், கட்சித் தடையும் சுதந்திரன் தடையும் நீங்க மேலும் சில மாதங்கள் சென்றன. கட்சித் தடை நீங்கியபின் முதற் செயற்குழுக் கூட்டம் 2.11.1958ல் நடைபெற்றது. அக்கூட்டத்தில், இனத்தின் விடுதலையைக் காண–சாத்வீக வழியிற்போராட மீண்டும் உறுதிபூண்ட அதேநேரத்தில், கட்சியின் இலட்சியமான தீண்டாமை ஒழிப்பில் தீவிரமாக ஈடுபடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.



### தேநீர்க்கடைப் பிரவேசம்

யாழ்ப்பாணத்திலுள்ள தேநீர்க் கடைகளில் சாதி அடிப்படையில் பாரபட்சம் காட்டுவதை ஒழிக்கும்பொருட்டு, யாழ்நகரத் தேநீர்ச்சாலை உரிமையாளர்களின் மாநாடொன்றை நடத்துவதென்றும்; **24–11–58** தொடக்கம்–ஒரு வாரம் தீண்டாமை ஒழிப்பு வாரமாக அனுஷ்டிப்பதென்றும் தீர்மானிக்கப்பெற்றது. திரு. கு. வன்னியசிங்கம், திரு. சு. நடராசா அவர்களும் நானும் இவ்வேலைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டோம். திரு. வன்னியசிங்கம் அவர்களின் அழைப்பின்பேரில் யாழ் நகரமண்டபத்தில் கூடிய தேநீர்ச்சாலை, உணவுச்சாலை உரிமையாளர்கள், சாதிபேதம் பாராட்டுவதைக் கைவிடுவதென ஏகமனதாகத் தீர்மானித்தனர். யாழ்நகர உணவு விடுதிகளில் தீண்டாமை நீங்குவதற்கு அன்றே அத்திவாரம் இடப்பட்டது. தீண்டாமை ஒழிப்பு வாரத்தில் சாதி ஒழிப்புப் பற்றிய தீவிர பிரசாரம், சமபந்திப் போசனம் போன்ற பலநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

### மலைநாட்டுக் குழந்தைகளின் கல்வி:

உயர்கல்விக்கு வாய்ப்பும் வசதியும் அற்ற, மலைநாட்டுத் தமிழ்ப் பிள்ளைகளின் கல்விக்கு உபகாரச் சம்பளம் பெற்றுக்கொடுப்பதில் இக்காலத்திற் கட்சி விசேட கவனம் எடுத்தது. யாழ்ப்பாணத்திலுள்ள பெரிய கல்லூரிகள் ஒவ்வொன்றிலும். விடுதி வசதியும் இலவசப் புத்தகங்களும் வழங்கப்பெற்ற இவ்விரண்டு மாணவர்களுக்கு, திரு. வன்னியசிங்கம் அவர்களின் முயற்சியால் இடம் கிடைத்தது. சுமார் 25 மாணவர்கள், இத்திட்டத்தின் கீழ் உயர்கல்வி பெற வாய்ப்புக் கிடைத்தது. 1960 ஆம் ஆண்டின் இறுதியில் அரசாங்கம் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளைப் பொறுப்பேற்று, எல்லாம் அரசாங்கப் பாடசாலைகளாக்கப்படும் வரை இத்திட்டம் செயற்பட்டு வந்தது. மலைநாட்டுத் தமிழ்மக்களின் கல்வி வளர்ச்சியின் பொருட்டும், தமிழ் இனத்தில் ஒற்றுமையை வளர்க்கும் பொருட்டும் கட்சி மேற்கொண்ட ஆக்க நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்.

### தலைவர் வன்னியசிங்கம் மறைவு:

தீண்டாமை ஒழிப்பு, இன ஒற்றுமை வளர்ப்பு ஆகிய ஆக்க வேலைகளோடு, பல மாதங்களாகத் தடைசெய்யப்பட்டிருந்த காரணத்தினால் சீர்குலைந்திருந்த கட்சி அமைப்பைச் சீர்செய்து, மீண்டும் போரட்டத்தைத் தொடங்குவதற்கு 1959ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கட்சி ஆயத்தஞ் செய்துகொண்டிருந்தது.

1956ஆம் ஆண்டு பெருவெற்றி பெற்று வந்த ஆளும் கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணியில், பெரும் பிளவு ஏற்பட்டது. இடதுசாரி அமைச்சர்களான பிலிப் குணவர்த்தனாவும் வில்லியம் சில்வாவும் அமைச்சர் பதவிகளிலிருந்து இராஜினாமாச் செய்து, பல உறுப்பினர்களோடு எதிர்க்கட்சிக்கு மாறினர். இந்த மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில், தமிழினத்திற்கும் தமிழரசுக் கட்சிக்கும் ஒரு பேரிடி விழுந்தது. 1958ஆம் ஆண்டு தடுப்புகாவலிலிருந்த நேரத்தில் இரத்தக் கொதிப்பினால் பீடிக்கப்பட்ட திரு. வன்னியசிங்கம், திடீரென்று 1959ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17ஆந் திகதியன்று எம்மை விட்டுப் பிரிந்தார்! மதி நுட்பத்தாலும், அப்பழுக்கற்ற தியாகத்தாலும், மெய்வருத்தம் பாரா உழைப்பாலும் இயக்கத்தை வழிநடத்தி வந்த அமரர் வன்னியசிங்கத்தின் மறைவு கட்சிக்கு ஈடுசெய்யமுடியாத நஷ்டமாகும். அவர் மறைந்து ஒரு வாரத்தில் பிரதமர் பண்டாரநாயக்காவும் சுட்டுக் கொல்லப்பட்டு, நாடு மீண்டும் ஒரு பொதுத்தேர்தலை எதிர்நோக்கும் நிலை ஏற்பட்டது.

### 1960 மார்ச் பொதுத்தேர்தல்:

1959 ஆம் ஆண்டு புதிதாகத் தொகுதிகள் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 101இல் இருந்து157 ஆக அதிகரித்த அங்கத்துவத்தைக் கொண்ட பாராளுமன்றத் தேர்தல், 1960ஆம் ஆண்டு பங்குனி மாதம் நடைபெற்றது. அத்தேர்தலில், கட்சி மீண்டும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அமோக வெற்றியீட்டியது. 19 தொகுதிகளில் போட்டியிட்ட கட்சி – 1,76, 492 வாக்குகளைப் பெற்று, 15 தொகுதிகளில் வெற்றியீட்டியது. கட்சிப் பாராளுமன்றக் குழுவோடு ஒத்துழைக்க உறுதி அளித்து, கட்சியின் ஆதரவைப் பெற்ற இரு சுயேச்சை வேட்பாளர்கள் – நிந்தாவூர், பொத்துவில் தொகுதிகளில் வெற்றியீட்டினர். ஐக்கிய தேசியக் கட்சி 50 ஸ்தானங்களையும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி 46 ஸ்தானங்களையும் கைப்பற்றின . தமிழரசுக் கட்சி பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக அமைந்தது. போதிய பெரும்பான்மையில்லாது ஐ.தே.க. தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா பிரதமராகி ஆட்சியை அமைத்தார். தம் நிலையை உறுதிப்படுத்துவதற்குத் தமிழரசுக் கட்சியின் ஆதரவை நாடினார். மந்திரிப் பதவிகளைக் கொடுத்துக் கட்சியின் ஒத்துழைப்பைப் பெறலாமென்று எதிர்பார்த்த பிரதமருக்கு, இனத்தின் உரிமை பற்றிய திட்டவட்டமான கோரிக்கைகளைத் தந்தை செல்வநாயகம் சமர்ப்பித்தார். டட்லி' பெரும்பான்மைப் பலம் பெறத் தவறினால், தாம் ஆட்சிக்கு வரக்காத்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் எமது ஆதரவைக் கோரினர். பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்குச் சமர்ப்பித்த அதே கோரிக்கைகள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்களுக்கும் விடுக்கப்பட்டன.



### இருபெரும் கட்சிகளும், எம் கோரிக்கைகளும்

பாராளுமன்றத்தில் எமது கட்சியின் ஆதரவுவேண்டுமானால் கீழ்க்கண்ட நான்கு குறைந்தபட்சக் கோரிக்கைகளை அளிக்குமாறு இரு கட்சித் தலைவர்களிடமும் நாம் கேட்டோம்.

அவையாவன:

1. பண்டாரநாயக்கா – செல்வநாயகம் உடன்படிக்கையிற் கூறப்பட்ட பிரகாரம், பிரதேச சபைகள் நிறுவப்படவேண்டும். அதற்கிடையில், தமிழ்ப் பிரதேசத்தில் குடியேற்றம் நிறுத்தப்படவேண்டும்.

2. பண்டா–செல்வா ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமைகள் யாவும் தமிழ்மொழிக்குச் சட்டபூர்வமாக வழங்கப்படவேண்டும்.

3. இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தில் குறிப்பிட்ட திகதி என்பது நீக்கப்பட்டு, இரண்டு தலைமுறைக்கு இந்நாட்டில் பிறந்தோர் எவருக்கும் குடியுரிமை வழங்குவதன் மூலம், நாடற்ற தமிழர் என்ற நிலை நாளடைவில் மாறவேண்டும்.

4. குடியுரிமைப் பிரச்சினை தீரும்வரை 6 நியமனப் பிரதிநிதிகளில் 4 பேர், மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரதி நிதித்துவம் வாய்ந்த ஸ்தாபனமான – இலங்கை ஜனநாயக காங்கிரசினால் நியமிக்கப் பட்டவர்களாக இருக்கவேண்டும்.

இவற்றையொட்டிய விபரங்கள் ஆளுங்கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டுமென்றும், ஏற்றுக்கொண்ட விடயங்கள் சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம்பெற வேண்டுமென்றும் கோரினோம்.

### ஏற்க மறுத்த அரசு

கோரிக்கைகளை எழுத்திற் பெற்ற பிரதமர் டட்லி சேனநாயகா, அவற்றை நிராகரித்தது மாத்திரமன்றி, அவற்றை எதிர்க்கு முகமாக – சிங்கள இன உணர்ச்சியை, அவரும் அவரது கட்சியினரும் தூண்ட முற்பட்டனர். அதே

கோரிக்கைகளை முன்வைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்களோடும் பேச்சுவார்த்தை நடந்தது. அப்போது பாராளுமன்றத்தில் இருக்காவிட்டாலும், இன்றைய பிரதமர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களும் அதிற் கலந்து கொண்டார். அவர், பண்டாரநாயக்கா–செல்வநாயகம் ஒப்பந்தத்தின் மூலப்பிரதியைத் தன் கணவரின் பத்திரங்களிடையே இருந்து எடுத்துக் கொடுத்தார். அக்கட்சி சார்பில், திருவாளர்கள் சி.பி.டி. சில்வா, ஏ.பி, ஜயசூரியா, மைத்திரிபால சேனநாயக்கா, பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோர் இப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர். பண்டாரநாயக்காவின் கொள்கைகளை முன்வைத்துத் தேர்தலிற் போட்டியிட்ட தம் கட்சிக்கு அவர் செய்த ஒப்பந்தத்தில் உள்ளடங்கிய கோரிக்கைகளை ஏற்பதில் எவ்வித கஷ்டமுமில்லை என்றும், எமது கோரிக்கைகளை பெரும்பாலும் தாம் ஏற்றுக்கொள்ள முடியுமென்றும் கூறினர். பிரதமர் டட்லி சேனநாயகாவும் ஐக்கிய தேசியக் கட்சியும் எம் கோரிக்கைகளை ஏற்க மறுத்த காரணத்தினால், 1960ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆந் திகதி சிம்மாசனப் பிரசங்க விவாதத்தில் அரசுக்கு எதிராக வாக்களித்து அரசைத் தோற்கடித்தோம்.

### ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குக் கைகொடுத்தோம்

டட்லி சேனநாயக்காவின் அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அடுத்த பெரிய கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அன்றைய தலைவர் திரு. சி.பி.டி. சில்வா தலைமையில் ஓர் அரசாங்கத்தை அமைக்க எதிர்க்கட்சிகள் முயற்சி மேற்கொண்டன. எமது கோரிக்கைகளிற் பெரும்பாலானவற்றைத் தாம் ஏற்றுக் கொள்வதாக எற்கனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்கள் உறுதியளித்திருந்த காரணத்தினால் – சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றோடு சேர்ந்து ஸ்ரீலங்கா சுந்திரக் கட்சி அரசாங்கம் அமைக்க – தமிழரசுக்கட்சியும் தனது ஆதரவைக் கொடுக்க முன்வந்தது. தந்தை செல்வநாயகம், கலாநிதி என். எம். பெரேரா, கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்கா, திரு. சி. பி. டி. சில்வா ஆகியோர் கையொப்பமிட்டு மகாதேசாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதினர். தமிழரசுக் கட்சி முதலாளித்துவக் கட்சி என்றும், எச்சந்தர்ப்பத்திலும் இடதுசாரிக் கட்சிகளை ஆதரிக்கவில்லை என்றும் கூறுவோர், இச் சரித்திர உண்மையை மறைக்க முயலுகின்றனர்; அது அவர்களால் முடியாது. எமது ஆதரவோடு, பெரும்பான்மைப் பலம் பெற்ற அரசாங்கத்தைத் தாம் அமைக்க முடியுமென்று



எதிர்க்கட்சிகள் காட்டியபோதிலும், தோற்கடிக்கப்பட்ட பிரதமர் டட்லி சேனநாயக்காவின் கேள்விப்படி தேசாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தார். அவர் எதிர்க்கட்சிகளின் கேள்விக்குச் செவிசாய்த்திருந்தால், இந்நாட்டின் சரித்திரமே வேறுவிதமாக இருந்திருக்கலாம்.

### 1960 ஜூலை பொதுத்தேர்தல்

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, நான்கு மாதங்களில் மீண்டும் பொதுத்தேர்தல் நடைபெற்றது. தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளுக்குத் தான் இணங்க மறுத்த காரணத்தினால், தமிழர்கள் தன்னைத் தோற்கடித்துவிட்டதாகக் கூறி, சிங்கள இன உணர்ச்சியைத் தூண்டி வெற்றி பெற முயற்சித்தார் டட்லி சேனநாயக்கா. இம்முயற்சியில், ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வி கண்டது. மார்ச் தேர்தலில் 50 ஸ்தானங்களை பெற்ற ஐ.தே.கட்சி, ஜூலை தேர்தலில் 30 ஸ்தானங்களையே பெற்றது. திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் புத்துயிர் பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 75 ஸ்தானங்களைப் பெற்றுத் தனி ஆட்சி அமைக்கக் கூடிய பலத்தைப் பெற்றது. 21 தொகுதிகளிற் போட்டியிட்ட தமிழரசுக் கட்சி – 2,18,753 வாக்குகளைப் பெற்று 16 ஸ்தானங்களைக் கைப்பற்றியது. தமிழ்பேசும் மக்களின் ஆதரவைப் பெற்ற ஒரேகட்சி என்ற நிலை மூன்றாவது தடவையாக உறுதிப்படுத்தப்பட்டது.

### சிறிமாவோவின் முதல் அரசு:

தேர்தல் முடிவைத் தொடர்ந்து, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் அமைக்கப்பெற்றது. எம்மோடு முந்திய பாராளுமன்றத்தில் ஏற்பட்ட உடன்பாட்டை நிறைவேற்றுவதாகக் காட்டிக்கொண்டனர். மலைநாட்டுத் தமிழர்களின் சார்பில் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் பாராளுமன்ற நியமனப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். சிம்மாசனப் பிரசங்கத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு உடன்வாசிக்கப் பெற்றது. 1957ஆம் ஆண்டு தனிச் சிங்களத்தில் சிம்மாசனப் பிரசங்கம் வாசிக்கத் தொடங்கியபோது வெளிநடப்புச் செய்ததிலிருந்து, சிம்மாசன உரைகளைப் பகிஷ்கரித்து வந்த தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள், பல ஆண்டுகளின் பின் பாராளுமன்றத் திறப்பு விழாவிற் கலந்து கொண்டனர். முதலாவது சிம்மாசனப் பிரசங்க விவாதத்தில் கட்சி எதிர்த்து வாக்களியாது நடுவுநிலை வகித்தது.

எம்மோடு பேசிய விடயங்களை அமுல் நடத்துவதுபற்றி, பிரதமர் தலைமையில் அமைச்சர் குழுவுக்கும்—கட்சித் தலைவர்களுக்கு மிடையில் அலரி மாளிகையில் பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது. இவ்வாரம்ப காலத்தில், அரசுக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையில் நல்லுறவு நிலவியது.

## நீதிமன்ற மொழிச் சட்டம்

கட்சித் தலைவர்களோடு பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிந்த அதே நேரத்தில், எமக்கு எவ்வித முன்னறிவித்தலுமின்றி, சிங்களத்தை நாடு முழுவதும் நீதிமன்ற மொழியாக்கும் சட்டத்தை – நீதியமைச்சர் திரு. சாம் பி.சி. பெர்ணாண்டோ சமர்ப்பித்தார். அரசுக்கும் கட்சிக்குமிடையில் நிலவிய நல்லுறவு இச்சட்டத்தினால் தகர்க்கப்பட்டது. இச்சட்டத்தை கட்சி தன் முழுப் பலத்தோடும் எதிர்த்தாயினும், சட்டம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்மொழி உபயோகச் சட்டத்தின் கீழ்—மிகக்குறைந்த உரிமைகள் வழங்கும் சட்ட விதிகளையும் இதே அமைச்சர் சமர்ப்பித்தார். ஆனால், கட்சியின் எதிர்ப்பினால், அவற்றை அரசாங்கம் கைவிட்டது. இரண்டாவது முறையாகக் கொடுத்த வாக்கை அரசு காப்பாற்றத் தவறிவிட்டநிலையில், தமிழ் மக்கள் மீண்டும் போராட்டத்தில் இறங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1961 ஆம் ஆண்டு ஜனவரி முதலாந் திகதி தொடக்கம் – வடக்குக் கிழக்கு மாகாணம் உட்பட, நாடு முழுவதும் தனிச் சிங்களச் சட்டம் பூரணமாக அமுல் நடத்தப்படு மென்று அரசாங்கம் அறிவித்தது. அதன் பொருட்டு, சிங்கள உத்தியோகத்தர்கள் தமிழ்ப் பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டனர். போராட்டத்தைத் தொடங்குவதற்கு முதற்படியாக – தந்தை செல்வநாயகம் தலைமையில் கட்சித் தொண்டர்கள் மாபெரும் ஊர்வலமாக யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அணிவகுத்துச் சென்று, தமிழில் நிர்வாகம் நடைபெற வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர். தமிழ்ப் பிரதேசத்தில் உரிமை உணர்ச்சி மறுபடியும் பொங்கி எழுந்தது.

## ஏழாவது மாநில மாநாடு

கட்சியின் ஏழாவது மாநில மாநாடு யாழ்ப்பாணத்தில் வன்னியசிங்கம் அரங்கில், 1961 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆந் திகதி ஆரம்பமாகியது. கல்வியறிவு, நேர்மை, உறுதியான இனப்பற்று என்பவற்றால், தமிழ் பேசும் மக்களின் தனி மதிப்பைப் பெற்றிருந்தவரும், பட்டிருப்புத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. சி.மூ. இராசமாணிக்கம் இம்மகாநாட்டின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அவருடைய தலைமையில் அடுத்து



மூன்று ஆண்டுகளாக கட்சி மிகப் பெரிய போராட்டங்களை நடாத்தியது. தனிச் சிங்களத் திணிப்பை எதிர்த்து நேரடி நடவடிக்கையில் இறங்குவதென்று மகாநாடு தீர்மானித்து, பெப்ரவரி 20ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சாதவீகப் போராட்டத்தை ஆரம்பிப்பதென்றும், மற்றைய மாவட்டங்களுக்குப் பின்னர் விஸ்தரிப்பதென்றும் முடிவெடுத்தது. கத்தியின்றி, இரத்தமின்றி நாட்டின் ஆட்சி இயந்திரத்தை ஐந்து மாவட்டங்களில் ஐம்பது நாட்களுக்கு மேல் ஸ்தம்பிக்கச் செய்த போராட்டத்திற்குத் திட்டம் தீட்டிய பெருமை இந்த ஏழாவது மகாநாட்டிற்கே உரியது.

## சரித்திரம் சமைத்த சத்தியாக்கிரகம் :

1961 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆந் திகதி காலை 7–30 மணிக்குத் தந்தை செல்வநாயகம் அவர்கள் தலைமையில், யாழ்ப்பாணம் அரசாங்க செயலக வாயில்களின் ஊடாக யாரும் கச்சேரிக்குள் செல்ல விடாது தடுத்து, தொண்டர்கள் அமைதியாக அமர்ந்து சத்தியாக்கிரகம் ஆரம்பித்தனர். மறியலில் ஈடுபட்ட தொண்டர்களை அரசாங்கம் கைதுசெய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதனால், ஒரு நாளுக்கு ஒரு தொகுதித் தொண்டர்கள், அத்தொகுதி உறுப்பினர் தலைமையில் சத்தியாக்கிரகம் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. முதல் நாள் காங்கேசன்துறைத் தொகுதியின் நாளாகையால் திரு. செல்வநாயகம் தலைமையில் அத்தொகுதித் தொண்டர்கள் சத்தியாக்கிரகம் செய்ய, ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் தொண்டர்களும் வெளியில் உதவியாக நிற்பதென்பதே ஏற்பாடு. ஆனால், பிரதான வாயிலினூடாக அரசாங்க ஊழியர்கள் செல்வதற்குப் பாதை ஏற்படுத்த பொலீசார் முற்பட்டபோது, எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தொண்டர்களும் அந்த இடத்திற்குச் சென்று, பாதைக்குக் குறுக்கே படுத்தனர். பொலீசார் தொண்டர்களைப் பலாத்காரமாகத் தூக்கி அப்புறப்படுத்த முயன்றனர். மிருகத்தனமாகத் தொண்டர்களைத் தூக்கி நிலத்தில் வீசித் துன்புறுத்தியதைப் பார்த்த பொதுமக்கள், நூற்றுக் கணக்கில் சத்தியாக்கிரகிகளோடு சேர்ந்து கொண்டனர். இதனால், பொலீசாரின் முயற்சி தோல்வி கண்டது.

அன்று பகல் 11 மணிக்கு உயர்நீதி மன்றத் திறப்புவிழா இடம் பெற்றது. அதற்குரிய ஆணையை அரசாங்கத்தின் சார்பில், அரசாங்க அதிபர் நீதியரசரிடம் கொடுப்பதற்குச் செல்லவேண்டியிருந்தது. அரசாங்க அதிபரின்

வாசஸ்தலம் அமைத்திருந்த பழைய பூங்கா வாயிலும் சத்தியாக்கிரகிகளினால் மறியல் செய்யப்பட்டிருந்தது. குண்டாந்தடியினால் தொண்டர்களைத் தாக்கி, அவர்களுக்கு ஊடாக அரசாங்க அதிபரின் வண்டியைக் கொண்டுசெல்ல பொலீசார் முற்பட்டனர். இதனால், டாக்டர் நாகநாதன் உட்பட, பல பாராளுமன்ற உறுப்பினர்களும் தொண்டர்களும் கடுமையாகத் தாக்கப்பட்டு, பலர் இரத்தக் காயங்களுக்கும் ஆளாகினர். இதற்கிடையில் பல்லாயிரமாகப் பெருகிவிட்ட பொதுமக்கள் மத்தியில், பொலீசாரின் மிருகத்தனம் பெரும் கொதிப்பை ஏற்படுத்தியது. அரசாங்க அதிபரின் ஜீப் வண்டியை வெளியே கொண்டு செல்வதில் பொலீசார் பெற்றி பெற்றனராயினும், மக்கள் மத்தியில் அவர்களின் தாக்குதல் ஏற்படுத்திய உணர்ச்சி சத்தியாக்கிரக இயக்கத்தின் வெற்றிக்கு வழி வகுத்துவிட்டது.

இரண்டாம் நாள் சத்தியாக்கிரகம் எனது தலைமையில் வட்டுக்கோட்டைத் தொகுதித் தொண்டர்களால் நடாத்தப்பட்டது. பொதுமக்களும், ஆயிரக் கணக்கில் திரண்டு நின்றனர். முதல் நாள் போலீஸ் அட்டூழியத்திற்கு எதிராக நாடு முழுவதும் கிளம்பிய கண்டனங்களால் வெட்கமடைந்த பொலீசார், தம் பலாத்காரத்தைச் சற்றுக் குறைத்தனர். ஆயினும், அரசாங்க ஊழியரைச் சத்தியாக்கிரகிகளின் அணிக்கு ஊடாக, அலுவலத்தினுள் அழைத்துச் செல்ல அவர்கள் முயன்றனர். மக்களின் கொத்தளிப்பான எதிர்ப்புக்கு மத்தியில் உள்ளே செல்ல, பெரும்பாலான அரசாங்க ஊழியர் மறுத்தனர்.

மூன்றாம் நாள் – திரு. வி.ஏ. கந்தையா பா.உ. தலைமையில் ஊர்காவற்றுறைத் தொகுதித் தொண்டர்களும் நான்காம் நாள் திரு. வ.ந. நவரத்தினம் பா.உ. தலைமையில் சாவகச்சேரித் தொண்டர்களுமாக – இயக்கம் தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது தொழிலாளர்கள், மாணவர்கள், விவசாயிகள், வழக்கறிஞர்கள், வர்த்தகர்கள் எல்லோரும் போராட்டத்தில் குதித்தனர், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க நிர்வாகம் ஸ்தம்பித்தது.

### சத்தியாக்கிரக விஸ்தரிப்பு :

யாழ்ப்பாணத்தில் பொலீசாரின் தாக்குதலுக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில், பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி, மட்டக்களப்பு மாவட்டமெங்கும் ஹர்த்தால் நடைபெற்றது. அடுத்தநாள், மட்டக்களப்பு கச்சேரி வாயிலிலும் தொண்டர்களின் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டது.



மார்ச் 4ஆம் திகதி திருகோணமலைக் கச்சேரிக்கும், அதன்பின்பு மன்னார், வவுனியாக் கச்சேரிகளுக்கும் சத்தியாக்கிரக இயக்கம் விஸ்தரிக்கப்பட்டது. திருகோணமலைக் கச்சேரி வாயிலில் மறியல் செய்த சத்தியாக்கிரகிகள் பொலீசாரின் தடியடிப் பிரயோகத்திற்கு ஆளாகினர். 10 பேர் காயமடைந்து, வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். கடுமையான காயமடைந்த நால்வரில், மூதூர் முதல்வர் திரு. ஏகாம்பரமும் ஒருவராவர்.

### அமரர் ஏகாம்பரம் அகால மரணம்

சத்தியாக்கிரகப் போராட்டம் ஐந்து மாவட்டங்களிலும் மக்களின் உணர்ச்சிப் பெருக்கின்மத்தியில் வெற்றிகரமாக நடைபெற்றது. இரண்டு மாகாணங்களில் அரசாங்கமே இல்லை என்று, நாட்டின் பிரதமரே மூதவையில் கூறினார். இராணுவத்தையும் கடற்படையையும் பயன்படுத்தியும், மக்களின் உணர்ச்சியை அடக்க முடியவில்லை. இப்போராட்டத்தின் மத்தியில், தமிழினத்திற்கு ஒரு பெரிய இழப்பு ஏற்பட்டது. 4ஆந் திகதி திருகோணமலைச் சத்தியாக்கிரக ஆரம்ப தினத்தன்று, பொலீசாரின் தடியடியினால் படுகாயமுற்ற திரு. ஏகாம்பரம், அதிலிருந்து முற்றாகக் குணமடையவில்லை. 22–3–1961இல் யாரும் எதிர்பாராத வகையில், அவர் திடீரென மரணமானார். உறுதியும் செயல் திறனும் கொண்டு, மூதூர் மக்களின் முதல் உறுப்பினராக இருமுறை தெரிவு செய்யப்பட்ட திரு. ஏகாம்பரம் அவர்களின் மறைவு கிழக்கிலங்கை அரசியலில் ஒரு பெரும் இடைவெளியை ஏற்படுத்தியது.

### தந்தையை அணுகிய மந்திரி

சத்தியாகிரகத்தை முறியடிக்கவென அரசாங்கம் கையாண்ட தந்திரோபாயங்கள் எல்லாம் தோல்வி கண்டு, மக்கள் இயக்கம் சாதி, சமய, பிரதேச பேதமற்று மிக ஒற்றுமையாகவும் கட்டுப்பாடாகவும் அகிம்சை நெறியிலிருந்து ஒரு சிறிதும் வழுவாது நடைபெற்றுக்கொண்டிருந்தது. உலக அபிப்பிராயத்திற்கும், நல்லெண்ணம் கொண்ட சிங்களப் பிரமுகர்கள் பலருடைய கோரிக்கைக்கும் பணிந்த பிரதமர், தந்தை செல்வநாயகத்தோடு பேச்சுவார்த்தை நடத்துமாறு நீதியமைச்சர் திரு. சா.ம்.பி.சி. பெர்ணாண்டோ அவர்களைப் பணித்தார். உண்மைச் சத்தியாக்கிரகிகளின் மனப் பண்புக்கேற்ப, எப்போதும் சமரச் பேச்சின் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க ஆயத்தமாயிருந்த தந்தை செல்வநாயகம் பேச்சு வார்த்தைக்கு இணங்கினார். முன்பு சொலிசிட்டர் ஜெனரலாக இருந்தவரும், பின்பு கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராக

இயங்கியவருமான திரு. மு. திருச்செல்வம் அவர்களது கொழும்பு இல்லத்தில், 1961ஆம் ஆண்டு ஏப்பிரல் 5ஆந் திகதி இரவு இச்சந்திப்பு நடைபெற்றது. மொழியுரிமை பற்றிய மிகக் குறைந்த கோரிக்கைகளில்தானும் ஒற்றுமை ஏற்பட முடியவில்லை. பேச்சுவார்த்தை தோல்வியடையவே, போராட்டம் தொடர்ந்து மிக வேகத்தோடு நடைபெற்றது.

## தமிழ் அரசு தபால் சேவை

ஆங்கில ஆட்சியில் காந்தியடிகள் சத்தியாகிரகப் போராட்டங்களை நடாத்திய நேரத்தில், ஆட்சியாளர் அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தோ – நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டனை வழங்கியோ சட்டத்தை நிலைநாட்டினர். எமது சத்தியாகிரகத்தைப் பொலீஸ் பலாத்காரத்தினாற் கலைக்க முயன்ற அரசாங்கத்தின் முயற்சி தோல்வியடையவே, பங்கீட்டு உணவு வழங்காது – மக்களைப் பணியவைக்க அரசு முற்பட்டது. இதனால், போராட்டத்தை வேறு துறைகளிலும் விரிவாக்கித் தீவிரப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. ஏற்கனவே திட்டமிட்டுத் தயாராக இருந்த அடுத்த நடவடிக்கை, ஏப்ரல் மாதம் 14ஆந் திகதி பகல் 12 மணிக்குத் தந்தை செல்வநாயகம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அரசாங்கத்தின் தபால் சேவைச் சட்டத்தை மீறி, தமிழ் அரசு தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது. தமிழரசுத் தபால் தலைகளை திரு. செல்வநாயகம் விற்பனை செய்து தொடக்கிவைக்க, பல தொண்டர்கள் – சட்ட மறுப்பாக எழுதப்பட்டு, தமிழரசு தபால் தலைகளைத் தாங்கிய கடிதங்களை விநியோகிக்கச் சென்றனர். திரு அ. சிவசுந்தரம் பா.உ. அவர்கள் எழுதிய கடிதத்தை, நான் வடபகுதித் தபால் அதிபருக்கு விநியோகித்தேன். அதே போன்ற ஒரு கடிதத்தை, திரு. மு. சிவசிதம்பரம் பா.உ. பொலீஸ் அதிபரிடம் சேர்ப்பித்தார். திருமதி. ம.அமிர்தலிங்கம் எழுதிய ஒரு கடிதத்தை, திரு. வி. தர்மலிங்கம் பா.உ. அரசாங்க அதிபரிடம் கொடுத்தார். ஏறத்தாழ 10,000 மக்கள் வரிசையில் நின்று, தமிழரசு முத்திரைகளை வாங்கினர். தமிழரசுத் தபால் சேவை மா அதிபராக – கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான திரு. சு. நடராசா வழக்கறிஞர் நியமிக்கப்பட்டார். தமிழரசு தபால் பெட்டிகள் பல இடங்களிலும் வைக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான கடிதங்கள் இப் பெட்டிகளில் போடப்பட்டன. சட்ட மறுப்பாக ஆரம்பித்த தபால் சேவையின் வெற்றியும், மக்களின் உற்சாகமும் அரசாங்கத்தைத் திகைக்கச் செய்தன. இராணுவ ஆட்சி மூலம், இச்சாத்வீக இயக்கத்தை முறியடிக்க அரசாங்கம் ஆயத்தமானது.



## அவசரகால, ஊரடங்குச் சட்டம்

1961 ஏப்ரல் 17ஆந் திகதி நள்ளிரவு 12 மணிக்கு அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. அதிலிருந்து 48 மணித்தியாலங்களுக்கு ஊரடங்குச் சட்டமும் அமுலாக்கப்பட்டது. அன்றிரவே, தலைவர்கள் எல்லோரும் கைது செய்யப்பட்டு, பொலீஸ் நிலையங்களுக்கும், இராணுவ முகாம்களுக்கும் கொண்டு செல்லப்பட்டனர். கச்சேரிகளின் முன் அமைதியாக இருந்த தொண்டர்கள், இராணுவத்தினரால் மிருகத் தனமாகத் தாக்கப்பட்டனர். பலர் கடுமையான காயங்களுக்கு ஆளாகினர். பழனியப்பன் என்ற இளைஞரது தொடை துளைக்கப்பட்டு, அவர் பிரக்ஞை அற்ற நிலையில் விடப்பட்டார். பெண் தொண்டர்கள் – இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாக ஏற்றப்பட்டு, பலமைல்களுக்கு அப்பால் தனிமையான இடத்தில் விடப்பட்டனர். பொது மக்களுக்கும், தலைவர்களுக்கும் சொந்தமான மோட்டார் வாகனங்கள் அடித்து நொருக்கப்பட்டன. இராணுவ கவர்னர்களின் ஆட்சியின் கீழ் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் கொண்டுவரப்பட்டன.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து நகரங்களிலும் கைதுசெய்யப்பட்ட தலைவர்கள், 18ஆந் திகதி விமான மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு, பணாகொடையிலுள்ள இராணுவ முகாமில் சிறை வைக்கப்பட்டனர். ஒரு பெண் – திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் – உட்பட, தலைவர்களும், பிரதான தொண்டர்களுமாக சுமார் எழுபத்து நால்வர் இங்கே அடைக்கப்பட்டனர். தமிழரசுக்கட்சி தடை செய்யப்பட்டது. சுதந்திரன் பத்திரிகையும் தடைசெய்யப்பட்டு, அதன் அச்சத்திற்கு முத்திரை வைக்கப்பெற்றது. மிகக் கண்டிப்பான பத்திரிகைத் தணிக்கையும் அமுலாக்கப்பட்டது.

## சத்தியாக்கிரகம், தமிழன் கண்ணீர் ஏடுகள் பிறந்தன

நாட்டின் நாளேடுகள் – தணிக்கைச் சட்டங்களினால் தமிழ் மக்களின் நிலைபற்றிய செய்திகளை வெளியிட முடியாத நிலை ஏற்பட்டது. அச் சூழ்நிலையிலும், ஆங்கிலத்தில் சத்தியாக்கிரகம் என்ற ஓர் (மாதமிருமுறை) ஏடு – தட்டச்சேற்றி வெளியிடப்பட்டது. அரசாங்க உளவுப் படையினரால், அப்பத்திரிகை வெளியிட்டோரையோ – தட்டச்சிடப்பட்ட இடத்தையோ கண்டுபிடிக்க முடியாது போயிற்று. அதற்குப் பொறுப்பாயிருந்தோரின் பெயரை வெளியிடும் நாள் இன்றும் வரவில்லை.

எனினும் அவர்களின் ஆற்றலும் அறிவும், மக்களுக்குச் சோர்வை அகற்றி உற்சாகம் அளிக்கும் மருந்துகளாகப் பயன்பட்டன. அதேபோல், தமிழில் தமிழன் கண்ணீர் என்ற ஏடும் – தொடராக இல்லாவிட்டாலும், காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்டது. கூட்டங்கள் வைப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்ததாயினும், ஆலயங்களில் மக்கள் கூடிக் கூட்டுப் பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர். அவற்றின் இறுதியில், கைது செய்யப்படாதிருந்த தலைவர்கள் உரையாற்றி மக்களை உற்சாகப்படுத்தினர். சத்தியாக்கிரகத்தின்போதும், கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டிருந்த இக்காலத்திலும் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் ஆற்றிய அளப்பரிய சேவை போற்றற்குரியது.

## மலையக மக்கள் தொடுத்த போர்

சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பதற்கு முன்பு தொடக்கமே, மலைநாட்டுத் தமிழ் மக்களின் தலைவர்கள், கட்சித்தலைவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். போராட்டம் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. சௌ. தொண்டமான் சத்தியாகிரகம் நடந்த இடங்களுக்குச் சென்று, மக்களுக்கும் தலைவர்களுக்கும் உற்சாகம் ஊட்டினார். வவுனியா, மன்னார்ப் பகுதிகளில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகளும் உறுப்பினர்களும் இயக்கத்தில் நேடியாக ஈடுபட்டனர். தலைவர்கள் ஏப்ரல் 10 ஆந் திகதி இரவு கைதுசெய்யப்பட்ட நேரத்தில், வவுனியா இ.தொ.கா. பிரதிநிதி திரு. நடேச பிள்ளையும் கைது செய்யப்பட்டார். தலைவர்கள் சிறைப்படுத்தப்பட்டு, சத்தியாக்கிரகம் இராணுவத்தினால் முறியடிக்கப்பட்டபோது, மலைநாட்டுத் தொழிலாளர் போராட்டத்தில் குதிக்கத் தயாராகினர். ஏப்ரல் 24ஆந் திகதி தோட்டத் தொழிலை அத்தியாவசிய சேவையாக்கும் சட்ட விதிகளை அரசாங்கம் பிரகடனம் செய்தது. ஆயினும் 25ஆந் திகதி மலைநாட்டுத் தோட்டங்களில் ஐந்து இலட்சம் தமிழ்த் தொழிலாளர்கள் பரிபூரண வேலைநிறுத்தத்தை மேற்கொண்டனர். தமிழரசுக் கட்சி அரசுக்குச் சமர்ப்பித்த அதே கோரிக்கைகள் அடங்கிய நாலு அம்சக் கோரிக்கையை, அன்று இ.தொ. காங்கிரஸ், அரசுக்குச் சமர்பித்தது. தோட்டப் பகுதிகளுக்கும் இராணுவப் பிரிவுகள் அனுப்பப்பட்டன. தமிழ் உரிமையை வென்றெடுப்பதில் தமிழ் இனத்தின் ஒற்றுமை உலகம் முழுவதற்கும் தெளிவாகக் காட்டப்பட்டது.



## சிறை மீண்ட செம்மல்கள்

பகுதி பகுதியாகத் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டு, இறுதியில் 1961 அக்டோபர் மாதத்தில் – ஆறு மாதத் தடுப்புக் காவலின்பின், பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் முக்கிய தலைவர்களும் விடுதலையடைந்தனர். ஆயினும், கட்சியின் தடை நீங்கப் பின்னும் சில மாதங்கள் சென்றன. இதற்கிடையில், மூதவை உறுப்பினர் ஒருவரை மீண்டும் தெரிவு செய்யும் வாய்ப்பும் கட்சிக்குக் கிட்டியது. மூதவைக்கு ஓர் உறுப்பினரை அதுகாறும் தெரிவு செய்யச் சந்தர்ப்பம் அற்றிருந்த கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் பிரதிநியாக – திரு. மு. மாணிக்கம் அவர்கள் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டார். இத்தெரிவு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கட்சி உறுப்பினர் சிலருக்குத் திருப்தி அளிக்காத காரணத்தினால், இரண்டொருவர் கட்சியிலிருந்து வெறியேறினர். ஆயினும், பெரும்பாலான கிழக்கு மாகாண உறுப்பினர்கள் திரு. மாணிக்கம் அவர்களின் தெரிவை வரவேற்றனர்.

## மீண்டும் சிங்கள சிறீ பஸ்வண்டி

தலைவர்கள் விடுதலை செய்யப்பட்ட சில வாரங்களுக்கிடையில், அரசாங்கம் தமிழ் மக்களுக்கு ஆத்திரமூட்டும் இன்னொரு செயலையும் செய்தது. 1958 ஆம் ஆண்டுச் சிறீ எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து சிங்கள சிறீ பொறித்த பஸ் வண்டிகள் தமிழ்ப் பிரதேசத்தில் ஓடவிடப்படவில்லை. இச்சந்தர்ப்பத்தில் தலைவர்களை விடுவித்தவுடன், தமிழ் மக்களுக்கு ஒரு சவாலாக – மீண்டும் சிங்கள சிறீ பொறித்த பஸ் வண்டிகள் சில யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டன. அடுத்த நாளிரவே, வேகம் கொண்ட இளைஞர் சிலர் பஸ் நிலையத்தில் நுழைந்து, காவலாளியையும் சுட்டுக் காயப்படுத்தி, பஸ் வண்டியையும் தீக்கிரையாக்கினர். தலைவர்களின் சாத்வீக உபதேசத்தையும் இளைஞரின் தீவிரம் மீறிவிட்டதைக் கண்ட ஆட்சியாளர் – அடுத்தநாளே எஞ்சிய சிங்கள சிறீ பொறித்த பஸ் வண்டிகளைத் திரும்பப் பெற்றுவிட்டனர்.

## அரசுக்கு எதிராக – அரச படைகளே சதி

எமது போராட்டத்தை நசுக்குவதற்கு அவசரகாலச் சட்டத்தையும் இராணுவத்தின் துணையையும் அரசாங்கம் நாடியது. தமது தயவின்றி ஆட்சி நடைபெறாதென்ற எண்ணம், பொலீஸ் தலைமைப் பீடத்திலும் ஆயுதப்

படைகளிலும் உள்ள பலருக்கு ஏற்பட்டதுபோலும். ஆட்சியைக் கைப்பற்றச் சதி செய்தார்கள் என்று கூறி, மட்டக்களப்பு அரசாங்க அதிபராக இருந்த திரு. வியனகே உட்படப் பலர் கைது செய்யப்பட்டனர். இதனால், அரசியல் அடக்கு முறைகள் மேலும் பல மாதங்களுக்குத் தளர்த்தப்படாதிருந்தன. கட்சியை மீண்டும் புனரமைப்புச் செய்து, இயக்க வேலைகளை ஆரம்பிப்பது தாமதப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமாயிருந்தது. அரசியல் நிலை ஓரளவு சீரடைந்த பின் கட்சிக் கிளைகள் புதுப்பிக்கப்பட்டு, மாநில மாநாட்டை மீண்டும் கூட்டி அடுத்த நடவடிக்கை பற்றி ஆராய முடிவு செய்யப்பட்டது.

### எட்டாவது மாநில மாநாடு

கட்சியின் எட்டாவது மாநில மாநாடு – மன்னாரில் 31–8–62, 1–9–62, 2–9–62 ஆகிய திகதிகளில் நடைபெற்றது. திரு. சி.மு. இராசமாணிக்கம் அவர்கள் மீண்டும் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அரசாங்க எழுது வினைஞர் சங்கத் தலைவராயிருந்த திரு. க. சிவானந்தசுந்தரம் அவர்கள், இம் மாநாட்டுத் திகதியிலிருந்து கட்சியின் நிர்வாகச் செயலாளராகப் பொறுப்பேற்றார். மன்னார் மாநாடு போராட்டத்தின் விளைவுகளையெல்லாம் ஆராய்ந்தபின், 1963ஆம் ஆண்டு சித்திரை மாதம் 17ஆந் திகதிக்குப் பிந்தாமல், மீண்டும் நேரடி நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு ஏற்ற ஒரு கருவியாக, இன்றிலிருந்து மூன்று மாதங்களுக்கிடையில் கட்சியை விரிவாக அமைத்துத் தயாராக்க வேண்டும் என்று தீர்மானித்தது. அம்மாநாட்டில் எடுக்கப்பட்ட இன்னொரு முக்கியமான முடிவு, வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களுக்கும் – மலை நாட்டுத் தமிழ் மக்களுக்குமிடையில் ஸ்தாபன ரீதியான ஒற்றுமையையும் – சமூகக் கட்டுக்கோப்பையும் – அரசியல் பொருளாதார ஒத்துழைப்பையும் ஏற்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது என்பதாகும். போராட்டத்தைத் தொடர்ந்து இராணுவ அட்டூழியங்களினால் சோர்வுற்றிருந்த மக்கள், தன்னம்பிக்கையோடு மீண்டும் இயக்கத்தில் ஈடுபடவும், மலைநாட்டிலும் கட்சியின் மூவர்ணக்கொடி பறக்கவும் மன்னார் மாநாடு வழி வகுத்தது.

### இலங்கைத் தொழிலாளர் கழகம் உதயம்

மன்னார் மாநாட்டுத் தீர்மானத்திற்கிணங்க, மலைநாட்டுத் தமிழ் மக்களை – வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழ் மக்களோடு ஸ்தாபன ரீதியாக ஒன்றிணைப்பதற்கு ஒரே வழி – கட்சியின் தலைமையில் மலைநாட்டில் ஒரு



தொழிற் சங்கத்தை நிறுவுவதே என்ற முடிவுக்குக் கட்சி வந்தது. அதன்படி, ஹட்டன் நகரத்தில் 22–12–62 சனிக்கிழமை காலை 10 மணிக்கு, இலங்கைத் தொழிலாளர் கழகம் என்ற ஒரு புதிய தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஹட்டன், தலவாக்கொல்லை முதலிய மலைநாட்டு நகரங்களில் கட்சிக் கிளைகளும் அமைக்கப்பட்டன. மலைநாடெங்கும் கட்சியின் கொள்கைகள் எடுத்து விளக்கப்பட்டன. உணர்ச்சியுள்ள இளைஞர் பலர், தொழிற் சங்கத்திலும் கட்சியிலும் சேர்ந்தனர். பலம் வாய்ந்த தொழிற் சங்கங்களோடு போட்டிபோடுவதில், புதிய தொழிற்சங்கம் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தாலும், வெறுந் தொழிற்சங்கமாக இல்லாமல், இனப்பற்றையும் அரசியல் உரிமை வேட்கையையும் தொழிற்சங்கச் சேவையோடு சேர்த்து ஊட்டும் இயக்கமாக இன்றும் இது இயங்கிவருகிறது.

### இந்தியாவின் உண்மை நண்பர்கள்

1962ஆம் ஆண்டின் இறுதியில், சீனா, இந்தியா மீது படை எடுத்தது. இலங்கை அரசு இந்த ஆக்கிரமிப்பைக் கண்டிக்கத் தயங்கியது. அந்த நேரத்தில், இந்தியாவுக்குச் சார்பாக முதற் கிளம்பிய குரல் – இலங்கைத் தமிழரசுக் கட்சியினதாகும். 18–11–62இல் கட்சியின் மத்திய செயற்குழு கீழ்க்கண்டவாறு தீர்மானித்தது:

சர்வதேசக் கண்ணியத்தையும் கௌரவமான நடத்தையையும் மீறியும், உலகத்திற்குத்தானும் பிரகடனப்படுத்திய பஞ்சசீலக் கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டும், கம்யூனிஸ்ட் சீனா இந்தியா மீது நடத்தும் ஆக்கிரமிப்பை, இலங்கைத் தமிழரசுக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும், கம்யூனிஸ்ட் சீன ஏகாதிபத்தியத்தை எதிர்த்து – ஆசியாக் கண்டத்தில் சனநாயகம் நிலைபெறவும், தனது நாட்டையும் தேசிய கௌரவத்தையும் காப்பாற்றுவதற்கும் நடாத்தப்படும் இப்போரில், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் சார்பில் இந்திய அரசாங்கத்திற்கும் இந்திய மக்களுக்கும் தனது ஆதரவை அளிப்பதுடன், இந்திய மக்களுடன் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு இருக்கும் ஐக்கியத்தையும் காட்ட இக்கட்சி விரும்புகிறது .

ஏகாதிபத்திய சீனாவின் ஆக்கிரமிப்பைக் கண்டித்தும், தனது சுதந்திரத்திற்காகவும் சனநாயகத்திற்காகவும் போராடும் இந்தியாவிற்கு ஆதரவு நல்கவேண்டுமென்றும் இலங்கை அரசாங்கத்தை இக்கட்சி கேட்டுக்கொள்கிறது .

தனது பாதுகாப்பிற்குப் போதிய ஆட்பலம் இந்தியாவிடம் இருப்பினும், மாண்புமிக்க கொள்கைகளுக்காவே இந்தியா போரிடுவதால், மனித சுதந்திரத்திற்காக நடத்தப்படும் இப்புனிதப் போரில், ஒரு சிறிதளவேனும் பங்கெடுக்க விரும்புவதனால், இப்போரிற் பங்கெடுப்பதற்காக இலங்கை வாழ் தமிழ் பேசும் இளைஞர்களைத் தொண்டர்களாகச் சேரும்படி இக்கட்சி அழைக்கிறது.

இந்தியாவின் சரித்திரத்தில், நெருக்கடி மிகுந்த கட்டத்தில், இலங்கை அரசு இந்தியாவிற்கு ஆதரவுதர முன்வராத நேரத்தில் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் சார்பில் தனது தார்மீக ஆதரவை இந்தியாவிற்கு அளிக்க முன்வந்தது இலங்கைத் தமிழரசுக் கட்சி. சமீபத்தில், தமிழ்நாடு தி.மு.கழக ஆட்சி நீக்கத்தையடுத்து, அங்குள்ள தி.மு.க.வையும் இங்குள்ள தமிழர் கூட்டணியையும் தொடர்புபடுத்தி, இங்குள்ள சில அமைச்சர்கள் மூலம் வெளிவந்த விஷமத்தனமான செய்திகளையொட்டி, கட்சியின் நிலையைத் தெளிவு படுத்துவதற்காககவே இத்தீர்மானத்தை முழுவதாகத் தந்திருக்கிறேன். இலங்கையில் இந்தியாவின் நண்பர்கள் யாரென்பதை – இந்திய அரசும் மற்றையோரும் இதிலிருந்து தெரிந்து கொள்வார்கள். மறைந்த பாரதப் பிரதமர் உயர்திரு பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்நிலையை எப்போதும் நன்கு தெரிந்திருந்தார்; அதை எமக்குத் தெரிவித்துமிருந்தார்.

### மந்திரிமார் வருகைக்கு எதிர்ப்பு

கட்சியை மீண்டும் போராட்டத்திற்குத் தயார்படுத்தும் வகையில், கட்சியின் செயற்குழு **24–2–63**இல் பின்கண்டவாறு தீர்மானித்தது: மந்திரிகளும் பாராளுமன்றக் காரியதரிசிகளும் கிழக்கு, வடக்கு மாகாணங்களுக்குக் கோலாகல விஜயங்கள் செய்யும்போது, கட்சி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் செய்யவேண்டும்; சாதாரண உத்தியோக விஜயங்களின்போது, அவற்றில் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் பங்குபற்றுவதைப் பற்றி பாராளுமன்றக்குழு அவ்வப்போது முடிவு செய்யவேண்டும். இத்தீர்மானத்திற்கமைய, யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்கும் வருகைதந்த அமைச்சர் திரு. ரி.பி. இலங்கரத்தினாவிற்குக் கறுப்புக் கொடி காட்டி, ஆர்ப்பாட்டஞ் செய்வதென்று கட்சி தீர்மானித்தது. நூற்றுக்கணக்கான தொண்டர்கள் பருத்தித்துறைக் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத் திறப்பு விழாவிலும், யாழ்ப்பாணம் மக்கள் வங்கித் திறப்பு



விழாவிலும் அணிவகுத்து நின்று அமைச்சருக்குக் கறுப்புக்கொடி காட்டினர். யாழ்ப்பாணத்தில் தலைவர்களும் தொண்டர்களும் பொலீசாரால் தாக்கப்பட்டனர். அப்படித் தாக்குதலுக்கு ஆளானவர்களில், ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.வே.அ. கந்தையா அவர்களும் ஒருவராவார்.

### கந்தையாவை இழந்தோம்

அன்று ஏற்பட்ட தாக்குதல், என்னைப் போன்ற இளம் வயதினரைப் பாதிக்கவில்லை; ஆனால், திரு. வி.ஏ. கந்தையாவைப் பாதித்துவிட்டது. அவருடைய உடலிலும் உள்ளத்திலும் ஏற்பட்ட தாக்கத்திலிருந்து, அவர் மீளவேயில்லை. திடீரென்று இருதய நோயினால் பாதிக்கப்பட்ட திரு. கந்தையா **4–6–63**இல் எம்மை விட்டுப் பிரிந்தார்! பெருவருவாய் தந்த சட்டத் தொழிலிலிருந்து, தமிழ் இனத்திற்குச் சேவைசெய்ய முன்வந்து, **1956**ஆம் ஆண்டு முதல் கட்சியின் மிகுந்த விசுவாசமும் கண்ணியமும் நிறைந்த தலைவராக விளங்கிய திரு. கந்தையா அவர்களின் மறைவினால், ஓர் அறிவாளியை – உண்மைத் தொண்டரைத் தமிழ் இனம் இழந்தது. அவருடைய மறைவைத் தொடர்ந்து ஏற்பட்ட இடைத் தேர்தலில், திரு வ. நவரத்தினம் கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட்டு, அமோக வெற்றி பெற்றார்.

### எல்லாம் தமிழ் இயக்கம்

சிங்களத் திணிப்பை எதிர்ப்பதற்கும், தமிழ் மக்களை அரசுடனான தம் கருமங்களைத் தமிழில் ஆற்றத் தூண்டுவதற்குமான – எல்லாம் தமிழ் இயக்கத்தை மேற்கொள்ளக் கட்சி தீர்மானித்தது. **8.4.63** முதல் இவ்வியக்கத்தை மிகத் தீவிரமாக நடத்தக் கட்சி முடிவு செய்தது. அதன்படி, தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள தபால்நிலையங்கள், வேறு அரசாங்க அலுவலகங்கள் ஆகியவற்றின்முன் கட்சித் தொண்டர்கள் நின்று – விண்ணப்பங்கள், தந்திகள், முகவரிகள் ஆகியவற்றைத் தமிழில் எழுதுமாறு மக்களைத் தூண்டியும், தேவையானவர்களுக்குத் தாமே தமிழில் எழுதிக் கொடுத்தும் இயக்கத்தில் ஈடுபட்டனர். பலவாரங்களாக – தொடர்ந்து தலைவர்களும் ஆண், பெண் தொண்டர்களுமாக – இவ்வியக்கத்தை நடத்தினர். அதே நேரத்தில், விரிவான சட்டமறுப்பியக்கத்தில் ஈடுபடும் பொருட்டு, கிராமந்தோறும் கட்சிக் கிளைகள் நிறுவப்பட்டுத் தொண்டர்களும் திரட்டப்பட்டனர். **1964**ஆம் ஆண்டு ஜனவரி முதலாந் திகதி முதல், தனிச் சிங்களத்தை மீண்டும் தமிழ்ப் பிரதேசங்களில் அமுல் நடத்தப் போவதாக

அரசாங்கம் அறிவித்தது. 1961ஆம் ஆண்டு சத்தியாக்கிரகத்தினால் கைவிடப்பட்ட சிங்களத் திணிப்புத் திட்டம், மீண்டும் தலைதூக்கும் ஆபத்து ஏற்பட்டது. 30-6-63இல் கொழும்பில் கூடிய கட்சியின் மத்திய செயற்குழு, தமிழ்பேசும் மக்களின் மீது சிங்களத்தைத் திணிக்கும் முயற்சியை, அம்மக்களின் முழுச் சக்தியையும் திரட்டி எதிர்ப்பது என்று தீர்மானித்தது.

## தலைவர் இராஜவரோதயம் மறைவும், திருமலையின் இடைவெளியும்

திரு. கந்தையா மறைந்து இரண்டு மாதங்களில், கட்சி மீண்டும் ஒரு பேரிழப்பைத் தாங்கவேண்டியநிலை ஏற்பட்டது. 1952ஆம் ஆண்டுமுதல் திருகோணமலைப் பிரதிநிதியாக விளங்கியவரும், கட்சியின் ஸ்தாபக உறுப்பினரும், நெருக்கடி மிகுந்த 1958ஆம் ஆண்டு – கட்சித்தலைவராக இருந்து கட்சியை வழிநடத்தியவருமான திரு. ந.இ. இராஜவரோதயம் அவர்கள் திடீரென நோய்வாய்ப்பட்டு, யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் 27-8-63இல் எம்மை விட்டுப் பிரிந்தார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றின் உறைவிடமாக விளங்கி, தன் உழைப்பு முழுவதையும் தமிழ் மக்களுக்காகவும் – சிறப்பாகத் திருகோணமலைத் தமிழ் மக்களுக்காகவும் அர்ப்பணித்த இப்பெரியாரின் இடம் – இன்றும் நிரப்ப முடியாததாகவே இருக்கிறது. பாராளுமன்றத்தில் அவருடைய மறைவினால் ஏற்பட்ட இடத்திற்கு, முதுபெருந் தலைவரான திரு. மாணிக்கராசா கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட்டு, அமோக வெற்றி பெற்றார்.

## சிங்கள ஆசிரியர், ஊழியர் படையெடுப்பும்; செந்தமிழர் சீற்றமும்

1964 ஜனவரி முதலாந் திகதி முதல் சிங்கள நிர்வாகத்தைத் தீவிரப்படுத்தத் தீர்மானித்த அரசாங்கம், அதை நிறைவேற்றுவதற்குச் சிங்கள அரசாங்க ஊழியர்களையும், சிங்களத்தில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களையும் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தது. சிங்களத் திணிப்பிற்குத் தமிழ் மக்களின் எதிர்ப்பின் ஓர் அம்சமாக – சிங்களத் தேர்ச்சி பெற மறுத்த தமிழ் ஊழியர்கள் – பதவி இழக்கும் ஆபத்து ஏற்பட்டது. சிங்களத் தேர்ச்சி பெற்ற ஒரு சில தமிழ் ஊழியர்கள், அத்தகுதி காரணமாகத் தமிழ் பிரதேசங்களுக்கு இடமாற்றம் பெறும் உரிமையைப் பெற்றனர். தமிழ்ப் பாடசாலைகளிலும் சிங்களத்தைத் திணிக்கும் பொருட்டு, 2000 சிங்கள ஆசிரியர்களை வடக்குக் கிழக்கு மாகாணத் தமிழ்ப் பாடசாலைகளுக்கு நியமிக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. சிங்கள ஊழியரும் – சிங்கள



ஆசிரியரும் ஆயிரக்கணக்கில் தமிழ்ப் பிரதேசங்களுக்குப் படையெடுக்கும் நிலை எழுந்தது. இவ்வபாயத்தை எதிர்ப்பதற்குப் பூரண சட்ட மறுப்பை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக, வடக்குக் கிழக்கு மாகாணங்களிற் சிங்களச் சட்டத்தை அமுல் நடத்தக் கருவியாயிருக்கும் அரசாங்க ஊழியர்களையும், உடந்தையாயிருக்கும் மற்றையோரையும் பகிஷ்கரிப்பதெனக் கட்சி தீர்மானித்தது. சிங்கள ஆசிரியர்களையும் – அதேபோல், பெற்றோரும் பிள்ளைகளும் பகிஷ்கரிக்கவேண்டுமென்றும் கட்சி கோரியது. இவ்வியக்கத்தின் பலனாக, பெரும்பாலான சிங்கள ஆசிரியர்களும் ஊழியர்களும் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வர மறுத்தனர். சிங்களத் தேர்ச்சியின்மையால் வேலை நீக்கம் செய்யப்படும் ஆபத்திலிருந்த ஊழியர்களின் நிலை பற்றியும், அரசுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது.

## பாதயாத்திரையும், கண்டன ஊர்வலமும்

தமிழ் மக்களிடையே – சாதி பேதத்தை ஒழித்து, ஒற்றுமையை வளர்க்கவும், கட்சியின் இலட்சியங்களை மக்கள் மத்தியில் விரிவாக விளக்கவும், தொண்டர்கள் காங்கேசன்துறைத் தொகுதியிலிருந்து தந்தை செல்வநாயகம் தலைமையிற் புறப்பட்டு – கிராமம் கிராமமாகப் பாதயாத்திரை செல்லும் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. பல வாரங்களாக நடைபெற்ற இவ்வியக்கத்தில், கிராமந்தோறும் மக்கள் திரண்டு, தலைவர்களையும் பாதயாத்திரைத் தொண்டர்களையும் வரவேற்றது மாத்திரமன்றி, உணவும் – தங்க வசதிகளும் செய்து கொடுத்து உபசரித்தனர். சாதி பேதமற்று, சமபந்தி போசனம் பரவலாக நடைபெற்றது. திரண்ட மக்கள் மத்தியில் தீண்டாமை ஒழிப்பின் அவசியம் பற்றியும் – தமிழ் மக்களின் அரசியல் நிலைபற்றியும் கருத்தரங்குகள் நடாத்தப்பெற்றன.

இப்படிப் பல விதமான இயக்கங்களினால் – மக்களைப் போராட்டத்திற்குத் தயார் படுத்திக்கொண்டிருந்த அதே நேரத்தில், அரசாங்கத்திற்கு ஓர் எச்சரிக்கையாக – யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய கச்சேரிகளுக்கு 1-1-61இல் மாபெரும் கண்டன ஊர்வலங்கள் – கட்சித் தலைவர்களின் தலைமையிற் சென்றன. கச்சேரி முன்றில்களில், தனிச் சிங்களச் சட்டப் பிரதிகள் எரிக்கப்பட்டன. 1964 பெப்ரவரி 17ஆந் திகதிக்குப் பிந்தாமல், நேரடி நடிவடிக்கை ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் முடிவாகியது.

### மீண்டும் ஒரு சமரசப்பேச்சு

இச்சூழ்நிலையில், அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாகப் பேச்சுவார்த்தைக்குக் கட்சியை அழைத்தது. தொழிற் சங்கங்கள் 21 கோரிக்கைகளைச் சமர்ப்பித்து, பெரிய போராட்டத்திற்கு ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தன. இடதுசாரி ஐக்கிய முன்னணி இதற்குத் தலைமை தாங்கியது. அரசாங்கத்திற்குள்ளும் பல கருத்து வேற்றுமைகள் தலைதூக்கியிருந்தன. பின் நடந்த சம்பவங்களைக் கொண்டு பார்க்கும்போது, தேவை ஏற்பட்டால் பாராளுமன்றத்தில் கட்சிப் பிரதிநிதிகளின் ஆதரவைப் பெறலாம் என்ற எண்ணத்திலேயே இப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டனவென்று இப்போது தெரிகின்றது. ஆயினும் அன்றிருந்த நிலையில், காந்திய நெறிக்கேற்ப – சமரசப் பேச்சுவார்த்தைக்கு நாம் இணங்கினோம். ஒருபுறம், எம்மோடு நடந்த பேச்சு வார்த்தைகள் பூர்த்தியாவதற்கிடையில், மறுபுறம் சமசமாஜக் கட்சியோடு பேச்சு வார்த்தை நடைபெற்று, அவர்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். சிறுபான்மையோரின் உரிமைகளை வற்புறுத்திவந்த சம சமாஜக் கட்சி அரசாங்கத்தில் சேர்ந்தமையால், எமது பிரச்சினை தீர வழிபிறக்குமென்று எதிர்பார்த்தோம். ஆனால், தொழிலாளரின் 21 அம்சக் கோரிக்கைகளும் காற்றிற் பறக்கவிடப்பட்டது போலவே, எமது கோரிக்கைகளும் கைவிடப்பட்டன. பேச்சுவார்த்தை மூலம் பலன் கிடைக்குமென்று நம்பினோர், இலவுகாத்த கிளி களாயினர். தமக்குத் தேவை நேரும்போது எம்மை அழைத்துப் பேசுவதும்; தேவை தீர்ந்தால் எமது பிரச்சினைகளை மறந்து, சிங்கள மக்களின் உணர்ச்சிக்கேற்பத் தாளம் போடுவதுமே – சிங்கள அரசியல் வாதிகளின் தன்மை என்பது மீண்டும் தெளிவாகியது.

### ஒன்பதாவது மாநில மாநாடு

1964ஆம் ஆண்டு ஆவணி மாதம் 21, 22, 23ஆம் திகதிகளில் – கட்சியின் ஒன்பதாவது மாநில மாநாடு திருகோணமலையில் நடைபெற்றது. சிக்கலான அரசியற் சூழ்நிலையில் சரியான வழியை இனத்திற்குக் காட்டக்கூடிய, ஒரே தலைவரான தந்தை செல்வநாயகம் மீண்டும் கட்சியின் தலைவராக – ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். முதல் நாள் விடியாலோசனைக்குழுக் கூட்டம் நிலாவெளியிலும், மாநாட்டின் ஏனைய நிகழ்ச்சிகள் திருகோணமலையிலும் நடைபெற்றன. மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளைச் செயற்படுத்துவதற்குமுன்பே, நாட்டில் இரண்டு அதிமுக்கிய அரசியற் சம்பவங்கள் நிகழ்ந்தன.



### மனித உரிமைகளை மறுத்த சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம்

மலைநாட்டுத் தமிழரின் எதிர்காலம் பற்றி, இந்திய – இலங்கைப் பிரதமர்களிடையே பல தடவை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றனவாயினும், பாதிக்கப்பட்ட மக்களின் விருப்பத்தைக் கவனியாததுடன், அவர்களைப் பண்டங்கள்போலப் பரிவர்த்தனை செய்யவும் எந்த இந்தியப் பிரதமரும் இணங்கவில்லை. இப்பிரச்சினையைச் சுதந்திரத்திற்கு முன்பு தொடக்கம் நன்கு தெரிந்த பிரதமர் நேரு அவர்கள், சில தெளிவான கொள்கைகளின் அடிப்படையில் இவ்விடயத்தை அணுகினார். அவரின்பின் பிரதமரான லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் – சம்பந்தப்பட்ட மக்களையோ, தமிழ் நாட்டு அரசாங்கத்தையோ கலந்து யோசிக்காது, திருமதி. பண்டாரநாயக்காவுடன் ஓர் ஒப்பந்தத்திற்கு வந்தார். மனித உரிமைகளைப் புறக்கணித்து, இலட்சக்கணக்கான தமிழ் மக்களைக் கட்டாயத்தின்பேரில் நாடுகடத்த வழிவகுத்த இவ்வொப்பந்தத்தை எதிர்த்து முதற்குரல் எழுப்பியது இலங்கை தமிழரசுக் கட்சியே.

### கட்சியால் கவிழ்ந்த அரசாங்கம்

எந்தப் பிரதமராலும் தீர்க்க முடியாத பிரச்சினையைத் தீர்த்துவிட்ட பெருமிதத்தோடு திரும்பி வந்த பிரதமர், அரசங்கத்திற்கு ஏற்பட்ட மிகப் பெரும் சோதனையைச் சந்திக்கவேண்டியிருந்தது. அரசாங்கம் தயாரித்த பத்திரிகை மசோதாவுக்கு, ஆளுங்கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு எழுந்தது. சபை முதல்வர் திரு. சி.பி.டி.சில்வா தலைமையில் பல உறுப்பினர்கள் எதிர்க்கட்சிக்கு மாறினர். 1964 டிசம்பர் 23ஆந் திகதி சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்புக்கு முன், அமைச்சர்கள் பலர் அரசுக்குக் கைகொடுத்து உதவும்படி, எமது கட்சிப் பாராளுமன்றக் குழுவுக்கு வேண்டுகோள் விடுத்தனர். சிறிமாவோ அரசாங்கம் தமிழ் இனத்தின் உரிமைகளை முற்றாகப் புறக்கணித்து, இராணுவ ஆட்சியைத் தமிழ்ப் பிரதேசத்தில் கட்டவிழ்த்து விட்டதைக் கட்சி மறக்கவில்லை. 1960இல் எமக்குக் கொடுத்த வாக்கைக் காற்றிற் பறக்கவிட்ட ஆட்சியின் வேண்டுகோளைக் கட்சி நிராகரித்து, அரசுக்கு எதிராக வாக்களித்தது; அரசாங்கம் பாராளுமன்றத்தில் தோல்வியைத் தழுவியது. இதைத் தொடர்ந்து பாராளுமன்றம் கலைக்கப்பெற்று, 1965 மார்ச் மாதத்தில் பொதுத்தேர்தல் நடைபெற்றது.

### 1965 மார்ச் பொதுத் தேர்தல்

இந்தப் பொதுத் தேர்தல் முடிவு, தமிழ் மக்களின் பூரண நம்பிக்கையைப் பெற்ற ஒரே ஸ்தாபனம் – இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பதை மீண்டும் நிலைநாட்டியது. இருபது தொகுதிகளிற் போட்டியிட்ட கட்சி 2,17,986 வாக்குகளைப் பெற்று 14 ஸ்தானங்களைக் கைப்பற்றி, பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக விளங்கியது. ஐ.தே. கட்சி 66 ஸ்தானங்களிலும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி 41 ஸ்தானங்களிலும் வெற்றி பெற்றன. 1960 மார்ச் தேர்தல் முடிவு போலவே, எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அரசாங்கத்தை யார் அமைப்பதென்பது, தமிழரசுக் கட்சியின் ஆதரவைப் பெறுவதிலேயே தங்கியிருந்தது. எமது ஆதரவு கிடைக்கக் கூடும் என்று நினைத்து, திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் காபந்து அரசாங்கம் தேர்தல் முடிவுகள் தெரிந்தும், இராஜினாமாச் செய்யாது தாமதித்தது. திகிலடைந்த ஐ.தே. கட்சியினர், எமது ஆதரவை நாடினர். திரு. டட்லி சேனநாயக்காவுக்கும் தந்தை செல்வநாயகத்துக்குமிடையே 24–3–65இல் ஒப்பந்தம் கைச்சாத்தானது. திரு. டட்லி. சேனநாயக்காவின் தலைமையிலான அரசாங்கத்தைத் தமிழரசுக் கட்சி ஆதரிக்கும் என்று, திரு. செல்வநாயகம் கடிதம் கொடுத்தார். அக்கடிதம் மகாதேசாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, டட்லி சேனநாயக்கா பிரதமரானார்.

ஒப்பந்தத்தின் ஆங்கில மூலமும் மொழிபெயர்ப்பும் – அனுபந்தத்தில் தரப்படுகின்றன. அதிகாரத்தைப் பரவலாக்கி, மாவட்ட சபைகள் நிறுவுவதற்குப் பொறுப்பான அமைச்சைக் கட்சி உறுப்பினர் ஒருவர் ஏற்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பெற்றது. தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், உரிமை கிடைக்கும் வரை பதவி ஏற்பதில்லை என்ற உறுதிமொழிப்படி, அமைச்சர்பதவி ஏற்க மறுத்தனர். அரசுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்கு வகித்த திரு. மு. திருச்செல்வம் அவர்களே அப்பொறுப்பை ஏற்கவேண்டுமென்று கட்சி தீர்மானித்ததற்கிணங்க, திரு. மு. திருச்செல்வம் மூதவை உறுப்பினராக நியமிக்கப்பட்டு, உள்ளூராட்சி அமைச்சராகப் பதவி ஏற்றார். ஆரம்பம் முதல் இதுகாறும் எதிர்க்கட்சியாகப் பாராளுமன்றத்தில் இயங்கிவந்த கட்சி – ஆளுங்கட்சியின் ஓர் அங்கமாக இயங்கும் நிலை ஏற்பட்டது.



### நாடாளும் பொறுப்பில் நம் தமிழரசுக் கட்சி

ஐக்கிய தேசியக் கட்சியோடு நாம் உறவு பூண்டிருந்த நான்கு ஆண்டுகளும், கட்சியின் இலட்சியப் பாதையில் – இடர்மிகுந்த காலங்களாகவே இருந்தன. ஆரம்பத்தில் எதிர்க் கட்சிகள் இனத் துவேஷத்தைக் கிளப்பின. அதே நேரத்தில், அமைச்சரவையிற் பலர் பதவிக்குவர – எம் ஆதரவைப் பெற்ற போதிலும், சிங்கள வகுப்புவாதப் பாதையிலிருந்து விலகாதவர்களாகவே இருந்தனர். குறிப்பாகக், கல்வி அமைச்சின் போக்கும், அரச ஊழியருக்குப் பொறுப்பான நிதி அமைச்சின் போக்கும் எமது கடும் எதிர்ப்புக்கு இடமளித்தன. பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுடன் இவ்வமைச்சுகளின் இனவெறிப் போக்கைப் பற்றிப் பல மாநாடுகள் நடத்தியும் பலன் ஏற்படவில்லை. எனினும், எமது வற்புறுத்தலினால், பதவி நீக்கத்தை எதிர்நோக்கி நின்ற சிங்களம் கற்காத தமிழ் அரசாங்க ஊழியருக்கு – பெருமளவு ஆறுதல் அளிக்கும் திறைசேரிச் சுற்றறிக்கைகள் 700உம், 701உம் வெளியிடப்பட்டன; பழைய ஊழியர் எவ்வித சிங்களத் தேர்ச்சியுமின்றிச் சம்பள உயர்வு, பதவி உயர்வுகளைப் பெற வழிவகுக்கப்பட்டது. புதிய ஊழியர் – சிங்களத் தேர்ச்சி பெறுவதற்கு மேலும் மூன்று வருட அவகாசம் அளிக்கப்பட்டதோடு, பரீட்சையின் தரமும் எட்டாவது தரமாகக் குறைக்கப்பட்டது. ஆனால், திறைசேரியிலிருந்த வகுப்பு வெறியர்கள், ஒன்பதாவது தரச் சோதனையையே எட்டாவது தரம் என்று பெயர் மாற்றி, இச்சலுகையை முறியடித்தனர். பிரதமரோடு நாம் நடத்திய மகாநாட்டில், நிதி அமைச்சர் திரு. வன்னிநாயகாவே இவ்வுண்மையை ஒப்புக்கொண்டார். சில வகுப்பு ஊழியருக்குச் சிங்களத் தேர்ச்சியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டும், வெவ்வேறு வியாக்கியானங்களினால் அவர்கள் தொடர்ந்தும் இடர்ப்பட்டனர். சிங்கள ஊழியருக்கும் தமிழ்த் தேர்ச்சி கோருவது தம் கொள்கை யென்று பேச்சு வார்த்தையின்போது கூறிய ஐக்கிய தேசியக் கட்சியினர், அக்கொள்கையை அமுல் நடத்தத் தைரியமின்றிக் கைவிட்டனர்.

### தமிழரசுக் கட்சியால் உருவான – தமிழ்மொழி உபயோகச் சட்ட விதிகள்

1958ஆம் ஆண்டு பிரதமர் பண்டாரநாயக்கா நிறைவேற்றிய தமிழ் மொழி (விசேட உபயோக சட்டம்) எம்மால் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும், அதன்கீழ் முழுமையான சட்டவிதிகளை ஆக்கி நடைமுறைக்குக் கொண்டுவருவதன்

மூலம், தமிழ் மக்களின் மொழி உரிமையில் பகுதியாவது கிடைக்கும் என்று கருதினோம். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழையும் நிர்வாக மொழியாகவும், நாடு முழுவதிலும் தமிழ் பேசும் மக்கள் தமிழில் அரசாங்கத்தோடு கருமமாற்றவும் ஏற்ற ஒழுங்கு செய்வதாக அரசாங்கம் ஒப்புக்கொண்டிருந்தது. எமது வற்புறுத்தலுக்கிணங்க, 1966ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆந் திகதி தமிழ் மொழி உபயோகச் சட்ட விதிகள் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டன. எதிர்க்கட்சிகள் தமிழ் இனத்தின் மீது துவேஷத்தைக் கிளப்பியதோடு, அரசதுறைத் தொழிற் சங்கங்களின் வேலைநிறுத்தத்தையும் நடாத்தின. அன்றைய தினம் அவர்கள் நடாத்திய கண்டன ஊர்வலம் கட்டுக்கடங்காமல் போகவே, பொலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டி நேரிட்டது. இரத்தினசாரதேரோ என்ற பௌத்த பிக்கு உயிர்துறந்தார். இவ்வளவு எதிர்ப்புக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்ட சட்ட விதிகள், மூலச் சட்டத்தின் எல்லையை மீறியவை என்று எதிர்க்கட்சிகள் அன்று வாதிட்டன. இன்று ஆட்சியில் இருக்கும் போதும் அப்படியே கூறி, அச்சட்ட விதிகளை அமுல் நடத்த மறுத்து வருகின்றன.

ஆயினும், அவ்விதிகள் இன்றும் ரத்துச் செய்யப்படாது, நாட்டின் சட்டத் தொகுதியில் இடம் பெற்றிருக்கின்றன. இவ்விதிகளினால், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பதிவேடுகள் உட்பட, எல்லா நிர்வாக வேலைகளுக்கும் – தமிழும் உபயோகிக்கப்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் எப்பாகத்திலும் – அரசாங்க நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் முதலிய எல்லாவற்றோடும் – தமிழிற் கடிதத் தொடர்பு கொள்ள, தமிழிற் பதில்பெற, தமிழிற் கல்வி கற்க எவருக்கும் உரிமை உண்டென்று விதிக்கப்பட்டதோடு, அதன் பொருட்டு – அரசாங்க பிரசுரங்கள், வர்த்தமானிகள், பெயர்ப்பலகைகள், படிவங்கள் யாவும் தமிழிலும் அச்சிடப்படவேண்டுமென்றும் விதிக்கப்பட்டது. இச்சட்ட விதிகள் நிறைவேற்றப்பட்டுப் பத்து ஆண்டுகளாகியும், பெரும் பகுதி நடைமுறைப்படுத்தப் படாதிருக்கின்றது.

### பத்தாவது மாநில மாநாடு

அரசாங்கத்தின் ஓர் அங்கமாகக் கட்சி இயங்கிய இக்காலத்தில், கட்சியின் 10ஆவது மாநில மாநாடு – கிழக்கிலங்கையின் தென் பகுதித் தலைநகரான கல்முனையில் 1966 ஜூன் 23, 24, 25 ஆந் திகதிகளில் நடைபெற்றது. த்ன்னுடைய தியாகத்தினாலும், வீரத்தினாலும்,



நெஞ்சுறுதியினாலும் தமிழ் பேசும் மக்களின் இதயங்களிலெல்லாம் தனியிடத்தைப் பெற்ற டாக்டர் இ.மு.வி. நாகநாதன் அவர்கள் இம்மாநாட்டின் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். கட்சியின் வரலாற்றில் ஒரேயொரு தடவையாக – நாட்டின் பிரதமர் டட்லி சேனநாயக்காவும் இம் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். இலகுவில் வாக்குகொடுக்க மாட்டேன் ; கொடுத்தால் நிறைவேற்றத் தவறமாட்டேன் என்று, பல்லாயிரம் மக்கள்முன் உறுதிமொழி பகர்ந்தார். ஆயினும், இரண்டாண்டுகளுக்கிடையில் அவரது நிலைமை மாறியது!

### சிறிமா – சாஸ்திரி ஒப்பந்த அமுல் சட்டம்

கட்சியின் கண்டனத்துக்குள்ளான சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுலாக்குவதற்குச் சட்டமியற்ற முற்பட்டது டட்லி சேனநாயக்கா அரசாங்கம். தமிழரசுக் கட்சியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமானும் சேர்ந்து எடுத்த முயற்சியினால், ஆட்சேபத்துக்குரிய அம்சங்கள் நீக்கப்பட்ட சட்டமே நிறைவேற்றப்பட்டது. விருப்பத்திற்கு மாறாக யாரையும் இந்தியப் பிரஜையாகப் பதிவு செய்யும் வற்புறுத்தலும்; இந்தியா திரும்பியோரின் வீதத்திற்கே இலங்கைப் பிரஜைகளைப் பதிவு செய்யும் திட்டமும்; இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்தோரைத் தனி வாக்காளர் இடாப்பில் வைக்கும் அம்சமும் நீக்கப்பட்ட சட்டமே நிறைவேற்றப்பட்டது. (1970 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சிறிமாவோ அரசாங்கம் அச்சட்டத்தைத் திருத்தி, ஆட்சேபகரமான பகுதிகளை மீண்டும் புகுத்தியது). இதே விதமாக, ஆட்களைப் பதிவு செய்து அடையாள அட்டை வழங்குவதற்கான சட்டமும் – தமிழரசுக் கட்சியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் காட்டிய எதிர்ப்பினால் மாற்றப்பட்டது. பிரஜை, நாடற்றவர் என்ற பேதமின்றி, இந்நாட்டில் சட்ட பூர்வமாக வாழும் பதினெட்டு வயதிற்கு மேற்பட்டோர் எல்லோரையும் பதிந்து, அடையாள அட்டை வழங்குவதற்குச் சட்டமியற்றப்பட்டது. கட்சியின் கட்டுப்பாட்டை மீறி, ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வ. நவரத்தினம் அச்சட்டத்தை எதிர்த்தார்.

24–4–68இல் கூடிய கட்சியின் பொதுச்சபை – திரு. நவரத்தினம் அவர்களைக் கட்சியிலிருந்து ஏகமனதாக வெளியேற்றியது. கட்சியின் ஆரம்பகாலம் முதல் உறுப்பினராக இருந்து – பல்வேறு பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்த திரு. நவரத்தினத்தின் மீது கட்டுப்பாட்டைக் காப்பதற்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்பட்டது, துக்ககரமான ஒரு சம்பவமாகும்.

## கித்துல் ஊற்றுக் குடியேற்றமும், கட்சியின் சாதனையும்

இக்காலத்தில், திருகோணமலை மாவட்டத்தில் கித்துல் ஊற்று என்ற ஒரு சிறு குளம் கட்டப்பட்டு, அங்கே சிங்களக் குடியேற்றத்திற்கு ஆயத்தம் நடைபெற்றது. கட்சி வாலிப முன்னணியைச் சேர்ந்த இளைஞர்கள் அங்கு சென்று, அத்துமீறிக் குடியேறினார்கள். பல்லாயிரம் ரூபா செலவில் அவர்களை அங்கு வைத்துப் போஷித்துவந்தது கட்சி. அப்பகுதிச் சிங்களக் காரியாதிகாரி – அவர்களின் வீடுகளுக்குத் தீ வைத்து அவர்களைக் கைது செய்தார். இறுதியில், கட்சி – காணி அமைச்சரோடு செய்த ஏற்பாட்டின்படி, அக்குடியேற்றத்தில் அத்துமீறிக் குடியேறிய வாலிபர் உட்பட, பெரும்பாலோர் தமிழ் பேசும் மக்களாக இடம் பெறச் செய்தது – கட்சியின் சாதனையாகும்.

## மாவட்ட சபைகள் :

அரசாங்கத்தோடு செய்துகொண்ட எமது ஒப்பந்தத்தின் முக்கிய அம்சம் – நாடு முழுவதும் மாவட்டசபைகளை நிறுவி, அதிகாரத்தைப் பரவலாக்குவதன் மூலம் – தமிழ்ப் பிரதேசத்தில் ஓரளவு அதிகாரம் தமிழ் மக்களின் கைக்கு மாறவேண்டும் என்பதே. இதற்கான சட்டமூலம் திரு. மு. திருச்செல்வம் அவர்களால் தயாரிக்கப்பட்டு, பல மாதங்களாகப் பிரதமராலும், அமைச்சர்களாலும், கட்சித் தலைவர்களாலும் ஆராயப்பட்டது. இறுதியில் ஒரு வெள்ளை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கிடையில், அரசாங்க ஆதரவுப் பத்திரிகைகளும் அரசாங்கக் கட்சி உறுப்பினர் பலரும் இதற்கு விரோதமான பிரசாரத்தில் தீவிரமாக இறங்கினர். வழமைபோலப் பௌத்த பிக்குகளும் எதிர்ப்புத் தெரிவித்தனர். சிங்கள மக்களின் எதிர்ப்புக்கஞ்சிய பிரதமர் டட்லி சேனநாயக்கா, மாவட்டசபை மசோதாவைத் தாம் பாராளுமன்றத்தில் கொண்டுவர இயலாது என்று கூறினார். மூன்றாவது தடவையாக, ஒரு சிங்களப் பிரதமர் எமக்கு அளித்த வாக்கைக் காப்பாற்றத் தவறினார். இந்தச் சூழ்நிலையிலும் பொறுமையைக் கைக்கொண்ட தந்தை செல்வநாயகம், தமிழ் மக்களின் நீண்டநாளைய கோரிக்கையான திருகோணமலைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை உடன்நிறுவ அரசு நடவடிக்கை எடுத்தால், தொடர்ந்தும் அரசாங்கத்திற்கு ஆதரவு தருவதாகக் கூறினார். இதை ஏற்றுக்கொண்ட பிரதமர், சில மாதங்களுக்குப் பல சாக்குப் போக்குச் சொல்லி இழுத்த பின், அதிலும் தம் வாக்கை நிறைவேற்றத் தவறினார்.



## திருச்செல்வம் பதவி துறப்பு :

இந்நாட்டு இந்துக்களின் புனித தலங்களில் புராதனமானது கோணேசர் கோவிலாகும். கோணேசர் கோவிலைச் சார்ந்த பூமியைப் புனித பிரதேசமாகப் பிரகடனஞ் செய்து பாதுகாக்க வேண்டுமென்பது, இந்துக்களின் நீண்ட நாளைய கோரிக்கையாகும். இவ் விடயத்திற்குப் பொறுப்பான உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம், புனித பிரதேசமாகப் பிரகடனப் படுத்தவேண்டிய பூமியின் எல்லைகளை நிர்ணயிக்க, மூவர் கொண்ட ஒரு குழுவை நியமித்தார். இம் மூவரில் ஒரு சிங்களவர், ஒரு தமிழர், ஒரு பறங்கிக்காரர் என்போர் இடம் பெற்றனர். திருகோணமலையைப் பௌத்த நாடாக்குவதற்குத் திட்டமிட்டு இயங்கிவரும் சேருவில் பௌத்த ஆலய விகாராதிபதி, இக் குழு நியமிக்கப்பட்டதற்கு ஆட்சேபனை கிளப்பினார். திரு. திருச்செல்வத்தோடு கலந்து யோசிக்காமலே, பௌத்த பிக்குவின் சொல்லைச் சிரமேற் கொண்ட பிரதமர் டட்லி சேனநாயக்கா, இக் குழுவை நிறுத்தி வைத்தார். தன்மானத்திற்கும் தமிழ் இனத்தின் மானத்திற்கும் பங்கம் ஏற்படுத்திய இச்செயலுக்குப் பதிலாக திரு. திருச்செல்வம் தம் அமைச்சர் பதவியை 16–9–68 இல் இராஜினாமாச் செய்தார். அமைச்சரவையிலிருந்து கட்சி வெளியேறிய போதும், அரசாங்கப் பாராளுமன்றக் கட்சியில் மேலும் சில காலம் தொடர்ந்து இருந்தது.

## பதினோராவது மாநில மாநாடு :

தமிழ் மக்கள் அரசின் நடவடிக்கைகளில் மிகவும் அதிருப்தி அடைந்திருந்த நேரத்தில், கட்சியின் 11ஆவது மாநில மாநாடு உடுவிலில் நடைபெற்றது. 1969 ஆம் ஆண்டு ஏப்ரல் 7, 8, 9 ஆந் திகதிகளில் நடைபெற்ற இம் மாநாட்டின் தலைவராகத் திரு. சி. மூ. இராசமாணிக்கம் அவர்கள் மூன்றாவது முறையாகத் தெரிவு செய்யப்பட்டார். இம் மாநாட்டில் தமிழ்நாடு தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானகிராமணியார் அவர்கள் எமது சிறப்பு விருந்தினராக வருகைதந்து உரையாற்றி எம்மை மகிழ்வித்தார். அரசியல் நிலையையும்; அரசாங்கம் – கொடுத்த வாக்கை நிறைவேற்றாது விட்டது மாத்திரமன்றித் தமிழ் மக்களுக்குப் பாதகமான நடவடிக்கைகளை மேற்கொண்டதையும் கவனத்திலெடுத்து, அரசாங்கத்தோடு கட்சி கொண்ட உறவை முற்றாகத் துண்டித்து, எதிர்க்கட்சியாக இயங்கவேண்டும் . என்று இம் மாநாடு தீர்மானித்தது. கட்சியின் வரலாற்றில் ஓர் அரசாங்கத்தின்அங்கமாக இருந்த நிலை, நாலு ஆண்டுகளோடு முடிவுக்கு வந்தது. இக்காலத்தில், எம்

உரிமைகள் சிலவற்றைச் சட்டபூர்வமாக நிலைநாட்டவும் – குடியேற்றம் முதலியவற்றினால் இருந்த ஆபத்தைக் குறைக்கவும் – சிறிமா சாஸ்திரி ஒப்பந்த அமுல் சட்டம், அடையாள அட்டை மசோதா போன்றவற்றில் ஆட்சேபனைக்குரிய அம்சங்களை நீக்கவும் – தமிழ் அரசாங்க ஊழியரின் பிரச்சனையை ஓரளவுக்குத் தீர்க்கவும் முடிந்ததாயினும்; சிங்கள அரசியல்வாதிகளும், கட்சிகளும் எமது அடிப்படை உரிமைகளை அளிக்க – மனமொப்பிச் சம்மதிக்க மாட்டார்கள் என்பது இந்த நான்கு வருட அனுபவத்தில் உறுதியானது. தமிழ் மக்களின் கண்ணோட்டமும், இக் காலத்தில் உரிமைப் போரைப் பற்றிச் சிந்தியாது, தனிப்பட்ட சலுகைகளைப் பெறுவதில் நாட்டங்கொண்டது. இதனால், மீண்டும் போராட்டப் பாதையில் மக்களைச் செலுத்துவதற்குச் சிரமப்படவேண்டிய நிலை ஏற்பட்டது.

### பைந்தமிழ் மண்ணில்
### பௌத்த – சிங்களப் பாடசாலைகள்

மாநில மாநாட்டைத் தொடர்ந்து, எதிர்க் கட்சியில் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்த காலத்தில், அரசாங்கத்தின் கல்விக் கொள்கை பற்றிக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய நிலை எழுந்தது. யாழ்ப்பாணத்தில் சில ஆண்டுகளுக்கு முன், உரிமை குறைந்த தமிழ் மக்கள் மத்தியில் பௌத்த பாடசாலைகள் நான்கு– புத்தூர், அச்சுவேலி, அல்வாய், கரவெட்டி ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறியவுடன், இவை பௌத்த–சிங்களப் பாடசாலைகளாகக் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டன. தமிழ்ப் பிள்ளைகளின் போதனா மொழியைச் சிங்களமாக மாற்றும் திட்டம், கட்சியின் தீவிர எதிர்ப்புக்கஞ்சி, பௌத்த–சிங்களப் பாடசலைகள் என்று அழைக்கப்பட்டாலும், தமிழே அங்கு தொடர்ந்தும் போதனா மொழியாக இருந்தது.

### 1970 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்

1956 ஆம் ஆண்டு தொடக்கம் நான்கு பொதுத் தேர்தல்களிலும், தமிழ் மக்களின் ஏகோபித்த நம்பிக்கையைப் பெற்ற ஒரே கட்சியாக–இலங்கைத் தமிழரசுக் கட்சி நிலைநாட்டப் பெற்றது. 1970ஆம் ஆண்டுத் தேர்தலிலும்– வடமாகாணத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும், கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் எமக்குக் கடுமையான போட்டியைக் கொடுத்த போதிலும், கட்சி 2,45,747 வாக்குகளைப் பெற்று பதின்மூன்று ஸ்தானங்களைக் கைப்பற்றியது. இடதுசாரி ஐக்கிய முன்னணி மிகப் பெரும்பான்மையைப் பெற்று ஆளுங்கட்சியாக அமர, ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க் கட்சியாக இருந்தது. தமிழரசுக் கட்சி எதிர்க் கட்சியில் சுதந்திரமாக இயங்கி, முற்போக்கு சமதர்மக் கொள்கைகளை ஆதரித்தும், தமிழ்ச் சமூகத்திற்குப் பாதகமானவற்றை எதிர்த்தும் நிற்பதென்று தீர்மானித்தது. மூன்றில் இரண்டுக்கும் மேற்பட்ட பெரும்பான்மையைப் பெற்ற ஆளுங்கட்சி– ஏனைய கட்சி உறுப்பினர்களின் உரிமைகளை மதிக்காது, எதேச்சாதிகாரப் போக்கில் செல்லத் தொடங்கியது.



### அரசியில் நிர்ணய சபைமுன்–கட்சியின் அரசியலமைப்புத் திட்ட ஆலோசனை

நாட்டின் அரசியற் சட்டத்திற்கு முரணாக, பாராளுமன்றத்தை ஓர் அரசியல் நிர்ணயசபையாக மாற்றி முற்றிலும் புதிதான ஓர் அமைப்பைத் தயாரிக்க அரசாங்கம் முடிவுசெய்தது. மக்கள் கட்டளையே தமக்கு அதிகாரம் என்று கூறினர். இந்த அரசியல் நிர்ணய சபையில், கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வதா? – இல்லையா? என்பதைப் பற்றி, நாம் ஒரு முடிவு செய்ய வேண்டியிருந்தது. 11–7–70 இல் வவுனியாவில் கூடிய கட்சியின் செயற்குழு–இவ்விடயத்தைக் கட்சிக்கு அப்பாற்பட்டதாகக் கணித்து, பல தமிழ்ப் பெரியோர்களையும் அழைத்துக் கலந்தாலோசித்தபின், கட்சிப் பாராளுமன்றக் குழு ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று தீர்மானித்தது. கொழும்பு சைவமங்கையர் கழகத்தில் பல முதியோர்களும் கூறிய ஆலோசனையின் பேரில், கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொண்டனர். அரசியல் நிர்ணய சபைக்கு–சமஷ்டி அடிப்படையிலான அரசியலமைப்பையும், எமது சமூக, பொருளாதாரக் கொள்கைகளையும் உள்ளடக்கிய ஓர் யாப்பைத் தயாரித்துச் சமர்ப்பிக்கும் பொறுப்பு–திரு வி. தர்மலிங்கம், பா. உ. அவர்களை அழைப்பாளராகக் கொண்ட ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. திரு. தர்மலிங்கம் அவர்களின் முயற்சியால், ஒரு முழுமையான அரசியலமைப்புத் தயாரிக்கப் பெற்று, அரசியல் நிர்ணயசபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. பூரண சோஷலிச பொருளாதாரத்தையும், சாதி–சமய பேதமற்ற சமூக அமைப்பையும், சுயாட்சி பெற்ற ஐந்து மாநிலங்களையும் கொண்ட ஒரு சமதர்ம சமஷ்டிக் குடியரசுக்கு, உன்னதமான ஓர் அரசியல் திட்டம் – திரு. தர்மலிங்கம் பா. உ. அவர்களால் தயாரிக்கப்பெற்றது. அதில் முக்கியமான சில பகுதிகளை அனுபந்தத்தில் சேர்த்திருக்கிறேன். நாம் சமர்ப்பித்த விரிவான திட்டத்தில் ஓர்

அம்சத்தைத்தானும் - அரசியல் நிர்ணய சபை ஆலோசிக்க ஆயத்தமாருக்கவில்லை.

### புதுப்பாதை அமைத்த வல்வெட்டித்துறை ஒற்றுமை மாநாடு

இச் சந்தர்ப்பத்தில் - தமிழ் அரசியற் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி, ஏகோபித்த கோரிக்கைகளை அரசியல் நிர்ணய சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த பெரியோர்கள் சிலர்—மாறுபட்டு நின்ற கட்சிகளை ஒன்று சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர். குறிப்பாகத் திருவாளர்கள் ஞானமூர்த்தி, சபாரத்தினம், வேற்பிள்ளை ஆகியோரது இடையறா உழைப்பினால், வல்வெட்டித்துறையில் 1971ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி—இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி, தமிழர் சுயாட்சிகழகம் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள்—திரு. சி. நாகராஜா அவர்கள் தலைமையில் கூடினர். அங்கு ஏற்பட்ட உடன்பாட்டின் பலனாக, தமிழ் இனத்தின் ஏகோபித்த, குறைந்த பட்சக் கோரிக்கைகளாக—ஒன்பது கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. 17–2–71இல் கூடிய கட்சியின் செயற்குழு, வல்வெட்டித்துறை ஒற்றுமை மாகாநாட்டின் முடிவுகளை அங்கீகரித்தது.


### இனத்தின் நலன்பேண நாட்டின் தலைவியுடன் மாநாடு

தமிழ் இனத்தின் அடிப்படை உரிமைகள் சிலவற்றையாவது அரசியல் அமைப்பில் இடம்பெறச் செய்யவேண்டுமென்ற ஆவலில், தந்தை செல்வநாயகம் தலைமையில் கட்சி உறுப்பினர்களின் தூதுக்கோஷ்டி ஒன்று 1971 மார்ச் மாதம் 6ஆந் திகதி பிரதமர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவையும், அரசியல் விவகார அமைச்சர் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வாவையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது. தமிழ் மொழி உரிமை பற்றிய சில பகுதிகளையாவது இடம்பெறச் செய்யும்படி, கட்சி—பிரதமரிடம் வற்புறுத்தியது. பயங்கரவாத நடவடிக்கைகளினால் இதன்பின் பிரதமரைச் சந்திக்க வாய்ப்பின்றிப் போயிற்று. பிரதமரின் யோசனைப்படி, ஏனைய அமைச்சர்கள் பலரைச் சந்தித்துப் பேசினோம். ஆனால், எவ்வித பலனும் கிட்டவில்லை. அரசியல் நிர்ணய சபைக்கு மொழி உரிமை பற்றி நாம் கொடுத்த திருத்தங்கள் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கட்சி உறுப்பினர்கள் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறினர். இத் தீர்மானத்திற்கிணங்க, அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரிக்க மறுத்த திரு. சி. சே. மார்டின் பா. உ. 15–7–71ல் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.






வவுனியா தமிழரசுக் கட்சி மாநாடு (1958)




சிறீ எதிர்ப்பு போராட்டத்தில் இரண்டுமாத தடுப்புக்காவலின் பின் விடுதலை (1958)




பண்டார நாயக்கர் – செல்வநாயகம் ஒப்பந்தம் திரு. எஸ். டபிள்யூ. பண்டாரநாயக்கர், திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம், திரு. கு. வன்னியசிங்கம், திரு. வ. நவரத்தினம், திரு. அ. அமிர்தலிங்கம் (1957)







தீண்டாமை ஒழிப்பு வாரத்தில் சமபந்தி போசனம்
எஸ்.ஜே.வி.செல்வநாயகம், கு. வன்னியசிங்கம் (1958)



வவுனியா தமிழரசுக் கட்சி மாநாடு (1958)




யாழ் கச்சேரியின் பின்புற வாயிலால் வெளிவர முயன்ற அரசாங்க அதிபரின் வாகனத்தை தடுத்து நிறுத்தும் இ.மு.வி. நாகநாதன் (1961)



தமிழரசு தபால் சேவையில் தபால்கள் தரம்பிரிக்கப்படல் (1961) தலைவர்கள். திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம், திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வ. நவரத்தினம்






சத்தியாக்கிரகத்தில் பங்குபற்ற ஊர்வலமாக வந்த மக்கள் (1961)






சத்தியாக்கிரகம் – இராணுவ வாகனத்தை வழிமறிக்கும் எஸ். ரி. அரசு (1961)




சத்தியாக்கிரகம் இராணுவ வாகனத்தை வழிமறிக்கும் திரு. அ. அமிர்தலிங்கம் (1961)





தமிழரசு தபால் தலை




தமிழரசு தபால்தலை, தபாலட்டை வெளியிடப்படல் (1961)



தமிழரசு தபால் அதிபர் நாயகம் எஸ். நடராசா, எஸ். ஜே.வி. செல்வநாயகம், அமிர்தலிங்கம்




தமிழரசு தபால் தலை விநியோகம் – மு.. சிவசிதம்பரம்






சத்தியாக்கிரகம் (1961)





சத்தியாக்கிரகம் (1961)



சத்தியாக்கிரத்தின் இறுதியில் திரு. திருமதி. அமிர்தலிங்கத்திற்கு கைது வாரண்ட் வழங்கப்படுதல் (1961)



## இரும்பு மனிதனை இழந்தோம்

தமிழ் இனத்தின் வாழ்வின் சோதனை மிகுந்த இக் கட்டத்தில், தன் தலையைக் கொடுத்தும் தமிழ் இனத்தைக் காக்கத் தயங்காத தானைத் தளபதியை இழந்தோம். தந்தை செல்வநாயகம் அவர்களின் விவேகமான போக்கிற்கு வேகத்தைக் கொடுத்தவர் டாக்டர் இ.மு.வி. நாகநாதனே! நெருக்கடியான நேரங்களில் எல்லோரும் தேடுவது–அவருடைய துணிகரமான வழிநடத்தலையே! 1961ஆம் ஆண்டு பெப்ரவரி 20ஆந் திகதி அரசாங்க அதிபரின் ஜீப் வண்டியின்முன் நடந்த மறியல் போராட்டத்தில், டாக்டர் நாகநாதனின் உடலில் பட்ட குண்டாந்தடி முறிந்தது. முறிந்த பாதியைக் கையிலேந்திப் புன்முறுவல் பூத்தார் இரும்பு மனிதன்! தன் பெரும் செல்வத்தையும், ஆயிரக்கணக்கான ரூபா வருமானத்தையும் இனத்துக்காக அர்ப்பணித்து, விடுதலை இயக்கத்தைக் கட்டி வளர்த்த இத்தியாகச் செம்மல் 16–8–1971இல் காலன் வாய்ப்பட்டார். தந்தை செல்வநாயகம் தன் வலது கரத்தை இழந்தார். தமிழ் இனத்தின் விடுதலை வீரர் வரிசையில், முதலிடம் டாக்டர் நாகநாதன் அவர்கட்கு எப்போதும் உண்டு.

## உணர்ச்சிப் பெருக்கில் சிறப்பு மாநாடு

அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறியபின், சிங்கள அரசியற் கட்சிகள் எமது உரிமைகளை எக்காலத்திலும் மனமொப்பி வழங்கமாட்டா என்ற கருத்துத் தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக ஏற்பட்டது. சிங்கள மக்களின் விருப்பமின்றி, எமது இலட்சியமான–இணைப்பாட்சி சாத்தியமல்ல என்பது தெளிவு. எனவே, கட்சியின் அடிப்படை இலட்சியத்தைப் புனராலோசனை செய்யவேண்டிய கட்டம் ஏற்பட்டது. இச் சூழ்நிலையில் கட்சியின் சிறப்பு மாநாடொன்று திரு. இராசமாணிக்கம் அவர்கள் தலைமையில் யாழ்ப்பாணத்தில் கூட்டப்பெற்றது. 30–1–72இல் இளைஞர்களின் உணர்ச்சிப் பெருக்கின் மத்தியில் நடைபெற்ற இம் மாநாடு அரசியல் நிர்ணய சபையினால் தயாரிக்கப்பட்ட– தமிழ் இனத்தின் அடிமைச் சாசனமான அரசியல் அமைப்பை, தமிழ்த் தேசிய இனம் பூரணமாக நிராகரிக்கின்றது என்று பிரகடனம் செய்ததோடு, தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தில் இருப்போர் எவரும் இதற்குச் சாதகமாக வாக்களிக்கக் கூடாதென்றும்; அப்படி எவரும் வாக்களியாதவாறு, அவ்வத் தொகுதி வாக்காளர் தம் எதிர்ப்பைக் காட்டவேண்டுமென்றும் மாநாடு தன்மானத் தமிழ் மக்களைக் கோரியது.

மேலும், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் யாவும் புறக்கணிக்கப்பட்டு, தமிழ் இனம் அரசாங்கத்தினால் பிரிவினைப் பாதையில் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் இந் நேரத்தில்;

(அ) சிங்கள மொழிக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே அந்தஸ்து—தமிழ் மொழிக்கும் சட்ட பூர்வமாக அளிக்கப்பட வேண்டுமென்றும்,

(ஆ) இந்நாட்டு அரசாங்கம்—மதச்சார்பற்றதாகப் பிரகடனம் செய்யப்பட வேண்டுமென்றும்;

(இ) இந்நாட்டைத் தமது தாயகமாகக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் எல்லோரதும் முழுமையான குடியுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டுமென்றும்;

(ஈ) தமிழ் மக்களின் பாரம்பரியமான தாயகத்தில், தமிழ்த் தேசிய இனத்தின் சுயாட்சி உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் மாநாடு கோரி, இழந்துவிட்ட இவ்வுரிமைகளை மீண்டும் பெறுவதற்கு எவ்வித தியாகத்திற்கும் தயாராக நடவடிக்கை எடுக்குமாறும், தென்னிலங்கையில் ஆட்சியாளரின் செயலினால் தம் தொழில்—கல்வி வசதிகளை இழந்து வரும் தமிழ் மக்கள், தம் உடமைகளையெல்லாம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாற்றி, தமக்கும் தமிழ் இனத்திற்கும், தமது சொந்தத் தாயகத்தில் வளமான வாழ்வை அமைக்க உடன் முயற்சி ஆரம்பிக்குமாறும் இச்சிறப்பு மாநாடு வேண்டுகோள் விடுத்தது.

ஆட்சியாளரின் நியாயமற்ற போக்கிற்குத் தம் ஆட்சேபனையைத் தெரிவிக்கும் வகையில், திரு. சு. நடராசா அவர்கள் தமக்கு ஆட்சியாளர் அளித்த—சமாதான நீதிபதியும் உத்தியோகப் பற்றற்ற நீதவானும் என்ற, பட்டத்தை மாநாட்டிலேயே துறப்பதாக அறிவித்தார். அவரைத் தொடர்ந்து, வேறும் பலர் அவ்வாறே செய்தனர். அக்கிரம ஆட்சி அளித்த பட்டம்—அடிமை விலங்கேயன்றி ஆபரணமல்ல என்று உரிமை வேட்கை கொண்ட தமிழ் மக்கள் பலர் சிந்திக்கத் தொடங்கினர்.

### தார்மீக ஆதரவுகோரி —தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம்

தமிழ்த் தேசிய இனத்தின் சுயாட்சி உரிமையை நிலைநாட்டத் தீர்மானித்ததைத் தொடர்ந்து, எம்நிலையை—உலக அரங்கில் விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இனத்தால், மொழியால், பண்பாட்டால், மதத்தால் எம்மோடு பிணைக்கப்பட்ட தமிழ் நாட்டுச் சகோதரர்களின் அனுதாபத்தைப்பெற, முதலில் முடிவு செய்தோம். அதன் பிரகாரம், தமிழினத்தின் உரிமைப் போரில் எந்தத் தியாகத்திற்கும் தயாராக இருந்த திரு. ஆ. இராசரத்தினம் அவர்கள் தமிழ்நாடு சென்று, எல்லா ஒழுங்குகளையும் செய்தார். அவரும், உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. சனார்த்தனமும் தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அத்தனை பேரையும் சந்திக்க ஏற்பாடு செய்தனர். தந்தை செல்வநாயகம் அவர்களும், கட்சிப் பொதுச்செயலாளர் என்ற முறையில் நானும், என் மனைவியும், சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசனும், வேறு சில நண்பர்களும் 1972 பெப்ரவரியில் தமிழ்நாடு சென்றோம். தமிழக ஆளுநர் உயர்திரு. கே. கே. ஷா, முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி, தி.மு.க. பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், தமிழக அமைச்சர்கள், தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம.பொ.சி., திராவிடர் கழகத் தலைவர் உயர்திரு. பெரியார் ஈ. வே. இராமசாமி, முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், முன்னாள் முதலமைச்சர் திரு. மு. பக்தவத்சலம், முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத், ஸ்தாபன காங்கிரஸ் தலைவர் உயர்திரு. கே. காமராஜ், இன்று அண்ணா தி.மு.க. தலைவராக இருக்கும்—புரட்சி நடிகர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன், இந்திரா காங்கிரசைச் சேர்ந்த நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன், பிரபல சினிமா நடிகர் திரு. எஸ்.ஏ. அசோகன் இன்னும் சில முக்கியமான தொழில் அதிபர்கள், சட்ட வல்லுநர்கள், கல்விமான்கள், மாணவர் இயக்கங்களை சேர்ந்தவர்கள், பத்திரிகையாளர்கள் முதலிய பலரைத் தமிழ் நாட்டில் சந்தித்தோம்; எமது நிலையை விளக்கினோம். அத்தனை பேரும், இனப் பற்றோடு— உருக்கமான அனுதாபந் தெரிவித்தனர். மத்திய அரசோடும், குறிப்பாகப் பாரதப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தியோடும், வெளியுலகிலும் எம் பிரச்சினையை விளக்கத் தம் உதவியை அளிப்பதாக உறுதி கூறினர். சென்னை மாநகராட்சி மேயர் திருமதி காமாட்சி ஜெயராமன் தலைமையில் தந்தை செல்வநாயகத்திற்குப் பொது வரவேற்பு வழங்கிக் கௌரவித்தது. கோகலே மண்டபத்தில் டாக்டர் இரா. சனார்த்தனம் தலைமையில், உலகத் தமிழ் இளைஞர் பேரவை தந்தைக்கு ஒரு வரவேற்பளித்தது. அனைத்துக் கட்சிப் பிரமுகர்களும் அவ்வரவேற்பில் உரையாற்றினர். எந்த ஒரு தனிக் கட்சியோடும் நாம் பிரத்தியேகத் தொடர்பு கொள்ளவில்லை. இரத்த பாசத்தினால் பிணைக்கப்பட்ட ஒரே இனம் என்ற முறையில் —தமிழ் நாட்டு மக்களினதும்; அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியற் கட்சிகள் அனைத்தினதும்; தன் மூலம் இந்திய அரசினதும் தார்மீக

ஆதரவை; மனித உரிமை கோரி, ஈழத் தமிழ்த் தேசிய இனம் ஆரம்பிக்க இருக்கும் தர்மப் போருக்கெனக் கோரி நின்றோம். இதில் ஒளிப்பு மறைப்போ, இரகசியமோ எதுவுமில்லை.

### ஒற்றுமையின் உருவகமான—தமிழர் கூட்டணி உதயம்

தமிழ் மக்களின் எதிர்ப்பைச் சிறிதும் பொருட்படுத்தாமல், குடியரசு அரசியல் அமைப்பை 1972 மே 22 இல் பிரகடனம் செய்ய அரசாங்கம் ஆயத்தமானது. இதை ஒன்றுபட்டு எதிர்க்கவென, ஆயத்தப்படுத்த வேண்டிய கட்டம் வந்தது. தந்தை செல்வநாயகம் அவர்களின் அழைப்பின் பேரில்—தமிழ் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மாணவர் இயக்கங்கள், கட்சிச் சார்பற்ற பெரியோர்கள் எல்லோரும் திருகோணமலை நகரமண்டபத்தில் 14–5–72இல் கூடினர். வல்வெட்டித்துறையில் 7–2–71இல் கருவில் உருவான தமிழின ஒற்றுமை—திருகோணமலையில் சுகப் பிரசவமானது. தமது வேற்றுமைகளை மறந்து தமிழர் கூட்டணி என்ற ஒரே அமைப்பில், அத்தனை பேரும் இணைந்து செயலாற்றத் தீர்மானித்தனர். தந்தை செல்வநாயகம் தலைவராகவும், திரு. எஸ். ஞானமூர்த்தி அவர்களும் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களும் இணைச் செயலாளர்களாகவும், திரு. சி. கதிரவேலுப்பிள்ளை பா. உ., திரு. தா. திருநாவுக்கரசு, திரு. அ. குமரகுரு ஆகியோர் பொருளாளராகவும் பணிபுரிய நியமிக்கப்பட்டனர். ஒரு நிரந்தரமான நடவடிக்கைக் குழு—எல்லாக் கட்சிகளுக்கும், ஸ்தாபனங்களுக்கும் பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக நிறுவப்பெற்றது.

### மே 22இல் – தமிழ் ஈழம் புரட்சிக் கோலம்

தமிழ் இனத்தின் அடிமைச் சாசனமான குடியரசு அரசியல் அமைப்பை முற்று முழுதாக நிராகரித்த தமிழர் கூட்டணி, அத்திட்டம் சம்பிரதாய பூர்வமாக நிறைவேற்றப் படும்—அரசியல் நிர்ணய சபையின் இறுதிக் கூட்டத்தைப் பகிஷ்கரிக்குமாறு, தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கோரிக்கை விடுத்தது. குடியரசு தினமான மே 22ஆந் திகதிக் கொண்டாட்டங்களைத் தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும், அன்றைய தினத்தைத் தமிழ் இனத்தின் துகக் தினமாக அனுஷ்டிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானப் படி, அரசியல் நிர்ணயசபை நிகழ்ச்சிகளை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட 19 தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களில் பதினைந்து பேர் பகிஷ்கரித்தனர். மே22 இல்—தமிழ் ஈழம் முழுவதும் புரட்சிக்கோலம் பூண்டு



நின்றது. பாடசாலைப் பகிஷ்காரம், கடையடைப்பு, கண்டனக் கூட்டங்கள், சிங்கக் கொடிகள் தீக்கிரை முதலிய பல சம்பவங்கள் நடைபெற்றன. வண்ணார்பண்ணை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் பல்லாயிரம் மக்கள் மத்தியில்—குடியரசு அரசியல் திட்டம் தலைவர்களால் தீக்கிரையாக்கப்பட்டது. இச்சம்பவங்களைத் தொடர்ந்து எழுபதுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். ஒரு புறத்தில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம் பதவிகளைத் துறக்க வேண்டுமென்ற குரல் எழுந்தது. மறு புறத்தில் பதவி துறத்தலை எதிர்த்து, சிறையில் இருந்த இளைஞர் உட்படப் பலர் கருத்துத் தெரிவித்தனர்.

### ஆறு அம்சக் கோரிக்கையும்; மூன்று மாத அவகாசமும்.

1972 ஜூன் 25ஆந் திகதி கோப்பாயில் கூடிய தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழு இவ்விடயத்தை ஆராய்ந்து, பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி துறப்பதால் பலன் இல்லை என்று தீர்மானித்தது. அத்துடன், அரசாங்கத்துக்கு ஆறு அம்சக் கோரிக்கைகளை விடுத்து, அவற்றின் அடிப்படையில் அரசியல் அமைப்பைத் திருத்த மூன்று மாத அவகாசமும் அளித்தது. மேலும், அக்கால கட்டத்தில் அரசாங்கம் தமிழ் மக்களின் கோரிக்கைக்கு இணங்காவிட்டால், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் இனத்தின் விடுதலையைக் காணச் சாத்வீகப் போராட்டத்தில் இறங்குவது என்றும் தீர்மானித்தது. கூட்டணி விடுத்த ஆறு அம்சக் கோரிக்கைகளாவன:

(1) அரசியல் அமைப்பில் சிங்கள மொழிக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே இடம் – தமிழ் மொழிக்கும் அளிக்கப்படவேண்டும்;

(2) இலங்கை மதச் சார்பற்ற அரசாகப் பிரகடனம் செய்யப்பட்டு, எல்லா மதங்களையும் சமமாகப் பேணி வளர்க்கவேண்டும்;

(3) இந் நாட்டைத் தம் தாயகமாகக் கருதும் தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் பூரண குடியுரிமை வழங்கும் குடியுரிமைச் சட்டங்கள் அரசியல் அமைப்பில் இடம் பெற வேண்டும்;

(4) நீதிமன்றம் மூலம் நிலைநாட்டப்படக்கூடிய அடிப்படை உரிமைகள் – அரசியல் அமைப்பில் அளிக்கப்பட வேண்டும்;

(5) சாதியையும்—பிறப்பினால் உயர்வு, தாழ்வு கற்பிப்பதையும் அரசியல் சட்ட மூலம் ஒழிக்க வேண்டும்;

(6) அதிகாரம் பரவலாக்கப்பட்டு, மக்கள் பங்கு கொள்ளும் சனநாயக ஆட்சி அமைப்பு ஏற்படவேண்டும்.

இக் கோரிக்கைகளைத் தந்தை செல்வநாயகம் பிரதமருக்கு அனுப்பியபோது, எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. எமது நினைவூட்டல் கடிதத்தின்பின், எமது தீர்மானம் கிடைத்தது என்ற ஒரு சொற்பதிலைத் தவிர, வேறு எவ்வித நடவடிக்கையும் எம் கோரிக்கைகளை யொட்டி அரசாங்கம் எடுக்கவில்லை.

## அரசுக்கு சவால்விடுத்து தந்தை பதவி துறப்பு

தமிழ் மக்களில் கணிசமான தொகையினர் அரசியல் அமைப்பை ஏற்றுக் கொள்கின்றனர் என்று பிரதமர் உட்படப் பல அமைச்சர்கள் கூறினர். இக் கூற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், நாம் ஆரம்பிக்கத் திட்டமிட்ட போராட்டத்திற்குத் தமிழ் மக்களின் அங்கிகாரத்தைப் பெறவும், குடியரசு அரசியல் அமைப்பைத் தமிழ்மக்கள் நிராகரிக்கின்றார்கள் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்கும் ஓர் இடைத்தேர்தலை ஏற்படுத்தும் பொருட்டு, தந்தை செல்வநாயகம் காங்கேசன்துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார். அரசாங்கம் தங்கள் கொள்கைகளை முன் வைத்துத் தன்னுடன் போட்டியிட வேண்டுமென்று அரசுக்கு அழைப்பு விடுத்தார்.

இடைத் தேர்தலை நடாத்தி, மக்கள் கருத்தை அறியத் தைரியமற்ற அரசாங்கம், இரண்டு வருடங்களுக்கு மேலாக இடைத் தேர்தலை நடத்தாது அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி, நியமன தினத்தைப் பின்போட்டுக் கொண்டு வந்தது. இதற்கிடையில் கவிஞர் காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன். மாவை சேனாதிராசா, இ.போ.ச. சுப்பிரமணியம் முதலிய இயக்கத்தின் முக்கிய உறுப்பினர் பலர் கைதாகிச் சிறைகளில் அடைக்கப்பட்டனர். மே 22 இல் கைது செய்யப்பட்ட வாலிபரில் பலர் விடுதலை செய்யப்பட்டாலும், 42க்கு மேற்பட்ட வாலிபர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகச் சிறைகளிற் சொல்லவொணாத் துன்பங்களை அனுபவித்தனர். அவர்களை விடுதலைசெய்யக் கோரிப் பல கிளர்ச்சிகள், ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் நடத்தப்பட்டன. 1973 ஜனவரி முதலாம் நாள் வேலணைக்கு வருகைதந்த–அமைச்சர் குமாரசூரியருக்கு எதிராகக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அடுத்துச் சுகாதார அமைச்சருக்கு எதிராகப் பலாலி விமான நிலையத்திலும் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா யாழ்ப்பாணம் வந்தபோது,



யாழ்ப்பாணத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. தலைவர்களின் உண்ணாவிரதமும், மாணவர்கள் பாடசாலைப் பகிஷ்காரமும் அன்று நடைபெற்றன. கிளிநொச்சி சென்ற நிதி அமைச்சருக்கு, அங்கு கறுப்புக் கொடி காட்டப்பட்டது. அமைச்சர் குமாரசூரியருக்கு எதிராக மட்டக்களப்பிலும் திரு. மு. இராசமாணிக்கம் அவர்கள் தலைமையில் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. இப்படியே பல்வேறு வகைகளில் அரசியல் அமைப்புக்கும், அரசின் அடக்கு முறைக்கும், இளைஞர்களை விசாரணையின்றிச் சிறைகளில் அடைத்தமைக்கும் எதிராக மக்கள் தம் எதிப்பைக் காட்டினர்.

## சட்டத்தை மீறினோம்; ஆபத்தைத் தடுத்தோம்

யாழ்ப்பாணத்தில் புத்தூர், அச்சுவேலி, அல்வாய், கரவெட்டி ஆகிய நாலு கிராமங்களில், நாம் ஐ. தே. கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறியவுடன் அங்கீகாரம் பெற்ற பௌத்த–சிங்கள பாடசாலைகளைப் பற்றி மேலே குறிப்பிட்டேன். எமது எதிர்ப்புக்கு அஞ்சி, அவை தொடர்ந்தும் தமிழ்ப் பாடசாலைகளாகவே இயங்கி வந்ததையும் கூறினேன். 1973 ஆம் ஆண்டின் முற் பகுதியில் புத்தூர் பௌத்த சிங்களப் பாடசாலைக்குச் சிங்களத் தலைமை ஆசிரியரையும் உதவி ஆசிரியரையும் அனுப்பி, பாலர் வகுப்பில் தமிழ்க் குழந்தைகளுக்குச் சிங்களத்திற் கல்வி புகட்ட அரசாங்கம் முற்பட்டது. அப்பகுதி மக்களின் ஒத்துழைப்போடு, யாரும் பாடசாலைகள் நிறுவக்கூடாது, என்ற சட்டத்தை மீறி–தமிழ்ப் பாடசாலை ஒன்றை–அச் சிங்களப் பாடசாலையின் அருகில் நிறுவத் தமிழர் கூட்டணி தீர்மானித்தது. 1973 ஏப்ரல் 6ஆந் திகதி சட்ட மறுப்புப் பாடசாலை திறக்கப்பட்டது. அதன் பொறுப்பாளர்களாகத் தந்தை செல்வநாயகம் அவர்கள், திரு. மு. சிவவதம்பரம், திரு.வி. தர்மலிங்கம், பா.உ., புத்தூர் ஆனந்தன் இவர்களோடு, நானுமாக ஐவர் நியமிக்கப்பட்டோம். சட்ட விரோதமாகப் பாடசாலை நிறுவப்பட்டதையும், அதன் பொறுப்பாளர்களது விபரங்களையும் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை, பா. உ. கல்வி அமைச்சுக்கு அறிவித்தார். அரசாங்கம் எம்மீது எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை. பாடசாலை வெற்றிகரமாக நடைபெற்றது. சிங்களப் பாலர் வகுப்பில் இரண்டு பிள்ளைகளே இருக்க, ஏனைய பிள்ளைகள் எல்லோரும் எம் தமிழ்ப் பாடசாலைக்கு வந்து சேர்ந்தனர். ஓராண்டின் பின், தமிழ்க் குழந்தைகளின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிக்கும் முயற்சியை அரசாங்கம் கை விட்டது. புத்தூரில் நாம் மேற்கொண்ட நடவடிக்கை பரிபூரண வெற்றி கண்டது.

### கட்சியின் பன்னிரண்டாவது மாநில மாநாட்டில் தோழமைக் கட்சிகளின் தலைவர்கள்

தமிழரசுக் கட்சி தமிழர் கூட்டணியில் ஓர் அங்கமாகச் சேர்ந்தபின், கட்சியின் 12ஆவது மாநாடு முதன் முறையாக மல்லாகத்தில் 1973 செப்டெம்பர் 7, 8, 9ஆந் திகதிகளில் நடைபெற்றது. இம் மாநாட்டின் தலைவராக நான் தெரிவு செய்யப்பெற்றேன். இம் மாநாடு–கட்சியின் வரலாற்றில் முக்கியமான ஒரு திருப்பு முனையாக அமைந்தது. ஏனைய கட்சிகளோடு சேர்ந்து, தமிழர் கூட்டணியின் ஓர் அங்கமாகக் கட்சி இயங்குவதை, மாநாடு அங்கீகரித்தது. மேலும் இந்நாட்டுப் பெரும்பான்மைத் தேசிய இனத்தின் ஒத்துழைப்போடோ, சம்மதத்தோடோ தமிழ் தேசிய இனத்தின் உரிமைகளை நிலைநாட்டுவது சாத்தியமில்லை என்று கருதி, தமிழ்த் தேசிய இனம் அதன் பாரம்பரியமான தாயகத்தில், தனது சுயாட்சி உரிமையை நிலைநாட்டுவதே ஒரே வழி என்று தமிழர் கூட்டணி தீர்மானித்து, அதன் அங்கமான பல்வேறு கட்சிகளின் பரிசீலனைக்கு அக் கருத்தைச் சமர்ப்பித்திருப்பதாலும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பன்னிரண்டாவது மாநில மாநாடு; மொழியால், கலாசாரத்தால், வரலாற்றால், பிரதேசத்தால், ஒரு தனி இனமாக வாழ வேண்டுமென்ற உணர்ச்சியால், ஒரு தனித் தேசிய இனமாகக் கணிக்கப்படுவதற்குப் பூரண தகுதிபெற்ற இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள், சர்வதேச நீதிக்கிணங்க ஏற்றுக்கொள்ளப்பட்ட, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையென்ற அடிப்படைத் தத்துவத்தின்படி, தனது பாரம்பரியமான தாயகத்தில் இலங்கைத் தமிழ்த் தேசிய இனம் தன்னாட்சி காண்பதே எமக்குள்ள ஒரே வழியென்று இத்தால் தீர்மானிக்கிறது என்று பிரகடனம் செய்தது. அன்றியும், இந்தப் புதிய குறிக்கோளுக்கு ஏற்ப,

தமிழ்த் தேசிய இனத்தின் நியாய பூர்வமான இக் கோரிக்கைக்கு – உலக நாடுகளின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெறும் வகையில், பிரசாரத்தை மேற்கொள்ளுவதென்றும் தீர்மானிக்கப் பெற்றது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இத் தீர்மானத்தைக் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. சி.மூ. இராசமாணிக்கம் முன் மொழிந்தார். இம் மாநாட்டின் இன்னொரு சிறப்பு அம்சம்–தோழமைத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் முதன் முதலாகக் கட்சி மாநாட்டு மேடையில் தோன்றி உரையாற்றியமையாகும்.



### முத்திரைச் சட்ட மீறலும்; உண்ணா நோன்பும்

ஒரு வருடமாகக் காங்கேசன்துறை இடைத் தேர்தலை நடத்தத் தவறிய அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில், 1973 ஒக்டோபர் 2ஆந் திகதி மாவிட்டபுரத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும் ஒருநாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். அன்றைய தினமே–நாட்டின் முத்திரைச் சட்டத்தை மீறி, வெட்டிச் சிதைக்கப்பட்ட முத்திரைகளை ஒட்டிப் பிரதமருக்கு நூற்றுக்கணக்கான தொண்டர்கள்–கடிதங்களை தபாலில் சேர்த்தனர். ஆனால், இந்தச் சட்டமறுப்பை யொட்டி எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், அரசு வாழா இருந்தது.

### முதுபெருந் தலைவர் அழகக்கோன் மறைந்தார்

1973 நவம்பர் 25ஆந் திகதி கட்சிக்கு மாபெரும் இழப்பொன்று ஏற்பட்டது. கட்சியின் முதுபெருந் தலைவரும், 1956ஆம் ஆண்டு முதல் மன்னார்த் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகக் கடமையாற்றி, அப்பழுக்கற்ற விசுவாசத்தினால் மக்கள் மத்தியில் தனி மதிப்புப் பெற்றிருந்தவருமான திரு.வி.அ. அழகக்கோன் அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்தார். மன்னாரில் ஏற்பட்ட இடைத் தேர்தலிற் கட்சி தோல்வியடைய, ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஜனாப் றகீம் சில வாக்குகளால் வெற்றி பெற்றார். திரு. அழகக்கோனின் மறைவால்–ஒரு மாவட்டத்தையே தற்காலிகமாக இழந்தது கட்சி.

### தன்னாட்சிக்கு வித்திட்ட ஜனவரி 10

அரசியல் கலப்பற்ற வகையில், யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1974 ஜனவரி முதல் வாரத்தில் வெகு சிறப்பாக–மக்களின் கரை காணாத உணர்ச்சிப் பெருக்கின் மத்தியில் நடைபெற்றது. அரசாங்கம் எவ்வளவோ இடையூறுகளை ஏற்படுத்தியும், மிக வெற்றிகரமாக மாநாட்டை நடத்தி, இறுதி நாளான 10ஆந் திகதியன்று 50, 000க்கு மேற்பட்ட மக்கள் உலகத் தமிழ் அறிஞர்கள் தமிழின் பெருமையை எடுத்து விளக்குவதைக் கேட்கக்கூடிய கூட்டத்தின்மீது, பொலீசார் எவ்வித காரணமுமின்றித் தாக்குதல் நடத்திய காரணத்தினால், ஒன்பதுபேர் மின்சாரம் தாக்கி இறந்தனர். பொலீசாரின் நடத்தை பற்றி விசாரணை நடத்துமாறு, அரசாங்க ஆதரவாளர்

உட்பட, தமிழ்மக்கள் ஏகோபித்துக் கோரியும் அரசாங்கம் மறுத்துவிட்டது. மக்கள் நிறுவிய இரண்டு முன்னாள் நீதியரசர்களையும் ஒரு முன்னாள் மேற்றிராணியாரையும் கொண்ட விசாராணைக்குழு, பொலீசாரின் செயலே அம் மரணங்களுக்குக் காரணம் என்று தீர்ப்பு வழங்கியது. இச்சம்பவமும், அதையொட்டி அரசாங்கத்தின் உதாசீனமும் தமிழன் தன்னாட்சி பெற்றாலன்றி வாழ முடியாது என்ற உறுதியை–இதுகாறும் அந்தக் கொள்கையை ஏற்காதிருந்த பல்லாயிரம் தமிழ் மக்களுக்கும் ஏற்படுத்தியது.

**உத்தம தலைவர் இராசமாணிக்கனார் உயிர் துறந்தார்:**

அடுத்தடுத்து உத்தம தலைவர்கள் பலரை இழந்துகொண்டு வந்த எம் மியக்கத்திற்கு, கிழக்கிலங்கையில் இன்னொரு பேரிடி 8–10–74இல் விழுந்தது. மூன்று தடவை கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு, மிகப் பெரிய போராட்டங்களின் மத்தியில் கட்சியை வழி நடத்திச் சென்ற உத்தம தலைவர் திரு. சி.மு. இராசமாணிக்கத்தின் மறைவு–கட்சிக்கும் தமிழ் இனத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பெரும் நஷ்டமாகும்.

**யாழ்நகர் வந்த பிரதமரை– தமிழர்தம் மனக்கொதிப்பு வரவேற்றது**

1974ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், பல்கலைகழக வளாகம் ஒன்றைத் திறப்ப தற் கென்று கூறி, பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா அவர்கள் முதன்முதலாக யாழ்ப்பாணம் வருகை தந்தார். தமிழர் கூட்டணியும், தமிழரசுக் கட்சியும் அவர் யாழ்ப்பாணம் வரும் நாளைப் பூரண ஹர்த்தால் தினமாக அனுஷ்டிக்குமாறு கோரின. யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் பரிபூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. தமிழ் இளைஞர்கள் சிறையில் வாடுவதை எதிர்த்து, யாழ்ப்பாணம் வீரமாகாளி அம்மன் கோவில் முன்றிலில் பெண்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். தமிழ் மக்களின் மனக் கொதிப்பைப் பிரதமர் நேரில் கண்டார்.

**வெள்ளி விழா**

இந்த விதமான போராட்டங்களுக்கும், தலைவர்களின் மறைவினால் ஏற்பட்ட பேரிழப்புகளுக்கும் மத்தியில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தியாகம் நிறைந்த வரலாற்றில் இருபத்தைந்து ஆண்டுகள் நிறைந்தன. கட்சியின் வெள்ளி விழா கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் 1974 டிசம்பர் 18ஆந் திகதி பல்லாயிரம் மக்கள் திரண்ட மாபெரும் விழாவாகக் கொண்டாடப் பெற்றது. தந்தை செல்வநாயகத்திற்கு மூதறிஞர் என்று பட்டஞ் சூட்டி



மகிழ்ந்தனர் மக்கள். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. மு. சிவசிதம்பரம் முதலிய தோழமைத் தமிழ்க் கட்சித் தலைவர்கள் வாழ்த்துரை வழங்க நடந்த இவ் விழாவில் தலைமை தாங்கும் பேறு எனக்குக் கிடைத்தது. இவ்விழா, கட்சியின் வெள்ளி விழாவாக மாத்திரமன்றி காங்கேசந்துறை இடைத் தேர்தலின் கால்கோள் விழாவாகவும் அமைந்தது. ஏனெனில், இச் சந்தர்பத்தில் இடைத் தேர்தல் நியமன தினத்தையும் ஆட்சியாளர் அறிவித்தனர்.

**இடைத் தேர்தல் இயம்பிய தீர்ப்பு**

காலங்கழித்து நடைபெற்ற இடைத்தேர்தல், எம் இலட்சியப் பாதையில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த மைல் கல்லாக அமைந்துவிட்டது. 1970ஆம் ஆண்டில் பெற்றதிலும் மூன்று மடங்கு அதிகப்படியான வாக்குகளையும், அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் முக்கால் பங்கு வாக்குகளையும் தந்தை செல்வநாயகம் பெற்றதல்ல இம் முக்கியத்துவத்திற்குக் காரணம். ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர் இந்நாட்டு மண்ணில் காலடிவைத்தபோது, தமிழன் தன் சொந்த நாடாகத் தன்னாட்சி நடாத்திய பூமியை மீண்டும் பெற்று, இழந்த இறைமையை மீண்டும் நிலை நாட்டுவதற்கு உழைக்கத் தமிழ் மக்களின் உத்தரவை நாடினார் தந்தை செல்வநாயகம். அந்த உத்தரவை அமோகமான பெரும்பான்மையால் அளித்தனர் மக்கள். ஆண்ட தமிழன் மீண்டும் ஆள வேண்டும்; தமிழ்த் தேசிய இனத்தின் இறைமை மீண்டும் நிலைநாட்டப்படவேண்டும்; தமிழ் ஈழம் மீண்டும் மலரவேண்டும். இதுவே காங்கேசந்துறை இடைத்தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பு. இருபத்தைந்து ஆண்டுகளாக நாம் நடந்து வந்த இலட்சியப் பாதையில் ஒரு திருப்பு முனையைத் தாண்டிவிட்டோம். எம்முன்னே நாம் சென்றடையும் இலக்குத் தெளிவாகத் தெரிகின்றது. எம் பின்னே தமிழ் மக்களில் மிகப் பெரும்பாலோர் திரண்டு விட்டார்கள்! இனத்தின் சுதந்திரம் என்ற இலக்கை நோக்கித் தமிழரசுக் கட்சியும், கடந்த காலத்தில் வெவ்வேறு பாதைகளில் நடந்த தோழமைக் கட்சிகளும் கைகோத்து வீறுநடை போட ஆயத்தமாகிவிட்டன!

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே.

– என்ற புரட்சிக் கவிஞர் கூற்றுக்கு எடுத்துக்காட்டாக ஈழத் தமிழ் மக்கள் திகழ்கின்றனர்.

### ஒத்துழைத்துப் பலனில்லை—தியாக வரலாறு தரும் பாடம்

இந்த நிலையை உருவாக்கியதே தந்தை செல்வநாயகத்தின் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இருபத்தைந்து வருட சாதனையாகும். பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியும், தென்னிலங்கை அரசியற் கட்சிகள் ஒவ்வொன்றோடும் ஒத்துழைத்துப் பார்த்தோம். இடதுசாரிக் கட்சிகளோடு 1953ஆம் ஆண்டு நாட்டை அதிர வைத்த ஹர்த்தாலில் ஒத்துழைத்தோம். பிரதமர் பண்டாரநாயக்காவோடு 1957இல் ஒப்பந்தம் செய்தோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோடு 1960ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்து, அவர்களோடு சேர்ந்து ஐ.தே. கட்சியைத் தோற்கடித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சி அமைக்க, ஆதரவு கொடுக்கச் சம்மதித்தோம். 1965ஆம் ஆண்டு திரு. டட்லி சேனநாயக்காவோடு ஒப்பந்தம் செய்து, அவரை ஆட்சிப்பீடம் ஏறச் செய்தோம். அத்தனை சிங்கள அரசியற் கட்சிகளும் தலைவர்களும் எமக்குத் தந்த பாடம்—அவர்கள் யாரும் எம் உரிமைகளை வழங்கத் தயாரில்லை; அவர்களை நம்பிப் பயனில்லை என்பதேயாகும். தாம் அதிகார பீடம் ஏறுவதற்கு எம்மை ஏணியாகப் பயன் படுத்திய பின், எம்மை உதைத்துத் தள்ளுவார்களே யன்றி, தமிழ் இனத்தையும் சிங்கள இனத்தின் நிலைக்கு உயர்த்தவே மாட்டார்கள்.

தன்கையே தனக்குதவி

தமிழரசே தமிழர்க் குதவி

என்ற தாரக மந்திரத்தை, அனுபவத்தால் படித்தோம்.

### இருபத்தைந்து ஆண்டுகளில் எதைச் சாதித்தோம் ?

சாதியினால் சமயத்தினால், பிரதேசத்தினால் பிளவுபட்டுக் கிடந்த தமிழனை ஒன்று படுத்தினோம்!

அரசியல் கட்சிகளாகப் பிரிந்து அல்லற்பட்ட தமிழினத்தை, ஒரே அணியில்—தமிழர் கூட்டணியாகச் சேர வழிவகுத்தோம்!.

1956ஆம் ஆண்டு, 24 மணித் தியாலத்தில் நாடு முழுவதும் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவோம் என்றுகூறிய ஆட்சியாளரை, இருபது வருடங்களின் பின்னரும்—மொழிப் பிரச்சினை தீரவில்லை என்பதை ஏற்றுக்



கொண்டு, அரசியல் அமைப்பில் தமிழ் மொழி உரிமையை அளிக்க நாம் ஆயத்தம் என்று கூற வைத்திருக்கிறோம்!.

தமிழனுக்கு ஒரு தனிப் பிரதேசம் உண்டு; அதைப் பாதுகாப்பது தமிழ் மக்களின் கடமை மாத்திரமல்ல, உரிமையும் கூட என்று, தமிழ் மக்கள் மத்தியில் இடதுசாரிக் கம்யூனிஸ்ட் தலைவர்கள்தானும் ஒப்புக் கொள்ளச் செய்திருக்கிறோம்!

தமிழ்த் தேசிய இனத்திற்குப் பிரதேச சுயாட்சி வழங்க வேண்டுமென்று நாம் ஆரம்பத்தில் கோரியபோது, தமிழ்ப் பிரதேசம் என்று ஒன்றில்லை என்றும், நாடு முழுவதும் எல்லோருக்கும் சொந்தம் என்றும் பிதற்றிய இடதுசாரிகளை இன்று, தமிழ்ப் பிரதேசமுண்டு; தமிழ்த் தேசிய இனத்திற்குப் பிரதேச சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்றும், அதற்காகத் தாங்களும் போராடத் தயாரென்றும் ஏற்றுக்கொள்ள வைத்திருக்கிறோம்!

தமிழன் ஒரு தனித் தேசிய இனம் என்பதை உணரச் செய்திருக்கிறோம்!

தமிழ்த் தேசிய இனத்திற்கு, தன்னாட்சி பிறப்புரிமை என்பதைத் தெரிய வைத்திருக்கிறோம்!

தமிழ் மக்களின் எதிர்ப்புச் சக்தியைத் திரட்டி, சிங்களத் திணிப்பை ஒவ்வொரு கட்டத்திலும் எதிர்த்து வந்திருக்கிறோம்!.

இதனால் நீர்கொழும்பு, சிலாபம் போன்ற பகுதிகளில், இன மாற்றத்தினால் தமிழ்க் குலமே—சிங்கள இனமாக மாறியநிலை ஏனைய இடங்களிலும் ஏற்படாது—தடுத்து நிறுத்தியிருக்கிறோம்!

எமது எதிர்ப்பியக்கம் இல்லையேல், தமிழ்ப் பிரதேசங்களிற்கூட சகல நிர்வாகமும் தனிச் சிங்களமாகியிருக்கும்!

அப்படி மாற்ற முற்பட்டபோது, 1961ஆம் ஆண்டுச் சத்தியாக்கிரகத்தினால், அதை முறியடித்தோம்!

1964இல் மீண்டும் அதே முயற்சியை மேற்கொண்டபோது, அதை எதிர்த்து நிறுத்தினோம்!.

1966ஆம் ஆண்டு தமிழ்மொழியை—வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சகல நிர்வாக அலுவல்களுக்கும் உபயோகிக்கச் செய்யும் தமிழ்மொழி சட்ட

விதிகளை ஆக்கச் செய்தோம்!

1961இல் நிறைவேற்றப்பட்ட, தமிழ் மொழிக்கு எந்த இடமும் அளிக்காத நீதிமன்ற மொழிச் சட்டத்தை, எம் எதிர்ப்பினால்–புகுத்த முடியாது செய்தோம்.

தமிழின் உரிமையை அரைகுறை யாகவாவது வழங்க வேண்டு மென்றெண்ணி, அரசியற் சட்டத்தில் ஆட்சியாளர் சில பகுதிகளைப் புகுத்தச் செய்தது, எம் எதிர்ப் பின் காரணமாகவே என்பதை எவரும் மறுக்கமாட்டார்.

**இலங்கைத் தமிழரசுக்கட்சி இன்றேல்.....?**

அரசியற் சட்டத்தை ஆக்கி நான்கு ஆண்டுகளுக்கிடையில், அதைத் திருத்தி, தமிழ்மொழி உரிமைகளை அளிக்க ஆயத்தம், பிரிவினை கோராதீர்! என்று இலங்கரத்தினா போன்ற அமைச்சர்களை அலற வைத்தது எம்மியக்கம்!

தமிழரசுக்கட்சி இருந்திருக்காவிட்டால்–தனிச் சிங்களம் நாடு முழுவதிலும் எப்பொழுதோ முடிந்த காரியமாகியிருக்கும்!

தமிழ்ப் பிரதேசம் என்பது ஒன்று உண்டென்பதையே மக்கள் மறந்திருப்பார்கள்!

தமிழ் இனம்–சிங்களக் கட்சிகளிடையே கூறு போடப்பட்டுச் சிதறிப் போயிருக்கும்!

சிங்களத் திணிப்பினால் இளஞ் சந்ததியின் கல்வி மொழி, பேச்சு மொழி எல்லாமே சிங்களமாக மாற்றப்பட்டுத் தமிழ் இனம் அழிவுப்பாதையில் அதி வேகமாகப் போயிருக்கும்!

இத்தனையையும் தடுத்து நிறுத்தி, தமிழன் தன் தனித்துவத்தைக் காக்கவேண்டுமென்பதை உணரச்செய்து, அத்தனித்துவத்தைக் காப்பதற்கு அவனுக்கு ஒரு நாடு வேண்டு மென்பதை அறிவுறுத்தி, எம் முன்னோர் தம் சொந்த நாட்டோடு வாழ்ந்தனர் என்பதை நினைவுறுத்தி, நாம் வாழ வேண்டுமானால், எம் நாட்டை நாமே ஆளவேண்டும் என்பதை ஆளப் பதியவைத்து, அந்த இலட்சியத்தின் அடிப்படையில் அத்தனை தமிழ் அரசியற் கட்சிகளையும் ஒன்றுபடுத்தி, தமிழனுடைய இந்தக் கோரிக்கையின் நியாயத்தை உலக அரங்கிலும் ஓரளவு உணரச் செய்து, வீறுகொண்டெழுந்த இளந் தமிழ்ச் சந்ததியை–தன் மானத்தோடு தமிழ் மானங் காக்கவும், தமிழன் ஆட்சியை நாட்டவும் தியாக மார்க்கத்தில்–விடுதலைப் போர் வழியில் நடக்கச் செய்திருப்பது எம்மியக்கமே!



இருபத்தைந்து வருடங்களாக நாம் நடந்த இலட்சியப் பாதையில், நாம் நடத்திய சாதனைகள் இவை! ஆனால், எம் இறுதிச் சாதனையே மகத்தானதாக இருக்கவேண்டும். அதுதான் ஒரு சுதந்திர, சமத்துவம் மிளிர்கின்ற, சமதர்மம் நிலைநாட்டப்பெற்ற தமிழ் ஈழத்தைக் காண்பது.

சேறுகள், சகதிகளைத் தாண்டி–அந்த இலக்கை நோக்கிச் செல்லும் நேரிய பாதையில் தமிழ் இனத்தைக் கொண்டு வந்து விட்டிருக்கின்றோம். சுதந்திர சூரியனின் இளங்கதிர்கள் மெல்லக் கீழ் வானத்தை வெளுக்கச் செய்யத் தொடங்கிவிட்டன! தியாகி சிவகுமாரன் போன்ற விடிவெள்ளிகள் தோன்றி விட்டார்களே! தொடர்ந்தும் செல்வோம்; நாம் நிச்சயம் வெல்வோம்!

வாழ்க தமிழ்!

வளர்க தமிழின ஒற்றுமை!!

வருக தமிழ் ஈழம்!!!



தலைவர்கள் அ. அமிர்தலிங்கம், மு. திருச்செல்வம், சா.ஜே.வே. செல்வநாயகம்





சிறிமாவோ பண்டாரநாயக்காவின் புதிய அரசியலமைப்புக்கு சமர்ப்பிப்பதற்கான ஆறு அம்ச திட்டத்தை வல்வெட்டித்துறையில் வரைந்தபோது என். சிவநேசன், சி. சுந்தரலிங்கம், க. துரைரத்தினம் (1971)



தமிழர் கூட்டணி அங்குரார்ப்பணம் தலைவர்கள் அ. அமிர்தலிங்கம், சா.ஜே.வே. செல்வநாயகம் சி. சுந்தரலிங்கம், மு. சிவசிதம்பரம், க. ஞானமூர்த்தி (1972)



தமிழரசுக் கட்சியின் இரண்டாம் குறுக்குத் தெரு தலைமைகத்திலிருந்து அரசியலமைப்பு எதிர்ப்பு நடவடிக்கைக்குப் புறப்படுதல் மகாதேவன், வி. என். நவரத்தினம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், மங்கையர்க்கரசி, சங்கரப்பிள்ளை, அ. குமரகுரு, செனட்டர் சு. நடராசா, மனோகரன், அம்பிக்கைபாகன், சண்முகநாதன், பொன்னையா (1972)



புதிய குடியரசுதினத்தை பகிஷ்கரிக்கக் கோரும் சட்டவிரோத சுவரொட்டிகள் வி. தர்மலிங்கம், மங்கையர்க்கரசி (1972)






பெரியார் ஈ. வே. ரா. வுடன் (1972)



தமிழக முன்னாள் முதலமைச்சர் எம். பக்தவத்சலத்துடன் (1972)




சென்னையில். எஸ். ஜே. வி. செல்வநாயகம், ம. பொ. சிவஞானம். (1972)




தமிழக முதல்வர் கருணாநிதியுடன் (1972)






காஞ்சிபுரத்தில் அண்ணா பிறந்த இல்லத்தில்
இரா. ஜனார்த்தனம், எஸ். மணவைத்தம்பி, கோவை. மகேசன் (1972)



தமிழக முதல்அமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனுடன் (1983)



இந்திய சுதந்திரதின வரவேற்பு வைபவத்தில்



வாஜ்பாய், வைகோவுடன் அ. அமிர்தலிங்கம்,

# 3

# இலங்கை – இந்திய ஒப்பந்தம் வந்த வரலாறு

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்குமிடையில் 1987 ஜூலை 29–ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் உலகில் பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. அவசரத்தில் செய்யப்பட்ட உடன்படிக்கை இது என்று இந்தியாவிலும், இலங்கையிலும் அரசாங்கங்கள் மீது குற்றங்காண விரும்பும் பலர் கூறுகின்றனர். இலங்கைத் தமிழ் மக்களைப் பாதிக்கும் இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திடுமுன் சம்பந்தப்பட்ட தமிழ் மக்கள் கலந்து ஆலோசிக்கப்பட வில்லை என்று சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். இவற்றில் உண்மை உண்டா என்று புரிந்து கொள்வதற்கு ஒப்பந்தம் வந்த வரலாற்றை அறிவது அவசியமாகும்.

இந்தியாவும், இலங்கையும் ஆங்கில ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றபின் இலங்கை அரசு தனது நாட்டுக் குடியுரிமையை வரையறுக்கும் சட்டங்களை ஆக்கமுற்பட்டது. 1948 ஆகஸ்டில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக் குடியுரிமைச் சட்டமே இரு நாடுகளுக்குமிடையில் பிணக்கை ஏற்படுத்துவதாக அமைந்தது. அச்சட்டத்தினால் இந்திய வம்சாவழியினராக மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர் பத்து லட்சம் பேரும் நாடற்றவர் ஆக்கப்பட்டனர். இலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்களும் தமிழ் பேசும் இஸ்லாமிய மக்களும் சந்தேகப் பிரஜைகளாக்கப்பட்டனர். குடியுரிமை பறிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளரின் நிலை பற்றி இருநாட்டு அரசுகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தை தோல்வி கண்டது. பாரதப்பிரதமர் பண்டித நேருவின் சம்மதத்தைப் பெறாமலே இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம் 1948 டிசம்பரில் இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்திய, இலங்கை அரசுகளுக்கிடையில் இணக்கம் காணப்படாது நிறைவேற்றப்பட்ட குடியுரிமைச் சட்டங்கள் சிங்கள, தமிழ் இனங்களுக்கு இடையிலும் விரிசல் ஏற்படுவதற்கு வழிவகுத்தன. இலங்கை இந்தியர் காங்கிரஸ் இச்சட்டங்களை எதிர்த்துச் சத்தியாகிரகம் மேற்கொண்டது. இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பிளவு பட்டது. திரு எஸ்.ஜே.வி. செல்வநாயகம், திரு கு. வன்னியசிங்கம், டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன் முதலியோர் குடியுரிமைச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்து, அரசாங்கத்தில் அங்கமாயிருந்த தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறித் தமிழ் மாநிலத்தில் சுயாட்சி பெற்ற தமிழ் மக்கள், ஓர் இணைப்பாட்சியில், சிங்கள மக்களோடு இணைந்து வாழும் இலட்சியத்தைக் கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தோற்றுவித்தனர். சிங்கள, தமிழ் இனங்களுக்கிடையில் பிளவு ஏற்படக்காரணமாயிருந்த குடியுரிமைச் சட்டங்களே இலங்கை இந்திய அரசுகளுக்கிடையிலும் வேற்றுமையைத் தோற்றுவித்தன.

இந்தியாவின் கருத்தைப் புறக்கணித்தது மாத்திரமின்றி இந்தியத் துவேஷத்தையும் அன்றே ஆளும்கட்சியினர் கக்கினர். அவர்களுடைய அரசியல் அகராதியில் தமிழ் எதிர்ப்பும் இந்திய எதிர்ப்பும் ஒரே கருத்தையே கொண்டிருந்தன. எனினும் பெருந்தன்மையும் உலகளாவிய கண்ணோட்டமும் கொண்டிருந்த பிரதமர் நேருவின் அரசாங்கம் இலங்கையை அரவணைத்துச் செல்லும் கொள்கையையே கைக்கொண்டது. மலையகத் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கச் செய்வதற்கு உறுதியான நிலைப்பாட்டை மேற்கொள்ளாது பெருமளவு விட்டுக் கொடுத்துப் பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. 1954–ல் நேரு கொத்தலாவல ஒப்பந்தம், 1964–ல் சாஸ்திரி–சிறிமாவோ பண்டாரநாயக்கா ஒப்பந்தம், 1974–ல் கச்சத்ட்வு பற்றிய ஒப்பந்தம் அனைத்தும் இந்திய அரசு தாராள மனப்பான்மையோடு இலங்கைக்கு விட்டுக்கொடுத்து, தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் போதிய அக்கறையின்றிச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களேயாகும்.

இந்தியா காட்டிய தாராளப்போக்கு இலங்கை அரசுக்குத் தமிழ் மக்களை நசுக்குவதற்கும், இந்தியாவிற்கு விரோதமான கொள்கைகளைக் கைக்கொள்வதற்கும் மேலும் ஊக்கம் அளித்ததே அன்றிப் பதிலுக்கு நட்புணர்வை ஏற்படுத்தவில்லை. 1962–ஆம் ஆண்டு சீனா – இந்தியா எல்லை யுத்தத்தின்போது இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகா இந்தியாவுக்குச் சாதகமான கொள்கையைக் கொண்டிருக்கவில்லை என்பது



உலகறிந்த உண்மை. அதேபோல 1971–ல் கிழக்கு வங்கம் பற்றிப் பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் பகை மூண்டபோது பாகிஸ்தான் துருப்புக்களை ஏற்றிச் சென்ற விமானங்களை கட்டுநாயகா விமானத்தளத்தில் இறங்கி எரி பொருள் நிரப்பிச் செல்லவிட்டதன் மூலம் இலங்கை அரசு இந்தியாவிற்குப் பாரிய ட்மையை விளைத்தது. இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் இலங்கைத் தமிழ் மக்களே இந்தியாவிற்குச் சார்பாகத் ட்விரமாகச் செயல்பட்டனர். சீன – இந்தியா யுத்தத்தின் போது இந்தியப் படையில் சேர்ந்து பணி செய்யவும் இலங்கைத் தமிழர் முன்வந்தனர்.

குடியுரிமைப் பறிப்பில் ஆரம்பித்த தமிழ் இன விரோதச் செயல்கள் மொழி உரிமை, நில உரிமை, தொழில் உரிமை, கல்வி உரிமை, கலாச்சார உரிமை ஆகிய எல்லா உரிமைகளையும் பறித்து மொத்த இன ஒதுக்கல் கொள்கையாக இலங்கையில் விரிவடைந்தன. இவற்றை எதிர்த்து 1956–ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்கள் போராட, அதற்கு எதிராகச் சிங்கள இனவெறியாட்டம் கட்டவிழ்த்து விடப்பட்டது. 1956, 1958, 1961 ஆகிய ஆண்டுகளில் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்களக் குண்டர்களும், போலீஸ் படையும், இறுதியில் ராணுவமும் நடத்திய தாக்குதலில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டும், ஆயிரக்கணக்கானோர் வீடு இழந்து அகதிகள் ஆக்கப்பட்டு கப்பல்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

1958–ல் பேரறிஞர் அண்ணா தலைமையில் இலங்கைத் தமிழருக்கு அனுதாபமாக ஒரு பேரணி சென்னையில் நடத்தப்பட்டது. மூதறிஞர் ராஜாஜி இணைப்பாட்சியே இலங்கைத் தமிழர் இன்னல் தீர வழி என்று சுதந்திரா பத்திரிகையில் எழுதினார். தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை அரசின் நடவடிக்கைகள் தமிழ் நாட்டில் சிறு அனுதாப அலைகளை எழுப்பினவே அன்றி இந்திய அரசின் கவனத்தைக் கவரத் தவறிவிட்டன. அவை இலங்கையின் உள்நாட்டு விஷயங்களாகவே கருதப்பட்டன.

### தந்தை செல்வாவின் தமிழக விஜயம் – 1972

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்குச் சிகரமாக ஒரு புதிய அரசியல் அமைப்பை யாத்து, முந்திய அரசியல் அமைப்பில் ஆங்கில ஆட்சி சிறுபான்மையோருக்கு வழங்கிய பாதுகாப்புக்களையும் பறிக்க இலங்கை அரசு முற்பட்டது. வங்க மக்களுக்குப் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி போரில் இறங்கி அவர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்த சம்பவம் இலங்கைத் தமிழ்

மக்களுக்கு ஒரு புது நம்பிக்கையைக் கொடுத்தது. கிழக்கு வங்காளத்திற்குச் சார்பாக இந்தியா செயல்படுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தது, மேற்கு வங்கம் பொங்கி எழுந்து இந்திய அரசுக்கு ஏற்படுத்திய நிர்ப்பந்தமே. அதே போல் இலங்கைத் தமிழ் மக்களுக்காக இந்தியா குரல் கொடுக்கச் செய்வதற்குத் தமிழ் நாடு பொங்கி எழ வேண்டும் என்று கண்டோம். 1972 பிப்ரவரியில் என்னையும் அழைத்துக் கொண்டு தமிழ் நாடு வந்தார் தந்தை செல்வநாயகம். டாக்டர் இரா. ஜனார்த்தனம், மறைந்த திரு. ஆ. இராசரத்தினம், திரு மணவைத்தம்பி, ஆகியோர் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் முதல் எல்லா அமைச்சர்களையும் தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத், அன்று தி.மு.க. பொருளாளராக இருந்த திரு.எம்.ஜி.ஆர். போன்ற அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர்கள் முதலிய எல்லோரையும் பார்த்து இலங்கையில் தமிழ் மக்களின் வரலாறு, இன்று எழுந்துள்ள பிரச்சனைகள், அவை ட்ர எமது கோரிக்கைகள் ஆகியவற்றை விளக்க வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தனர். புதுடெல்லி செல்ல வேண்டும், பாரதப் பிரதமரைப் பார்த்து வங்க தேச மக்களின் உரிமைக்கு உதவியது போல ஈழத் தமிழ் மக்களுக்கும் உதவிடக் கோர வேண்டும் என்று தந்தை செல்வா விரும்பினார். ஆனால் அதற்கான வாய்ப்போ, வசதியோ அவருக்கு ஏற்படவில்லை.

இந்திரா காந்தி அம்மையார் இலங்கை வந்த போதும் திரு. செல்வநாயகம் அவரைக் சந்திப்பதற்குச் செய்யப்பட்ட ஒழுங்கு, இலங்கை அரசின் தலையீட்டினால் இரத்துச் செய்யப்பட்டது. 1972-ஆம் ஆண்டு தமிழ் நாடு சென்று திரும்பிய பின் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த யாருக்கும் இந்தியா செல்வதற்கு வெளிச் செல்லும் அனுமதி (Exit Permit) வழங்க இலங்கை அரசு மறுத்துவிட்டது. அதன் பின் 1978-ல்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் எவரும் வெளிநாடு செல்ல முடிந்தது. எனினும் எம் 1972-ம் ஆண்டுத் தமிழகப் பயணம் ஈழத் தமிழர் பிரச்சனை பற்றிய கட்டுரைகள் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவரவும் அவை பற்றிய வாதப் பிரதிவாதங்கள் ஏற்படவும் வழி வகுத்தது. ஆனால் மத்திய ஆட்சியில் இலங்கை அரசை திருப்தி செய்யும் கொள்கையே பின்பற்றப்பட்டு வந்தது. 1975-ம் ஆண்டு திரு. மு. கருணாநிதி அவர்களின் தி.மு.க. அரசு அவசரகாலச்சட்டத்தின் கீழ் கலைக்கப்பட்டபோது, அந்த அரசின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் ஒன்று, இலங்கையின் உள்நாட்டு அரசியலில் தமிழ் மக்களுக்குச் சார்பாகத்



தலையிட்டனர் என்பதாகும். இதே காலகட்டத்தில் கச்சட்வை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுக்கும் ஒப்பந்தமும் கையெழுத்தானது.

### பிரதமர் மொரார்ஜி தேசாய் அரசின் கொள்கை

1977-ம் ஆண்டு இலங்கையில் ஜயவர்த்தனா அரசும் டெல்லியில் மொரார்ஜி தேசாய் அரசும் ஆட்சிக்கு வந்தன. இரண்டும் வலதுசாரி அரசுகள். இரு பிரதமர்களுக்குமிடையில் கருத்தொற்றுமையும் நட்புறவும் நிலவியது. 1978-இல் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த பிரதமர் மொரார்ஜி தேசாயை, எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நான் சந்திதது இலங்கைத் தமிழரின் நிலை, 1977-ம் ஆண்டு நடைபெற்ற தமிழருக்கு எதிரான தாக்குதல்கள், நாம் தமிழ் ஈழம் கோருவதற்கான காரணங்கள் ஆகியவற்றை விளக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதனால் 1979-ல் நானும் என் மனைவியும் தமிழ் நாட்டுக்கும் டெல்லிக்கும் சென்றபோது அரச விருந்தினராக வரவேற்கப்பட்டோம். தமிழ் நாடு முழுவதும் எல்லா கட்சியினராலும் வரவேற்கப்பட்டு லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் எம் நிலையை எடுத்து விளக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றோம். புதுடெல்லி சென்று பிரதமர் மொரார்ஜி தேசாயையும் மற்றும் அமைச்சர்களையும் பார்த்துப் பேசினேன். அவர் அப்போது ஆச்சரியமான ஓர் யோசனையை வெளியிட்டார். இலங்கை அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் எழுந்துள்ள பிரச்சனையில் தான் மத்தியஸ்தம் செய்யத் தயாராய் இருப்பதாகக் கூறினார். இந்தியாவின் தலையீட்டை வேண்டி நின்ற நாம் அதை ஏற்றுக் கொண்டோம். ஆனால் இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த டெல்லி விஜயத்தை பயன்படுத்தி அப்போது பதவி இழந்து, மகன் சஞ்சய் காந்திக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், மிகுந்த துன்பத்தோடு இருந்த இந்திரா காந்தியை என் மனைவியும் நானும் சென்று பார்த்தோம். இச்சந்திப்புக்கு அப்போது இந்திரா காங்கிரஸ் உறுப்பினராக இருந்த திரு. நெடுமாறன் ஏற்பாடு செய்தார். ஒன்றரை மணித்தியாலங்களுக்கு மேல் நடந்த இச்சந்திப்பின் பலனாக இலங்கைத் தமிழர் பிரச்சனை பற்றி மாத்திரமல்ல, ஜெயவர்ந்தனா அரசாங்கத்தின் ஏகாதிபத்திய சார்புப் போக்குப் பற்றியும் திருமதி காந்தி சரியான விளக்கம் பெற்றார் என்று நம்புகிறேன். அன்று அவர் காட்டிய அனுதாபம் அவர் படுகொலை செய்யப்படும்வரை நிலைத்திருந்தது. அவர் ஜெயவர்த்தனா அரசின் இந்திய விரோதக்

கொள்கையை மாத்திரம் அல்ல இந்திரா விரோதப்போக்கையும் நன்கு புரிந்து கொண்டார். இப்பிரயாணத்தின் பின் இலங்கைப் பாராளுமன்றத்தில் அமைச்சராயிருந்த சிறில் மத்தியூ கொண்டு வந்த ஒத்திவைப்பும் பிரேரணையும் என் மனைவியையும், என்னையும் உச்சரிக்க முடியாத வார்த்தைகளால் திட்டியதும் இலங்கை அரசின் ஆத்திரத்தை வெளிப்படுத்தின.

**1980–ல் மீண்டும் இந்திரா காந்தி ஆட்சி :**

திருமதி இந்திரா காந்தி 1980–ஆம் ஆண்டுத் தேர்தலில் மீண்டும் பிரதமராக வந்தார். அவரைச் சந்தித்து ஏறத்தாழ இரண்டு மணித்தியாலம் உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் தமது அனுதாபத்தை வெளிப்படையாகவே கூறினார். ஆக்கபூர்வமான பல ஆலோசனைகளையும் தந்தார். 1981–82–ஆம் ஆண்டுகளிலும் அவரையும் அவருடைய அரசின் வெளியுறவு அமைச்சராக இருந்த திரு. நரசிம்மராவ் அவர்களையும் சந்தித்து விரிவாகப் பேசினேன். இதற்கிடையில் இலங்கை அரசின் அடக்குமுறையினால் இலங்கையை விட்டு வெளியேறி தமிழ்நாட்டில் வாழத் தொடங்கிய ட்விரவாத தமிழ் இளைஞர்களின் பிரச்சாரங்களும், செயற்பாடுகளும் தமிழ் நாட்டில் ஈழத்தமிழர்களின் துன்பங்களை ஒட்டி ஆழ்ந்த அனுதாபத்தையும் உணர்ச்சி வேகத்தையும் ஏற்படுத்தின. 1981–ஆம் ஆண்டு யாழ் நூலகம் எரிக்கப்பட்டதும், தமிழ் நாட்டிலிருந்து கதிர்காம யாத்திரை வந்த தனபதியின் கொலை போன்ற சம்பவங்களும் தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் கொதிப்பை ஏற்படுத்தத் தொடங்கின. 1972–ஆம் ஆண்டு தந்தை செல்வநாயகம் பெற விரும்பிய தமிழ்நாட்டு மக்களின் உணர்ச்சி பூர்வமான ஆதரவும், மத்திய அரசின் அனுதாபமும் 1982–ஆம் ஆண்டில் பூரணமாக எமக்குக் கிடைக்கத் துவங்கின.

இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை இந்த நிலைப்பாட்டை மேலும் உறுதி செய்வதாக அமைந்தது. திருகோணமலையில் ஆங்கிலேயர் விட்டுச் சென்ற எண்ணெய்க் கொள்கலங்களை ஓர் அமெரிக்க நிறுவனத்திற்குக் குத்தகைக்குவிட இலங்கை அரசு மேற்கொண்ட முயற்சியைப் பாராளுமன்றத்தில் எமது உறுப்பினர்கள் அம்பலப்படுத்தினர். இதன் விபரங்களை இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தினோம். இந்துமாக்கடல் அமைதிப் பிராந்தியக் கொள்கைக்கு எதிராக இலங்கை அரசு செயல்படுகிறது என்ற கருத்து இந்தியாவில் வளர்ந்தது.



**அவசரக்கால சட்ட விதிக்கு இந்திய அரகின் கண்டனம்.**

1983–ம் ஆண்டு ஜுன் மாதம் இலங்கை அரசு அவசர காலச்சட்டத்தின் கீழ் சில விதிகளை ஆக்கியது. இவை தமிழ் இளைஞர்களுக்கு எதிராகப் பயன்படுத்துவதற்கு என்றே ஆக்கப்பட்டவை. போலீஸ், இராணுவ நடவடிக்கையினால் மரணமடைந்தவரின் பிரேதங்களை வைத்திய பரிசோத னையோ, மரண விசாரணையோ இன்றி அடக்கம் செய்ய அதிகாரம் வழங்கும் சட்டவிதிகளே இவை. தங்குதடையின்றி தமிழ் இளைஞர்களைக் கொன்று குவிக்க திறந்த அனுமதிப் பத்திரமே இச்சட்டம். மனித உரிமைச் சாசனத்தையே முற்றாகப் புறக்கணிக்கும் இந்த அவசர கால சட்டவிதியை ஒட்டி இந்திய அரசு தனது கவலையை, டெல்லியில் உள்ள இலங்கைத் தூதரை அழைத்து தெரிவித்தது. இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடர்ந்து நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிராக இந்தியா முதன் முறையாக குரல் எழுப்பியது. இந்த நேரத்தில் தான் இலங்கையின் உள்நாட்டு விஷயத்தில் இந்தியா அத்துமீறித் தலையிடுகின்றது என்று ஆவேச குரல் இலங்கை பாராளுமன்றத்தில் ஒலித்தது. அப்போது பாராளுமன்றத்தில் இருந்த தமிழர் விடுதலை கூட்டணி உறுப்பினர்கள் அதற்கு ஆணித்தரமான பதில் அளித்தனர். வியட்நாமில் பௌத்த மதத்தவர் கொல்லப்பட்டபோது அதைக் கண்டிப்பதற்கு இலங்கை அரசுக்கு உரிமை உண்டாயின் இலங்கையில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படும்போது அதை எதிர்த்து இந்தியா குரல் கொடுப்பதில் என்ன தவறு என்று கேட்டோம். இதுவரை தட்டிக்கேட்க யாரும் அற்ற நிலையில் இனக்கொலைக்கு ஆளாக்கப்பட்டு வந்த இலங்கைத் தமிழ் மக்களுக்காகத் தலையிட இந்தியா தயாராகி விட்டது என்ற நம்பிக்கை தமிழ் மக்களின் உள்ளங்களில் துளிர்க்கத் தொடங்கியது.

**1983–ஜூலை தமிழ் இன சம்ஹாரமும் நரசிம்மராவ் வருகையும்**

1956–முதல் தமிழ் மக்கள் பல தடவை சிங்கள இன வெறியாட்டத்திற்குப் பலியாகி வந்திருக்கின்றனர். 1956, 1958, 1961, 1977, 1979, 1981 இப்படி நூற்றுக் கணக்கில் தமிழ் மக்களைப் பலிகொண்ட கலவரங்கள் பல நடந்தேறின. 1958–லும், 1977–ம், 1981–ம் ஆண்டுகளிலும் தமிழ் நாட்டில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், கண்டன ஊர்வலங்கள் நடைபெற்றன. ஆனால் மத்திய அரசு மவுனம் சாதித்தது. முன்பு நடந்த படுகொலைகளை எல்லாம் மிஞ்சிய வகையில் 1983 ஜுன், ஜூலை, ஆகஸ்டில் நடைபெற்ற தமிழினப் படுகொலையில் ஏறத்தாழ மூவாயிரம் தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டனர்; பல்லாயிரம் பேர்

படுகாயமுற்றனர்; இலட்சக்கணக்கான பேர் வீடிழந்து அகதிகளாக முகாம்களில் தஞ்சம் புகுந்தனர்; பல கோடிக் கணக்கான ரூபாய் பெறுமதியுள்ள தமிழ்மக்களின் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன; ட்யிட்டு எரித்து நாசமாக்கப்பட்டன. அரசாங்கத்திலிருந்த அமைச்சர்கள் சிலரே திட்டமிட்டு நடத்திய இந்த தமிழின சம்ஹாரத்தைத் தடுக்க யாரும் முயற்சிக்கவில்லை. போலீசும், ராணுவமும் தாமே தமிழ் மக்களைத் தாக்குவதில் ஈடுபட்டனர், அல்லது சிங்களக் குண்டர்கள் தாக்கப் பார்த்து நின்றனர். இந்தியத் துணைத்தூதரின் மோட்டார் வண்டி நொறுக்கப்பட்டது. இந்தியன் ஓவர்ஸிஸ் வங்கி கிளை எரிக்கப்பட்டது.

இந்த சூழ்நிலையில் இலங்கைக்குத் தன் வெளிநாட்டு அமைச்சர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களை அனுப்பினார் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி. ஜூலை 29–ந் திகதி இந்திய அமைச்சரின் வருகைக்குப் பின்தான் ஜனாதிபதி ஜயவர்த்தனா நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தார். இதைத் தொடர்ந்து இந்திரா அம்மையாரைத் திருப்திப்படுத்து வதற்காகத் தன் சகோதரர் திரு. எச். டபிள்யூ. ஜயவர்த்தனாவை டெல்லிக்கு அனுப்பிவைத்தார். இச்சந்தர்ப்பத்தில் தான் பாரதப்பிரதமர் இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இந்தியாவின் நல்லெண்ணச் சேவையை நல்க முன்வந்தார். ஜனாதிபதியோடு தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேசியபின் இலங்கை அரசு அச்சேவையை ஏற்றுக்கொள்வதாக திரு.எச்.டபிள்யூ, ஜயவர்த்தனா அறிவித்தார். தமிழ் மக்களின் உண்மை நிலையைப் பாரதப் பிரதமருக்கு எடுத்து விளக்குவதற்காக நான் டெல்லி செல்ல வேண்டுமென்று நமது மக்களில் பலர் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் மாறுவேடத்தில் கொழும்பு சென்று ஆகஸ்ட் 13–ந் திகதி தமிழ் நாடு வந்து சேர்ந்தேன். மக்கள் துன்பப்பட அவர்களைக் கைவிட்டு என்னைக் காத்துக் கொள்ள நான் இந்தியா வரவில்லை. இந்தியாவின் உதவியோடு ஏற்கனவே நாம் பாரதப்பிரதமரோடு, சில ஆண்டுகளாக ஏற்படுத்திய தொடர்பைப் பயன்படுத்தி காலத்திற்குக் காலம் பலிக்களத்தில் நிறுத்தப்படும் இலங்கை தமிழ் மக்களின் இன்னலுக்கு ஓர் நிரந்தரத் தீர்வுகாண வேண்டுமென்னும் ஒரே உறுதியோடுதான் இந்தியா வந்தேன்.

தமிழ் நாட்டு முதலைமைச்சர், ஏனைய அமைச்சர்கள், தி.மு.க. தலைவர்கள், ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோருடனும் இரவோடிரவாகப் பேசி அவர்கள் ஆலோசனைகளைப் பெற்று 14–ந் திகதி காலையே டெல்லி போனேன். அன்று பகல் 11 மணிக்கே பாரதப்பிரதமரைப் பார்த்து ஒன்றரை மணித்தியாலங்களுக்கு மேலாக எம்மக்கள் நிலைபற்றி எடுத்துக்கூறி, வங்கதேச மக்களைக் காத்தது போல ஈழத்தமிழ் மக்களையும் காக்கவேண்டுமென்று கோரினேன்.



### அணி சேரா நாடுகளின் தலைவி

திருமதி இந்திரா காந்தி அணிசேரா நாடுகளின் தலைவியாகவும் விளங்கினார். இலங்கையும் ஓர் அணிசேரா நாடு. இலங்கையின் உள்நாட்டு விஷயத்தில் அணிசேரா நாடுகளின் தலைமை நாடான இந்தியா தலையிடுவதற்கு ஆட்சேபம் தெரிவித்து மலேசியா அவருக்குக் கடிதம் அனுப்பியிருந்தது. இலங்கையில் நடைபெறும் தமிழ் மக்களுக் கெதிரான இனப் படுகொலையை, மனித உரிமை மீறல்களை விளக்கி அணிசேரா நாடுகளுக்கெல்லாம் கடிதம் எழுதுமாறு பாரதப் பிரதமர் அவர்களே கேட்டுக் கொண்டார். அன்று டெல்லி வந்து சேர்ந்த டாக்டர். நீலன் திருச்செல்வத்தின் உதவியோடு அன்று பிற்பகல் ஒரு விரிவான கடிதம் தயாரித்து அதனை அணிசேரா நாடுகளின் தலைவி என்ற முறையில் திருமதி இந்திரா காந்தியின் கையில் கொடுத்து ஏனைய நாடுகளுக்கும் அனுப்பினோம்.

அடுத்த நாள் ஆகஸ்ட் 15–ந் திகதி இந்திய சுதந்திர தினம். அன்று மாலை இந்திய பாராளுமன்றக் கட்டிடத்தில் பாராளுமன்றத்துறை அமைச்சர் திரு. பூட்டாசிங் தலைமையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோரதும் கூட்டம் நடைபெற்றது. இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக அவர்கள் மத்தியில் உரையாற்றினேன். அக்கூட்டம் முடிந்து சுதந்திரதின வைபவத்திற்கு நான் சென்றபோது, திருமதி இந்திரா காந்தி கூறியது என்னை நெகிழச் செய்தது. எதிர்கட்சித் தலைவர்களோடு உங்கள் சந்திப்பு மிக வெற்றிகரமாக அமைந்தது என்று அறிகின்றேன். இது என் பளுவை வெகுவாகக் குறைத்துவிட்டது என்று கூறினார். எமது துன்பத்தைத் ட்ர்ப்பதில் எத்துணை அக்கறை அவர் கொண்டிருந்தார் என்பதற்கு இதைவிட எடுத்துக்காட்டு வேண்டுமா? சுதந்திரதின விழாவில் பிரதம விருந்தினராக வந்திருந்த சோவியத் துணைப் பிரதமரோடு என்னையும் அமரவைத்து, இலங்கைத் தமிழர் பிரச்சனையே இச்சுதந்திர தினத்தில் இந்தியாவின் தலையாய பிரச்சனையென்று அத்தனை விருந்தினரையும் உணரச் செய்தார்.

ஆகஸ்ட் 16–ந் திகதி டெல்லியில் 200–க்கும் மேற்பட்ட அகில உலக பத்திரிகையாளர்களை கொண்ட ஒரு மாநாடு கூட்டப்பட்டது. பல மணித்தியாலங்கள் அவர்கள் கேள்விகளுக்கெல்லாம் விடையளித்து எமது பிரச்சனையையும், அதற்கான பரிகாரத்தையும் பாரறியச் செய்ய ஒரு வாய்ப்பை இந்திய அரசே ஏற்படுத்தி கொடுத்தது. அப்பத்திரிகையாளர் மாநாட்டுக்கு டாக்டர். நீலன் திருச்செல்வம் தலைமை தாங்கினார். அதே ராஜ்யசபையில் திருமதி இந்திரா காந்தி பேசும்போது இலங்கையில் இனப்படுகொலை (Genocide) நடப்பதாகக் கூறி உலகின் முன் இலங்கையை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தினார். டெல்லியிலிருந்து சென்னை திரும்பிய அன்றே கலைவாணர் அரங்கில், தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகர் திரு. க.ராஜாராம் தலைமையில் நான் ஆற்றிய உரை பொதுநல நாடுகளின் பாராளுமன்றக் குழுக்கள் எல்லாவற்றிற்கும், தமிழ்நாடு சட்டமன்ற குழுவின் சார்பில் அதன் தலைவர் என்ற முறையில், திரு. க. ராஜாராம் அவர்களால் அனுப்பிவைக்கப் பட்டது. இப்படியே உலக நாடுகளுக்கெல்லாம் எம் நிலையை விளக்க நாம் எடுத்த முயற்சி, மக்கள் துன்பப்பட ஓடிப் பதுங்கும் செயலா, அல்லது துன்பம் துடைக்க இந்திய உதவியை, அதற்கு உலகின் ஆதரவை திரட்டும் முயற்சியா என்பதை நம்மக்கள் நிச்சயம் அறிந்தே இருக்கின்றனர்.

### ஜி. பார்த்தசாரதி தூது : 1983

இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு ஓர் நிரந்தரத் தீர்வு காண்பதற்கு தன் நல்லெண்ணச்சேவையை வழங்க முன்வந்த திருமதி. இந்திரா காந்தி தாமதமின்றி அதற்குச் செயலுருக் கொடுத்தார். பழுத்த ராஜதந்திரியான திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களை 1983 ஆகஸ்ட் 25–ந் திகதி கொழும்புக்கு அனுப்பினார். அவர் அங்கு சென்ற அடுத்த நாள் நாமும் கொழும்பு செல்ல வேண்டுமென்று பாரதப் பிரதமர் கேட்டுக் கொண்டார். நானும் திரு. சம்பந்தனும் சென்னையிலிருந்து செல் யாழ்ப்பாணத்திலிருந்து தலைவர் திரு. மு. சிவசிதம்பரமும், வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து திரு. தா. சிவசிதம்பரம், திரு. ஆனந்தசங்கரி ஆகியோரும் கொழும்பு வந்து சேர்ந்தனர். கொழும்பிலிருந்த டாக்டர். நீலன் திருச்செல்வமும் சேர்ந்து, எம் எல்லோருடனும் பல மணித்தியாலங்கள் திரு. பார்த்தசாரதி விவாதித்தபின் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. இலங்கை, இந்தியாவைப் போன்ற பல மாநிலங்ளைக் கொண்ட ஓர் ஐக்கிய ராஜ்ஜியமாக வேண்டுமென்றும் அதில் இந்திய மாநிலம் ஒன்றிற்கு இருக்கும் அதிகாரங்களைக் கொண்ட ஒரு தமிழ் மொழிவாரி



மாநிலம் வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைத்து ஆக்கப்பட வேண்டுமென்றும், அந்த அதிகாரங்களை வரையறுத்துக் குறிப்பிட்டு அப்பத்திரம் தயாரிக்கப்பட்டது. சுதந்திரத் தமிழ் ஈழத்திற்குக் குறைந்த கோரிக்கையை நாம் முன்வைக்க முடியாதென்பதை அவருக்கு நாம் தெளிவுபடுத்தினோம்.

அப்பத்திரம் எமது கருத்தாக இலங்கை அரசுக்குக் கொடுக்கப்படமாட்டாது என்றும் அக்கருத்துக்களுக்கு யாரும் பொறுப்பேற்கத் தேவையில்லாத பத்திரம் (Non paper) அது என்றும் திரு. பார்த்தசாரதி விளக்கினார். நாலு ஆண்டுகளுக்கு முன் இந்திய சமாதான முயற்சியின் முதல் நடவடிக்கையாக அவர் தயாரித்த பத்திரத்தில் கூறிய திட்டமே இன்று இந்தியா – இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையாக இருக்கிறது. ஆனால் அன்று இலங்கை அரசு அத்திட்டத்திற்கு வெகுதொலைவில் நின்றது. தமது முதல் முயற்சியில் தோல்வி கண்டு திரு. பார்த்தசாரதி இந்தியா திரும்பினார்.

### உலக நாடுகளில் இலங்கைத் தமிழர் பிரச்சனை:

நாம் டெல்லி திரும்பியபோது மேற்கு நாடுகளுக்குச் சென்று இலங்கையில் நடக்கும் இனப்படுகொலையை நாம் விளக்க வேண்டுமென்று திருமதி காந்தி கூறிய ஆலோசனையை ஏற்று நான் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, நோர்வே, அமெரிக்கா, கனடா முதலிய நாடுகளுக்குச் சென்றேன். அந்த நாடுகளின் வெளிநாட்டு அமைச்சுகளோடு, அரசியல் தலைவர்களோடு உரையாடினோம் ஐ. நா. சபைக்குத் திருமதி காந்தி சென்றிருந்தார். அங்கு எல்லா நாட்டுத் தலைவர்களோடும் அவர் எடுத்துப் பேசினார். அவருடன் ஐ. நா. சபைக்குச் சென்றிருந்த திரு. பார்த்தசாரதியின் அழைப்பின் பேரில் நானும் நியூயோர்க்கில் அவர்களோடு சேர்ந்தேன்.

இந்தியத் தூதுக் குழுவில் இடம் பெற்றிருந்த தமிழ் நாட்டு அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் ஐ. நா. சபையில் எமது நிலையை எடுத்து விளக்கினார். இந்த நாலு ஆண்டுகளில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் எத்தனை நாடுகளுக்கு எத்தனை பயணங்களை மேற்கொண்டு அரசியல் தலைவர்களோடு, பத்திரிகை, வானொலி, தொலைகாட்சி ஆகிய மக்கள் தொடர்புச் சாதனங்களோடு, மனித உரிமை இயக்கங்களோடு தொடர்பு கொண்டனர், பல்கலைக்கழகங்கள், கருத்தரங்குகள், மாநாடுகள் ஆகியவற்றில் எத்தனை தடவை உரையாற்றினர் என்பதை உணர்ந்தால் எமது மக்கள்

துன்பப்பட நாம் உறங்கிக் கொண்டிருந்தோம் என்று எவராவது கூறத்துணிவார்களா? எமது குரல் கேட்காத நாடில்லை. எமது செய்திகளைத் தாங்காத பத்திரிகைகள் இல்லை என்று கூறக்கூடிய அளவுக்கு எமது துன்பம் ட்ர்க்க உலக நாடுகளின் ஆதரவைப் பெற முயன்றோம். நாம் மட்டும்தான் இத்துறையில் உழைத்தோம் என்று நான் கூறவில்லை. வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மக்கள் பலர் இத்துறையில் பெருமுயற்சி செய்தனர். எம்மை அழைத்து தம் நாட்டு அரசுகளோடு உரையாடச் செய்தனர். 1985–ம் ஆண்டு என்னை ஆஸ்திரேலியாவிற்னு அழைத்திருந்த தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் சி.ஜே. எலியசர் என்னிடம் கூறினார், இதுவரை எமக்குத் திறவாத பல கதவுகள் நீங்கள் வந்தபின் திறந்தன என்று. தமிழில் மாத்திரம் பிரசுரங்களை வெளியிட்டு, நம்மவர்கள் மத்தியில் அவற்றை நாம் பரப்பவில்லை. அந்நிய அரசுகளோடு, வெளி நாட்டு நிறுவனங்களோடுதான் எமது பிரச்சாரம் அவசியமென்று நாம் கருதினோம். இந்த நோக்கத்தோடு நாம் வெளியிட்ட பிரசுரங்களும் ஆங்கிலத்திலேயே அமைந்தன.

### அட்டவணை இ (ANNEXURE 'C')

ஐ. நா. சபையிலிருந்து திரும்பிய திரு. பார்த்தசாரதி மீண்டும் கொழும்பு சென்றார். திரு. ஜயவர்த்தனாவை சற்று இளக வைத்தார். எம்மை டெல்லி திரும்புமாறு அழைத்தார். பொதுநல நாடுகளின் ஆட்சித் தலைவர்களின் மாநாட்டுக்கு டெல்லி வந்த திரு. ஜயவர்த்தனாவோடு திரு. பார்த்தசாரதியும் திருமதி இந்திராகாந்தியும் பல தடவை பேசினர். நம் எல்லோருடனும் பல மணித்தியாலங்கள் ஆலோசனை நடத்தினர். இறுதியில் 1983 டிசெம்பர் 1–ந் திகதி காலை 8.30 மணிக்கு சப்தார்ஜங் றோட்டிலுள்ள தமது வீட்டிற்கு எம்மை அழைத்த பாரதப் பிரதமர் கூறினார்: இந்தத் திட்டத்தை சர்வகட்சிக் கூட்டத்தில் தான் எப்படியாவது ஏற்கச்செய்து நடைமுறைப் படுத்துவதாக ஜயவர்த்தனா எனக்கு உறுதி தந்திருக்கிறார். வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பை நீங்கள் சர்வகட்சிக்கூட்டத்தின் முன்வைத்து வாதாடினால் தான் எதிர்க்கப் போவதில்லை என்றும், அங்கு ஏற்றுக்கொள்ளப்படும் சூழ்நிலை வந்தால் தானும் ஏற்றுக்கொள்வதாகவும் சொல்கிறார். என் சொல்லை ஏற்று அவருக்கு ஒரு சந்தர்ப்பத்தை நீங்கள் கொடுக்க வேண்டும். சர்வகட்சிக் கூட்டத்திற்குச் செல்ல வேண்டும்



திருமதி காந்தியின் இந்த வேண்டுகோளுக்கு இணங்கி நாம் சர்வகட்சிக் கூட்டத்திற்குக் கொழும்பு சென்றோம். தான் ஏற்ற அட்டவணை இ யை நடைமுறைப்படுத்துவேன் என்று பாரதப் பிரதமருக்கு வாக்குறுதி தந்த பத்திரத்தைப் புத்தமத குருமாரும், தன் சொந்தப் பிரதமரும் எதிர்த்தபோது திரு. ஜெயவர்த்தனா அதைக் காற்றில் பறக்கவிட்டார்.

### பிரதமர் இந்திர மறைவு (1984)

அப்போதே நாம் சர்வகட்சிக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்யப் போவதாக இந்தியாவிற்கு தெரிவித்தோம். தொடர்ந்து முயற்சி செய்யுமாறு திரு. பார்த்தசாரதி கோட்டுக் கொண்டபடி நாம் அங்கு தொடர்ந்தோம். இதற்குத் ட்ர்வுகாண வேறு திட்டங்களை திருமதி காந்தி யோசித்துக் கொண்டிருந்த போது பஞ்சாப் பிரச்சனை வெடித்தது. திருமதி இந்திராகாந்தியின் உயிரைக் குடித்தது. விதிகெட்ட தமிழன் கதியற்றுப் போனான். இந்தப் பயங்கரப்படுகொலை நடந்திராவிட்டால் வரலாறே வேறுவிதமாக இருந்திருக்கும்.

அன்னை இந்திராவின் மரணச் சடங்கின் அடுத்த நாளே திரு. ராஜீவ் காந்தியை அவரது இல்லத்தில் சந்தித்தோம். எனது அன்னை உங்கள் பிரச்சனையில் என்ன கொள்கையைக் கொண்டிருந்தாரோ அதையே நானும் பின்பற்றுவேன், உங்களைக் கைவிடமாட்டேன் என்று உறுதி கூறினார். சர்வகட்சிக் கூட்டத்தில் தொடர்ந்து பங்கு பெறுமாறு அவரும் திரு. பார்த்தசாரதியும் கேட்டுக் கொண்டபடி தொடர்ந்து கலந்து கொண்டோம். நாம் ஏற்கமுடியாத திட்டத்தை திரு. ஜயவர்த்தனா முன் வைத்தபோது திட்டத்தை அதை நிராகரித்தோம். சர்வகட்சிக் கூட்டமும் முடிவுக்கு வந்தது. எமது முயற்சிகளை முதலிலிருந்து மீண்டும் ஆரம்பிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

### இந்தியப் பொதுத் தேர்தல்:

பிரதமர் பதவியை ஏற்றவுடன் திரு. ராஜீவ் காந்தி மக்கள் அங்கீகாரத்தைப் பெறுவதற்காகப் பொதுத் தேர்தல் நடத்தினார். அமோக வெற்றி பெற்றார். தேர்தல் முடிந்த சில நாட்களில் மீண்டும் பிரதமரைச் சந்தித்தோம். எமது விடையத்தில் இந்திய அரசாங்கத்தின் கொள்கையில் மாற்றம் இருக்க மாட்டாது என்று உறுதியளித்ததோடு ஆக்கப்பூர்வமான சில யோசனைகளையும் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்தார். அச்சந்திப்பைத் தொடர்ந்து தமிழ்இனவிடுதலைக்காக உழைக்கும் எல்லா இயக்கங்களையும்

ஒன்று சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டோம். ஒரு இயக்கம் தவிர ஏனைய இயக்கங்களை 1985 பிப்ரவரி 28–ஆம் திகதி ஓர் இணைப்புக் குழுவில் ஒன்று படுத்திச் சேராதிருந்த இயக்கத்திற்கு எல்லோரும் கையொப்பமிட்டு ஒரு வேண்டுகோள் அனுப்பினோம். அந்த முயற்சி தோல்வி கண்டது மாத்திரமின்றி இணைந்த இயக்கங்களிடையிலும் பிணக்கு ஏற்பட்டது. அந்த நேரத்தில் எமது இயக்கங்கள் எல்லாம் ஒன்றுபட்டிருந்தால் வரலாறு வேறுவிதமாக அமைந்திருக்கலாம். தமிழ்இனம் என்றுதான் ஒன்று பட்டிருந்தது?

இந்த நேரத்தில் இந்தியஅரசின் வெளிநாட்டு அமைச்சிலும், வெளிநாட்டுக் கொள்கையிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. திரு. ரொமேஷ் பண்டாரி வெளிநாட்டுச் செயலாளரானார். 1985 மே மாதத்தில் திரு. ராஜீவ் காந்தியை நாம் மீண்டும் சந்தித்தபோது அம்மாற்றம் தெரிந்தது. எமது விடயத்தில் இந்திய அரசின் மூன்று அடிப்படைக் கொள்கைகளை அவர் விளக்கிக் கூறினார்.

1. இராணுவத் தலையீடு சாத்தியமற்றது;

2. நாட்டுப் பிரிவினையை இந்தியா ஏற்றுக் கொள்ளாது;

3. இந்தியாவில் ஒரு மாநிலத்தின் அதிகாரத்திற்கு கூடிய அதிகாரத்தை இலங்கையில் தமிழ் மாநிலத்திற்கு வழங்குமாறு இந்தியா கோரமுடியாது.

என்பவையே அம்மூன்று கொள்கைகளாகும். இந்த கொள்கைகளின் அடிப்படையில் கொழும்பு சென்ற திரு. ரொமேஷ் பண்டாரி பேச்சு வார்த்தை நடத்தினார். வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் இணைக்கும்படி இந்தியா வற்புறுத்தமாட்டாது என்று இலங்கை அரசுக்கு கூறினார். எமக்கு அறிவித்தல் ஏதுமின்றி போராளிக் குழுக்கள் டெல்லிக்கு அழைக்கப்பட்டனர். போர் நிறுத்தத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. இலங்கையிலேயே அமைந்த ஓர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு போராளி இயக்கங்களிடமிருந்து சில தமிழருடைய பெயர்கள் பெறப்பட்டன. இதன் பின்தான் இவ்விடயங்கள் எமக்குத் தெரிவிக்கப்பட்டன. போர் நிறுத்தம் முறையாக நடைபெற ஓர் வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழு வேண்டும் என்று கேட்டோம். இந்தியக் குழுவை அனுப்ப முடியாவிட்டால் சர்வதேசச் செஞ்சிலுவை சங்கம் அல்லது சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற ஒரு நிறுவனத்தின் பிரதிநிதிகளாவது கண்காணிப்பு சபையில் இருக்க வேண்டும்



என்று வற்புறுத்தினோம். அது நடைபெறவில்லை. ஓர் உள்நாட்டுக் குழுவே போராளிகள் கூறிய பட்டியலில் இருந்து மூன்று தமிழர்களையும் சேர்த்து நியமித்தது.

**திம்பு மாநாடு (1985)**

பூட்டான் நாட்டின் தலைநகரான திம்புவில், முதல்முறையாக ஐந்து விடுதலைப் போராளிகளின் இயக்கப் பிரதிநிதிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகளும் இலங்கை அரசங்கத்தின் பிரதிநிதிகளோடு சமாதானப்பேச்சு வார்த்தை நடத்துவதற்கு, 1985 ஜூலையில் மாநாடு கூட்டப் பெற்றது. 1984 டிசெம்பரில் கொழும்பில், சர்வகட்சி மாநாட்டில் இலங்கை அரசு முன் வைத்து, தமிழர் விடுதலைக் கூட்டணியால் நிராகரிக்கப்பட்ட திட்டத்திற்கும் குறைந்த ஓர் திட்டத்தை இலங்கை அரசின் பிரதிநிதிகள் திம்பு மாநாட்டில் சமர்ப்பித்தனர்.

தமிழ் குழுக்கள் அத்தனையும் ஒருமுகமாக நாலு அடிப்படைக் கொள்கைகளை முன்வைத்து அவற்றின் அடிப்படையிலேயே இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வு அமையவேண்டுமென்று கூறினோம் :

1. தமிழ் மக்களை ஓர் தனித்தேசிய இனமாக அங்கீகரித்தல்.

2. தமிழ் இனத்தின் தாயகத்தை அங்கீகரித்தல்.

3. தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளுதல்.

4. இலங்கை வாழ் தமிழ் மக்கள் எல்லோருக்கும் குடியுரிமை வழங்குதல் இவையே நான்கு அடிப்படைக் கொள்கைகளுமாகும்.

1951–ஆம் ஆண்டு இலங்கை தமிழரசுக் கட்சியின் முதலாவது மகாநாடு திருகோணமலையில் நடைபெற்ற போது நிறை வேற்றப்பட்ட ட்ர்மானங்கள் இதே அடிப்படையில் அமைந்ததை நாம் அங்கு சுட்டிக்காட்டி இவற்றை ஏற்ற ஓர் திட்டத்தை இலங்கை அரசு முன்வைக்க வேண்டுமென்று வற்புறுத்தினோம்.

1985 ஆகஸ்ட் மாதத்தில் இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தை திம்புவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, 16–ந் திகதி அதிகாலை வவுனியாவில், சிங்கள ராணுவம் அப்பாவித் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையானவர்களைப் படுகொலை செய்த செய்தி பி.பி.சி. வானொலி மூலம் எமக்குக் கிடைத்தது. அத்தனை தமிழ்ப் பிரதிநிதிகளும் மாநாட்டிலிருந்து வெளிநடப்புச் செய்தோம்.

ஆறு அமைப்புகளின் பிரதிநிதிகளும் கையொப்பமிட்டு எமது மக்கள் படுகொலை செய்யப்படும்போது அந்த அரசாங்கத்தின் பிரதிநிதிகளோடு நாம் பேச முடியாதென்று அறிவித்தோம். சமாதானத் தீர்வுக்கான இரண்டாவது முயற்சியான திம்பு மாநாடு இத்துடன் முடிவுக்கு வந்தது.

**நாடு கடத்தல் உத்தரவு :**

இதைத் தொடர்ந்து போராளி இயக்கங்களின் தலைவர்களைப் பிரதமர் ராஜீவ் காந்தி பார்க்க விரும்பினார். அவர்கள் செல்லத் தயங்கினர். இந்திய அரசுக்கும், சில இயக்கங்களுக்கும் இடையில் கசப்புணர்வு ஏற்பட்டது. போராளி இயக்கங்களோடு தொடர்புடைய மூன்று தலைவர்கள் இந்தியாவிலிருந்து நாடுகடத்தப் பட்டனர். அந்த செய்தி டெல்லியில் எனக்குக் கிடைத்தவுடன் திரு. பார்த்தசாரதியோடும் திரு. ரொமேஷ் பண்டாரியோடும் தொடர்பு கொண்டு நாடுகடத்தலை நிறுத்துமாறு வேண்டினேன். தமிழ் நாட்டு அரசாங்கம் கேட்டால் பலன் கிடைக்கலாம் என்று அவர்கள் கூறியதன் பேரில் சென்னைக்குத் தொடர்புகொண்டு முயற்சித்தேன். அடுத்தநாள் ஆகஸ்ட் 25-ந் திகதி நானும் திரு. பார்த்தசாரதியும் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்த போது நாடு கடத்தலை நிறுத்தி இயக்கங்களோடு மீண்டும் நல்லுறவை ஏற்படுத்துமாறு வேண்டினேன். ஏற்கனவே அவர்கள் வெளியேற்றப்பட்டு விட்டதாகவும் விரைவில் திரும்புவதற்கு அனுமதி வழங்கப்படும் என்றும் பிரதமர் கூறினார். நாம் இவ்வளவு முயற்சிகள் எடுத்தும் நாடு கடத்தலுக்கு நாமும் உடந்தையாக இருந்ததாகச் சிலர் அப்பட்டமாகக் குற்றம் சுமத்தவும் தயங்கவில்லை. நாம் எவ்வளவு பிரயாசைப்பட்டோம் என்பது திரு. பார்த்தசாரதி அவர்களுக்கு நன்கு தெரியும். திம்பு மாநாட்டில் ஆறு தமிழ் இயக்கங்களும் ஒற்றுமையாக இருந்த நிலைமாறி வேற்றுமைகள் தலைதூக்கத் தொடங்கின.

**தர்மலிங்கம் - ஆலாலசுந்தரம் படுகொலை (1985)**

செப்டம்பர் 2-ந் திகதி மாலை சென்னையில் இருந்த ஓர் இயக்கத்தினருக்கு, அதிர்ச்சி தரும் செய்தி ஒன்று யாழ்ப்பாணத்திலிருந்து கிடைத்தது. திரு. யோகேஸ்வரன் மூலம் இந்தச் செய்தி எமக்கெல்லாம் தெரியவந்தது. திரு. தர்மலிங்கமும், திரு. ஆலாலசுந்தரமும் யாரோ சிலரால் கடத்தி செல்லப் பட்டுவிட்டனர் என்பது அந்த செய்தி ஆகும். அடுத்த நாள் காலையில் இலங்கை வானொலியில், இலங்கையிலிருந்த தமிழர் விடுதலைக்கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் கடத்திச் செல்லப் பட்டதாகவும், திரு. தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் ஆகியோர் கொலை செய்யப்பட்டு அவர்களது சடலங்கள் வீதியில் வீசப்பட்டுக் கிடந்ததாகவும், ஏனையோர் எக்கதியாயினர் என்று தெரியவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. இதற்கு சில மாதங்களுக்கு முன்புதான் அனுராதபுரத்தில் சில சிங்கள மக்கள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நெடுந்தீவிலிருந்து வள்ளத்தில் வந்த 47 தமிழ் மக்கள் இலங்கைக் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டும், பலர் குற்றுயிராகப் படுகாயப்படுத்தப் பட்டும் விடப்பட்டபோது இரவும் பகலும் உழைத்து, மரண விசாரணையின் பின் உடல்களை உரிய இடங்களுக்கு அனுப்பவும், காயமடைந்தோரைக் கவனிக்கவும் ஆலாலசுந்தரம் செய்த சேவைக்கு நன்றி தெரிவித்து தீவுப்பகுதி மக்கள் பத்திரிகையில் செய்தி வெளியிட்டு இருந்தனர்.



1972 ஆம் ஆண்டு முதல் சிறைப்பட்ட தமிழ் இளைஞர் வீடுகளுக்கெல்லாம் தேடிச் சென்று உதவி புரிந்தவர் திரு. தர்மலிங்கம். இவர்களுக்குக் கிடைத்த பரிசு, எம்மவர்களாலேயே படுகொலை செய்யப்பட்டு வீதியில் வீசப்படுதல் தான். கட்சிமாறி ஆட்சியில் சேர்ந்து அமைச்சர் பதவி பெற்றவர்கள் உல்லாசமாக வாழ அன்று முதல் இன்று வரை நின்ற நிலை வழுவாத உத்தமர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். இந்த லட்சணத்தில் நாமெல்லாம் அங்கு வாழாது தமிழ் நாடு சென்றதை மக்கள் மன்னிக்கமாட்டார்கள் என்று கூறப்படுகிறது. அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் சகாக்களை யாராவது பார்த்தாலே விசாரணை. இந்நிலையில் நிராயுதபாணிகளாக நிற்கும் நாம் அங்கு ஓர் மூலையில் முடங்கிக் கிடந்து தமிழ்நாட்டிலிருந்து ஆற்றிய அத்தனை பணிகளையும் ஆற்றி இருக்க முடியுமா?

ஆயுதபாணிகள் ஆயிரம்பேர் தம்மைப் பாதுகாக்க இருப்போரே தம் பாதுகாப்புக்காகப் பெரும்பகுதி நாள் தமிழ் நாட்டிலிருக்கையில், நிராயுதபாணிகளான நாம், சகாக்கள் படுகொலை செய்யப்பட்ட நாம், அங்கிருக்கும் ஏனையோர் இயங்க விடாது தடுக்கப்பட்டதைக் கண்ட நாம், அதே கதியை ஏற்று, மக்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமையை மறந்து, இந்திய அரசோடு, தமிழ்நாட்டு அரசோடு, இங்குள்ள தலைவர்களோடு, உலக நாடுகளோடு, எமது மக்கள் படும் துயரை எடுத்துக் கூறி பரிகாரம் காணத் தவறினால் மக்கள் எம்மை மன்னிப்பார்களா? எது தவறு? அறிவு படைத்தோர் அறிவர்.




இந்திய சுதந்திரதின வரவேற்பு வைபவத்தில்
பிரதமர் இந்திரா காந்தியுடன் தலைவர் அ. அமிர்தலிங்கம்
புதுடில்லி ராஷ்டிரபதி பவன் (1983)






பிரதமர் இந்திரா காந்தியுடன் தலைவர் அ. அமிர்தலிங்கம் (1983)



சென்னையில் இந்திரா காந்தியின் அந்தரங்க செயலாளர்
ஜி. பார்த்தசாரதியுடன் தலைவர் அ. அமிர்தலிங்கம் (1984)



தமிழக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனுடன் (1983)




பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் தலைவர் அ. அமிர்தலிங்கம்





இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு. பி.வி. நரசிம்மராவுடன் தலைவர் அ. அமிர்தலிங்கம்




கொழும்பு அனைத்துக் கட்சிகள் மாநாடு ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன்
தலைவர் அ. அமிர்தலிங்கம் (1984)

இலங்கை – இந்திய ஒப்பந்தம் வந்த வரலாறு




திம்புப் பேச்சுவார்த்தை வரதராஜபெருமாள், மு. சிவசிதம்பரம், பூட்டான் மன்னர், அ. அமிர்தலிங்கம், லோ. கேதீஸ்வரன், இ. இரத்தினசபாபதி (1985)



ஜனாதிபதி ஆரீ. பிரேமதாசவுடன் தலைவர் அ. அமிர்தலிங்கம் (1989)






தமிழ் ஈழ ஆதரவாளர்கள் அமைப்பின் (ரெசோ) மாநாடும் பொதுக் கூட்டமும் ஆந்திர முதலமைச்சர் என். ரி. ராமராவ் உரையாற்றுகிறார் (1985)




மரீனா கடற்கரை உண்ணாவிரதம் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் கல்யாணசுந்தரம் (1987)



ரெசோ மாநாடு. பகுகுணா, நெடுமாறன் (1985)






இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனுடன் தலைவர் அ. அமிர்தலிங்கம் (1938)



மரீனா கடற்கரை உண்ணாவிரதம் (1987)



தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவ ஆக்கிரமிப்பைத் தடுக்க இந்திய மத்திய அரசைத்தலையிடக்கோரி சென்னை, மரீனா கடற்கரையில் உண்ணாவிரதம் (இந்த உண்ணாவிரதத்தின் பின்னரே இந்தியஅரசு கப்பல்களில் யாழ்ப்பணாத்துக்கு அனுப்பிய உணவுப்பொருள்களை இலங்கைக் கடற்படை தடுக்க, இந்தியா விமான மூலம் உணவுப் பொட்டலங்களை இலங்கை வான் பிரதேசத்துள் அத்து றிய பிரவேசித்து விநியோகித்தது (ஒப்பரேசன் பூமாலை) (1987)



இலங்கை – இந்திய ஒப்பந்தம் (1987)





இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர்
சென்னை மரீனா கடற்கரையில் கூட்டமொன்றில் ராஜீவ் காந்தியுடன்
தலைவர் அ. அமிர்தலிங்கம் (1987)

**டெல்லி உடன்படிக்கை :**

இந்த இருதலைவர்களின் மறைவினால் எமக்கு ஈடு செய்யமுடியாத பேரிழப்பு ஏற்பட்டதென்பதை யாரும் மறுக்க முடியாது. யாழ்ப்பாணத்தில் நாளுக்கு நாள் நடைபெறும் சம்பவங்களை எமக்கு ஒவ்வொரு நாளும் தொலைபேசியில் கொடுத்துக் கொண்டிருந்தவர் திரு. ஆலாலசுந்தரம். எமக்கு மாத்திரமன்றி உலக மக்கள் தொடர்புச் சாதனங்களுக்கெல்லாம் யாழ்பாணத்தில் செய்தி நிலையமாக விளங்கியவர் ஆலாலசுந்தரம் என்று இக்கொலைச் செய்தியைப் பிரசுரித்த இங்கிலாந்து கார்டியன் பத்திரிகையே குறிப்பிட்டது. மோட்டார் வண்டி ஓட முடியாவிட்டாலும் கந்தரோடையிலிருந்து சைக்கிளில் யாழ்ப்பாணம் வந்து ஆலாலசுந்தரத்துக்கு ஆலோசனை வழங்கி உறுதுணையாக இருந்தவர் திரு. தர்மலிங்கம். மக்களுக்கு என்ன துன்பம் ஏற்பட்டாலும் தமிழர் விடுதலைக் கூட்டணியை இயங்க விடக்கூடாது என்று யாரோ தீட்டிய திட்டத்திற்கு யாரையோ கருவியாகப் பாவித்து இப்படுகொலை நடத்தப்பட்டது. இதனால் எமக்கு செய்திகள் கிடைப்பதும் டெல்லியோடு தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதும் பெரிதும் தடைப்பட்டது. இந்த நேரத்தில் டெல்லியில் இலங்கை அரசாங்கத் தூதுக்குழுவிற்கும், இந்திய வெளிநாட்டு அமைச்சருக்கும் இடையில் எமது பிரச்சனைக்கு தீர்வுகாணும் அடிப்படை பற்றி ஓர் உடன்படிக்கை ஆகஸ்ட் 31ந் திகதி ஏற்பட்டது. இந்த உடன்படிக்கை பற்றி தமிழ் இயக்கங்களை எல்லாம் ஒரே கருத்தை இந்தியாவிற்கு தெரிவிக்க வேண்டியது அவசியம் என்பதைக் கண்டோம். எம் சகாக்களை கொலை செய்த துயரத்தையெல்லாம் ஒதுக்கி வைத்து போராளி இயக்கங்களோடு கலந்து உரையாடினோம். பிரதமர் ராஜீவ் காந்திக்கும் ஓர் விரிவான கடிதம் மூன்று அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் தமிழ் மக்கள் விட்டுக் கொடுக்க முடியாது என்பதை வலியுறுத்தி 9.9.1985-ல் எழுதினோம்.

1. தமிழர் தாயத்தின் ஒன்றுபட்ட தன்மை (வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரிக்க முடியாது என்றும் இணைந்த அமைப்பே வேண்டும் என்றும் கூறினோம்)
2. காணிப்பங்கீட்டு அதிகாரம்.
3. உள்நாட்டுச் சட்டம் – ஒழுங்கு பற்றிய அதிகாரம்.

இம்மூன்று விடயங்களிலும் டெல்லியில் கைபெழுத்தான உடன்படிக்கை



திருப்திகரமாக இல்லையென்ற காரணத்தினால் இக்கடிதத்தை எழுதினோம். இதைத் தொடர்ந்து டெல்லியில் எம் இயக்கங்கள் எல்லாவற்றையும் அழைத்துப் பேசினார்கள். எவ்வித முடிவும் ஏற்படவில்லை. தமிழ் குழுக்கள் இந்தியாவின் முயற்சிக்கு ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை, விட்டுக் கொடுத்துச் சமரசத்ட்ர்வு காண மறுக்கின்றார்கள், என்ற கருத்து திரு. ராஜீவ் காந்திக்கு அவருடைய ஆலோசகர்களால் தரப்பட்டது. இப்போது பந்து தமிழர்கள் பக்கம் இருக்கிறது. அவர்கள்தான் அடிக்க வேண்டும். (The ball is in the Tamil's court) என்று அவர் பகிரங்கமாகக் கூறினார். நாம் நியாயமான ஓர் நிலைப்பாட்டைக் கொள்ள மறுக்கிறோம் என்ற கருத்தை ஏற்படுத்தி, இந்திய அரசின் போக்கை இலங்கை அரசுக்குச் சார்பாகத் திரும்பும் முயற்சியே இக்கட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எமது போராளி இயக்கங்களுக்கு எதிராக இந்தியாவின் போக்கு மாறும் ஆபத்து ஏற்பட்டது. பல ஆண்டுகளாக முயன்று, கட்டிவளர்த்த இந்திய ஆதரவை நாம் இழந்தால் எமது மக்கள் மிகவும் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டிருப்பார்கள். இளம் பிரதமர் ராஜீவ் காந்தியின் கருத்தை எமக்குச் சார்பாகத் திருப்புவதற்கு ஒரே வழி அவர் கூற்றை ஏற்று இலங்கை அரசு டெல்லியில் செய்த உடன்பாட்டுக்கு ஓர் மாற்றுத் திட்டத்தை நாம் தருவதுதான் என்று கண்டோம்.

**எமது மாற்றுத் திட்டம் (1985)**

தமிழ் ஈழத்தைக் கைவிட்டு எந்தத் திட்டத்தையும் இதுவரை நாம் முன் வைக்கவில்லை. மாற்றுத் திட்டத்தை தர வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுடையதென்றே கூறி வந்தோம். அப்படி அவர்கள் ஏற்பிடைய ஓர் திட்டத்தைத் தந்தால் அதை எமக்கு ஆணை தந்த தமிழ் மக்கள்முன் சமர்பித்து அவர்கள் அங்கீகாரத்தோடு நடைமுறைப்படுத்துவோம் என்றே கூறினோம். 1985ஆம் ஆண்டில் பிற்பகுதியில் ஏற்பட்ட மாற்றமான சூழ்நிலையில் நாம் ஒரு மாற்றுத் திட்டம் முன் வைக்காவிட்டால் எமக்குச் சார்பான ஒரே நாடான இந்தியாவின் ஆதரவை இழக்கும் ஆபத்து ஏற்பட்டது. இதைத் தவிர்ப்பதற்காக, இந்தியாவின் நட்பைப் பேணுவதற்காக, இந்தியாவில் நிலை கொண்டிருந்த விடுதலை இயக்கங்களைப் பாதிப்படையாது காப்பதற்காக 1985 டிசெம்பர் 1ந் தேதி நாம் ஒரு திட்டத்தைப் பாரதப் பிரதமரிடம் கையளித்தோம். அத்திட்டத்தின் பிரதான அம்சங்கள் வருமாறு

1977ம் ஆண்டுத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத் தமிழ் ஈழம் என்ற சுதந்திர அரசை நிறுவுவதற்கான ஆணை

வழங்கினர். கொழும்பில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நாம் எமக்குக் கிடைத்த ஆணையை வலியுறுத்திய போதும் இலங்கை அரசு ஏற்புடைய திருப்திகரமான ஓர் மாற்றுத் திட்டத்தை முன் வைத்தால் அதை ஆலோசிக்க எமது சம்மதத்தைத் தெரிவித்தோம். நாம் ஆலோசிக்கத்தக்க தகுதிவாய்ந்த அர்த்தமுள்ள திட்டமெதையும் முன்வைக்க இலங்கை அரசு பிடிவாதமாகத் தவறிவிட்டது. எமது பிரச்சனைக்குத் திருப்திகரமான ஒரு தீர்விற்கான இந்தியாவின் பெருமுயற்சி வீண்போய்விடக் கூடாதெப்பதற்காக கீழ்க்காணும் திட்டத்தை இந்திய அரசுக்கு சமர்ப்பிக்கின்றோம் என்ற முன்னுரையோடு ஆரம்பித்த திட்டத்தில் பின்வருவனவற்றை வலியுறுத்தினோம்.

1. இலங்கை மாநிலங்களின் ஐக்கிய ராஜ்யமாக திகழும்.

2. பெரும்பாலும் தமிழ் பேசும் மக்களைக் கொண்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒரு தமிழ் மொழி வாரி அரசாக அமையும்.

3. அமைக்கப்பட்ட ஓர் அரசின் நிலப்பரப்பு அவ்வரசின் சம்மதம் இன்றி மாற்றப்படமாட்டாது.

4. பாராளுமன்றம் முதலாவது பட்டியலில் உள்ள விடயங்களை ஒட்டி சட்டம் இயற்றும்.

5. பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் நாட்டின் இனவாரி ஜனத்தொகை விகிதத்தை பிரதிபலிக்கும்.

6. தொடர்பான பிரதேசத்தில் வசிக்காத முஸ்லிம்கள், இந்திய வம்சாவழித்தமிழ் மக்கள் ஆகியோருக்கு போதிய பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடியதாக விசேட ஏற்பாடு செய்யப்படும்.

7. எந்த ஒரு இனத்தையும் பாதிக்கும் சட்டமெதுவும் அவ்வினத்தைச் சேர்ந்த பெரும்பான்மைப் பாராளுமன்ற உறுப்பினரின் சம்மதத்தைப் பெற்றாலன்றி நிறைவேற்றப்பட மாட்டாது.

8. அரசியல் அமைப்பிலோ குடியுரிமை பற்றிய சட்டத்திலோ என்ன கூறப்படினும், வேற்று நாட்டு பிரசைகளாக இல்லாமல், 1981-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் திகதி இலங்கையில் வசித்தவர் எவரும் அவருடைய வழித்தோன்றல்களும் இலங்கை குடியுரிமை பெற்றவர் ஆவர்.



9. தமிழும் ஓர் ஆட்சிமொழி ஆவதற்கு அரசியல் அமைப்பில் ஏற்பாடு செய்யப்பெறும்.

10. ஆயுதப்படைகள், பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட அரசசேவை எல்லாவற்றிலும் இனவாரி சனத் தொகை விகிதம் பிரதிபலிப்பதாக உறுதிப்படுத்தும்வகையில் அரசியல் அமைப்பில் ஏற்பாடு செய்யப்படும்.

11. இந்தியாவின் மாநில அரசுக்கு உள்ள அமைப்பும் அதிகாரமும் கொண்ட தமிழ் மொழிவாரி அரசுக்கு வேண்டிய கவர்னர், சட்டமன்றம், முதலமைச்சர், அமைச்சரவை, அமைக்கும் முறை, மாநிலத்திற்கு நிதி, நிதி ஆணைக்குழுவின் அமைப்பு, மாநிலத்தின் உயர்நீதி மன்றம் மாநில அரச சேவை இவற்றை எல்லாம் விரிவாக விளக்கிப் பல பிரிவுகள்

12. தமிழ் மொழிவாரி மாநிலத்தில் முஸ்லிம் மக்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடிய வகையில் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டும்.

13. மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு விசேஷ ஏற்பாடுகள், தமிழ்த் தொழிலாளர்கள் பெரும்பான்மையாக வாழும் தோட்டப் பகுதிகளை ஒன்றாக்கிக் கிராம சேவையாளர் பிரிவுகளும், அப்படியான தமிழ் பெரும்பான்மை கிராம சேவையாளர் பிரிவுகளும், அப்படியான தமிழ் பெரும்பான்மை கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்த்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும், அவற்றை இணைத்து மாவட்டங்களும் அமைத்து மலை நாட்டில் தமிழ் பெரும்பான்மை நிர்வாக, அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும்.

14. இப்படியான பகுதிகளுக்கு வெளியில் வாழும் தமிழ் தொழிலாளர்கள் தாம் வாழும் பகுதிகளை விட்டு தமிழ் மொழிவாரி மாநிலத்திற்கோ மலை நாட்டில் உருவாகும் தமிழ் பெரும்பான்மை நிர்வாகப் பிரிவுகளுக்கோ தாம் விரும்பினால் சென்று வாழும் உரிமை இருக்க வேண்டும்.

15. வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழ் மாநிலம் அமைய வேண்டிய காரணங்களை விளக்கியும், காணிப் பங்கீட்டு அதிகாரம், மகாவலி குடியேற்றம் ஆகியவற்றில் எமது நிலைப்பாட்டை விளக்கியும், மாநிலத்திற்கு வேண்டிய அதிகாரங்களை விளக்கியும் மூன்று விரிவான அட்டவணைகளும் இணைக்கப்பட்டன.

இந்த திட்டத்தை டெல்லி சென்று நேரில் கையளித்ததோடு பல மணித்தியாலங்கள் வெளிநாட்டு அமைச்சரின் செயலாளரோடும் ஏனைய அதிகாரிகளோடும் உரையாடினோம். எமது முயற்சி விரும்பிய பயனைக் கொடுத்தது. இந்திய அரசின் போக்கில் மீண்டும் எமக்குச் சார்பான மாற்றம் தோன்றியது. இலங்கை அரசின் திட்டத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி விரிவான ஆக்கப்பூர்வமான மாற்று திட்டத்தைக் கொடுத்திருக்கின்றது என்று பத்திரிகைகளுக்குக் கூறிய திரு ராஜீவ் காந்தி, டாக்காவில் கூடிய தெற்காசிய பிராந்திய மகாநாட்டில் ஜனாதிபதி ஜயவர்த்தனாவிடம் அதை நேரில் கையளித்தார். எமது திட்டத்தை முற்றாக நிராகரித்து, ஜனவரி 30-ம் திகதி இலங்கை அரசு ஓர் விரிவான பதிலைக் கொடுத்தது. இந்த பதில் பிரதமர் ராஜீவ்காந்திக்கு இலங்கை அரசின் உண்மையான போக்கைக் காட்டிக் கொடுத்தது. அவருக்கு மேலும் விளக்கம் கொடுக்கும் பொருட்டு ஓர் சந்திப்பை நாடினோம். திருவையாறு தியாகராயர் உற்சவத்தோடு தென்பிராந்திய கலாச்சார நிலையத்தை அவர் திறந்து வைத்துத் திரும்பிச் செல்லும்போது நாமும் உடன் விமானத்தில் சென்று விரிவாகப் பேச நேரம் கொடுத்தார். நானும் திரு. சிவசிதம்பரம், திரு. சம்பந்தன் ஆகிய மூவரும் திருச்சி சென்று அங்கிருந்து டெல்லி வரை இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக அவரோடு விமானத்தில் உரையாடினோம். வடக்குக் கிழக்கு இணைப்பைப் பற்றி அவருக்குத் தவறான கருத்து தரப்பட்டிருந்தது. வடமாகணமும் கிழக்கு மாகாணமும் தொடர்பான நிலப் பரப்பல்ல என்று கூறப்பட்டிருந்தது. அந்தத் தப்பான கருத்தைத் தெளிவுபடுத்தினோம்.

எமது மக்கள் மீது இலங்கை அரசு நடத்தும் மிருகத்தனமான தாக்குதலின் தன்மை, தமிழ் போராளிகள் இலங்கை இராணுவத்தைத் தடுக்காவிட்டால் தமிழ் இனப்படு கொலை வேகமாக நடைபெறும் என்ற உண்மை, இந்திய அரசு இனக் கொலையை நிறுத்தும் முயற்சிக்கு உதவி செய்ய வேண்டிய அவசியம், விமானத் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் திணறும் நிலை, இதற்கு ஈடுகொடுக்க, இதை நிறுத்த இந்தியா உதவி செய்யாவிட்டால் எமது மக்கள் அழிந்து விடுவார்கள் என்ற அபாயம் என எல்லாவற்றையும் விரிவாக விளக்கினோம். ஜனவரி 31ந் திகதி இச் சந்திப்பு நிகழ்ந்தது. பெப்ரவரி 3-ந் திகதி திரு. ரொமேஷ் பண்டாரி கொழும்பு செல்வதாக இருந்தார். அந்த நேரத்தில் அங்கு சென்றால் பெப்ரவரி 4-ந் திகதி சுதந்திரதினக் கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்வாரென்றும், அது தமிழ் மக்களுக்கு விரோதமான செயலாக அமையும் என்றும் எடுத்துச் சொன்னோம். டெல்லி சென்றவுடன் திரு, ரொமேஷ் பண்டாரியின் பயணம் நிறுத்தப்பட்டது மாத்திரமன்றிப் போராளிகளின் நிலையையும் சரியாகப் புரிந்து கொண்டு இந்திய அரசு செயல்பட ஆரம்பித்தது.



## படுகொலை தொடர்கிறது – குண்டு வீச்சு

இந்திய அரசின் போக்கைத் தமக்குத் சார்பாகத் திரும்ப மேற்கொண்ட முயற்சி தோல்வி கண்ட சூழ்நிலையிலும் இலங்கை அரசு தமிழ்ப் பகுதிகளில் மிருகத்தனமான தாக்குதலை மீண்டும் ஆரம்பித்தது. அம்பாறை மாவட்டத்தில் சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, கல்முனை ஆகிய கிராமங்களில் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களைக் கொண்டே சவக்குழி தோண்டியபின் அவர்கள் சுட்டுப் புதைக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் மீது விமானங்கள் மூலம் குண்டு வீச்சு ஆரம்பிக்கப்பட்டது. இவற்றைப் பற்றிப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அடிக்கடி தந்தி மூலம் தகவல் கொடுத்துக்கொண்டிருந்தோம்.

நாம் திரு. ராஜீவ் காந்தியைச் சந்தித்து உரையாடியபோது அவர் கேட்டுக்கொண்டபடி 1985 மே 1-ல் இருந்து 1986 பிப்ரவரி 28 வரை தொடர்ச்சியாக எமது மக்கள் மீது சிங்கள ராணுவம் நடத்திய தாக்குதல்கள், படுகொலைக்காளான மக்களின் விபரங்கள் ஆகியவற்றைத் தொகுத்து 105 பக்கங்களைக் கொண்ட ஓர் அறிக்கையை பிரதமர் ராஜீவ்காந்திக்குக் கொடுத்தோம். இவ்வறிக்கை தயாரிக்கும் பொறுப்பை ஏற்று நிறைவேற்றியவர் திரு. சம்பந்தன் அவர்களே. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை குழுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் அங்கு இந்தியப் பிரதிநிதி இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டுவதற்கு உதவியாகவே அவர்கள் இந்த அறிக்கையைப் பெற்றனர். இந்தியப் பிரதிநிதியும் வெளிப்படையாகவே இலங்கையின் மீது குற்றஞ்சாட்டிப் பேசினார்.

## சிதம்பரம் தூது

இந்திய வெளிநாட்டமைச்சிலும் இக்காலத்தில் மாற்றமேற்பட்டது. திரு. வெங்கடேஸ்வரன் செயலாளர் ஆனார். மீண்டும் இலங்கை அரசோடு எமது பிரச்சனை பற்றிப் பேச்சுவார்த்தை தொடங்கும் நிலை எழுந்தது. ஏப்ரல் 22ந் திகதி எம்மை டெல்லிக்கு அழைத்தனர். வெளிநாட்டமைச்சு உத்தியோகத்தர்

களையும் 24ந் திகதி பிரதமர் ராஜீவ் காந்தியையும் சந்தித்து உரையாடினோம். இலங்கைக்குப் பேச்சு வார்த்தைக்காகச் செல்லும் குழுவில் திரு. ப. சிதம்பரம், திரு, ரோமேஷ் பண்டாரி ஆகியோர் இடம்பெறுவார் என்று அறிவிக்கப்பட்டது. அவர்கள் இருவரையும் சந்தித்து நாம் வலியுறுத்தியது வடக்கு–கிழக்கு மாகாணங்களின் இணைப்பு விஷயத்தில் உறுதியாக நிற்கவேண்டும் என்பதே.

திரு. ப. சிதம்பரம் தலைமையில் தூதுக்குழு கொழும்பு சென்ற அதே நேரத்தில் மதுரையில் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் இந்திய எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோரும் கலந்து கொண்ட மாபெரும் மாநாடு தமிழ்ஈழ ஆதரவாளர் இயக்கத்தினால் (TESO) கூட்டப் பெற்றது. பல இலட்சம் மக்கள் அலைகடலெனத் திரண்டனர். திருவாளர்கள் : வாஜ்பாய், பகுகுணா, ராமாராவ் ஆகியோர் கர்நாடக அமைச்சர் ரகுபதி, அகாலிதளம், காஷ்மீர் மக்கள் மாநாட்டுக்கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். எல்லாத் திசையிலும் எமக்கு ஆதரவு திரண்டு வந்த நேரத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வேதனை தரும் செய்தியும் வந்தது. தமிழ் ஈழ விடுதலை இயக்க உறுப்பினர்கள் மீது தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் தாக்குதலை ஆரம்பித்து திரு. சிறீ சபாரத்தினம் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட போராளிகள் படுகொலை செய்யப்பட்டனர். தலைவர் கலைஞர் உட்பட எமது ஆதரவாளர் பலர் நம்பிக்கை இழந்தனர். கொழும்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த திரு. சிதம்பரம் தூதுக்குழுவினருக்கும் இச்செய்தி பெரும் சிக்கலான பலவீனமான நிலையைத் தோற்றுவித்தது. எனினும் முந்திய டெல்லி உடன்பாட்டின் தவறுகள் பலவற்றைத் தவிர்த்து ஒரு புதிய திட்டம் உருவானது. ஆனால் மாநிலத்தின் பொலீஸ் அதிகாரம் பற்றிய விடயத்தில் இலங்கை அரசாங்கத்திடமிருந்து விளக்கம் பெற வேண்டி இருந்தது. போராளிகளிடையே ஏற்பட்ட மோதலினால் உற்சாகம் அடைந்த இலங்கை அரசு விளக்கம் அளிப்பதை ஒரு மாதத்திற்குமேல் தாமதப்படுத்தியது. இறுதியில் ஜூன் மாதம் நடுப்பகுதியில் அவர்கள் விளக்கம் கிடைத்தவுடன் நாம் டெல்லிக்கு மீண்டும் அழைக்கப்பட்டோம்.

## சிதம்பரம் திட்டம்

ஜூன் 17, 18,19 தேதிகளில் வெளிநாட்டு அமைச்சர் சிவசங்கர், செயலாளர் வெங்கடேஸ்வரன், திரு. பார்த்தசாரதி, திரு. ரொமேஷ் பண்டாரி முதலிய பலருடன் கலந்துரையாடினோம். நாம் உடன் எப்பதிலும் கொடுக்காது அரசியல்



குழுவுடன் ஆலோசித்து வருவதாகக்கூறி சென்னை திரும்பினோம். மீண்டும் 25ந் திகதி டெல்லி சென்று அமைச்சர்கள் சிவசங்கர், ப. சிதம்பரம், பூட்டாசிங் மற்றும் உத்தியோகஸ்தர்கள் எல்லோருடனும் ஆலோசனை நடத்தினோம். 26ந் திகதி திரு. ப. சிதம்பரம் கொழும்பில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பலனான உருவான திட்டம் எமக்கு கையளிக்கப்பட்டது. அத்திட்டத்துடன் சென்னை திரும்பி தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் உட்பட அவர்களுடைய குழுவினர். திரு. ப. நெடுமாறன், திரு. மு. கருணாநிதி, தமிழக முதல்வர், மின்துறை அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன் ஆகியோருடன் விரிவாக ஆராய்ந்து அவர்கள் எல்லோருடைய கருத்துக்களையும் பெற்றபின், ஜூலை மாதம் 12ந் திகதி இந்திய அரசு கேட்டுக்கொண்டபடி இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த கொழும்பு சென்றோம்.

## இலங்கை அரசுடன் மீண்டும் பேச்சுவார்த்தை

திம்புப் பேச்சுவார்த்தையில் போராளி இயக்கங்கள் எல்லாம் கலந்து கொண்டன. ஆனால் 1985 ஜூலையில் ஆரம்பித்த பேச்சுவார்த்தையில் அவர்கள் கலந்துகொள்ள மறுத்தனர். தாம் கலந்து கொள்ளாவிட்டாலும், தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்து கொள்வதைத் தாம் எதிர்க்கவில்லை எனக் கூறினர். சிதம்பரம் திட்டத்தில் பல குறைபாடுகள் இருந்த போதிலும் பேச்சுவார்த்தைக்கு ஆரம்பப் பத்திரமாகவே நாம் அதைக் கொண்டோம். அதே நேரத்தில் 1985 டிசெம்பரில் நாம் முன்வைத்த திட்டத்தையும் எடுத்துக்கொண்டு அத்திட்டத்தை அடையும் நோக்கோடு நாம் முயற்சி செய்தோம். இந்தியாவில் ஓர் மாநிலத்திற்கு உள்ள அதிகாரத்தைப் பூரணமாகப் பெறுவதற்கான அரசியல் அமைப்புத் திருத்தச்சட்டமூலம், மாகாணசபைச் சட்டமூலம் ஆகிய இரண்டையும் ஒவ்வொரு விதியாகப் பரிசீலனை செய்தோம். விரிவான விவாதத்தின் பலனாக ஒன்றைத் திருத்தி ஒன்றாக ஏழு சட்ட வரைவுகள் தயாரிக்கப்பட்டன. ஜூலை, ஆகஸ்ட் இரண்டு மாதங்களிலும் இருபது நாட்களுக்கு மேலாகப் பேசினோம்.

முதல் சுற்றுப் பேச்சு முடிந்து திரும்பியவுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட தமிழகத்தில் பலருடனும் டெல்லியில் அமைச்சர்கள் சிவசங்கர், சிதம்பரம் ஆகியோர் மற்றும் திரு. பார்த்தசாரதி, திரு. வெங்கடேஸ்வரன், சட்ட நிபுணர், திரு. பாலகிருஷ்ணன் ஆகியோருடன் கலந்து ஆலோசித்தோம். இரண்டாவது சுற்றுப் பேச்சு ஆகஸ்ட் 29ம் திகதி முடிவடைந்தது. அன்று முக்கியமாக வடக்கு–கிழக்கு மாகாண இணைப்புப் பற்றி விரிவாக விவாதித்தோம். இணைப்பு விடயம்

உட்படச் சில முக்கியமான விடயங்களில் உடன்பாடெதுவும் ஏற்படாத நிலையில் பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டது. மூன்றாவது சுற்றுப் பேச்சுவாத்தைக்கு போராளிகளும் கலந்து கொள்ள வேண்டுமென்று நாம் வற்புறுத்தினோம். இலங்கை அரசும் இந்திய அரசும் இதற்கு ஒப்புக்கொண்டன. எல்லோரும் பங்குபற்றக் கூடியதாக டெல்லியில் இச்சந்திப்பிற்கு ஏற்பாடு செய்வதாகவும், அதற்கு முன் இதவரை பேசித் தீர்வு காணப்படாத விடயங்களை உள்ளடக்கிய திருத்தப்பட்ட வரைவுகளையும் தமிழ் பிரதேச ஒற்றுமை பற்றிய எமது கோரிக்கைக் இலங்கை அரசின் பதிலையும், காணிப் பங்கீட்டு அதிகாரம் உட்படத் தீர்வு காணப்படாத விடயங்கள் பற்றி இலங்கை அரசின் கருத்துக்களையும் கூடிய விரைவில் அனுப்பி வைப்பதாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கொழும்பிலிருந்து திரும்பியவுடன் ஏனைய தமிழ் இயக்கங்களைச் சந்திக்க முயன்றோம். அவர்கள் எம்முடன் பேச மறுத்துவிட்டனர்.

**இலங்கை அரசின் திட்டமும் எம் பதிலும் :**

அரசியல் அமைப்புத் திருத்தங்கள். மாகாணச் சபைச் சட்டமூலம் வடக்கு கிழக்கு இணைப்பு பற்றிய கோரிக்கைக்கு அரசின் பதில், காணிப்பங்கீடு பற்றிய வரைவு ஆகியவை செப்டம்பர் 4 ந் திகதியும் மத்திய அரசுக்கும் மாகாண சபை களுக்குமிடையில் அதிகாரப் பங்கீடுபற்றிய மூன்று பட்டியல்களும் 23ந் திகதியு இலங்கை அரசினால் அனுப்பப்பட்டன. எட்டு நாட்களுக்கு மேலாக டெல்லிச் சட்ட நிபுணர்களோடு கலந்து ஆலோசனை நடத்திய பின் செப்டம்ர் 30ந் திகதியும் அக்டோபர் 4ந் திகதியும் விரிவான பதிலைத் தயாரித்து இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. சிவசங்கரிடம் கொடுத்தோம். அப்பதிலில் அரசியல் அமைப்புத் திருத்த விதி 154 பின்வருமாறு அமையவேண்டுமென்றும் கோரினோம். 154 எ(1) அரசியல் அமைப்பின் இந்த 11வது திருத்தம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து எட்டாவது அட்டவணையில் குறிப்பிடப்படும் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு மாகாண சபை நிறுவப்படும்.

குறிப்பு :

1. எட்டாவது அட்டவணையில் மாகாணங்கள் குறிப்பிடப்படும் போது வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஓர் தமிழ் மொழிவாரி மாகாணம் அட்டவணையில் இடம் பெற வேண்டும்.

2. எட்டாவது அட்டவணையில் மாகாணங்கள் குறிப்பிடப்பட்ட பின் சம்பந்தப்பட்ட மாகாணசபைகளின் சம்மதமின்றி மாகாணங்களில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது.



என்று நாம் தெளிவாகக் குறிப்பிட்டோம். இன்று இந்தியா இலங்கை ஒப்பந்தத்தில் நாம் கோரியது போல் இணைந்த தமிழ் மாகாணமே இடம் பெற்றிருக்கிறது. நான்கு ஆண்டுகளாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் எக்கட்டத்திலும் இக்கொள்கையில் சிறிதும் விட்டுக் கொடாது நாம் உறுதியாக நின்றோம்.

அக்டோபர் 4ந் திகதி திரு. சிவசங்கருக்கு அனுப்பிய கடிதத்தில் இன்னும் பேச்சுவார்த்தையில் எடுக்கப்படாத விஷயங்களைக் குறிப்பிட்டு அவற்றையும் தீர்ப்பதற்கு வழி காணப்பட வேண்டும் என்று கூறியிருந்தோம் . மேற்குறிப்பிட்ட விடயங்களைவிட திருகோணமலைத் துறைமுகம், ஆயுதப்படைகள், அரசு சேவைகள் ஆகியவற்றில் எமது இடம், உத்தியோக மொழி, வேலை வாய்ப்பு, மத்திய அரசில் தமிழ் மக்களின் இடம் போன்ற பல முக்கிய விடயங்கள் இலங்கை, அரசோடு பேசித் தீர்க்கப்படவேண்டி இருக்கின்றன என்று அக் கடிதத்தை முடித்தோம். எமது இந்த விரிவான பதிலை பிரதமர் ராஜீவ் காந்தி , ஜனாதிபதி ஜயவர்த்தனாவிடம் பெங்களூரில் கையளித்தார்.

**பெங்களூர் பேச்சு வார்த்தை (1986)**

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு மாநாட்டுக் கூட்டம் நவம்பரில் பெங்களூரில் நடைபெற்றது. அம்மாநாட்டிற்கு வருகைதந்த ஜனாதிபதி ஜயவர்த்தனாவோடு இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கான தீர்வு பற்றி பிரதமர் ராஜீவ் காந்தியும், அமைச்சர்கள் சிதம்பரம், நட்வர்சிங் ஆகியோரும் தமிழக முதல்வர், உணவு அமைச்சர் மற்றும் வெளிநாட்டு அமைச்சின் உத்தியோகத்தர் ஆகியோரும் பல மணித்தியாலங்கள் உரையாடினர். இலங்கை அரசின் திட்டத்திற்கு எமது விரிவான பதிலின் பல பகுதிகள் அங்கு ஆராயப்பட்டன. காணிப்பங்கீடு, கவர்னரின் அதிகாரம் போன்ற விடயங்களுக்கு இலங்கை அரசு சில மாற்று யோசனைகளைத் தெரிவித்தது. முக்கியமாக வடக்குக் கிழக்கு மாகாண இணைப்பு பற்றிய கோரிக்கைக்கு மாற்றாகக் கிழக்கு மாகாணத்தை மூன்று மாகாணங்களாகப் பிரிக்கும் ஓர் ஆச்சரியமான திட்டம் இலங்கை அரசினால் முன் வைக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தோடு திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களின் தொடர்பான தமிழ்ப் பகுதிகளை

இணைத்து ஓர் தமிழ் மாகாணமாகவும் அம்பாறை மாகாணம் ஓர் முஸ்லிம் மாகாணமாகவும் பிரிக்கப்படவேண்டுமென்பதே அத்திட்டமாகும்.

கிழக்கு மாகாணக் குடிசன இனவாரி அமைப்புப் பற்றி மிகத்தவறான கருத்தைக் கொடுக்கக் கூடிய வரைபடங்களும் அங்கு இந்தியப் பிரதமரிடம் கொடுக்கப்பட்டன. இதற்கு உடன் சமம்மதத்தைப் பெறும் நோக்கத்தோடு, இரவோடிரவாகத், தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரன் பெங்களூர் கொண்டு செல்லப்பட்டார். நிண்ட விவாதங்கள் நடைபெற்ற போதும் எவ்வித முடிவும் ஏற்படவில்லை. திருகோணமலையைச் சிங்கள மாகாணமாக்கித் தம்வசப்படுத்தும் நோக்கம் மாத்திரமன்றி வடக்கையும் கிழக்கையும் இணயை விடாது இடையிற் சிங்களப் பிராந்தியமாக்கும் பயங்கரத் திட்டத்தையும் இவ்வாலோசனை வெளிப்படுத்தியது.

இந்நேரத்தில் இந்தியப் பிரதமரின் ஆலேசகர்களாயிருந்த சிலர் கிழக்கு மாகாணம் பற்றி மிகத் தவறான கருத்துக் கொண்டிருந்தனர் என்பதையும் காணக்கூடியதாக இருந்தது. இதனால், கிழக்கு மாகாணம் சம்பந்தமாக ஒரு விரிவான கடிதம் ஓர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு 1986 டிசெம்பர் 14ந் தேதி எழுதினோம். கிழக்கு மாகாணத்தில் சிங்கள குடியேற்ற வரலாறும் அதன் தாக்கமும், அங்கு புதிதாக ஏற்படுத்தப்பட்ட தேர்தல் தொகுதிகளும் நிர்வாகப் பிரிவுகளும், புதிய சிங்கள நிர்வாக பிரிவுகளில் அபிவிருத்தி செய்யப்படாத நிலங்களையெல்லாம் சேர்த்த சூழ்ச்சி, 1983ம் ஆண்டு கலவரங்களின் பின் குடிபெயர்ந்த மக்கள், கிழக்கு மாகாணத்தை மூன்று மாகாணங்களாகப் பிரிக்கும் ஆலோசனையின்பின் உள்ள பயங்கரத்திட்டம், திருகோணமலைத் துறை முகத்தின் முக்கியத்துவம், வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரே மாகாணத்தை இலங்கை அரசு எதிர்க்கும் உண்மைக்காரணம் இவற்றை எல்லாம் எமது கடிதத்தில் விளக்கினோம். 1827 ம் ஆண்டு முதல் 1981ம் ஆண்டு வரை கிழக்கு மாகாணத்தில் குடியேற்றங்களினால் ஏற்பட்ட குடிசன மாற்றங்களை விளக்கும் புள்ளி விபரத்தொகுப்புகளையும், இலங்கை அரசு சமர்பித்த பிழையான வரைபடங்களுக்குப் பதில் கிழக்கு மாகாணத்தின் சனத்தொகை விகிதாசாரத்தைக் காட்டும் சரியான வரைபடங்களையும் அனுப்பினோம்.

கொழும்பில் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடத்துவதற்கு செல்லுமுன் அமைச்சர் திரு. ப. சிதம்பரமும் திரு. கே. நட்வர்சிங்கும் எம்மையும் ஏனைய இயக்கங்களையும் சென்னையில் முதல் அமைச்சர் அலுவலகத்தில் சந்தித்தனர். அப்போது அவர்களிடம் மேற்படி கடிதம், புள்ளிவிவரம், வரைபடங்களின் பிரதிகளையும் கொடுத்து, கிழக்கு மாகாணத்தை மூன்றாகப் பிரிக்கும் திட்டத்தைத் தமிழ் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதையும், வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரே மாகாணமே தமிழ் மக்களுக்கு ஏற்புடையதாக இருக்குமென்பதையும் விளக்கினோம்.



### 1986 டிசெம்பர் 19ந் திகதித் திட்டம் :

இந்திய அமைச்சர்களுக்கும் இலங்கை அரசுக்கும் நடந்த பேச்சுவார்த்தைகளின் இறுதியில் 19ந் திகதி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பற்றிய ஒரு புதிய திட்டம் உருவானது. கிழக்கு மாகாணத்திலிருந்து அம்பாறைத் தேர்தல் மாவட்டத்தைப் பிரித்து எஞ்சிய பகுதியை கிழக்கு மாகாணமாக்கி, அதற்கொரு மாகாணசபையும், வடக்கு மாகாணத்திற்கு ஒரு மாகாண சபையும் அமைத்து, இவ்விரு மாகாண சபைகளும் சில விஷயங்களில் ஒன்றுபட்டுச் செயல்படக்கூடியதாக ஓர் அமைப்பை ஏற்படுத்துவதென்றும், ஒரு குறிப்பிட்ட காலத்தின்பின், மக்கள் தீர்ப்பின் அடிப்படையில் இவை இணைவதற்கு அனுமதிப்பதென்றும் இலங்கை அரசு ஏற்றுக் கொண்டது. ஆனால் இந்திய அமைச்சர்கள் டெல்லி திரும்பி இரண்டு நாட்களுக்கிடையில் முஸ்லீம் பிரதிநிதிகள் இத்திட்டத்தை எதிர்ப்பதாக இலங்கைத் தூதுவர் மூலம் டெல்லி அரசுக்கு அறிவிக்கப்பட்டது. ஏற்றுக்கொண்ட திட்டத்திலிருந்து இலங்கை பின் வாங்கத் தொடங்கியது. இலங்கை அரசின் நிலையைத் தெளிவுபடுத்தத் தூதுவர் மட்டத்தில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இந்திய அரசுக்கு ஓர் உறுதியான பதில் கிடைக்கவில்லை. இதனால் இத்திட்டம் உத்தியோகபூர்வமாகத் தமிழ் இயக்கங்களுக்கு அறிவிக்கப்படவோ அவர்கள் கருத்துக்கள் கோரப்படவோ இல்லை.

### கிழக்கு மாகாணத்தில் பயங்கர இராணுவ நடிவடிக்கை

மார்கழி மாத பிற்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் கொக்கட்டிச் சோலைப் பகுதியில் இலங்கை இராணுவம் விமானங்களிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தும், கனரக பீரங்கிகளால் தாக்கியும் ஆயிரக்கணக்கான படைவீரர்களோடு மிகப் பெரிய தாக்குதலை ஆரம்பித்தது. படுவான்கரை முழுவதுமே இப்பயங்கரத் தாக்குதல் நடைபெற்றது. இருநூற்றுக்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இக்கொலையை நிறுத்துமாறு நாம் பிரதமர் ராஜீவ் காந்திக்கு தந்தி கொடுத்தோம். இந்தியத் தூதுவர் திரு.

டிக்சித் ஜனாதிபதி ஜயவர்த்தனாவைச் சந்தித்து இந்தியாவின் ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

**யாழ்ப்பாணத்தின் மீது பொருளாதாரத் தடையும் இராணுவத் தாக்குதலும்**

1987 ஜனவரி முதல், தாம் யாழ் மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை மேற்கொள்ளப் போவதாகத் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் விடுத்த ஓர் பத்திரிகைச் செய்தியை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி நீண்ட காலமாகத் தாம் திட்டமிட்டிருந்த பொருளாதாரத் தடையை யாழ்ப்பாணம் மீது இலங்கை அரசு விதித்தது. பெட்ரோல் மண்ணெண்ணெய் முதலிய எரிபொருள்கள் யாழ்ப்பாணத்திற்குச் செல்வதை முதலில் தடை செய்தனர். இதனால் உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களின் நடமாட்டம் குறையத் தொடங்கிப் பொருட்களின் விலைகள் வேகமாக ஏறத் தொடங்கின. மருந்துப் பொருட்கள், பல தொழிற்சாலைகளுக்குத் தேவையான அலுமினியம் போன்ற பொருட்கள் யாழ்ப்பாணத்திற்குச் செல்வதைத் தடுத்தனர். பட்டினியாலும், அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாட்டாலும் ஏழைமக்கள் துன்பப்படும் செய்தி வெளியுலகத்திற்கு எட்டாமல் தொலைபேசித் தொடர்புகளைத் துண்டித்தனர். அதே நேரத்தில் கடல், தரை, ஆகாயம் ஆகிய மும்முனைகளிலிருந்தும் பொதுமக்கள் மீது தாக்குதலை நடத்தினர். இந்தியப் பிரதமருக்கு எத்தனையோ தந்திச் செய்திகள் கடிதங்கள் அனுப்பினோம். நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை.

இலங்கையில் சுதந்திர தினமான பிப்ரவரி 4ந் திகதியன்று தமிழ் மக்களின் அவலநிலையை இந்திய மக்களுக்கு எடுத்துக் காட்டும் பொருட்டு ஓர் கூட்டத்தை டாக்டர் ஜனார்த்தனம் ஏற்பாடு செய்தார். அக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் உரையாற்றினர். இந்தியாவையே நாம் நம்பியிருக்கும் நிலையையும் அப்படியான தமிழ் மக்கள் அழிக்கப்படுவது இந்திய ராஜதந்திரத்திற்கே தோல்வி என்றும் சற்றுக் கடுமையாகவே பேசினோம். எமது பேச்சுக்கள் இந்தியப் பத்திரிகைகளில் விரிவாகப் பிரசுரமாயின. டெல்லிக்கும் எமது குரல் எட்டியது. அமைச்சர்கள் ப. சிதம்பரம், கே. நட்வர் சிங் ஆகியோருடன் தொலைபேசியிலும் தொடர்பு கொண்டோம். இந்தியா அசையத் தொடங்கியது. பிப்ரவரி 9ந் திகதி பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மிகக் கடுமையான ஓர் செய்தியை ஜனாதிபதி ஜயவர்த்தனாவுக்கு அனுப்பினார். அதில் மூன்று கோரிக்கைகளை விடுத்தார்.



1. தமிழ்ப் பகுதிகள் மீதான இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும்.

2. யாழ்ப்பாணம் மீதான பொருளாதார, தொலைத் தொடர்புத் தடை நீக்கப்பட வேண்டும்.

3. டிசெம்பர் 19ந் திகதி ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டத்தைப் பேச்சு வார்த்தைக்கான தொடக்க நிலையாக இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

இச்செய்திக்கு இலங்கை அரசிடமிருந்து திருப்திகரமான பதில் வரவில்லை. மக்கள் பட்டினியால் வாடத் தொடங்கினார்கள். தமிழ்நாட்டில், இலங்கையில் நடை பெற்றுக் கொண்டிருந்த கொடுமை பற்றிப் போதிய விழிப்பு இல்லாதிருந்த நிலையைப் போக்கும் பொருட்டு, பெப்ரவரி 25ந் திகதி மெரினா கடதுகரையில் நூற்றுக்கணக்கான தமிழ் அகதிகள் கலந்து கொண்ட உண்ணாவிரதத்தை நடத்தினோம். முதன் முறையாகப் போராளி இயக்கங்களும் இதில் கலந்து கொண்டன. தமிழ்நாட்டின் அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் உண்ணாவிரத இறுதியில் மத்திய அரசு உடன் செயற்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி உரையாற்றினர். மார்ச் மாதம் 6ந் திகதி பாரதப் பிரதமருக்கும் நாம் ஒரு விரிவான கடிதம் எழுதினோம். அதில் நாம் இந்திய அரசுக்கு மூன்று வேண்டுகோள்கள் விடுத்தோம்.

1. மனிதாபிமான அடிப்படையில் துன்பப்படும் தமிழ் மக்களுக்கு உணவும், எரிபொருளும் வழங்குவதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. தமிழ் மக்களுக்கெதிரான மனித உரிமை மீறல்களை சர்வதேச அரங்கில் எழுப்பி இலங்கை அரசு தமிழ் பிரஜைகள்பால் தன் தேசிய, சர்வ தேசிய கடமைகளை நிறைவேற்றும் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டும்.

3. வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்களுடைய உடற்பாதுகாப்புக்கும் உயிர் வாழ்வுக்கும் வழி செய்யக்கூடிய நடவடிக்கையில் மனிதாபிமான அடிப்படையில் இந்தியா இறங்க வேண்டும்.

மார்ச் 6ந் தேதி இந்திய மாநிலங்கள் அவையில் ஓர் கோரிக்கைக்கு பதிலளிக்கையில் பிரதமர் ராஜீவ் காந்தி முதன் முறையாக இலங்கையின் இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இந்தியா அளித்து வந்த நல்லெண்ணச் சேவை முடிவுக்கு வந்து விட்டதாகவும் வேறு நடவடிக்கைகள் பற்றி ஆலோசிப்பதாகவும் கூறினார். இந்தியப் பிரதமரின் உறுதியான பதிலும், ஜெனிவாவில்

நடைபெற்றுக் கொண்டிருந்த மனித உரிமைக் குழுவில் இலங்கை அரசின் மனித உரிமை மீறல் பற்றி வந்த தீர்மானமும் இலங்கை மந்திரி சபையைப் பொருளாதாரத் தடையை நீக்குவதாகக் காட்டிக்கொள்ள செய்தன. மார்ச் 11ந் திகதி இலங்கை மந்திரி சபை எரிபொருள் தடையை நீக்கி அனுமதிப் பத்திரங்களின் பேரில் எரிபொருள் வழங்குவதாக அறிவித்தது.

ஆனால் நடைமுறையில் எதுவும் செய்யப்பட வில்லை. வழக்கமான ஏமாற்று நடவடிக்கைதான். இந்தியாவை நாம் ஆறாம் திகதிக் கடிதத்தில் கேட்டுக் கொண்டபடி தமிழ் மக்கள் மீதான பொருளாதார தடையை நீக்குவதற்கு நேரடியான நடவடிக்கை எடுத்து தமிழ் மக்களுக்கு உணவு பொருட்களை வழங்குமாறு ஏப்பிரல் 1ம் திகதி திரு. ராஜீவ் காந்திக்கு ஒரு கடிதம் எழுதினோம். மே மாதம் 18, 19 20ந் திகதிகளில் நானும் திரு மு. சிவசிதம்பரம், திரு. சம்பந்தன் ஆகியோரும் டெல்லி சென்றோம். அமைச்சர்கள் உத்தியோகஸ்தர்கள் எல்லோருடனும் மூன்று நாட்களாக பேசினோம். நாம் வற்புறுத்தியது எல்லாம் ஒன்றே ஒன்றுதான். இந்தியா செயலற்று இருக்கும் நிலையை உடைத்து, யாரும் குற்றம் கூறமுடியாத மனிதாபிமான நடவடிக்கையாகக் காங்கேசன் துறைமுகத்திற்கு உணவுக்கப்பலை பாதுகாப்போடு அனுப்பி வையுங்கள் என்பதே எமது கோரிக்கை அது இந்திய அரசின் கருத்தில் இடம் பெறத் துவங்கியது.

இதனிடையில் இலங்கை ராணுவத்தின் மிகக்கொடூரமான தாக்குதல் வடமராட்சிப் பகுதி மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது. முந்தைய தாக்குதல்களின் கொடுமைகளை எல்லாம் விஞ்சியதாக நூற்றுக்கணக்கான மக்களை பலிகொண்டு, ஆயிரக்கணக்கான மக்களை அகதிகளாக்கி, அப்பகுதி வீடுகள் எல்லாம் தரைமட்டமாக நொறுக்கப்பட்டன. மீண்டும் இந்திய அரசுக்கு தந்திகள் கொடுத்தோம். தமிழக அரசோடு தொடர்பு கொண்டு மத்திய அரசை உடன் செயல்படுமாறு வற்புறுத்தக் கோரினோம். முதலமைச்சரும், உணவு அமைச்சரும் டெல்லிக்குச் சென்று வற்புறுத்தினர். மத்திய அரசு அசைந்தது. பரிட்சார்த்தமாக உணவு படகுகளை அனுப்பியது. செஞ்சிலுவை சங்கத்தினரோடு உணவு ஏற்றிச் சென்ற படகுகளை திருப்பி விட்டு வெற்றி கொண்டாடியது இலங்கை அரசு. ஜூன் 4ந் திகதி இந்திய விமானங்கள், போர் விமானங்களின் பாதுகாப்போடு, யாழ்பாணத்தின் மேல் பறந்து உணவு பொட்டலங்களை துன்பப்பட்ட தமிழ் மக்களின் பசிட்ர்க்க போட்டனர்.



சரித்திரம் திரும்பியது. இந்தியாவை உதாசீனம் செய்து தான் வாழ முடியது என்ற பாடத்தை இலங்கை படித்தது. ஆரம்பத்தில் கொதித்தது. பின் அடங்கியது. கப்பல்கள் உணவு கொண்டு வந்து இந்திய செஞ்சிலுவைச் சங்க உத்தியோகஸ்த்தர் உணவை, விநியோகிக்க அனுமதி வழங்கப்பட்டது. அப்போது அரசியல் ட்ர்வுக்கும் வழி பிறக்கும் என்பது உறுதியாகியது. ஏற்கனவே நாலு வருடங்களாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் மூலம் படிப்படியாக வளர்ந்து வந்த திட்டத்தில் பெரிய தடையாக இருந்தது. தமிழ்ர் மொழிவாரி மாநிலத்தை அங்கீகரிக்க இலங்கை அரசு மறுத்து நின்றனமயே இந்தியா உறுதியாகக் கூறியபின் அதை ஏற்றுக் கொண்டனர். 1956ம் ஆண்டு தொடக்கம் தமிழ் மொழியும் ஆட்சி மொழியாக வேண்டும் என்று நாம் போராடி வந்தோம். அதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதிலிருந்து உருவாகிப் பிறந்ததுதான் ஜூலை 29ந் திகதி கையெழுத்தான இலங்கை இந்திய ஒப்பந்தம்.

### ஒப்பந்தம் பற்றி எமது கடிதம்

ஒப்பந்தம் ஓரளவு உருவாகி வந்த நேரத்தில் வெளிநாட்டுச் செயலாளர் திரு. கே.பி.எஸ். மேனனும், இலங்கையில் உள்ள இந்திய தூதுவர் திரு. ஜே.என். டிக்சித்தும் சென்னை வந்து எம்மோடும் ஏனைய தமிழ் இயக்கங்களோடும் உரையாடினர். பின்பு பிரதமர் கொழும்பு செல்வதற்கு முன் நாமெல்லாம் டெல்லி அழைக்கப்பட்டோம். 27ந் திகதி உத்தியோகஸ்தர்களோடு பேசினோம். 28திகதி பிரதமர் ராஜிவ் காந்தியோடு உரையாடினோம். எமக்குக் கொடுக்கப்பட்ட ஒப்பந்த வரைவில் நாம் கண்ட குறைபாடுகளை கூசாது எடுத்துச் சொன்னோம். ஒரு கடிதம் தயாரித்து அதன் அடிப்படையில் பிரதமரோடு விரிவாக பேசினோம். இக்கடிதத்தில் நாம் குறிப்பிட்டுள்ள விடயங்களை கீழே தருகிறோம்.

1. கிழக்கு மாகாணத்தில் பொதுஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதை நாம் முற்றாக எதிர்க்கிறோம். ஏற்படுத்தப்படும் அமைதியை அது குலைக்கும். மீண்டும் கலவரம் ஏற்படும். அன்றியும் சிதறிப் போய் இருக்கும் தமிழ் மக்கள் ஒரு வருடத்தில் திரும்பி வர முடியாது.

2. 1987 மே மாதத்திற்குப் பின் நிறுவப்பட்ட ராணுவ முகாம்கள் மாத்திரம் அல்ல, 1983ம் ஆண்டின் பின் நிறுவப்பட்ட முகாம்கள் எல்லாம் அகற்றப்பட வேண்டும்.

3. வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு நேரடி இந்திய

தலையீடு அவசியம். சிங்களப் பொலீசையோ, ராணுவத்தையோ அங்கு சட்டம் ஒழுங்கு நிலைநிறுத்தும் வேலையில் ஈடுபடுத்தக் கூடாது.

4. மாகாணங்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் பற்றி மாத்திரம் அல்ல, மத்திய ஆட்சியில் தமிழ் மக்களின் உரிமை பற்றியும் பேசித் ட்ர்க்கப்பட வேண்டும். இந்திய அரசியல் சட்ட நிபுணர்களும் இப்பேச்சு வார்த்தைகளில் பங்கு கொள்ள வேண்டும்.

5. பயங்கரவாதத் தடைசட்டம், அவசர காலச் சட்டம் இவற்றின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் மாத்திரமல்ல, நீதி மன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள். தண்டிக்கப்பட்டவர்கள் எல்லோருக்கும் மன்னிப்பு வழங்கப்படவேண்டும். பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும்.

6. ராணுவப் போலீஸ் வன்முறையினால் பாதிக்கப்பட்ட மக்கள் மாத்திரமன்றி இனக் கலவரங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் போதிய நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும்.

7. 1982ம் ஆண்டின் பின் தயாரிக்கப்பட்ட வாக்காளர் இடாப்புகள் தமிழ் மேற்பார்வை இன்றித் தயாரிக்கப்பட்டனவாதலால் நடைபெறும் தேர்தல் 1982ம் ஆண்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட இடாப்புகளின்படியே நடைபெற வேண்டும்.

8. திருகோணமலைத் துறைமுக நிர்வாக, துறைமுகத் தேவைக்கு உபயோகிக்கப்படும் நிலவிஸ்தீரணம் ஆகியன விவாதிக்கப்பட்டு முடிவு செய்யப்பட வேண்டும்.

இவற்றில் பெரும்பாலனவற்றைப் பிரதமர் ஏற்றுக் கொண்டார். தான் ஆவன செய்வதாக உறுதி கூறினார். சில விஷயங்கள் அடுத்தநாள் செய்ய பெற்ற ஒப்பந்தத்தில் இடம் பெற்றன. மற்றவை நடைமுறையில் தீர்த்து வைக்கப்படும் என்று நம்ப இடமுண்டு. இராணுவ முகாம்களைப் பொறுத்தவரை 1983ஆம் ஆண்டில் இருந்த முகாம்களின் பட்டியலைத் தருமாறு பிரதமர் கேட்டார். இரவோடிரவாகத் தயாரித்துக் கொடுத்தார்.

தம் உயிரையே பணயம் வைத்து இந்த ஒப்பந்தத்தைச் செய்த பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கும் இந்திய அரசுக்கும், இதற்குக் தூண்டு கோலாக இருந்த தமிழக முதலமைச்சருக்கும், தமிழக அரசுக்கும், தமிழக அரசியல் தலைவர்கள் கட்சிகள் எல்லோருக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக எம்மை காக்கும் கேடயமாக அன்போடு பாதுகாத்த தமிழக மக்களுக்கும் எமது நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.



கடந்த காலங்களில் எமது தலைவர்களுக்கும் இலங்கை அரசாங்கங்களுக்குமிடையே கையெழுத்தான ஒப்பதங்களோ, பேச்சுவார்த்தை மூலம் ஏற்பட்ட உடன்பாடுகளோ எதுவும் நிறைவேற்றப்படவில்லை. 1983ம் ஆண்டின் பின் இரண்டு புது சக்திகள் எமக்குப் புது நம்பிக்கையைக் கொடுத்தன. ஒன்று இந்தியாவின் ஈடுபாடு இரண்டாவது தமிழ் இளைஞர்களின் தீவிரவாதமும். தியாகமும், தீவிரவாத இயக்கங்களில் சில எம்மைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம். ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணியினராகிய நாம் எப்போதும் அவர்களைப் பாதுகாத்தே செயல்பட்டு வந்திருக்கிறோம். முன்பு இலங்கை அரசினால் அவர்களுக்குத் துன்பம் ஏற்பட்ட போதெல்லாம் பாராளுமன்றத்திலும் நீதிமன்றங்களிலும் அவர்கள் நலன் காத்து அவர்களுக்காகவே வாதாடியே வந்தோம்.

எமது தலைவர் திரு. சிவசிதம்பரம் போன்றோர் சில ஆண்டுகளாக அவர்களுக்காகவே நீதிமன்றங்களில் வாதாடினார். இந்தியாவிலும் தமிழ் நாட்டிலோ மத்திய அரசிலோ அவர்களுக்குப் பாதகமான நிலை ஏற்பட்ட போதெல்லாம் அக்கறையோடு ஈடுபட்டு அவர்கள் நலனுக்குப் பாதிப்பேற்படாமல் கண்காணித்து வந்தோம். இதட்விரவாத இயக்கங்களின் பங்களிப்பில்லாமல் அவர்கள் தமது இரத்தத்தால் எழுதிய வீர காவியம் இல்லாமல் தமிழ் மக்களின் போராட்டம் உலகின் கவனத்தை இந்த அளவுக்குப் பெற்றிருக்க முடியாது. இக்கட்டுரையில் நாம் ஆற்றிய பங்கை மக்கள் அறியாதிருப்பதால் எடுத்துக் கூற முற்பட்டோமேயன்றி போராளிகளின் பங்கைக் குறைத்து மதிப்பிடுவதாக யாரும் நினைத்துவிடக் கூடாது. ஒப்பந்தத்தின் விளைவாக ஏற்படும் அமைப்பில் அவர்களும் முக்கியமான ஒரு பங்கைப் பெற்றே தீர வேண்டும்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக நடைபெற்ற கிளர்ச்சிகளில் தமது உயிரை அர்ப்பணித்த தமிழ் நாட்டுத் தியாகிகளை நாம் எப்போதும் மறக்க முடியாது. அதே போலச் சிறை சென்றும், பதவிகளைத் துறந்தும் இன்னல்பல ஏற்ற தலைவர்கள், தொண்டர்கள் எல்லோருக்கும் இக்கட்டத்தில் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஒப்பந்தம் நிறைவேற்றப்படுமோ இல்லையோ என்று ஆருடம் சொல்லத் தேவையில்லை. அரசியலில் எதுவும் சாத்தியமே. என்ன நடந்தாலும் தமிழக மக்களின் அன்பும், ஆதரவும், இந்தியாவின் மேலான ஆதரவும் பாதுகாப்பும்

எப்போதும் எமக்கிருக்க வேண்டும். அதுவே, எமது பாதுகாப்புக்கு உத்தரவாதம். அதற்குப் பாத்திரமானவர்களாக நாம் நடந்து கொள்வோம்.

இந்த ஒப்பந்தம் இலங்கை மக்களுக்கு ஓர் புதிய சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது. கடந்ததை மறந்து இந்தியாவின் உதவியுடன் ஓர் புதிய வாழ்வை கட்டி எழுப்புவோம் இதனால், தமிழ் மக்கள் பயன் பெறுவதற்கு எம் மத்தியில் பூரண ஒற்றுமை நிலவ வேண்டும். போராளிகளின் இயக்கங்களும் அரசியல் இயக்கங்களும் ஒன்றுபட்டு, போராளிகள் தமக்குரிய முக்கிய பங்கைப் பெறக் கூடிய வகையில் இணைந்து செயற்படவேண்டும். எமது மக்களின் துன்ப வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்து அவர்கள் வாழ்வு மீண்டும் மலர உறுதியோடு உழைக்க முன் வருமாறு எல்லாத் தமிழ் மக்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி அழைக்கிறது.



பின்இணைப்பு-I

## அன்னை இந்திரா ஆற்றிய உரை

துணை தலைவர் அவர்களே!

நான் பாராளுமன்றத்தில் இறுதியாகப் பேசிய பின், இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், இலங்கைத் தமிழ் மக்களின் பிரதான அரசியற் கட்சியின் செயலாளர் நாயகமும் ஆன திரு. அ. அமிர்தலிங்கம் யாழ்ப்பாணத்திலிருந்து டெல்லி வந்தார். அவர் என்னைச் சந்தித்தார். வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சருடனும், ஏனைய அமைச்சர்கள் வெவ்வேறு கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடனும் பேசினார்.

இலங்கையில் சிறுபான்மைச் சமூகம் மிருகத்தனமான தாக்குதல்களுக்கு ஆளாக்கப்பட்டதைப் பற்றி நெஞ்சைத்தொடும் விவரங்களைத் தந்திருக்கிறார். இங்கு பேசிய உறுப்பினர்கள் போலவே நான் தனிப்பட்ட முறையிலும், எனது அரசாங்கமும் எனது கட்சியும் ஆழ்ந்த வேதனை அடைந்துள்ளோம். இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படுகிற இனக்கொலை துன்பம், அநீதி ஆகியவற்றை நாம் கண்டிக்கிறோம். ஆனால் எமது உணர்ச்சி எவ்வளவு ஆழமாக இருந்தாலும் அரசாங்கம் கூடிய கட்டுப்பாட்டைக் காட்ட வேண்டி இருக்கின்றது. ஏனெனில் நாம் விருப்பமின்றியோ தயக்கமாகவோ, இருப்பதால் அல்ல, ஆனால் நாம் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் எமது சொற்கள், எமது செயல்கள் இலங்கைத் தமிழ் மக்களுக்கு உதவியாக இருக்குமா? இன்றேல் தீமை பயக்குமா? என்று யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்த இடத்தில், இலங்கையில் தனக்கு மனக் கவலையும் வெறுப்பும் ஏற்பட்ட போதும், என்னுடனும் ஏனையோருடனும் நடந்த

உரையாடல்களில் திரு. அமிர்தலிங்கம் காட்டிய அரசியல் ஞானத்திற்கு என் உயர்ந்த பாராட்டை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தனது கட்சியின் சார்பில் எமது நல்லெண்ணச் சேவையைத் திரு. அமிர்தலிங்கம் வரவேற்றுள்ளார். இலங்கை அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தையைப் பொறுத்தவரை எமது சேவை, நிலைமையை மாற்றியிருப்பதாக அவர் புதுடில்லி வந்தவுடன் கூறினார். தனது கட்சியும் தமிழ் மக்களும் பேச்சு வார்த்தையில் நம்பிக்கை இழந்து விட்டதாகவும், எப்படியும் திருப்திகரமற்ற முந்திய வாக்குறுதிகளைப் புதுப்பிப்பதன் அடிப்படையில் நாம் பேச்சு வார்த்தையில் இறங்க முடியாதென்றும் ஆனால் இந்தியா அளிக்க முன் வந்த நல்லெண்ணச் சேவை ஓர் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறினார்.

தமது கட்சி பலவருடங்களாக ஒன்றுபட்ட இலங்கைக்கு உட்பட்டு தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கையை வென்றெடுக்க உழைத்ததாகவும், சிங்களப் பெரும்பான்மையின் உதாசீனமும் வளர்ந்து வந்த விரோத மனப்பான்மையும் தம்மைப் பொறுமையின் எல்லைக்குக் கொண்டு வந்து, அந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்துவது பயனற்றதென்ற முடிவுக்குத் தாங்கள் தள்ளப் பட்டதாகவும் திரு. அமிர்தலிங்கம் பின் எம்முடன் உரையாடும் போது சுட்டிக் காட்டினார். ஆனால் எமது தலையீட்டினால் தாம் ஆலோசிக்கக் கூடிய புது வழி திறந்திருப்பதாக கூறினார்.

நான் முன்பு கூறியது போல் இப்பிரச்சினைக்குத் தீர்வு, மகாநாட்டு மேசையில்தான் காணப்பட வேண்டும். எப்படி, எப்போது தமிழ் தலைவர்களோடு, மாநாட்டை நடத்துவதென்பதை இலங்கை அரசுதான் முடிவு செய்ய வேண்டும். உடனடித் தேவை மக்கள் மத்தியில் ஓர் பாதுகாப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். ஓர் நிரந்தரத் தீர்வைத் தேடும் முயற்சியையும் உடனடியாக ஆரம்பிப்பதும் அவசியமானதே. நாம் ஆழ்ந்த அக்கறை கொண்டிருப்பதால் எந்த வழியில் நாம் உதவி புரிய முடியுமோ புரிய விரும்புகிறோம். ஓர் சமரசத் தீர்வு காணப்பட வேண்டுமானால் இரு தரப்பினரும் ஒருவரோடு ஒருவர் பேச வேண்டும். இதற்கு வழி வகுப்பதற்கு



இலங்கைக்கு ஒரு தூதுவரை அனுப்ப நான் தயாராய் இருக்கிறேன். இப்போது நாம் ஜனாதிபதி ஜயவர்த்தனாவோடு தொடர்பு கொள்ளலாம். அதற்கிடையில் சென்னையில் சில நாட்கள் தங்கிய பின் திரு. அமிர்தலிங்கம், தமது கட்சியினருடன் ஆலோசனை நடத்துவதற்காக யாழ்ப்பாணம் செல்கிறார்.

இலங்கையில் ஏற்பட்ட சோகமான நிகழ்வுகள் பற்றி எமது நாட்டில் ஏற்பட்ட கவலையும் அக்கறையும் பாராளுமன்றத்தில் தொடர்ச்சியான நான்காவது வாரமாக வெளியிடப்படுகிறது. எம் தமிழ் நாட்டு சகோதர சகோதரிகளினதும் எல்லா இடங்களிலும் இருக்கும் தமிழ் மக்களினதும் துயரத்தில் நாமும் பங்கு கொள்கிறோம். இந்த நாட்டின் எந்த ஒரு பகுதியோ எந்த ஒரு அரசியற் பிரிவோ என்று இன்றி, நாடு முழுவதிலும் அரசியற் கட்சி வித்தியாசங்களுக்கு அப்பாற்பட்டு ஆழமான உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை இச்சபையில் இன்று நடந்த விவாதம் காட்டுகிறது.

எமது நிலையிலுள்ள கஷ்டத்தையும் நுட்பத்தையும் உணர்ந்து இச்சபையின் கௌரவ உறுப்பினர்கள் நடந்து கொள்வதற்கு நான் நன்றி பாராட்டுகிறேன். இச்சூழ்நிலையில் தவிர்க்க முடியாத கட்டுப்பாட்டைக் கவனித்து பொதுவில் ஆதரித்திருக்கின்றனர். ஆனால் இக்கட்டுப்பாடு உறுதியோடு இணைந்தது. நாம் நிலைமையை மிகவும் உன்னிப்பாகவும் ஆவலோடும் அவதானித்து வருகின்றோம். பாராளுமன்றத்தினதும், இந்திய மக்களினதும் தொடர்ந்த ஆதரவோடு பேச்சு வார்த்தைக்கு ஏற்ற ஓர் சூழ்நிலையை உருவாக்க முடியுமென்று நம்புகிறோம். இதுவே வகுப்பு விரோதத்தைப் போக்குவதற்கு முதற்படியாக அமைந்து, ஓர் நிலையான அரசியற் தீர்வுக்கு, ஆக்க பூர்வமான நடவடிக்கைகளுக்கு வழி வகுக்கும்.

## 16-08-1983இல் பாரதப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி இந்திய மாநிலங்களவையில் ஆற்றிய உரை

## சென்னையில் பிரதமர் ராஜிவ் காந்தி உரை

வண்க்கம்! இலங்கையில் அமைதிச் சூழ்நிலை ஒன்று ஏற்பட்டிருப்பதற்காக நாம் இன்று கூடியுள்ளோம்...

... ஒப்பந்தத்தில் கையெழுத்திட நான் இலங்கைக்குப் போகும் முன்னர் எல்லாத் தமிழ் போராளிகளிடமும், அதிகளவு மிதவாத உணர்வு கொண்ட இலங்கை தமிழர்களிடமும் நான் பேசினேன். நீதி மற்றும் சமத்துவத்தைப் பெற போராடும் இவர்களிடம் நான் ஆலோசனை மேற்கொண்டேன். நாங்கள் கையெழுத்திட்ட இந்த ஒப்பந்தத்தை தமிழ் போராளிகள் அனைவரும் புரிந்து கொண்டனர்.

இலங்கையின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்காமல், இலங்கை தமிழர்கள் கோரிய அனைத்தையும் தர இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது ...

... இலங்கையின் மூன்றில் ஒரு பகுதி தனி மாகாணமாக்கப்பட்டு, தமிழர்கள் அதில் பெரும்பான்மையினராக வசிக்க இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது. இந்திய அரசின் கீழ் இருக்கும் மாநிலங்கள் போன்றே மாநில சுயாட்சி உரிமையும் அவர்களுக்கு உண்டு ....

... நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. கருத்து வேறுபாட்டையும் வன்முறையையும் போரையும் நிறுத்த வேண்டிய நேரம் இது. இது புனரமைக்க வேண்டிய நேரம். தேசிய இணக்க உணர்வை ஏற்படுத்த வேண்டிய கட்டம் உருவாகி இருக்கிறது. மறு இணக்கத்தையும் மறு சீரமைப்பையும் மேற்கொள்ள வேண்டிய இந்தக் கடமையில் நம்மால் இயன்ற எல்லா வகையிலும் நாம் உதவ வேண்டும். மேலும் அதிக வன்முறையாலும் மேலும் அதிக உயிரிழப்புக்களாலும் நாம் அடைய வேண்டியது எதுவுமில்லை.





அமைதியைக் கொண்டு வருவோம். உயிர், உடமை எதுவும் அழிவதைத் தடுப்போம். இந்த ஒப்பந்தத்திற்கு எதிரானோர் மீது நாம் இரக்கம் காட்டத் தேவையில்லை. ஏனென்றால் இந்த ஒப்பந்தத்திற்கு எதிரானோர் இலங்கை தமிழர்களின் நலன்களுக்கு எதிரானவர்கள் ஆவார்கள். சில போராளிக்குழுக்கள் ஓரளவு தயக்கம் காட்டுகிறார்கள். அது சொந்த பாதுகாப்பைக் கருதி ஏற்பட்டிருக்கக் கூடும். அல்லது இலங்கையின் எதிர்கால வாழ்வில் தங்களுக்குரிய இடம் என்ன என்பதைக் குறித்த கலக்கமாக இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு நான் உறுதி கூறியிருக்கிறேன். இந்த ஒப்பந்தம் அவற்றையெல்லாம் கருத்தில் கொண்டிருக்கிறது. இலங்கையின் வட பகுதியில் இருக்கிற ஒவ்வொருவருக்கும் சீரமைப்புப் பணியில் பங்கும் பாதுகாப்பும் உண்டு என்பதை உறுதிப்படுத்துவோம்...

... இது வன்முறைக்கு முடிவு காணும் நேரம். பூசல்களுக்கும் பழிவாங்குதல்களுக்கும் இது நேரமல்ல. இலங்கையில் உள்ள பல்வேறு வகுப்பினருக்குமிடையே புதிய நட்புறவையும் இணைப்பையும் உருவாக்கி நாட்டை சீரமைப்பதற்கான அமைதியைக் கொண்டு வரவேண்டிய நேரம். நல்லெண்ணத்தையும் இணக்க உணர்வையும் ஏற்படுத்த, நம்பிக்கையையும் பற்றையும் ஏற்படுத்த வேண்டிய நேரம். இழப்புத் துயரில் வாடுவோரைத் தேற்ற வேண்டிய நேரம். புனரமைக்கவும் புத்துயிர் ஊட்டவும் உழைக்க வேண்டிய நேரம். ....

... வேதனையும் துயரமும் நிறைந்த ஒரு கட்டத்திற்கு இந்த ஒப்பந்தம் ஒரு முடிவு காண்கிறது. வேதனைகளையும் இன்னல்களையும் முடித்து வைத்து, அமைதி யுகம் மலர வகை செய்கிறது. இலங்கை வரலாற்றின் திருப்பு முனையாக அமையும் இந்த நேரத்தில் இறந்தோரின் நினைவுக்கு அஞ்சலி செலுத்துகிறோம்; விதவைகள் அனாதையாக்கப் பட்டோர் ஆகியோருக்கு அனுதாபம் தெரிவிக்கிறோம்; புதல்வர்களை இழந்த தாய்மார்களுக்கும் தந்தையரை இழந்த புதல்வியருக்கும் நமது இரங்கல்களைத் தெரிவிக்கிறோம். ஆனால் இவற்றை நினைவு கூறும்போது மேலும் இரத்தம் சிந்துதல் தவிர்க்கப்பட வேண்டும்;

இலங்கையில் அமைதியோடும், கௌரவத்தோடும், கண்ணியத்தோடும் தமிழர்கள் தொடர்ந்து வாழும் போது இந்த நினைவுக்கு சிறப்பான அஞ்சலி செலுத்தியவர்களாவோம். இந்த ஒப்பந்தத்தின் மூலம் அது சாத்தியமாகியிருக்கிறது.....

.... அமைதி மீண்டும் கொண்டுவரப்பட்டுவிட்டாலும் நாம் எதார்த்த உணர்வோடு இருக்க வேண்டும். இப்போது ஏற்பட்டிருக்கும் இந்த அமைதிக்கு நம்மால் இயன்ற வகையில் பாதகமான எதையும் செய்துவிடலாகாது. முழுமையாக அமைதி ஏற்பட்ட நிலையிலும் நமது பங்கு தேவை. இந்த அமைதியை மிக விரைவாகவும் மிக எளிமையாகவும் பெற்றுவிடவில்லை. இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் இடர்பாடுகளும் பிரச்சினைகளும் எழலாம். அப்படி வன்முறைகளும், அத்தகைய கோபதாபங்களும் ஏற்பட்டாலும் அவற்றை உடனடியாக போக்கி விட முடியும் என்றும் நாம் எதிர்பாக்க இயலாது. விவாதித்தும், கூடிப் பேசியும் இப்போது அமைதியை ஏற்படுத்தியதைப் போன்று இனி வரும் பிரச்சினைகளையும் அணுக வேண்டும், தீர்வு காண வேண்டும். அந்த வகையில் தீர்வு காண்பது சாத்தியமானதுதான்.

இந்த ஒப்பந்தத்தை சீர் குலைக்க பல சக்திகள் முயலக்கூடும். எந்தெந்த சக்திகளின் நடமாட்டங்கள் இந்த ஒப்பந்தத்தால் அகற்றப்படுகின்றனவோ அவை அனைத்தும் இந்த ஒப்பந்தத்தை முனை முறிக்க முயலக்கூடும். வன்முறை மூலமும் கொடுஞ்செயல்கள் மூலமும் பயன்பெற நினைப்போர் இந்த ஒப்பந்தம் நிறைவேறுவதை விரும்ப மாட்டார்கள். ஆனால் நாம்தான், இலங்கையும் - இந்தியாவும்தான், பொறுமையோடும் விடா முயற்சியோடும் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியாக வேண்டும்.

இரு தரப்பிலும் இருக்கிற தீவிரவாதிகள் இந்த வெளி சக்திகளின் பகடைக்காய்களாக ஆகிவிடக் கூடாது. அமைதியைக் குலைக்க அவைகளை அனுமதிக்கலாகாது. பழிவாங்கும் போக்கிற்கு அவர்கள் நம்மைத் தூண்ட அனுமதிக்கலாகாது. நடைமுறைச் சாத்தியம் உள்ள, செயல்படுத்தத்தக்க நீண்டகால தீர்வுகளைக் காண்பதற்கான ஒரே வழி,



ஜனநாயக முறைதான். ஜனநாயகத்தில்தான் தீர்வுகள் கிடைக்கும்.

பலரும் இந்த ஒப்பந்தம் காணும் முயற்சியில் ஈடுபட்டதினால் இது சாத்தியமாயிற்று. 1983-ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் முதன் முதலில் மேற்கொள்ளப்பட்ட தாற்காலிக நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக அதிபர் ஜெயவர்த்தனா, மறைந்த திருமதி இந்திராகாந்தியை உதவிக்காக அணுகியதிலிருந்துதான் நமது தரப்பிலிருந்து பலரும் இதில் ஈடுபாடு காட்டத் துவங்கினர். வரலாற்றில் இடம்பெறும் இந்த ஒப்பந்தத்தை எட்டுவதற்கு தங்கள் பங்கினை அளித்த ஒவ்வொருவருக்கும் நான் நன்றி தெரிவித்தாக வேண்டும்....

---

02-08-1987ல் மெரினா கடற்கரையில்,
பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி ஆற்றிய உரையிலிருந்து

---

பின்இணைப்பு-III

# ஈழத்தமிழர் தலைவர் அ. அமிர்தலிங்கம் வாழ்க்கைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிறப்பு | : | 26.08.1927 |
| இடம் | : | இலங்கை - வட மாகாணம் - வலிமேற்கில் உள்ள பண்ணாகம். |
| தந்தை | : | சின்னட்டியார் அப்பாப்பிள்ளை (1879 - 1952) ஸ்ரேசன் மாஸ்டர் மலேசியா. |
| | | 1925 - 1940 வரை சங்கானை கிராமசபை உறுப்பினர் பண்ணாகம் மெய்கண்டான் பரிபாலன் சபையில் சமூக சேவை. |
| தாய் | : | வள்ளியம்மை அப்பாப்பிள்ளை |
| ஆரம்பக்கல்வி | : | பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தி யாலயம், 1931 முதல் 1936 வரை. |
| இடைநிலைக்கல்வி | : | சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி, 1936 முதல் 1946 வரை. அதிபர்.P.G. தம்பியப்பா. இக்கல்லூரியிலிருந்து முதன் முதல் பல்கலைக்கழகம் சென்ற மாணவர் - 1946ல். |
| பல்கலைக்கழகம் | : | 1946 முதல் 1948 B.A., வரை முதல் வகுப்பில் தேர்ச்சிபெற்றார். |
| சட்டக்கல்லூரி | : | 1948 முதல் 1951 வரை |
| | | முதல் வகுப்பில் சித்தியடைந்தார் |



| | | |
|---|---|---|
| | | சட்டக்கல்லூரி தமிழ்ச் சங்கத்தை 1950இல் ஸ்தாபித்தார். தன் தலைவராக 1950 - 1951இல் கடமை யாற்றினார். |
| | | 1951இல் நியாயவாதியாகத் திறமைச் சித்தி எய்தினார். |
| 1948 | - | சுதந்திரனில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பற்றி கட்டுரை எழுதினார். இதைத் தொடர்ந்து தந்தை செல்வா கடிதம் எழுதி அவரை அழைத்தார். |
| 1949 | - | தமிழரசுக் கட்சி நிறுவுதல். மத்திய செயற்குழு உறுப்பினரானார். |
| 1952 | - | முதல் தேர்தல்களம். வட்டுக்கோட்டையில் திரு. வீரசிங்கம் அவர்களை எதிர்த்துப் போட்டியிட்டு தோல்வியுற்றார். |
| 1953 | - | தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி உதயம் - அதன் முதல் தலைவர் |
| 1954 | - | ஜுலை திருமணப்பதிவு. அன்றே மாலையில் கரவெட்டியில் நடைபெற்ற பொது மேடைக் கருத்தரங்கில் திரு. வி. பொன்னம்பலத்துடன் கருத்துப்போர். |
| 1954 | - | இலங்கைத் தமிழர் சரித்திரத்தில் முதல் கறுப்புக்கொடி போராட்டம். சேர் ஜோன் கொத்தலாவலைக்கு எதிராக யாழ்ப் பாணத்தில் பொலிசாரால் அடியுண்டார். |
| 1956 | - | தேர்தல் வெற்றி. வட்டுக்கோட்டைத் தொகுதிப் பிரதிநிதியாக பாராளுமன்றம் சென்றார். |
| 1956 | - | ஆனி 5ஆம் தேதி தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து காலிமுகத்திடலில் (Gall face beach) சத்தியாக்கிரகம், சிங்களக் காடையர்களால் |

தாக்குண்டு தலையில் காயத்துடன் அன்று மாலை பாராளுமன்றத்தில் பேச்சு.

1956 - ஆனி 15ஆம் தேதி தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தலைமகன் காண்டீபன் பிறந்தார்.

1956 - ஜுலை 5 முதல் ஜுலை 16 வரை திருமலை யாத்திரை பொன்னாலையிலிருந்து திருமலை வரை நடந்த ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர்.

1957 - திரு. எம்.பி.டி. ரொய்சாவுக்கு யாழ் புகையிரத நிலையத்தில் கறுப்புக் கொடி. பொலிசாரால் தாக்கப்பட்டார்.

1957 - ஆகஸ்ட் "Inter Parliment Conference" இங்கிலாந்தில் -இல் உரையாற்றினார்.

1968 - ஏப்ரல் 10 - சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டத்தில் கைதாகி 14 நாட்கள் சிறை தண்டனை - யாழ் கோட்டை சிறையில் அடைப்பு.

1958 - மே - ஊரடங்குச் சட்டம் அமுலாகியிருந்த போது யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக் களப்புக்கு தோணியில் செல்லுதல். மட்டக்களப்பில் கைதாகி கொழும்பு கொண்டு செல்லப்பட்டு 4 மாதம் தடுப்புக் காவலில் வைக்கப் பெற்றார்.

1958 - நவம்பர் - தீண்டாமை ஒழிப்பு மாதம் ஆலய, தேனீர்க் கண்ட பிரவேசம்.

1959 - ஜுன் 2ஆம் நாள் இரண்டாவது மகன் பகீரதன் பிறப்பு.

1960 - மார்ச் பொதுத் தேர்தலில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதியாக வெற்றிபெற்று பாராளுமன்றம் செல்லல்.



1960 - ஜுலை பொதுத் தேர்தலில் வட்டுக்கோட்டை பிரதிநிதியாக வெற்றிபெற்று பாராளுமன்றம் செல்லல்.

1961 - தனிச்சிங்களச் சட்ட அமுலை எதிர்த்து தமிழ்பிரதேசமெங்கும் அரசு தலைமை யலுவலகம் முன் (கச்சேரி) சத்தியாக்கிரகம். தமிழரசு தபால் சேவை நடத்தப்பட்டது.

1961 - சத்தியாக்கிரகத்தை முறியடிக்க கணவன் மனைவி இருவரும் ஏனைய தமிழ்த் தலைவர்களுடன் கைது.

6 மாதம் தடுப்புக் காவல் - பனாகொடை இராணுவமுகாமில்.

1961 - அக்டோபரில் தடுப்புக் காவலில் இருந்து விடுதலை.

1963 - ரி.பி.இலங்கரட்னாவுக்கு யாழ்ப்பாணத்தில் கறுப்புக்கொடி - பொலிசாரால் தாக்கப்பட்டார்.

1965 - மார்ச் பொதுத் தேர்தல் - வட்டுக்கோட்டை பாராளுமன்றப் பிரதிநிதியாக 11,000க்கும் மேற்பட்ட வாக்குகளில் வெற்றி பெற்றார்.

1966 - 2வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு மலேசியாவில் பங்குபற்றுதல்.

1967 - கட்சியைப் பலப்படுத்துவதிலும் பண்டா - செல்வா ஒப்பந்த அரசியல் நடவடிக்கை களிலும் பங்குபற்றுதல்.

1968 - மலையகமெங்கும் இலங்கை தொழிலாளர் கழக நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சுற்றுப்பயணம்.

| | |
|---|---|
| 1969 | - தமிழரசுக்கட்சியின் செயலாளராக உருவில் 11வது மாநாட்டில் தெரிவானார். |
| 1970 | - பொதுத் தேர்தல் - வட்டுக்கோட்டையில் 500 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். |
| 1971 | - பிப்ரவரி 7ஆம் நாள் தமிழர் இயக்கங்கள் வல்வெட்டித்துறையில் ஒன்றுபட்டபோது முன்னின்று செயல்பட்டார். |
| 1972 | - மே 14ஆம் நாள் தமிழர் கூட்டணி திருமலையில் உதயமாக முன்நின்று உழைத்தார். |
| 1972 | - மே 22 புதிய அரசியலமைப்புச் சட்டத்தை யாழ் நாவலர் மண்டபத்தில் தீக்கிரையாக்கினார். |
| 1973 | - மல்லாகம் மாநாட்டில் 7.9.1973 அன்று தமிழரசுக்கட்சியின் 6வது தலைவராக ஏகமனதாகத் தெரிவு. |
| 1974 | - 4வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது அதன் வெற்றிக்கு தீவிரமாக உழைத்தார். |
| 1975 | - வட்டுக்கோட்டையில் தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாடும் தனது நீண்டகாலக் கனவான தமிழீழ இலட்சியத்தை முன்னெடுத்து மாநாட்டுக் தீர்மானமாக நிறைவேற்ற பாடுபட்டார். வெற்றியும் கண்டார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதல் இணைச்செயலாளர் நாயகங்களாக திரு. சிவசிதம்பரமும், இவரும் தெரிவானார்கள். இதைத் தொடர்ந்து இறக்கும் வரை தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமாகத் திகழ்ந்தார். |



| | |
|---|---|
| 1975 | - வட்டுக்கோட்டைப் பிரகடனத்தை துண்டுப் பிரசுரமாக விநியோகத்தமைக்காகக் கைதாசி 'Trial at Bar' - என்ற சிறப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார். தடுப்புக்காவலில் இரண்டு மாதங்கள் வைக்கப்பட்டார். |
| 1975 | - 'Trial at Bar' நீதிமன்றம் அதிகாரமற்றது என்ற தீர்ப்பைத் தொடர்ந்து விடுதலையானார். |
| 1975 | - சட்டமறுப்பில் சிறைசென்ற திரு. ஆனந்த சங்கரியையும் ஏனைய தொண்டர்களையும் விடுதலையாகி வரவேற்கச் சென்ற போது யாழ்கோட்டை பொலிஸ்நிலையம் முன்னால் தாக்கப்பட்டார். |
| 1977 | - தந்தை செல்வாவின் மரணத்தைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமாக தெரிவானார். |
| 1977 | - ஜூலை தேர்தல் காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்டு இலங்கை - பாராளுமன்றத்திற்கு தெரிவானார். பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவானார். |
| 1978 | - இந்தியா விஜயம், தமிழீழப் போராட்டத்திற்கு தமிழ்நாட்டிலும் டெல்லியிலும் பிரச்சாரம். இந்திய அரசை ஈழத் தமிழருக்கு சார்பாக மாற்றல். |
| 1978 | - இங்கிலாந்தில் ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி பிரச்சாரம். தமிழ் Co-ordination Committee நிறுவுதல். (தமிழர் ஒருங்கிணைப்புக்குழு) |
| 1979-80 | - உலகமெல்லாம் சென்று ஈழத்தமிழர் போராட்டம் பற்றிப் பிரச்சாரம். |

1981 - பொலிசாரின் யாழ் நூல்நிலைய எரிப்பு, தமிழர் விடுதலைக்கூட்டணி அலுவலக எரிப்பு, ஈழநாடு பத்திரிகை அலுவலக எரிப்பைத் தொடர்ந்து கைதானார். 24மணி நேரத்திற்குபின் விடுதலை.

1982 - Common Wealth Conference - Nigeria பங்கேற்பு.

1982 - அமெரிக்க மசற்சுசெற் தமிழீழ தீர்மான பத்திரத்தைப் பெறல்.

1983 - ஜனவரி 5வது உலகத்தமிழ் மாநாடு. மதுரை பிரதானப் பேச்சாளர்.

1983 - ஜுலை கலவரத்தைத் தொடர்ந்து மாறு வேடத்தில் கொழும்பு வந்து இந்தியாவிற்கு செல்லல்.

1983 - (தொடர்) தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கு நிலைமையை எடுத்துரைத்தபின் டெல்லி சென்று அன்னை இந்திராவைச் சந்தித்தார். (ஆகஸ்ட் 13) ஆகஸ்ட் 14 - சர்வதேச பத்திரிகையாளர்கள் சந்திப்பு - வெற்றிகரமாக நடந்தேறியது.

ஆகஸ்ட் 15 - இந்திய குடியரசு தின விழாவில் அரச பிரதிநிதியாக பங்கேற்பு.

1983 - அக்டோபர் இங்கிலாந்திற்கும் ஏனைய மேற்குலக நாடுகளுக்கும் சென்று ஈழத் தமிழர் பிரச்சினைப்பற்றியும், இந்தியாவின் பங்களிப்பு பற்றியும் பிரசாரம்.

1983 - பிரிவினைக்கெதிரான உறுதிப்பிரமாணம் செய்ய மறுத்து பாராளுமன்றப் பதவியையும்



எதிர்க்கட்சித்தலைவர் பதவியையும் தூக்கி வீசுதல்.

1984 - கொழும்பு வட்ட மேசை மாநாடு. திரு. G. பார்த்தசாரதியின் (Special envoy) அனுசரணையுடன்.

1985 - திம்பு பேச்சுவார்த்தையில் பங்கேற்று தமிழர் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை முன்வைத்தல்.

1987 - இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்று அதற்கு ஆதரவாகப் பிரச்சாரம்.

1987 - இந்தியாவில் இருந்து மீண்டும் கொழும்பு திரும்புதல்.

1988 - பாராளுமன்றத் தேர்தல் மட்டக்களப்பில் போட்டியிட்டு பின் தேசியப்பட்டியலில் பாராளுமன்றம் செல்லல்.

1989 - இந்திய இலங்கை ஒப்பந்த நடைமுறை பற்றிய பங்களிப்பு.

1989 - ஜுலை 13ஆம் நாள் கொழும்பில் கொலை செய்யப்படல்.

தலைவர் அ. அமிர்தலிங்கம் அவர்களின் வாழ்க்கைத் தரவுகள் மிக நீளமானவை. இந்நூலில் அவர்தம் முக்கிய குறிப்புகள் இடம் பெற வேண்டும் என்பதால் இரத்தினச் சுருக்கமாக அளித்துள்ளோம். அவர்தம் ஒவ்வொரு நாள் பாராளுமன்ற பேச்சுகளும் ஒரு நெடிய வரலாற்றை கொண்டுள்ளது. அவர்தம் முழுமையான வரலாற்று ஆவண நூல் விரைவில் வெளிவர உள்ளது.

# சொல்லடைவு

அண்ணா 131
அணிசேரா நாடுகளின் தலைவி 137
அவசர காலச் சட்டம் 77, 171
அரசியில் நிர்ணய சபை 95, 96
அருள். தியாகராசா 33
அம்பாறைக் கலவரம் 47
ஆ. இராசரத்தினம் 109, 132
அ. குமரகுரு 110
அல்வாய் 94

ஆனந்தசங்கரி 138
அடையாள அட்டை மசோதா 93
அச்சுவேலி 94
ஆர். டி. சில்வா 96
ஆர்.பி. கதிராமர் 39
ஆறாவது மாநில மாநாடு 63
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 30, 50, 96
ஆலாலசுந்தரம் 145, 156
ஆங்கிலம் 23, 25

இடதுசாரி ஐக்கிய முன்னணி 86, 94
இடதுசாரிக் கட்சி 48
இந்திய அரசு 135
இந்திய அரகின் கண்டனம். 135
இந்திய சுதந்திர தினம் 137
இந்தியா 26
இந்தியன் ஓவர்ஸிஸ் வங்கி 136
இந்திரா காந்தி 109, 132, 134, 136, 137, 138
இ.மு.வி. நாகநாதன் 31, 33, 45, 91
இ.போ.ச. சுப்பிரமணியம் 112
இராஜவரோதயம் 49, 84
இரா. சனார்த்தனம் 109, 132
இராஜீவ் காந்தி 129, 141, 144, 156, 166, 169
இராமாராவ் 162
இராமகிருஷ்ண மிஷன் 117
இராசமாணிக்கனார் 116
இராசவரோதயம் 39
இராணுவ ஆட்சி 77
இரத்தினசாரதேரோ 90
இரண்டாவது மாநாடு 40
இலங்கை 26
இலங்கை ஜனநாயக காங்கிரஸ் 70
இலங்கை – இந்திய ஒப்பந்தம் 129
இலங்கை குடியுரிமை 158
இலங்கை அரசு 81
இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத் 68
இலங்கைத் தொழிலாளர் கழகம் 80

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 78
இலங்கைத் தமிழ் அரசு 36
இலங்கைத் தமிழ் லீக் 29
இலங்கைத் தமிழர் 25
இலங்கைத் தமிழர் பிரச்சனை 139
இலங்கைத் தமிழரசுக் கட்சி 31, 35, 36, 37, 42, 88, 130
இலங்கைத் தேசிய காங்கிர 29
இணைப்பாட்சி 107
இறப்பர் 23
இன ஒற்றுமை வளர்ப்பு 67

ஈ. வே. இராமசாமி 109
ஈ.எம்.வி. நாகநாதன் 130
ஈழத் தமிழ்த் தேசிய இனம் 110
ஈழத் தமிழர் 132
ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி 96
ஈழத்தமிழன் 33

உத்தியோக மொழிகள் 42
ஊர்காவற்றுறை 48
உலகத் தமிழ் இளைஞர் பேரவை 109

எட்டாவது மாநில மாநாடு 80
எட்டாவது அட்டவணை 164
எல்லாம் தமிழ் இயக்கம் 83
எஸ். தொண்டமான் 70
எஸ். ஞானமூர்த்தி 110
எஸ். ராமச்சந்திரன் 163
எஸ்.பி. வேலாயுதபிள்ளை 33
எஸ்.ஜே.வி. செல்வநாயகம் 130
எஸ்.டி. சிவநாயகம், 33
எஸ்.டி. பண்டாரநாயகா 54
எஸ்.ஏ. அசோகன் 109
எச். டபிள்யூ. ஜயவர்த்தனா 136

எம். திருவிளங்கம் 33
என். எம். பெரேரா 43, 113
எம்.பி.டி. சொய்சா 52
எம்.ஜி. இராமச்சந்திரன் 109
எம்.ஜி.ஆர் 132
என்.ஆர். இராசவரோதயம் 63, 65
ஏகாம்பரம் 75
ஏழாவது மாநில மாநாடு 71
ஏ.பி, ஜயசூரியா, 69

ஐயாவு 56
ஐ. எக்ஸ். பெரேரா 30
ஐக்கிய முன்னணி 45
ஐக்கிய தேசியக் கட்சி 38, 39, 40, 44, 54, 62, 64, 94
ஐ.தே. கட்சி 43
ஐக்கிய இலங்கை 29, 35
ஐரோப்பியர் 22, 26, 29

ஒன்பதாவது மாநில மாநாடு 86

க. சிவானந்தசுந்தரம் 80
க. ராஜாராம் 138
கல்வி உரிமை 131
கல்குடா 39
கல்முனை 38
கல்லோயா 38
காசி ஆனந்தன் 110
காயிதே மில்லத் 109
காணிப்பங்கீட்டு அதிகாரம். 156
காஷ்மீர் மக்கள் மாநாட்டுக்கட்சி 162
காமாட்சி ஜெயராமன் 109
காங்கேசன் துறைமுக 170
காங்கேசந்துறை 117
காந்தீயநெறி 47
குமாரசூரிய 112



குடியரசு அரசியல் திட்டம் 111
குடியரசு அரசியல் அமைப்பை 110
குடியுரிமைப் பிரச்சினை 68
குடியுரிமைச் சட்டங்கள் 130
கச்சத்ட்வு பற்றிய ஒப்பந்தம் 130
கரவெட்டி 94
கந்தசுவாமி கோவில் 33
சு. நடராசா 66, 76, 108
கலாச்சார உரிமை 131
கி. ஆ. பெ. விசுவநாதம் 109
கித்துல் ஊற்று 92
கிழக்கு மாகாணக் குடிசன இனவாரி அமைப்பு 165
கிழக்கு மாகாணம் 52
கிழக்கிலங்கை 63
கு. வன்னியசிங்கம் 33, 43, 64, 65, 66, 130
கே. நட்வர்சிங் 166
கே. காமராஜ் 109
கே. கே. ஷா 109
கைலை வன்னியன் 29
கொழும்பு 42, 76
கொக்குவில் 40
கொத்தலாவலை 42
கோவை மகேசன் 109
கோமதி வன்னியசிங்கம் 51
கோப்பி 23
கோப்பாய் 39

சத்தியாக்கிரகம் 51
சத்தியாக்கிரகிகள் 47
சமபந்திப் போசனம் 66
சத்தியாக்கிரகம் 77
சம்மாந்துறை 38
சா. ஜே. வே. செல்வநாயகம் 28, 31, 45, 64,
சாஸ்திரி–சிறிமாவோ பண்டாரநாயக்கா ஒப்பந்தம் 130
சாத்வீக விடுதலை 64
சாம் பி.சி. பெர்ணாண்டோ 71
சிங்கக் கொடி 25, 37, 38
சிங்கள ஸ்ரீ 50, 56
சிங்கள ஸ்ரீ எதிர்ப்பு 50
சிங்கள மொழி 25, 44
சிங்கள இனம் 25
சிங்கள மக்கள் 42
சிங்கள வகுப்பு வெறியர் 47
சிங்களக் குடியேற்றம் 38, 39, 41, 53
சிங்களத் திணிப்புத் திட்டம் 84
சிங்களவர் 21, 23
சிங்களம் 24, 25, 26, 42
சிதம்பரம் திட்டம் 162
சிதம்பரம் தூது 161
சிவசிதம்பரம் 173
சிவாஜி கணேசன் 109
சிவஞானம் 39
சிவசங்கர் 162
சி.மு. இராசமாணிக்கம் 73, 80, 93,114
சி.ஜே. எலியசர் 140
சிலாபம் 119
சிறில் மத்தியூ 134
சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம் 87
சிறிமா சாஸ்திரி ஒப்பந்த அமுல் சட்டம் 93
சிறிமாவோ பண்டாரநாயக்கா 69, 70, 116
சிறிமாவோ அரசாங்கம் 87
சிறிலங்கா சுதந்திரக்கட்சி 67
சி. நாகராஜா 96
சி. கதிரவேலுப்பிள்ளை 110, 113

சி. சே. மார்டின் 96
ரி.பி. இலங்கரத்தினா 82
சி.பி.டி. சில்வா 69
சுயநிர்ணய உரிமை 21, 35, 50
சுயாட்சி உரிமை 108
சுயாட்சி அரசு 35
சுயாட்சித் தமிழரசு 50
சுதந்திரன் 65, 77
சுதந்திரன் அச்சகம் 65
செ. இராசதுரை 64, 65
செல்வநாயகம்
25, 31, 38, 40, 76, 132
சோஷலிச பொருளாதார முறை 35
சோல்பரி 36
சோல்பரி ஆணைக்குழு 29இ 36
சோமவீரசந்திரஸ்ரீ 25
சௌ. தொண்டமான் 78

டட்லி சேனநாயக்கா
24, 39, 40, 67, 69, 70, 88, 92
டயிள்யு. தஹநாயக்கா 30
டாக்கா 160
டிக்சித் 167
டிவேலரா 26
டி.எஸ். சேனநாயக்கா 31, 38,39
டெல்லி உடன்படிக்கை 156
டொனமூர் அரசியல் திட்டம் 29

ந. அருணாசலம் 40
ந.இ. இராசவரோதயம் 45
நடேச பிள்ளை 78
நந்திக்கொடி 33
நரசிம்மராவ் வருகை 135
நல்லையா 63, 65
நான்காவது மாநாடு 49
நாகலிங்கம் 45
நாகநாதன் 33, 39, 107
நாகம்மா வேலுப்பிள்ளை 51
நில உரிமை 131
நீதிமன்ற மொழிச் சட்டம் 71
நீர்கொழும்பு 119
நேரு கொத்தலாவல ஒப்பந்தம் 130

தமிழ் 25
தமிழ் ஸ்ரீ 56
தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் 163
தமிழ் ஈழம் 110, 133
தமிழ் தொழிலாளர்கள் 56
தமிழ் மொழி உரிமை 42
தமிழ் மொழிவாரி அரசு 49
தமிழ் இனத்தின் விடுதலை 42
தமிழ் இனம் 63
தமிழ் நாடு 132
தமிழ் மாகாணங்கள் 26
தமிழ் அரசு 29
தமிழ் அரசு தபால் சேவை 76
தமிழ் பேசும் சமூகம் 37
தமிழ்மொழி நியாயமான உபயோகம் 65
தமிழ்மொழி உபயோகச் சட்ட விதிகள் 89
தமிழ்மொழி உபயோகச் சட்டம் 65
தமிழ்அழிப்பு இயக்கமும் 63
தமிழ்க் காங்கிரஸ் 31
தமிழ்ப் பிரதிநிதிகள் 24
தமிழ்ப் பிரதேசம் 44, 120
தமிழ்ப் பாடசாலை 113
தமிழ்த் தலைவர்கள், 29
தமிழ்த் தேசிய இனம் 114
தமிழீழ விடுதலைப் புலிகள் 163
தமிழரின் குடியுரிமை 38
தமிழகப் பயணம் 132





தமிழர் 21, 23, 26
தமிழர் விடுதலைக் கூட்டணி
143இ 156இ 160
தமிழர் ஐக்கிய முன்னணி 44
தமிழர் கூட்டணி 110
தமிழீழம் 31
தமிழரசு வாலிப முன்னணி கட்சி 41
தமிழரசுக் கட்சி 28, 38, 44, 45, 48, 65, 67, 70, 77, 78, 120
தனிச் சிங்களச் சட்டப் பிரதிகள் 85
தனிச் சிங்களச் சட்டம் 48, 52, 71
தகநாயகா 52
தா. திருநாவுக்கரசு 110
தர்மலிங்கம் 95, 145
தன்னாட்சி 27
தந்தை பெரியார் 132
தந்தை செல்வநாயகம்
39, 42, 44, 68, 86, 110, 112
தந்தை செல்வா 132
திருமலை யாத்திரை 48
திருமலைத் தீர்மானம் 50
திருகோணமலை 33, 37,
39, 42, 50, 75, 172
திருகோணமலை கடற்படைத் தளம் 55
திம்பு மாநாடு 143
திம்புப் பேச்சுவார்த்தை 163
திருவையாறு தியாகராயர் 160
திருமலைத் தீர்மானம் 50
திரிசிங்களப் பெரமுனை 42
தியாகி நடராசன் 51
தீண்டாமை ஒழிப்பு 66
துரைச்சாமிக் குருக்கள் 33
துறைநீலாவணை 47
தெ.செ. வைத்தீஸ்வரன் 37
தேசிய மாநாடு 38
தேயிலை 23
தேநீர்க்கடைப் பிரவேசம் 66
தொழில் உரிமை 131

ப. நெடுமாறன் 163
பட்டிப்பளை ஆறு 38
பயங்கரவாதத் தடைசட்டம் 171
பதினோராவது மாநில மாநாடு 93
பகுகுணா 162
பாஷா பெரமுனை 42
பழனியப்பன் 77
பாராளுமன்றத் தேர்தல் 67
பாலகிருஷ்ணன் 163
பத்தாவது மாநில மாநாடு 90
பண்டார வன்னியன் 29
பண்டாரநாயக்கா 39, 43, 48
பண்டாரநாயக்கா – செல்வநாயகம்
உடன்படிக்கை 68
பண்டாரநாயக்கா – செல்வநாயகம்
ஒப்பந்தம் 52, 53, 54
பண்டாரநாயக்கா 64
பருத்தித்துறை 48
பணாகொடை 77
புத்தூர் 94
பூரண ஹர்த்தால் 113
பூரண குடியுரிமை 54
பூரண சுயாட்சி 45
பிரபாகரன் 163, 166
பிரான்சிசு 56
பிரதமர் இந்திர மறைவு 141
பிரதேச சுயாட்சி 119
பிரதேச சபைகள் 54
பிலிப் குணவர்த்தனா 43, 67
பி. நல்லசிவம்பிள்ளை 33
பி. என். திருநாவுக்கரசு 33

பி.ஸி. ஜோஷி 26
பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா
பூட்டாசிங் 162
பெங்களூர் பேச்சு வார்த்தை 165
பெண் தொண்டர்கள் 51
பொன்னம்பலம் அருணாசலம் 29
பொன்னம்பலம் இராமநாதன் 29
பொருளாதாரக் கொள்கை 35
பொலநறுவை 63
போர்த்துக்கேயர் 29
பௌத்த சிங்களப் பாடசாலை 113
பௌத்த பிக்கு 42இ 54
பௌத்த பெரமுனை 62
பௌத்த பாடசாலைகள் 94
பௌத்த–சிங்களப் பாடசாலை 94

மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் 77
மலையக மக்கள் 78
மடத்தடிச் சந்தி 49
மக்கள் ஐக்கிய முன்னணி 67
மன்னார் 37, 50
மன்னார் மாநாடு 80
மருதானை 35
மருதமுனை 52
மணவைத்தம்பி 132
ம.அமிர்தலிங்கம் 76
மட்டக்களப்பு 37, 50, 74
மகாதேசாதிபதி 69
ம. பொ. சிவஞானகிராமணியார் 93
மாணிக்கராசா 84
மாவை சேனாதிராசா 112
மார்க்சீயக் கட்சி 42
மாவட்ட சபைகள் 92
மு. கருணாநிதி 109, 132, 163
மு. சிவசிதம்பரம் 78, 113, 138
மு. திருச்செல்வம் 76, 88, 93
மு. பக்தவத்சலம் 109
முதற் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் 41
மூதவைத் தேர்தல் 55
மூன்றாவது தேசிய மாநாடு 42
மைத்திரிபால சேனநாயக்கா 69
மொழி உரிமை 131
மொழிக் கொள்கை 42
மொழிச்சமத்துவம் 43
மொழிவாரிச் சுயாட்சி 54
மொரார்ஜி தேசாய் 133
யாழ்ப்பாணம் 37, 50, 62, 63, 82, 116
யோகேஸ்வரன் 144
ராஜபக்ஷ 24
ராஜாஜி 131
ரொமேஷ் பண்டாரி 142, 160
லங்கா சமசமாஜக் கட்சி 43
வடக்குக் கிழக்கு மாகாண நிருவாக மொழி 53
வடக்குக் கிழக்கு மாகாணம் 71
வ. நவரத்தினம் 47, 65, 83
வ.அ. பரமநாயகம் 63
வல்வெட்டித்துறை ஒற்றுமை மாநாடு 96
வவுனியா 37, 50
வவுனியா மாநாடு 63
வன்னியசிங்கம் 39, 49, 53, 67
வண்ணை ஆனந்தன் 112
வாஜ்பாய் 162
வி. நவரத்தினம் 33
வி. தர்மலிங்கம் 76, 113
வி.பொ.சி. முத்துக்குமாரசாமி, 33
வி.அ. அழகக்கோன் 115
வி.கே. பரமநாயகம் 33, 37
வி.ஏ. கந்தையா 74
வில்லியம் சில்வா 67



விமலா விஜயவர்த்தனா 62
வெளிச் செல்லும் அனுமதி 132
வெங்கடேஸ்வரன் 163
வே.அ. கந்தையா 83

ஸ்டான்லி டி. சொய்சா 52
ஜயவர்த்தனா 24, 133
ஜவஹர்லால் நேரு 82
ஜின்னா 26
ஜி. நல்லையா 55
ஜி. பார்த்தசாரதி தூது 138
ஜீ.ஜீ. பொன்னம்பலம் 30
ஜே. ஆர். ஜயவர்த்தனா 22
ஜே.ஆர். ஜயவர்த்தனா 54
ஜே.ஆர். ஜெயவர்த்தனா 129
ஜோன் கொத்தலாவலை 40
ஸ்கொட்லாந்து 24
ஹன்டி பேரின்பநாயகம் 42
ஹிட்லர் 25
ஸ்ரீநிசங்கா 24
ஸ்ரீதரன் 62
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 68, 69



அ. அமிர்தலிங்கம் அவர்கள் 19
ஆகஸ்டு 26ஆம் நாள் யாழ்ப்பாள
பண்ணாகம் என்ற இடத்த
பிறந்த

தனது ஆரம்பக் கல்வின
பண்ணாகம் மெய்கண்டன் ஆரம்
பள்ளியிலும் சுழிபுரம் விக்டோரி
கல்லூரியிலும் பயின்றார். உ
கல்வியை கொழு
பல்கலைக்கழகத்திலும், பின்ன
சட்டக் கல்லூரியிலும் பயின்
வழக்கறிஞரானார். தந்
செல்வாவின் வழி நடத்தலி
அரசியலை ஆரம்பித்து, பின் தமி
மக்களின் ஏற்றமிகு தலைவரா
உயர்ந்தவ

1956ல் இலங்கை நாடாளுமன்
உறுப்பினராக தனிச் சிங்க
சட்டத்தினை எதிர்த்துப் போரா
இரத்தம் கொட்ட பாராளுமன்ற
சென்று உரை நிகழ்த்
அனைவரையும் ஆட்கொண்டவ
தமிழ் மக்களால் ஆறு முறை
பாராளுமன்ற உறுப்பினரா
தேர்ந்தெடுக்கப்பட்டார். 197
தேர்தலில் வெற்றி பெற்
நாடாளுமன்ற எதிர்க்கட்சி
தலைவரானார். 1978ஆம் ஆண்
முதல் பல்வேறு நாடுகளுக்கு
பயணம் மேற்கொண்டு தமிழ் ஈ
விடுதலைப் போராட்டத்திற்கு உல
மக்களின் ஆதரவை திரட்டியவர்
1989 ஜூலை 13ஆம் நாள் தா
நேசித்த மக்களுக்காக துப்பாக்கி
குண்டுகளுக்கு தமது உயிரை



திரு. அமிர்தலிங்கம் இலங்கையில் சிறுபான்மைச் சமூகம் மிருகத்தமைான தாக்குதல்களுக்கு ஆளாக்கப்பட்டதைப் பற்றி நெஞ்சைத் தொடும் விவரங்களைத் தந்திருக்கிறார். இங்கு பேசிய உறுப்பினர்கள் போலவே நான் தனிப்பட்ட முறையிலும், எனது அரசாங்கமும் எனது கட்சியும் ஆழ்ந்த வேதனை அடைந்துள்ளோம். இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படுகிற இனக் கொலை துன்பம், அநீதி ஆகியவற்றை நாம் கண்டிக்கிறோம். ஆனால் எமது உணர்ச்சி எவ்வளவு ஆழமாக இருந்தாலும் அரசாங்கம் கூடிய கட்டுப்பாட்டைக் காட்ட வேண்டி இருக்கின்றது. ஏனெனில் நாம் விருப்பமின்றியோ தயக்கமாகவோ இருப்பதால் அல்ல. ஆனால் நாம் ஒவ்வொரு அடிஎடுத்து வைக்கும் போதும் எமது சொற்கள், எமது செயல்கள் இலங்கைத் தமிழ் மக்களுக்கு உதவியாக இருக்குமா இன்றேல் தீமை பயக்குமா என்று யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்த இடத்தில் இலங்கையில் தனக்கு மனக் கவலையும் வெறுப்பும் ஏற்பட்ட போதும், என்னுடனும் ஏனையோருடனும் நடந்த உரையாடல்களில் திரு.அமிர்தலிங்கம் காட்டிய அரசியல் ஞானத்திற்கு என் உயர்ந்த பாராட்டை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தனது கட்சியின் சார்பில் எனது நல்லெண்ணச் சேவையைத் திரு. அமிர்தலிங்கம் வரவேற்றுள்ளார். இலங்கை அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தையை பொறுத்தவரை எமது சேவை நிலைமையை மாற்றியிருப்பதாக அவர் புதுடில்லி வந்தவுடன கூறினார். தனது கட்சியும் தமிழ் மக்களும் பேச்சு வார்த்தையில் நம்பிக்கை இழந்து விட்டதாகவும் எப்படியும் திருப்திகரமற்ற முந்திய வாக்குறுதிகளைப் புதுப்பிப்பதன் அடிப்படையில் நாம் பேச்சுவார்த்தையில் இறங்க முடியாதென்றும் ஆனால் இந்தியா அளிக்க முன் வந்த நல்லெண்ணச் சேவை ஓர் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறினார்.

16-08-1983-ல் பாரதப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி இந்திய மாநிலங்களவையில் ஆற்றிய உரையலிருந்து . . .

ISBN 0-9543502-3-5